
# படு வேதனையில் பரம வெற்றி



ரிச்சர்ட் உம்பிராண்ட்

# படுவேதனையில்

# பரம வெற்றி

எழுதியவர் :

ரிச்சர்ட் உம்பிராண்ட்

THE LOVE IN ACTION SOCIETY
Post Box No. 4532, V-31, Green Park
New Delhi-110 016

l

**TORTURED FOR CHRIST - (TAMIL)**

RICHARD WURMBRAND

Translated by

**D.** Rajsingh Simon

1st edition, June. 1971
Copies. 7,000
2nd edition, March. 1972
Copies. 5,000
3rd edition, 1983
Copies. 5,000
4th edition, March 1984
Copies. 5,000

Printed and Published by Dr. P.P. Job, Post Box No. 4532 V-31, Green Park, New Delhi-110 016, For the Love in Action Society at Sabina Printing Press, India.

# நூலாசிரியரைப் பற்றி...

1945-ம் ஆண்டு ருமேனியா நாட்டை பொதுவுடமை கொள்கையாளர் கைப்பற்றினர். அப்போதே கிறிஸ்தவச் சபைகளை அடக்கி ஒடுக்கி பாழ்படுத்தத் தொடங்கினர். ஏராளமானோர் சிறைகளாயினர், இரத்த சாட்சிகளாய் மரித்தனர். அந்நாளில் மறைத்திரு ரிச்சர்ட் உம்பிராண்ட் திருச்சபைத் தலைவர்களில் பெயர் பெற்றவராய், எல்லோராலும் நன்கு அறியப்பட்டவராய் வாழ்ந்தார். சிறையிலடைப்பட்டவருக்கும் ரஷ்ய போர் வீரர்களுக்கும் 'இரகசியமாக' சுவிசேஷத்தைப் போதிக்கத் துணிந்தார். கம்யூனிச ஆட்சியினர் இவரையும், இவரது துணைவியாரையும் பிடித்து சிறையிலடைத்தனர். 1948-ம் ஆண்டு இவர் மூன்று ஆண்டுகளாக இனத்தவர், நண்பர் யாரையும் காணக்கூடாதபடி தனியாக விடப்பட்டார். கம்யூனிச கொடுமைக்காரர் அவரைவிடாது கொடிய சித்திரவதைச் செய்தனர்.

வெளிநாட்டுத் தலைவர்கள் பலர் உம்பிராண்ட் அவர்களின் பாதுகாப்பைப் பற்றி விசாரித்தனர். ஆனால் அவர்களுக்கு உண்மை நிலை சொல்லப்படவில்லை. அவர் ஓடி விட்டார், மரித்துபோனார் என்றெல்லாம் சொன்னார்கள்.

அவரோ எட்டாண்டுகள் சிறையில் அவதிப்பட்டார். விடுதலை அடைந்த உடனே ''அந்தரங்கச் சபை''யுடன் ஊழியஞ் செய்ய தாமதிக்கவில்லை. இரண்டு வருடங்களுக்குப் பிறகு மறுபடியும் கைது செய்யப்பட்டு 25 ஆண்டுகள் சிறைவாச தண்டனைக்குள்ளானார். சித்திரவதைப் படுத்தினார்கள். ஆனால் தெய்வாதீனமாக ஐந்தாண்டுகளுக்குள் சிறையினின்று விடுதலையாகி, ''அந்தரங்க சபை'' ஊழியத்தில் மறுபடியும் இறங்கினார். அவர் ருமேனியாவை விட்டு வெளியேற வேண்டுமென, நார்வேயிலுள்ள கிறிஸ்தவர்கள் ஏற்பாடு செய்து அரசாங்கத்தாருக்கு, 25,00,000 ரூபாய் விடுதலை விலையாக எண்ணிக் கொடுத்து விடுவித்தார்கள்.

1966-ம் ஆண்டு உம்பிராண்ட் அவர்கள், அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புக் குழுக்கு முன் நின்று, சட்டையைக் கழற்றி அவர் சரீரத்தில் கம்யூனிசத்தாரால் உண்டான ஆழமான பயங்கர பதினெட்டு காயங்களைக் காண்பித்தார். ருமேனியா கம்யூனிசத்தவர் இவரை எப்படியாகிலும்கொலை செய்யவேண்டுமென சதி செய்து வருகிறார்கள். எனினும், இதற்கெல்லாம் இவர் சற்றும் அஞ்சமாட்டார்.

இவரை ''அந்தரங்க சபையின் குரல்'', ''உயிருள்ள இரத்தசாட்சி'' ''இரும்புத் திரையின் பவுல்'' என்றழைக்கிறார்கள். இச் சிறப்புப் பெயர்கள் இவருக்கு முற்றும் பொருந்தும்!

நமது ஜெபத்தால் அவரைத் தாங்குவோமாக.

## அத்தியாயம் ஒன்று

**கிறிஸ்துவைக் கண்ட நாத்திகன்:**

நான் ஒரு யூதனுயினும் எந்த மதத்தையுமே பின்பற்ருத ஒரு குடும்பத்தில் பிறந்தவனுயிருந்தேன். என்னுடைய இளம் பிராயத்தில்கூட நான் மதத்தைப்பற்றிப் போதிக்கப் பட்டிருக்கவில்லை. ஆதலால், என்னுடைய பதினுன்காவது வயதில், நான் ஒரு நாத்திகனுகவே காணப்பட்டேன். எனது பள்ளிப்பருவம் முழுவதும் நான் நாத்திகனுக இருந்த தாகவே என்னுல் நினைவுகூர முடிகிறது. நான் ஓர் அனு தைப் பையனுக வளர்ந்து வந்ததால், முதலாவது உலக மகா யுத்தம் நடந்துகொண்டிருந்த பொழுது, பஞ்சத்தால் மிகவும் வருந்தினேன். வயது பதினுன்கை எட்டியபோது, இன்றைக்கிருக்கிற கம்யூனிஸ்டுகளைப் போலவே நானும் ஒரு தீவிர நாத்திகனுக மாறினேன். நாத்திகக் கொள்கைகளைப் பற்றிக் கூறும் புத்தகங்களைப் படித்திருக்கிறேன். இருந்த போதிலும், ''தேவன்'' அல்லது ''கிறிஸ்து'' என்பவற் றின்மீது கொஞ்சம் நம்பிக்கையிருந்தது. ஆனுலும் அவ்வித நம்பிக்கையெல்லாம் மனிதனுடைய மனதைக் கெடுக்கக் கூடியது, தீங்கு விளைவிக்கக்கூடியது என்று கருதி அவற்றை வெறுத்து வந்தேன். ஆதலால், மதத்தைப் பற்றிய கசப்பு என்னுடைய இதயத்தில் இருந்து வந்தது. ஆனுல் தேவனு டைய கிருபையால் நானும் அவரால் தெரிந்து கொள்ளப் படும் சிலாக்கியம் பெற்றேன் என்பதைப் பின்னுல் தெரிந்து கொண்டேன். ஏன் தெரிந்து கொள்ளப்பட்டேன் என்ற காரணத்தை என்னுல் இப்போதும் புரிந்து கொள்ள முடிய வில்லை. ஏனென்ருல் என்னுடைய குணத்திற்கு அதன் கார ணங்கள் கொஞ்சமேனும் பொருந்தாது. அவ்வளவு கெட்ட வனுக நான் ஜீவித்து வந்தேன்.

நாத்திகனுக நான் ஜீவித்து வந்தாலுங்கூட, நான் அறியாத ஏதோ ஒன்று என்னை அடிக்கடி கிறிஸ்தவ சபைக் கட்டிடங்களுக்குக் கொண்டு செல்வதை உணர்ந்தேன். பொதுவாக, அப்படிப்பட்ட இடங்களுக்குச் செல்லுவது

என்றால் எனக்குக் கொஞ்சமும் பிடிக்காது. அங்கு என்ன நடக்கிறது என்பதும் எனக்குத் தெரியாது. என்னையுமறியாமல் சில வேளைகளில் அங்குச் சென்று, பிரசங்கிக்கப் படுவதைக் கேட்பேன். ஆனாலும், அவை என்னுடைய இதயத்தைத் தொடவில்லை. ஆதலால், தேவன் என்று ஒருவர் கிடையாது என்று தீர்மானித்து விட்டேன். தேவன் ஓர் எஜமானனென்றும், அவரை நாம் பணிய வேண்டுமென்றும் கூறுவதை நான் மிகவும் வெறுத்தேன். ஆனால், உலகத்தில் எங்காவது ஒரு மூலையில் என்னை 'நேசிக்கும் இதயம்' ஒன்று இருக்கிறதாவென்பதை அறிய ஆசையுள்ளவனாயிருந்தேன். குழந்தைப்பருவத்திலும் சரி, வாலிபப் பருவத்திலும் சரி மகிழ்ச்சி என்றால் என்னவென்பதை அறியாதவனாக நான் வளர்ந்ததால், என்னை 'நேசிக்கிற இதயம்' ஒன்று உண்டாவென்று அறிய மிக ஆவலுள்ளவனாக இருந்தேன்.

தேவன் இல்லை என்று நான் நினைத்திருந்தாலும் 'அன்பின் தேவன்' ஒருவர் இருக்கக்கூடாதா என்று ஏங்கி, அதற்காக மிகவும் வருந்தினேன். இப்படி நான் என்னுடைய ஆவியில் கலங்கித் தவித்துக்கொண்டிருந்தபோது ஒருநாள் ஒரு கத்தோலிக்க சபைக் கட்டிடத்திற்குள் சென்றேன். அங்கு எல்லோரும் முழங்கால் படியிட்டு, ஏதோ சொல்லிக் கொண்டிருப்பதைக் கேட்டேன். உடனே, அவர்கள் என்ன சொல்லுகிறார்களோ, அதையே நானும் சொல்லி, அப்படியாவது ஒரு மாற்றம் ஏற்படட்டும் என்று நினைத்து, அவர்களைப் போல நானும் முழங்காலில் நின்றேன். அவர்கள் எல்லோரும் கன்னிமரியாளின் சிலையைப் பார்த்து, ''கிருபை நிறைந்த எங்கள் அன்னை மேரியே நீர் வாழ்க!'' என்று சொன்னார்கள். நானும் அவர்களைத் தொடர்ந்து அப்படியே பலமுறைகள் கூறி, மரியாளின் சிலையை நோக்கிப் பார்த்தேன்; மாற்றம் ஒன்றும் ஏற்படவில்லை. இதனால் நான் மிகவும் துக்கப்பட்டேன்.

நான் நாத்திகனாக இருந்து பார்த்தேன்; அதுவும் எனக்கு சமாதானத்தைத் தரவில்லை. ஆதலால், ஒருநாள்

தேவனிடத்தில் இப்படியொரு அறை கூவல் விட்டேன்: ''தேவனே; தேவன் ஒருவர் இல்லை என்று நான் நன்றாக அறிவேன்; அப்படியே ஒருவேளை நீர் தேவனாக இருந்தாலும், உம்மை நான் நம்ப வேண்டுமென்பது என்னுடைய கடமையல்ல; ஆனால், உம்மை எனக்கு வெளிப்படுத்த வேண்டியது உம்முடைய கடமை.''

என் நிலைமை இவ்வாறு இருக்க, ருமேனியாவின் மலைப் பிரதேசத்திலுள்ள ஒரு கிராமத்தில் வயதான தச்சன் ஒருவன் இருந்தான். நான் அவனை முன்பின் பார்த்ததில்லை.'' ஆனால் அவன் இவ்வாறு ஜெபித்தானென்று பின்னால் அவனே சொல்லக் கேட்டேன். ''தேவனே பூமியிலிருந்த போது உமக்காக உழைத்தேன். பரலோகத்தில் ஒருநாள் என்னுடைய பலன்களை நான் பார்க்கப்போகிறேன். ஆனால் அதற்கு முன்பே, பூமியிலேயும் அவற்றைப் பார்க்க விரும்புகிறேன். ஒரு யூதனைக் கிறிஸ்துவண்டை கொண்டுவராமல் மரிப்பதற்கு நான் விரும்பவில்லை. ஏனென்றால், இயேசு கிறிஸ்து அந்த யூத பரம்பரையிலிருந்தே தோன்றினார். ஆனாலோ, நான் ஓர் ஏழையும், வயது முதிர்ந்தவனும், வியாதியுள்ளவனுமாயிருக்கிறேன். என்னால் ஒரு யூதனைத் தேடி அலையமுடியாது. என்னுடைய கிராமத்திலும் யூதர் யாருமில்லை. ஆகையால் ஒரு யூதனை என்னுடைய கிராமத்திற்கு கொண்டுவாரும். அவனை கிறிஸ்துவினிடத்தில் கொண்டுவருவதற்கு நான் முயற்சி செய்வேன்'' என்பதே.

எனக்கே புரியாத நிலைமையில் ஒருநாள் அந்தத் தச்சன் வசித்துவந்த கிராமத்திற்குச் சென்றேன். அங்கு செல்வதற்கு எனக்கொன்றும் வேலை கிடையாது. ருமேனியாவில் பன்னிரெண்டாயிரம் கிராமங்கள் உள்ளன. ஆயினும் அந்த குறிப்பிட்ட கிராமத்திற்கே நான் சென்றேன். நான் அங்கு சென்றபோது நான் ஒரு யூதன் என்பதை எப்படியோ அந்தத் தச்சன் கண்டு கொண்டான். ஒரு வாலிபப் பெண்ணிடம் நேசம் வைத்து அவளை உபசரிப்பதுபோல, என்னை அவன் உபசரித்து தன்னுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றான். அவனுடைய ஜெபத்திற்கு நான் உத்தர

வாகக் கிடைத்ததாக அவன் எண்ணிக்கொண்டு என்னுடைய கையில் ஒரு வேதாகமத்தைக் கொடுத்து வாசிக்கச் சொன்னான். நான் ஒரு நாத்திகனாக அநேக முறை வேதாகமத்தைப் படித்திருக்கிறேன். ஆனால், அவன் என்னுடைய கையில் கொடுத்த வேதாகமமோ வேறு வகையாகத் தென்பட்டது. அவன் எனக்காகவும், எனது மனைவிக்காகவும் அவனுடைய மனைவியோடுகூட சேர்ந்து மணிக்கணக்கில் ஜெபித்ததாக பின்னால் என்னிடம் கூறினான். அவன் கொடுத்த வேதாகமம் முழுவதும் எழுத்துக்களால் எழுதப்பட்டிருந்ததாக நான் காணவில்லை. அதன் ஒவ்வொரு பக்கமும், ஜெபத்தால் மூட்டப்பட்ட அன்பின் ஜுவாலையாகக் காட்சியளித்தது. அதை என்னால் வாசிக்க முடியவில்லை. ஏனென்றால், என்னுடைய கெட்டுப்போன ஜீவியத்தையும் இயேசுவின் பரிசுத்த ஜீவியத்தையும், என்னுடைய அசுத்தமான நிலையையும் அவருடைய பரிசுத்தத்தையும், நான் அவரை வெறுத்து ஜீவித்ததையும் அவர் என்னிலே அன்பு கூர்ந்ததையும் ஒப்பிட்டுப் பார்த்து, என்னையும் அவருக்குச் சொந்தமாக ஏற்றுக் கொண்டாரென்பதை நினைத்துப் பார்த்தபொழுது கண்ணீர் விட்டு அழுதேன். சில நாட்களில், என்னுடைய மனைவியும் இரட்சிக்கப்பட்டாள். அதன் பின் அவளும் அநேகரைக் கிறிஸ்துவிடம் கொண்டுவந்தாள். அந்த அநேகர் இன்னும் மற்ற அநேகரைக் கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வந்தார்கள். இதனால் சீக்கிரத்தில் ருமேனியாவில் ஒரு சபை ஏற்படுவதற்கு ஏதுவுண்டாயிற்று.

இந்தச் சமயத்தில் நாஜிக் கட்சிக்காரர்களின் ஆட்சி அங்கு ஏற்பட்டது. அவர்களால் நாங்கள் அதிக உபத்திரவப்பட்டோம். முற்காலத்தில், புராடெஸ்டண்டு மார்க்கத்தினரையும், யூதர்களையும் துன்புறுத்திய எதேச்சாதிகளைப் போல நாஜிக்காரர்களும் கொடுமை செய்ய ஆரம்பித்தனர். கர்த்தருடைய ஊழியத்திற்குப் புறப்படுமுன், அங்கு ஆரம்பிக்கப்பட்ட சபையை நானே கண்காணித்து வந்தேன். நானும் என்னுடைய மனைவியும் அநேக முறை சிறையிலடைக்கப்பட்டு அவர்களால் அடிக்கப்பட்டோம். நாஜித் தலைவர்களின் முன்னால் அநேகந்தரம் இழுத்துச்செல்லப்

பட்டோம். நாஜிக்காரர்களின் கொடுமை அதிகரித்து வந்தது. ஆனால், அந்தப்பாடுகள் எல்லாம் பின்னால் நாங்கள் கம்யூனிஸ்டுகளின் கீழ் அனுபவித்த துன்பத்தின் வாசனை யாக மாத்திரமே இருந்தது. என்னுடைய மகனை நாஜிக் காரரின் கையிலிருந்து தப்புவிப்பதற்காக, அவனுக்கு 'மிகாய்' என்ற யூதனல்லாத பெயரிட்டோம். அவர்கள் செய்த கொடுமைகளின் விளைவாக நாங்கள் அடிகளையும், உதைகளையும் சரீரத்தில் பெற்றாலும், தேவன் அருளும் உதவி யினால் மனிதனுடைய கொடூர ஆவியையும் பயங்கரமான சித்திரவதைகளையுங்கூட சகிக்க முடியும் என்ற பாடத்தைக் கற்றோம். அதன் மூலமாக, 'இரகசிய கிறிஸ்தவ ஊழியம்' செய்வதையும் கற்றுக் கொண்டோம். இவை கள் யாவும் அடுத்து எங்களுக்கு வரவிருந்த பயங்கர சோதனைக்கு எங்களை ஆயத்தப்படுத்திற்று.

**ரஷியர்களிடத்தில் எனது ஊழியம்:**

நாத்திகனாக இருந்த என்னைக் கர்த்தர் இரட்சித்ததால், நான் இரட்சிக்கப்பட்ட நாள்முதற் கொண்டு ரஷியர்களுக்கு அவரைக் குறித்து சாட்சி கொடுக்க வேண்டுமென்று என் னிலே மிகுந்த ஆவலுள்ளவனாக இருந்தேன். ஏனெனில், அவர்கள் குழந்தை பருவந்தொட்டே நாத்திகக் கொள்கை யில் வளர்க்கப்படுபவர்கள். விரைவில் எனது ஆவலும் நிறைவேறியது என்றே சொல்லலாம். எவ்வாறெனில், நாஜிக்காரர்களின் ஆட்சிக் காலத்திலேயே ருமேனியாவில், ரஷியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஆயிரக்கணக்கான, யுத்தக்கைதிகள் இருந்தார்கள். ஆதலால், அவர்கள் மத்தி யில் ஊழியம் செய்யக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

அந்த ஊழியமானது வினோதமாகவே இருந்தது. நான் முதலாவதாக சந்தித்த ரஷியக் கைதியை என்னால் ஒரு போதும் மறக்க முடியாது. அவன் ஓர் எஞ்சினியர். அவ னிடத்தில் ஒருநாள், ''தேவனிடத்தில் நீர் விசுவாசமாயிருக் கிறீரா?'' என்று கேட்டேன். அதற்கு அவன் 'இல்லை' என்று பதில் கொடுத்திருப்பானானால், நான் அதைப் பொருட்படுத்தி யிருக்கமாட்டேன். ஏனென்றால், தேவனை விசுவாசிக்கவும்

அவரை விசுவாசியாமலிருக்கவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. ஆனுல், " தேவனை நீர் விசுவாசிக்கிறீரா?" என்று கேட்டதும், 'தேவன்' என்ற வார்த்தையை அதுவரை கேட்டிராதவன்போல என்னை நோக்கிப்பார்த்து, " விசுவாசிப்பதற்கு எனக்கு அப்படியொரு ராணுவக்கட்டளை கிடையாது. அவ்வாறு கட்டளையிருக்குமானுல், நான் விசுவாசிப்பேன்" என்று கூறினுன். இதைக்கேட்டதும் என் கண்களிலிருந்து கண்ணீர் சிந்தியது. அப்போது என்னுடைய இதயமே உடைந்து விடும் போலிருந்தது. ஏனெனில், அவன் தன்னுடைய மனம் செத்த் நிலைமையில், தனது விருப்பத்தின்படி எதையும் செய்யக்கூடிய மிகப்பெரிய சுதந்திரத்தை தேவன் அவனுக்குக் கொடுத்திருந்தும் அதனை இழந்து போனவனுக என்முன் நின்றுகொண்டிருந்தான். கம்யூனிஸ்டுகள் கட்டளையிட்டால் ஒன்றை விசுவாசிக்கவும், தடுத்தால் அதனை விசுவாசியாமலிருக்கவும் ஆயத்தமாக இருந்த அவன், 'மூளை கழுவப்பட்டவனுக, தன்னியக்கச் சக்தியை இழந்த ஓர் இயந்திரம் போலக் காட்சியளித்தான். தானுக ஒன்றையும் சிந்திக்க முடியாதவனுக இருந்த அவன் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்திலுள்ள ஒரு மெய் ரஷ்யனுக விளங்கினுன்.

இவ்வாறு, மனித சமுதாயத்திற்கு கம்யூனிசம் செய்திருக்கிற கொடுமையைக் கண்டபின், அன்று முதல் ரஷியர்கள் தங்களுடைய சுயாதீன நிலையை அனுபவிக்கவும், தேவனிடத்திலும் கிறிஸ்துவினிடத்திலும், அவர்கள் விசுவாசம் வைப்பதற்கு உழைக்கவும் விரும்பியவனுய், அவர்களுக்காகவே என்னுடைய வாழ்க்கையைத் தத்தம் செய்வதாக தேவனிடத்தில் நான் வாக்குக் கொடுத்தேன்.

இதற்காக நான் ரஷியா செல்லவேண்டிய அவசியமில்லாதிருந்தது. ஏனென்ருல், 1944-ம் ஆண்டு ஆகஸ்டு 23-ந்தேதி கம்யூனிஸ்டுகள் பத்துலட்சம் போர்வீரர்களோடு வந்து பலாத்காரமாக ருமேனியாவைப் பிடித்தனர். இதனுல் எங்கள் எல்லோரையும் பயம் ஆட்கொண்டது. பின்னுல் இவர்களால் வந்த உபத்திரவம் முன்பு நாங்கள்

நாஜிக்காரர்களின் கீழ்ப்பட்ட துன்பத்தை இலேசாக எண்ணும்படி செய்தது. ஒரு கோடியே எண்பது லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட ருமேனியாவில், பத்தாயிரம் பேர் மாத்திரமே கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்திருந்தனர். ஆயினும், ருமேனிய ராணுவமும், போலீசும் கலைக்கப்பட்டு எங்கள் யாவருடைய விருப்பத்திற்கும் மாறாக, பலாத்காரம் பயன்படுத்தப்பட்டு கம்யூனிஸ்டுகள் ஆட்சியைக் கைப் பற்றினர்

**அன்பின் வார்த்தைகளும் நயவஞ்சகப் பேச்சும் ஒன்றாகவே காணப்படுகின்றன :**

கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வந்ததும், கிறிஸ்தவ சபையின் கற்பைக் கெடுக்க அவர்கள் அதிகத் தந்திரமான வழிகளைப் பின்பற்றினார்கள். வெளிப்படையாகப் பார்த்தால், உண்மை யான அன்போடு நேசிப்பவனுடைய வார்த்தையும், விபச் சாரக்காரனுடைய வார்த்தையும் ஒன்றாகவே இருக்கும். ஒரு பெண்ணைத் தன் மனைவியாக்கிக் கொள்ள நினைத்து அவளை உண்மையான அன்போடு நேசிப்பவனும், ஒரு வேளை சிற்றின்பத்திற்காக மாத்திரம் அவளை அனுபவிக்க நினைப்ப வனும், எவ்வாறு தங்களில் வித்தியாசமின்றி, "நான் உன்னை நேசிக்கிறேன்" என்று கூறுவார்களோ, அது போலவே கம்யூனிஸ்டுகளின் அன்பும் (பின்னவனைப் போல) இருந்தது. வேசித்தனத்தின் வார்த்தையிலிருந்து மெய்யான அன்பின் வார்த்தையைப் பகுத்தறிய இயேசு கிறிஸ்து நமக்குக் கற்பித்திருக்கிறாரே! ஆட்டுத்தோல் போர்த்திருக்கும் ஓநாய் களிலிருந்து உண்மையான ஆடுகளைப் பிரித்துச் சொல்லவும் நமக்கு அவரே போதித்திருக்கிறார். ஆனாலோ, கம்யூனிஸ்டு களின் ஆதிக்கத்திலிருந்த பாதிரிமார்களும், போதகர்களும், ஊழியர்களும் ஓநாயின் குரலிலிருந்து, உண்மையான ஆட் டின் குரலைப் பகுத்தறியக் கூடாதவர்களாயிருந்தார்கள்.

பார்லிமெண்டு கட்டிடத்தில் கம்யூனிஸ்டுகள் ருமேனியா விலிருந்த எல்லாக் கிறிஸ்தவச் சபைகளையும் ஒன்றுசேர்த்து பெரிய மாநாடு ஒன்று நடத்தினர். எல்லா பிரிவுகளையும்

சேர்ந்த பாதிரிமார்கள், போதகர்கள், ஊழியக்காரர்கள் முதலிய 4,000பேர் அந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். மாநாட்டிற்கு வந்த எல்லோரும் ஜோசப் ஸ்டாலினை கௌரவத்தலைவனாக தேர்ந்தெடுத்தனர். தலைவனாகத்தேர்ந் தெடுக்கப்பட்டவனே, 'அகில உலக தேவனற்றோர் இயக்கத் தின்' தலைவன்! கிறிஸ்தவர்களைக் கொலை செய்யும் ஒரு கொலைகாரன்! அந்த மாநாட்டில் பிஷப்மார்களும் போத கர்களும் ஒருவர்பின் ஒருவராக எழுந்து, கம்யூனிசமும், கிறிஸ்தவமும் அடிப்படையில் ஒன்றுதான். ஆகவே அவை இரண்டும் இணைந்து செல்லமுடியும் என்று கூறினர். ஊழியக் காரர்களும், ஒவ்வொருவராக எழுந்து நின்று புதிய அரசாங் கத்துக்குத் தங்கள் தங்கள் சபையின் விசுவாசத்தையும் நம் பிக்கையையும் தெரிவித்து அதை வாழ்த்தினர்.

நானும் என்னுடைய மனைவியும், அந்த மாநாட்டிற்குச் சென்றிருந்தோம். என் அருகில் அமர்ந்திருந்த அவள் ''ரிச் சர்ட், இவர்களால் அவமானமடை-யும் கிறிஸ்துவின் முகத் தைத் துடைப்பதற்கு நீங்களாவது எழுந்து நில்லுங்கள். அவ ருடைய முகத்தின் மீதல்லவோ இவர்கள் யாவரும் காரி உமிழ்கிறார்கள்'' என்று கூறினாள். அதற்கு நான், ''கிறிஸ் துவின் முகத்தைத் துடைக்க எழுந்து நிற்பேனானால் நீ உன் னுடைய கணவனை இழக்க நேரிடும்'' என்றேன். உடனே அவள், ''அப்படியொரு கோழையை கணவனாக ஏற்றுக் கொள்ள நான் விரும்பவில்லை'' என்றாள். இவ்வாறு அவள் சொன்னதும் எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. உடனே நான் எழுந்து, அந்த கொலைகாரர்களைப் புகழாமல் கிறிஸ்து வையும், பிதாவாகிய தேவனையும் புகழ்ந்து, ''எங்களுடைய விசுவாசமும், நம்பிக்கையும் முதலாவது அவருக்கே உரியது'' என்று கூறினேன். மாநாட்டில் பேசப்பட்ட பேச்சுகளும் கிறிஸ்துவைக் குறித்து நான் கொடுத்த சாட்சியும் கம்யூனி ஸ்டு கட்சியின் பார்லிமெண்ட் பீடத்திலிருந்து நாட்டு மக்கள் யாவருக்கும் ஒலி பரப்பானது. கடைசியில் இதைப் பேசினதற்காக நான் என் வாழ்க்கையில் ஒரு பெரிய

கிரயத்தைச் செலுத்த வேண்டியதாயிருந்தது. ஆனாலும் அது தகுதியானதென்றே கண்டேன்.

"பாரம்பரிய சபையின் தலைவர்களும், புரொட்டஸ்டண்டு சபையின் தலைவர்களும் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு கம்யூனிச கொள்கைகளை ஆதரித்துப் பேசினர். பாரம்பரிய சபையின் பிஷப் ஒருவர் தன்னுடைய மேல் அங்கியில் 'சுத்தியல் அரிவாள்' சின்னத்தை அணிந்து கொண்டு, தன்னுடைய பாதிரிமார்களைப் பார்த்து, நீங்கள் இனி என்னை "கிருபை நிறைந்தவரே" (Your Gracious) என்று அழைக்காதிருங்கள். "பிஷப் தோழனே" (Comrade Bishop) என்று அழையுங்கள்" என்றார். (கம்யூனிசத்தின்படி ஒருவர் மற்றவரைப் பார்த்து 'தோழனே' என்று தான் அழைக்கவேண்டும்.)

பின்பு ஒரு சமயம் ரெஸிட்டா என்ற பட்டணத்தில் நடைபெற்ற பாப்திஸ்துகளின் மாநாட்டிற்குச் சென்றேன். அந்த மாநாடு செங்கொடியின் கீழ் நடைபெற்றது. மாநாட்டின் முடிவில், சோவியத் யூனியனின் தேசீயக் கீதம் பாடப்பட்டது. அப்போது எல்லோரும் எழுந்து நின்றனர். மாநாட்டில் பாப்திஸ்து சபையின் தலைவர் எழுந்து ஸ்டாலின் தேவனுடைய கற்பனைகளை நிறைவேற்றினாரேயன்றி, வேறொன்றும் செய்யவில்லை என்று பிரசங்கம் செய்தார். அது மாத்திரமல்லாமல், ஸ்டாலின் வேதாகமத்தை மிக மிக நன்றாகப்போதித்து வந்தார் என்றும் அவர்மீது புகழுரை பாடினார். பட்ராஸ் காயு, ரோஸிமானு என்ற பாதிரிமார்களும் ஸ்டாலினை மிக அதிகமாகப் புகழ்ந்தனர். பின்னால் அவர்கள் இருவரும் கம்யூனிஸ்டுகளின் இரகசியப்போலீஸ் அதிகாரிகளாயினர்.

'ராப்' என்ற ருமேனிய லூத்தரன் சபையின் துணைபிஷப், வேதாகமப் பயிற்சிப் பள்ளியொன்றின் மாணவர்களிடத்தில், "தேவன் மூன்று வெளிப்பாடுகளை அளித்திருக்கிறார். ஒன்று மோசேயின் மூலமாக, மற்றொன்று இயேசுவின் மூலமாக, மூன்றாவதாக ஸ்டாலின் மூலமாக. இதில் மூன்றாவதாக வரும் ஸ்டாலின் அவருக்கு முந்தினவரான

இயேசுவையும் கடந்து, முன்னேறிச் சென்று விட்டார்'' என்று போதித்தார்.

ஆனால் எனக்கு அருமையாக இருந்த உண்மையான பாப்திஸ்துகள் இவர்களைப்போல மாறிவிடவில்லை. அவர்கள் கிறிஸ்துவுக்காக உண்மையுள்ளவர்களாயிருந்து பாடுகளைச்சகித்து வந்தார்கள். கம்யூனிஸ்டுகள் சபையின் தலைவர்களைத் தங்களுக்குள்ளாகவே தேர்ந்தெடுத்தார்கள். பாப்திஸ்துகள் அதனை ஏற்றுக்கொள்ளுவதைத் தவிர வேறொன்றும் செய்யமுடியவில்லை. இந்த நிலை இன்றுங்கூட தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் இருந்து வருகிறது. ஒரு காலத்தில் கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்தவர்கள், கம்யூனிச ஆட்சிக்குப்பின் கம்யூனிசத்துக்காக பாடுபட்டு, தங்களைப் பின் பற்றாத மற்ற சகோதரர்களைப் புறக்கணிக்கவும் ஆரம்பித்தனர்.

ரஷ்ய புரட்சிக்குப்பின்பு, அங்குள்ள கிறிஸ்தவர்கள் ஓர் 'அந்தரங்க சபையை' ஆரம்பித்தார்கள். அதுபோல் ருமேனியாவில் கொடுங்கோலரின் ஆதிக்கமும், அவர்களின் கீழிருந்த மதத்தலைவர்களின் காட்டிக்கொடுக்கும் தன்மையும், நாங்கள் பாரப்பட்ட இருதயத்தோடு, மக்களுக்கு சுவிசேஷத்தைச் சொல்லவும் உண்மையான கர்த்தருடைய பிள்ளைகளைச் சந்திக்கவும் தக்கதாக ஒரு சபையை ஏற்படுத்த எங்களைத் தூண்டியது. இந்த முயற்சியைத் தடை செய்ய வந்த கம்யூனிசவாதிகளை மதத்தலைவர்களும் ஆதரித்தனர். அந்தோ பரிதாபம்!

இப்படியாக இந்தச் சூழ்நிலையில் நானும் மற்றவர்களோடு சேர்ந்து இரகசியமாக ஊழியம் செய்துவந்தேன். சமுதாயத்தில் எனக்குக் கிடைத்திருந்த அந்தஸ்தும், மரியாதையும் ஊழியத்திற்குப்பேருதவியாக இருந்துவந்தன. நான் நார்வீஜியின் லுத்தரன் சபையில் போதகராக இருந்துகொண்டு பஞ்ச நிவாரண வேலையில் ஈடுபட்டிருந்த ருமேனிய உலக சங்க சபைகளின் பிரதிநிதியாகவும் பணியாற்றினேன். இந்த நிலைமை அந்தரங்க ஊழியத்திற்கு ஒரு பாதுகாப்பாக

இருந்தது. என்னுடைய இந்த உலகப்பிரகாரமான இரு ஸ்தானங்களும் என் இரகசிய ஊழியத்தைப்பற்றி கொஞ்சமேனும் அறிந்திராத அதிகாரிகளுக்குமுன் எனக்கு நன்மதிப்பைத் தேடித் தந்தன. எங்களுடைய ஊழியம் இருபிரிவாக இருந்தது. முதலாவது பத்துலட்சம் ரஷ்ய போர் வீரர்களின் மத்தியில் நடைபெற்ற இரகசிய ஊழியமாகவும், அடுத்தது ருமேனிய சிறைக் கைதிகளின் மத்தியில் நடைபெற்ற அந்தரங்க ஊழியமாகவும் இருந்தது.

**ரஷியர்கள்—ஆத்துமத் தாகம் நிறைந்தவர்கள் :**

ரஷியர்களிடத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதானது எனக்கு மோட்சமே பூமியிலிறங்கினதைப் போலிருந்தது. பலவிதமான மக்களுக்கு சுவிசேஷத்தை நான் பிரசங்கித்திருக்கிறேன். ஆனாலும், சுவிசேஷத்தை அறிவித்தவுடன் அதை அப்படியே உட்கொள்ளுகிற ரஷியர்களைப் போல ஒரு மக்களை நான் பார்த்ததில்லை. ஆத்துமத் தாகம் நிறைந்தவர்கள் ரஷியர்கள்.

''பாரம்பரிய சபை'' பாதிரி ஒருவர் ஒரு நாள் எனக்கு டெலிபோன் செய்து, ரஷிய ராணுவ அதிகாரி ஒருவர் கிறிஸ்துவை அறிந்துகொள்ளும்படி தம் வீட்டுக்கு வந்திருப்பதாகக் கூறினார். பாதிரியாருக்கு ரஷிய மொழித் தெரியாது. ஆனால், எனக்கு ரஷிய மொழி பேசுவதற்குத் தெரியும் என்பதை அவர் அறிந்திருந்ததால் எனது விலாசத்தை அவரிடம் கொடுத்திருந்தார். அந்த அதிகாரி மறுநாள் என்னைப் பார்ப்பதற்கு வந்தார். அவர் தேவனை நேசித்தார்; தேவனுக்காக அவருடைய உள்ளம் ஏங்கினது. ஆனால் இதுவரை அவர் வேதாகமத்தை பார்த்திருந்ததில்லை. தெய்வ வழிபாடுகளிலும் அவர் பங்கு கொண்டதில்லை. ஏனென்றால் ரஷியாவில், கிறிஸ்தவ சபைக் கட்டிடங்கள் மிகவும் சொற்பம். அவருக்கு தேவனைப்பற்றிய போதனையும் கிடையாது. இவ்வாறாக இருந்தும் தேவனைப் பற்றிய அறிவு சிறிதளவு கூட இல்லாத அந்த நிலையில் அவர் தேவனை அதிகமாக நேசித்திருந்தார்.

இயேசு கிறிஸ்து செய்த மலைப் பிரசங்கத்தையும், அவர் சொன்ன உவமைகளையும் நான் அவருக்கு வாசித்துக் காண்பித்தேன். அவற்றைக் கேட்டவுடன், "என்ன அற்புத அழகு? இந்த கிறிஸ்து இல்லாமல் நான் எப்படி வாழ முடியும்?" என்று கூறிக்கொண்டு, களிப்பில் மூழ்கியவராய் அந்த அறைக்குள்ளே நடனமாடத் தொடங்கினார். இப்படி கிறிஸ்துவின் மகிழ்ச்சி வெள்ளத்தில் களி கூர்ந்து மகிழ்ந்த ஒருவரைப் பார்த்தது அதுவே எனக்கு முதல் தடவை.

பிறகு ஒரு தவறு செய்துவிட்டேன். அவர் சற்றும் எதிர்பாராதிருந்த நேரத்தில் அவருக்கு கிறிஸ்துவின் பாடுகளையும், அவர் சிலுவையிலறையப்பட்டதையும் வாசித்துவிட்டேன். அதனைக் கேட்பதற்கு அவரை ஆயத்தப்படுத்துமுன் இதைச் செய்ததால், அது நான் செய்த தவறு என்று பின்னால் உணர்ந்தேன். கிறிஸ்து வாரினால் அடிக்கப்பட்டதையும், சிலுவையில் வைத்து அவரை அறையப்பட்டதையும், முடிவில் அவர் மரித்தரர் என்பதையும் கேட்ட மாத்திரத்தில் அந்த ரஷிய அதிகாரி நாற்காலியில் விழுந்து தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தார். காரணம், அவர் நம்பியிருந்த அந்த இரட்சகர் இப்போது மரித்துவிட்டார்! இதைக் கண்டவுடன் எனக்கு மிகவும் வெட்கமாகப் போய்விட்டது. ஏனென்றால், நான் ஓர் உபதேசியாகவும், மற்றவர்களுக்குப் போதிக்கும் போதகனாகவும் இவ்வளவு நாள் இருந்தும்கூட, இவர் கிறிஸ்துவின் பாடுகளைப் பகிர்ந்து கொண்ட அளவுக்கு நான் ஒருபோதும் பகிர்ந்ததில்லை. அந்நிலையில் இயேசு கிறிஸ்து மரித்து கல்லறையினுள் வைக்கப்பட்டிருந்தபோது, உண்மையோடு சிலுவையின் அடியில் நின்று அழுது கொண்டிருந்த மகதலேனா மரியாளைப்போல எனக்குக் காட்சியளித்தார் அவர்.

சிறிது நேரத்தில், நான் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பற்றி வாசிக்க ஆரம்பித்தேன். அவருடைய இரட்சகர் உயிரோடெழுந்த அந்த அற்புதமான செய்தியைக் கேட்டதும், அவருடைய முழங்கால்கள் ஒன்றோடொன்று மோத மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தார். "அவர் உயிரோ

டிருக்கிறார்! அவர் உயிரோடிருக்கிறார்!" என்று சத்த மிட்டுக் கொண்டு, அவரது உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கி வழிய, அந்த அறையினுள்ளே நடனமாடத் தொடங்கி விட்டார். பின்பு அவரைப் பார்த்து, "நாம் ஜெபம் செய் வோம்" என்று கூறினேன். அவரும் சரி என்றார். ஜெபம் செய்வதற்கான பரிசுத்த வார்த்தைகளை அவர் அறிந்திருக்க வில்லை. என்னோடுகூட அவரும் முழங்காலில் நின்று பின் வருமாறு ஜெபித்தார். "தேவனே எவ்வளவு அழகான மனிதன் நீர்! நான் உம் நிலையிலிருந்து, நீர் என்னுடைய நிலையில் இருந்திருப்பீரேயானால், உம்முடைய பாவங்களை நான் ஒருபோதும் மன்னித்திருக்க மாட்டேன். ஆனால் நீரோ என்னுடைய பாவங்கள் எல்லாவற்றையும் மன் னித்து விட்டீர். நீர் ஒரு நல்ல மனிதன். ஆகையால், உம்மை என் முழு இருதயத்தோடும் நேசிக்கிறேன்" என்பதே. வானத்திலுள்ள தேவ தூதர்கள் யாவரும் இவருடைய உருக்க மான ஜெபத்தைக் கேட்கிறதற்கு தங்களுடைய வேலைகளை யெல்லாம் ஒரு நிமிட நேரம் அப்படியே நிறுத்தி வைத்திருப் பார்கள் என்றே நம்புகிறேன். அந்த ராணுவ அதிகாரி அன்றைய தினத்திலேதானே கிறிஸ்துவண்டை வழி நடத்தப் பட்டார்.

ஒரு நாள் கடைக்குச் சென்றேன். ரஷிய ராணுவ தள கர்த்தன் ஒருவரும், பெண் அதிகாரி ஒருவரும் அந்தக் கடை யில் சாமான்களை வாங்கிக்கொண்டிருந்தார்கள். கடைக்கார னுக்கு ரஷிய மொழி தெரியாததால், அவர்கள் அவனோடு பேசுவதற்கு அதிகச் சிரமப்பட்டார்கள். எனக்கு ரஷிய மொழி தெரியுமாதலால், கடைக்காரன் கூறுவதை அவர் களுக்கு ரஷிய மொழியில் மொழி பெயர்த்துக் கூறி உதவி செய்தேன். அதன் மூலமாக அவர்களுடைய நண்பனாகக் கூடிய சிலாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவர்கள் இரு வரையும் என்னுடைய வீட்டிற்கு விருந்து சாப்பிட அழைத் துச் சென்றேன். சாப்பாட்டிற்கு முன்னால் நாங்கள் அமர்ந் ததும், "நீங்கள் இப்போது ஒரு கிறிஸ்தவ வீட்டில் இருக் கிறீர்கள்; ஆகையால் சாப்பிடுவதற்குமுன் தேவனை நோக்கி ஜெபிக்கிற பழக்கம் எங்களுக்குண்டு" என்று சொல்லிவிட்டு

ரஷிய மொழியில் சிறு ஜெபம் ஒன்றைச் செய்தேன். ஜெபத்தை கேட்ட அவர்களுக்கு சாப்பிட மனம் வரவில்லை. சாப்பிட உபயோகிக்கும் முட்கரண்டிகளையும், கத்திகளையும் அப்படியே மேஜைமீது வைத்துவிட்டு, தேவனைப் பற்றியும், கிறிஸ்துவைப் பற்றியும், வேதாகமத்தைப் பற்றியும் சரமாரி யாகக் கேள்விகள் கேட்க ஆரம்பித்துவிட்டார்கள்.

என்னால் இயன்றவரை அவர்களுடைய கேள்விகளுக்கு பதிலளித்தும், அவர்களால் ஒன்றையும் புரிந்துகொள்ள முடியவில்லை. அதற்குக் காரணம், தேவனைப் பற்றி அவர் கள் கடுகளவாவது கேள்விப்பட்டிருக்கவில்லை. ஆதலால் தேவனைக் குறித்து அவர்களிடத்தில் பேசுவது எளிதாக இல்லை. நூறு ஆடுகளையுடைய மனிதன் ஒருவனுக்கு ஓர் ஆடு மட்டும் காணாமற் போயிற்றென்ற உவமையைச் சொல்ல ஆரம்பித்ததும், ''அவன் எப்படி நூறு ஆடுகளை வைத்திருக்க முடியும்? கம்யூனிஸ்டுகளின் கூட்டுப்பண்ணை அவைகளைக் கைப்பற்றவில்லையா?'' என்று கேட்டார்கள். அப்புறம், இயேசு கிறிஸ்து ஒரு ராஜா என்று அவர்களிடம் கூறினேன். அதற்கு அவர்கள், '' எல்லா ராஜாக்களும் மிகவும் கெட்டவர்கள். மக்களுக்குக் கொடுமை செய்பவர் கள். அதுபோல இயேசுவும் ஒரு கொடுங்கோல் அரச னாகத்தான் இருக்கவேண்டும்'' என்று கூறினார்கள். பின்பு அவர்களுக்கு மத்தேயு *21:33* முதல் *44* வரை உள்ள வச னங்களில் சொல்லப்பட்டிருக்கிற வீட்டெசமானனையும், தோட்டக்காரரையும் பற்றிய உவமையைச் சொன்னேன். அவர்கள், ''ஆம், அந்தத் தோட்டக்காரர் வீட்டெசமான னுடைய ஊழியக்காரருக்குச் செய்தது சரியே. தோட்டம் கூட்டுப்பண்ணைக்குரியதுதானே'' என்றார்கள். இப்படி யாக, வேதாகமத்தின் ஒவ்வொரு காரியங்களையும், அவர்கள் கம்யூனிசத்தின் கண்ணோட்டத்தோடேயே நோக்கினார்கள். ஆதலால் நான் கூறியது எல்லாமே அவர்களுக்குப் புதுமை யாக இருந்தது. இயேசுவினுடைய பிறப்பைக் குறித்து அவர்களுக்குச் சொன்னபோது, ''மரியாள் தேவனுக்கு மனை வியா?'' என்று கேட்டார்கள்.

இவர்களோடு நான் செய்த சம்பாஷணையிலிருந்தும், இன்னும் மற்ற ரஷியர்களிடத்தில் பேசியதிலிருந்தும், ஒரு காரியத்தை நான் கற்க வேண்டியதாயிருந்தது. அதாவது வெகு நீண்ட காலமாக கம்யூனிசத்தின் அடிமைதனத்திலிருக்கிற ரஷியர்களுக்கு சுவிசேடத்தைச் சொல்லுவதற்கு, அவர்கள் புரிந்து கொள்ளக்கூடிய புதியதொரு மொழியைக் கையாள வேண்டும் என்பதே நான் செய்தக் கண்டுபிடிப்பு. உதாரணத்திற்கென்று சொல்லுவோமானால், மத்திய ஆப்பிரிக்காவிற்குச் சென்ற மிஷனரிகள் அங்குள்ள மக்களுக்கு 'உங்கள் பாவங்கள் சிவேறென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல் வெண்மையாகும்" (ஏசாயா 1:18) என்ற வசனத்தை, ''உங்கள் பாவங்கள் சிவேறென்றிருந்தாலும், அவை தேங்காயினுள்ளிருக்கும் பருப்பைப் போல வெண்மையாகும்" என்று மொழி பெயர்த்துச் சொன்னார்கள் என்று கேள்விப்பட்டேன். ஆப்பிரிக்கா தேசத்து மக்கள் உறைந்த மழையாகிய பனியைக் கண்ணாலும் கண்டதில்லை. ஆதலால் 'பனி' என்ற சொல்லுக்குப் பதிலாக அவர்கள், வேறொரு சொல்லைக் கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. அந்தப்படியே. நாங்களும் ரஷியர்களுக்கு, அவர்கள் விளங்கி கொள்ளக்கூடிய மார்க்கீசிய பாணியில் சுவிசேஷத்தைச் சொல்ல வேண்டியதாயிருந்தது. அது எங்களால் கூடாததாயிருந்தாலும், பரிசுத்த ஆவியானவர் தாமே அந்த வேலையைச் செய்து வந்தார்.

என்னிடத்தில் வந்த ராணுவ தளகர்த்தனும் பெண் அதிகாரியும், கர்த்தருடைய வசனத்தைக் கேட்டு அன்றைய தினத்திலேயே இரட்சிக்கப்பட்டார்கள். அதன் பின்பு ரஷியர்களிடத்தில் நாங்கள் செய்து வந்த அந்தரங்க ஊழியத்திற்கு அவர்கள்இருவரும் அதிக உதவியாக இருந்தார்கள்.

அநேக ஆயிரக்கணக்கான சுவிசேஷ புத்தகங்களையும், மற்றும் கிறிஸ்தவ வளர்ச்சிக்குப் பயன்படக்கூடிய நூல்களையும்நாங்கள் இரகசியமாக அச்சிட்டு, அவற்றை ரஷிய மக்க

ளின் மத்தியில் பரப்பி வந்தோம். இரட்சிக்கப்பட்ட ரஷிய போர் வீரர்களின் மூலம் அநேக வேதாகமங்களையும், வேதாகமப் பகுதிகளையும் நாங்கள் ரஷியாவுக்குள் கடத்த முடிந்தது.

ரஷியர்களுக்கு தேவனுடைய வசனத்தைக் கொடுப்பதில் நாங்கள் இன்னொரு அற்புதமான முறையையும் கையாடினோம். ரஷிய வீரர்கள் அநேக வருடங்களாக போர் செய்து வந்ததால், வீட்டிலுள்ள அவர்களுடைய பிள்ளைகளை நீண்ட காலமாகக் காணமலிருந்தார்கள். பொதுவாக ரஷியர்களுக்கு சிறுபிள்ளைகள் என்றால் அலாதிப்பிரியம். என்னுடைய மகன் மிகாயும், மற்றும் பத்து வயதுள்ள சிறு பிள்ளைகளும் தங்களுடைய சட்டைப்பைகளில் வேதாகம புத்தகங்களையும் சுவிசேஷ புத்தகங்களையும் எடுத்துக்கொண்டு, தெருக்களிலும், பூங்காவிலும் உள்ள ரஷியர்களிடத்திற்குச் செல்லுவார்கள். இவர்களைக் கண்ட ரஷியர்களுக்கு, தாங்கள் நீண்ட நாட்களாக காணாதிருக்கிற தங்களுடைய பிள்ளைகளின் ஞாபகம் வரவே, அவர்களை அழைத்து, தொட்டு அன்போடு பேசி சாக்கலேட்டு, இன்னும் மற்ற தின்பண்டங்களைக் கொடுப்பார்கள். இந்தப்பிள்ளைகள் அதற்குப் பதிலாக, தாங்கள் வைத்திருக்கிற வேதாகம புத்தகங்களையும், சுவிசேஷங்களையும் அவர்களுக்குக் கொடுப்பார்கள். ரஷியர்கள் அவற்றை மிகுந்த ஆவலோடு பெற்று வாசிப்பார்கள். வெளிப்படையாக துன்பத்தின் மத்தியில் நாங்கள் செய்து வந்த ஊழியத்தை அந்த சிறு பிள்ளைகள் ஓர் ஆபத்துமின்றி மிகுந்த பாதுகாப்போடு செய்து வந்தார்கள். என்ன ஆச்சரியம் இது! ரஷியர்களின் மத்தியில் ''சின்னஞ்சிறு ஊழியர்களாகவே'' விளங்கி வந்தார்கள் அவர்கள்! நாளடைவில் அவர்களுடைய ஊழியம் மிகுந்த பலனைக் கொண்டுவந்தது. இந்தவிதமாக, அநேக ரஷியப் போர் வீரர்களும் கர்த்தருடைய வசனத்தைப் பெற்று வந்தார்கள்.

**ரஷிய ராணுவ வீடுதிகளில் ஊழியம் :**

ரஷிய மக்களிடத்தில் நாங்கள் தனிப்பட்ட முறையில் மாத்திரமல்ல, சிறு சிறு கூட்டமாக இருப்பவர்களின் மத்தி

யிலும் ஊழியம் செய்து வந்தோம். ரஷியர்களுக்கு கைக் கடிகாரங்கள் என்ருல் மிகவும் பிரியம். அதனுல் ருமேனிய ருடைய கடிகாரங்களை அவர்கள் பகிரங்கமாகத் திருடி வந்தார்கள். தெருவில் போவோர் வருவோரிடமுள்ள கடிகாரங்களைக்கூட அவர்கள் பறிமுதல் செய்து வந்தார்கள். இரு கைகளிலும் கடிகாரங்களைக் கட்டிக்கொள்ளும் அதிச யத்தை அவர்களிடத்தில் கண்டோம். அதை விட இன்ெனுரு அதிசயம் என்னவென்ருல், பெண் அதிகாரிகளாக இருக்கிற வர்கள் அலாரம் அடிக்கும் கடிகாரங்களைக்கூட தங்களுடைய கழுத்தில் கட்டிக்கொள்ளுவார்கள். கைக்கடிகாரங்கள் அவர்களுக்கொரு அதிசயப் பொருளாகத் தோன்றின. அதிகமான அளவில் அவை அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே ருமேனியர்கள் தங்களுக்குக் கைக்கடிகாரம் வேண்டு மென விரும்பினுல் ரஷியப்போர்வீரர்களின் ராணுவ விடுதிகளுக்குச்சென்று அவர்கள் வைத்திருக்கும் திருட்டு கடிகாரங்களை வாங்கி வந்தார்கள். அநேக சமயங்களில் திருட்டுப்போன தங்களுடைய சொந்த கடிகாரங்களையே அவர்கள் விலைகொடுத்து வாங்க வேண்டியதாயிற்று. இவ்விதமாக வியாபாரத்தை முன்னிட்டு, ரஷியப்போர் வீரர்களின் ராணுவ விடுதிகள் ருமேனியர்கள் சாதாரண மாகச் செல்லக்கூடிய இடமாக இருந்தன. அந்தரங்க சபை யிலுள்ள எங்களுக்கு இது அதிக அனுகூலமாக இருந்தது. எப்படியென்ருல், கடிகாரங்களை வாங்கப்போகிறவர்கள் போலச் சென்று அவர்களின் மத்தியிலே ஊழியம் செய்யக் கூடிய வாய்ப்பு இதன் மூலமாக எங்களுக்குக் கிடைத்தது.

முதல்முறையாக நான் அங்கு சென்றது ஒரு பண்டிகை நாளேயாகும். பாரம்பரிய கிறிஸ்தவர்களுடைய 'பரி. பவுல்-பரி. பேதுருவின் நினைவுநாள்' அது. அங்கு சென்றவுடன் உண்மையிலேயே கடிகாரம் வாங்குகிறவன்போல, ஒன்று அதிக விலையாயிருக்கிறது என்றும், மற்ெறுன்று சிறியதாக இருக்கிறது என்றும், இன்ெனுன்று மிகவும் பெரியதாக இருக் கிறதென்றும் கூறிப்பாசாங்கு செய்தேன். இது அவர்களுக் குத் தெரியாதாகையால், அநேக போர் வீரர்கள் என்னிடத்

தில் ஓடிவந்து, அவரவருடைய கடிகாரத்தை என்னிடம் காண்பித்து, அதன் விலையைக் கூறி நான் அதை வாங்க வேண்டுமென்று சொல்லி என்னைச் சூழ்ந்துகொண்டார்கள். உடனே நான் என்னுடைய வேலையை ஆரம்பித்தேன்.

"பவுல் அல்லது பேதுரு என்ற பெயருடையவர்கள் இங்கு யாராவது இருக்கிறீர்களா?" என்று கேட்டேன். சிலர் அப்பெயருடையவர்களாயிருந்தார்கள். ஆகவே அவர்களைப் பார்த்து "இன்று 'பவுல்—பேதுருவின் நினைவுநாள்' என்பதை அறிவீர்களா?" என்று கேட்டேன். அந்த பண்டிகையைப்பற்றி அங்கிருந்த சில முதிர்வயதானவர்கள் அறிந்திருந்தார்களேயன்றி, வாலிபர்களில் ஒருவராவது அதைப்பற்றி அறிந்திருக்கவில்லை. ஆதலால் நான் கேட்டதற்கு ஒருவராவது பதில் கூறவில்லை. "பவுலும், பேதுருவும் யாரென்று உங்களுக்குத் தெரியுமா?" என்று மறுபடியுமாக அவர்களிடத்தில் கேட்டேன். இப்போதும் பதில் இல்லை. உடனே ஆரம்பத்திலிருந்து, பவுல், பேதுரு ஆகிய இருவரின் வாழ்க்கையைப்பற்றிச் சொல்ல ஆரம்பித்தேன்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த வயதான போர்வீரன் ஒருவன் என்னை இடைமறித்து, "நீ இங்கு கடிகாரம் வாங்க வரவில்லை. விசுவாசத்தைப் பற்றிச் சொல்லவே வந்திருக்கிறாய். ஆனாலும் பரவாயில்லை. இங்கு நீ உட்கார்ந்துகொண்டு எங்களுக்குச் சொல்லு; நாங்கள் கேட்கிறோம். ஆனால் ஒன்றுமட்டும் ஜாக்கிரதை! இங்கு என்னைச் சுற்றிலும் இருக்கிறவர்கள் எல்லோரும் நல்லவர்கள். மற்றபடி அதிகாரிகள் யாராவது வருவார்களானால், என் கையை உன்னுடைய முழங்காலில் வைப்பேன். அப்போது கடிகாரங்களைப்பற்றியே பேசவேண்டும். கையை எடுத்துவிட்டால் திரும்பவும் உன்னுடைய செய்தியை கூறலாம்" என்று கூறினான். இப்படி அவனுடைய பாதுகாப்பின் கீழ், பவுலையும், பேதுருவையும், அவர்கள் தங்களுடைய வாழ்க்கையையே காணிக்கையாகக் கொடுத்த கிறிஸ்துவைப்பற்றியும் அவர்களிடத்தில் தெளிவாகப் பேசினேன். அநேகர் மௌனமாயிருந்து கவனமாய்க் கேட்டார்கள். அவர்களுடைய நம்பிக்கைக்குப்

பாத்திரமற்றவர்கள் அங்கு வரும்போது, அந்தப் போர்வீரன் தன்னுடைய கையை என் முழங்காலில் வைப்பான். உடனே நான் கடிகாரங்களைப் பற்றிப்பேச ஆரம்பிப்பேன். அந்த ஆள் போன உடன் கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லுவேன்.

இவ்விதமாக நான் அங்கு அடிக்கடி சென்று கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லுவதற்கு அந்த ரஷிய கிறிஸ்தவப் போர்வீரர்கள் எனக்கு அதிக உதவியாக இருந்தார்கள். அவர்களுடைய நண்பர்களில் அநேகர் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். ஆயிரக்கணக்கான சுவிசேஷங்கள் இரகசியமாகக் கொடுக்கப்பட்டன. இதற்காக அந்தரங்க சபையின் எங்கள் சகோதர, சகோதரிகள் கம்யூனிஸ்டுகளால் கண்டுபிடிக்கப்பட்டு, பலமாய் அடிக்கப்பட்டார்கள். ஆனாலும், எங்களுடைய இரகசிய ஊழியத்தைப் பற்றி அவர்கள் மற்றவர்களுக்கு வெளிப்படுத்தவில்லை.

இந்த ஊழியத்தின் மூலமாக, ரஷியாவிலுள்ள அந்தரங்க சபையின் சகோதரர்களைச் சந்தித்து அவர்களுடைய அனுபவங்களைக் கேட்கும் சிலாக்கியம் எங்களுக்குக் கிடைத்தது. முதலாவதாக, பரிசுத்தவான்களுக்குரிய உயரிய அம்சங்கள் அவர்களிடத்தில் உருவாகி இருந்ததைக் கண்டோம். அவர்களில் அநேகர் கம்யூனிச பல்கலைக் கழகங்களில் படித்தவர்களாயிருந்தார்கள். ஆனாலும் கடலில் வாழும் மீன் உப்பு நீரில் வாழ்ந்தபோதிலும், அதன் மாமிசம் ருசிமிகுந்ததாக இருக்கிறதுபோல, கம்யூனிச கொள்கைகளின் மத்தியிலும் அவர்களுடைய ஆத்துமாக்கள் கிறிஸ்துவுக்குள் துப்புரவாகவும் சுத்தமாகவும் காக்கப்பட்டிருந்தன. ரஷிய கிறிஸ்தவர்கள் அப்படிப்பட்ட அழகிய ஆத்துமாக்களை உடையவர்களாயிருந்தார்கள்! ''நாங்கள் எங்களுடைய தொப்பிகளில் அணியும் அரிவாளையும், சுத்தியலையும் கொண்ட நட்சத்திர சின்னம் கடைசி நாட்களில் வரும் அந்திக் கிறிஸ்துவின் அடையாளம் என்பதை நாங்கள் அறிவோம். ஆனாலும், நாங்கள் அதை அணியவேண்டியதிருக்கிறது'' என்று அதிகத் துக்கத்தோடு சொல்லக்கூடியவர்

களாயிருந்தார்கள். மற்ற ரஷ்ய போர் வீரர்களிடத்தில் நாங்கள் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு அவர்கள் எங்களுக்கு செய்த உதவி அதிகம்.

ஒரு விசுவாசிக்கு இருக்கக்கூடிய மற்றெல்லாவிதமான பண்புகளும் அவர்களுக்கு இருந்தபோதிலும், எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய அந்த மேன்மையை அவர்கள் பெற்றிருக்கவில்லை. அந்த மகிழ்ச்சியை அவர்கள் மனந் திரும்பினபோது மாத்திரம் அனுபவித்திருந்தார்கள். ஆனு லும் பின்பு அது அவர்களை விட்டு மறைந்து போயிற்று. நானே அதைக் குறித்து மிகவும் ஆச்சரியப்பட்டேன்.

ஒரு சமயத்தில் பாப்திஸ்து சபையைச் சேர்ந்த ஒரு சகோதரனைப் பார்த்து "கிறிஸ்துவுக்குள்ளிருக்கும் வெளிப் படையான மகிழ்ச்சியற்றவர்களாயிருக்கிறீர்களே; அப் படியிருக்க எப்படி உங்களால் முடிகிறது?" என்று கேட்டேன். அதற்கு அவர், "என் சபையின் போதகரே கம்யூனிஸ்டுகளின் இரகசிய போலீசாரின் தூதுவராக இருப்பதனுல் நான் ஜெபம் செய்கிறவனென்றும், ஆத்தும ஆதாயம் செய்து வருகிற ஓர் உண்மை கிறிஸ்தவனென்றும் அவர் அறியாத வண்ணம் அவருக்கு என் கிரியைகளை மறைத்து வைக்க வேண்டியிருக்கிறது. இப்படியிருக்க நான் எவ்வித மகிழ்ச்சியுள்ளவனுக இருக்க முடியும்? எங்களுக் குள்ளேயே ஒருவரையொருவர் வேவு பார்க்கிறவர்கள் இருக் கிறுர்கள். மேய்ப்பர்களானவர்கள் மந்தைகளைக் காட்டிக் கொடுக்கிற வேலை செய்து வருகிறுர்கள். எங்கள் இருதயத் தில் இரட்சிப்பின் மகிழ்ச்சியானது மிக ஆழத்தில் காணப் படுகிறது. ஆனுல் உங்களுக்கிருக்கும் இந்த வெளியரங்க மான மகிழ்ச்சியை இனி நாங்கள் ஒருபோதும் பெற்றுக் கொள்ள முடியாது. கிறிஸ்தவ விசுவாசமானது எங்களுக்குப் பல பிரச்சினைகளைக் கொண்டுள்ளதாயிருக்கிறது. சுதந்தர மாயிருக்கிற நீங்கள் கிறிஸ்துவண்டை ஓர் ஆத்துமாவைக் கொண்டு வருகிறீர்களென்றுல், அமைதியாக இயங்கிவரும் சபைக்கு ஓர் அங்கத்தை சேர்க்கிறவர்களாக இருக்கிறீர்

கள். ஆனால் நாங்கள் ஒரு மனிதனை ஆதாயப்படுத்துகிறோ மென்றால், அவன் சிறைச்சாலைக்குப் போக வேண்டியிருக்கு மென்றும், அவனுடைய பிள்ளைகள் அனாதைகளாக வேண்டி யிருக்குமென்றும் எங்களுக்குத் தெரியும். ஓர் ஆத்துமாவைக் கிறிஸ்துவண்டைக் கொண்டு வருகிறதினாலுண்டாகிற எங் கள் மகிழ்ச்சி அந்த ஆத்துமாவுக்காக செலுத்தப்பட வேண்டிய கிரயம் ஒன்று இருக்கிறதே என்கிற உணர்ச்சி யோடு எப்பொழுதும் கலந்ததாகவே இருக்கிறது" என்று கூறினார். இவ்விதமான அதிசயிக்கத்தக்க சாட்சிகளையுடைய கிறிஸ்தவர்களை அங்கு நான் சந்தித்தேன்.

ரஷியர்கள் மத்தியில் நாங்கள் கண்ட இன்னொரு அதிச யம் உண்டு. தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று எண்ணிக் கொள்ளுகிற அநேகர் உண்மையில் மெய்க்கிறிஸ்தவர்களாக இல்லாமலிருப்பது போல, தங்களை நாத்திகர்கள் (தேவனை மறுதலிப்போர்) என்று நம்பிக்கொண்டிருக்கிற அநேக ரஷி யர்கள் உண்மையில் நாத்திகர்கள் அல்லர். இதை நீங்கள் புரிந்துகொள்ள, நடந்த ஒரு சம்பவத்தை உங்கள் முன் வைக்கிறேன்.

சிற்பவேலை செய்துவரும் ஒரு தம்பதிகளை நான் ஒருநாள் சந்தித்து அவர்களிடம் தேவனைப்பற்றி பேசிய போது அவர் கள் என்னைப் பார்த்து, "தேவன் கிடையாது. நாங்களும் தேவனற்றவர்கள். ஆனாலும் எங்களுக்கு நேரிட்ட ஒரு முக்கிய காரியத்தைப்பறறி சொல்லுகிறோம்" என்று கூறி அந்த மனிதன் அந்த சம்பவத்தைப் பின்வருமாறு தொடர்ந் தான்:—

"ஸ்டாலினுடைய சிலை ஒன்றை நாங்கள் செய்துகொண் டிருந்த சமயம் என்னுடைய மனைவி என்னைப் பார்த்து, நமது கைகளிலுள்ள பெரு விரல்களைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இந்தப் பெருவிரல் மற்ற விரல்களுக்கு எதி ராக அமைக்கப்படாமல், கால் விரல்களைப் போலவே ஓர் அடுக்கில் இருந்திருக்குமானால், சுத்தியலையோ, எந்த ஒரு பொருளையோ, புத்தகத்தையோ, அல்லது ரொட்டித்துண்

டையோ நாம் கையினுல் எடுக்க முடியாதே! மனித வாழ்க்கை இந்தச் சின்ன பெருவிரலில்லாமற்போஞல் சாத் தியமாகாதே. இப்படியிருக்க இந்த பெருவிரலை உண்டாக்கி னது யார்? வானமும் பூமியும் தாங்களாகவே உண்டாயின வென்று பள்ளிக்கூடத்தில் மார்க்சீயத்தைப் படித்து அறிந் திருக்கிறேம். அவைகள் தேவனுல் உண்டாக்கப்பட்டவை களல்லவென்றே நான் இந்நாள் வரை கற்றும் நம்பியும் வந் திருக்கிறேன். அவ்வாறே தேவன் வானத்தையும், பூமியையும் உண்டாக்கினவராயில்லாமல் இந்தச் சிறிய பெருவிரலை மாத் திரம் உண்டாகினவராயிருந்தால் கூட அவர் போற்றத் தகுந்தவரே. மின்சார பல்பு, டெலிபோன் கருவி, புகை வண்டி ஆகியவற்றைக் கண்டுபிடித்தவர்களான எடிசன், பெல், ஸ்டீபன்ஸன் இவர்களை நாம் போற்றும்போது, பெரு விரலைக் கண்டுபிடித்தவரை ஏன் நாம் போற்றக்கூடாது? எடிசனுக்குப் பெருவிரல் இல்லாதிருந்திருக்குமாஞல் அவர் ஒன்றையும் கண்டுபிடித்திருக்க முடியாதே? ஆகையால் பெரு விரலை படைத்த தேவனை ஆராதிப்பது சரியானதே" என்று கூறிஞள்.

"அநேக சமயங்களில் மனைவிகள் ஞானமாகப் பேசும் போது கணவருக்குக் கோபம் வருவதுபோல், இதைக்கேட்ட வுடன் நான் மிகவும் கோபம் கொண்டேன். இப்படி மதியீனமாகப் பேசாதே. தேவன் கிடையாது என்பதாக நீ படித்திருக்கிருய். நாம் உபத்திரவப்பட்டாலன்றி நீ இதை அறியமாட்டாய் போலிருக்கிறது. தேவன் இல்லை என்ற சிந்தனையை உன் மனதில் ஆழமாகப் பதித்துக்கொள். பரலோகத்தில் ஒருவருமே கிடையாது" என்று கர்ஜித் தேன். இதைக் கேட்டவுடன் என் மனைவி என்னைப் பார்த்து, "இதில் இன்னொரு பெரிய அதிசயமிருக்கிறது. நம்முடைய பிதாக்கள் தங்கள் மதியீனத்திஞல் விசுவாசித்திருந்த சர்வ வல்லமையுள்ள தேவன் பரலோகத்திலிருப்பாரென்றுல் நாம் இந்தப் பெருவிரல்களைப் பெற்றிருப்பது இயற்கையே யாகும். சர்வ வல்லமையுள்ள தேவன் எதையும் செய்ய முடியும். ஆதலால் அவர் பெருவிரலையும் கூட உண்டு பண்ணக் கூடும். பரலோகத்தில் ஒருவர்கூட இல்லையென்று லும், இந்த அற்புதமான பெருவிரலை உண்டுபண்ணின அந்த

இல்லாதவரை' என் முழு இருதயத்தோடும் வழிபட விரும்புகிறேன்'' என்றாள்.

இவ்விதமாக 'இல்லாதவரை' அந்த கணவனும் மனைவியும் ஆராதித்து வந்தார்கள். நாளடைவில் இந்த 'இல்லாதவர்'மேல் வைத்து வந்த அவர்களுடைய விசுவாசம் வளர்ந்து, அவரைப் பெருவிரலை உண்டாக்கினவராக மட்டுமல்ல, பூக்கள், நட்சத்திரங்கள், குழந்தைகள் இன்னும் வாழ்க்கையில் காணப்படும் அழகியவைகள் எல்லாவற்றையுமே உண்டுபண்ணினவராக நம்பும் படிச் செய்தது.

அவர்களிருவரும் அத்தேனே பட்டணத்தில் ''அறியப்படாத தேவனை'' வணங்கி வந்த மனிதரைப்போல எனக்குக் காட்சியளித்தார்கள். அவர்களுடைய சிறிய விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்குப் போதிக்க ஆரம்பித்தேன். பரலோகத்தில் உண்மையிலேயே மட்டுக்குட்பட்ட உருவமில்லாமலிருக்கிற தேவன் ஒருவர் உண்டு என்றும், அவர் அன்பு, ஞானம், சத்தியம், வல்லமை என்பவற்றின் தத்துவமாக இருந்து, நம் எல்லாரையும் நேசிக்கிறாரென்றும், அந்த அன்பினிமித்தம் அவர் தம்முடைய ஒரேபேறான குமாரனையே இவ்வுலகத்துக்கு அனுப்பி அவரைச் சிலுவையில் பலியாக ஒப்புக்கொடுத்தாரென்றும், அவர்களுடைய விசுவாசம் சரியாக அந்த தேவன் பேரிலே தான் இருந்ததென்றும் நான் கூறினபோது அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்கள். அவர்கள் தேவனிடத்தில் விசுவாசமாயிருக்கிறதை அறியாமலேயே அவரை விசுவாசித்திருந்தார்கள். இரட்சிப்பு மீட்பு என்பவற்றின் அனுபவத்திற்குள் அவர்கள் பிரவேசிக்கும்படியான இன்னொரு படிக்குள் அவர்களை நடத்தும் சிலாக்கியம் எனக்குக் கிடைத்தது.

தெருவில் ஒரு நாள் ஒரு பெண் இராணுவ அதிகாரியைக் கண்டேன். அவளிடம் சென்று அவளைப்பார்த்து, ''முன்பின் தெரியாத ஒரு பெண்ணிடம் இப்படி தெருவில் நின்று பேசுவது நல்லதல்ல என்று நானறிவேன். இருந்தபோதிலும், நான் ஒரு கிறிஸ்தவ போதகராக இருப்பதால்

எப்படியாவது உங்களுக்குக் கிறிஸ்துவைப்பற்றி சொல்ல வேண்டும் என்ற ஆவலாய் உங்களோடு பேசுகிறேன்'' என்றேன். இப்படிச் சொன்னதும் அவள் என்னைப்பார்த்து: ''கிறிஸ்துவை நீங்கள் நேசிக்கிறீர்களா ?'' என்று கேட்டாள். ''ஆம், நான் முழு இருதயத்தோடும் அவரை நேசிக்கிறேன்'' என்றேன். இதைக்கேட்டதும் அவள் என்னைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டுவிட்டாள். போதகரான எனக்கு என்னவோ போலாகிவிட்டது. மக்கள் எங்களை விபரீத மாக எண்ணமல், இனத்தார்களெனவாவது எண்ணிக் கொள்ளட்டும் என்று எண்ணி நானும் பதிலுக்கு அவளை முத்தம் செய்தேன். அவள் மகிழ்ச்சி பொங்க: ''நானுங்கூட கிறிஸ்துவைநேசிப்பவள்'' என்று கூறினள்.

அவள் ஒரு விசுவாசி என்று எண்ணி அவளை என் வீட்டிற்கு அழைத்துச் சென்றபோது, எனக்கொரு அதிசயம் காத்திருந்தது. அவளோடு நான் செய்த உரையாடலி லிருந்து 'கிறிஸ்து' என்ற பெயரைத் தவிர அவரைப்பற்றி வேறென்றையும் அவள் அறியாதவளாயிருந்தாள் ! கிறிஸ்து உலக இரட்சகர் என்பதும், 'இரட்சிப்பு' என்றல் என்னவென்பது கூட அவளுக்குத் தெரியவில்லை. அவர் எங்கு, எப்படி வாழ்ந்தார் என்றும், எவ்வாறு மரித்தார் என் றுங்கூட அவள் அறியாதவளாக இருந்தாள். அவருடைய போதனைகளையோ, அவரது வாழ்க்கை, ஊழியம் ஆகிய இவைகளையோ, அவள் கேட்டறிந்ததும் கிடையாது ! இந் நிலையில் ஒருவருடைய பெயர் தெரிந்த மாத்திரத்தில் அவரை அவளால் எப்படி நேசிக்க முடியும்?

இதைப்பற்றி அவளிடம் நான் ஆச்சரியத்தோடு கேட்ட பொழுது, அவள், ''நான் சிறு வயதிலிருந்தே ஆங்கிலத்தில் ஏ (A) என்ற எழுத்தை ஆப்பிள் (Apple) படத்தைக் கொண்டும், பி (B) என்ற எழுத்தை மணியின் (Bell) படத் தைக் கொண்டும், இவ்வாறு எல்லா எழுத்துக்களையும் படங் களை வைத்தே வாசிக்கக் கற்றுக்கொண்டேன். உயர்நிலைப் பள்ளிக்கு வந்ததும், எங்களுடைய கம்யூனிச நாட்டைக்காக் கும் 'தூய கடமைகள்' எனக்குச் சொல்லித் தரப்பட்டன.

கம்யூனிசத்தின் போதனைகளையும் அங்கு கற்றேன். ஆனால் அவைகளின் உண்மையான அர்த்தமோ எனக்குப் புரியவில்லை. அவைகளையும் விளங்க வைக்க எனக்குப் படங்கள் தேவைப்பட்டன. இதனால் தான் என்னவோ எங்களுடைய முற்பிதாக்கள் தங்கள் வாழ்க்கையில் அழகுள்ளவைகளாகவும், போற்றப்படக்கூடியவைகளாகவும், உண்மையுள்ளவைகளாகவும் இருந்த எல்லாவற்றிற்கும் ஒரு படம் வைத்திருந்தார்கள். அவ்விதமாய் என் பாட்டி கிறிஸ்டாஸ் (கிறிஸ்து) என்பவருடைய படத்தின்முன் வணங்குவதைக் கண்டிருக்கிறேன். அந்த கிறிஸ்து என்ற பெயரே நான் அதன்மேல் அன்புகூரும்படி செய்தது மாத்திரமல்ல, நாளடைவில் எனக்கு மிகவும் உண்மையுள்ளதாகவும் மாறிவிட்டது. சொல்லவேண்டுமானால் அப்பெயர் எனக்குக் கொடுத்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை என்றாள்.

இதை நான் அவளிடம் கேட்டுக்கொண்டிருந்தபோது ''இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்'' (பிலி. 2 : 10) என்ற வசனம் என் ஞாபகத்துக்கு வந்தது. வரப்போகிற அந்திக்கிறிஸ்து ஒரு வேளை தேவனைப்பற்றிய அறிவை இவ்வுலகில் சிலகாலம் அழித்துப்போடுகிறதற்கு முயற்சிக்கலாம். ஆனால் இந்த சாதாரண 'கிறிஸ்து' என்ற நாமத்திற்கு அவனை மேற்கொள்ளக்கூடிய மாபெரும் வல்லமை இருக்கிறது. அது மனிதரை சத்தியத்தின் வெளிச்சத்தில் நடத்தவல்லது என்ற சிந்தனை என்னை மகிழ்ச்சிக்குள்ளாக்கிற்று. இப்படியாக அந்த ரஷிய பெண் அதிகாரி அன்று என் வீட்டில் கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டாள். எந்த நாமத்தை அவளுடைய இதயத்தில் அவள் நேசித்திருந்தாளோ அந்த நாமத்தையுடையவரே இப்பொழுது அவளுடைய இதயத்தில் வாசஞ்செய்தார். இவ்விதமாய் ரஷியர்களோடு நான் கழித்த ஒவ்வொரு நேரமும் ஒரு கவிதையைப்போல ஆழமான அர்த்தத்தைத் தரக்கூடியதாக இருந்தது.

புகை வண்டி நிலையத்தில் சுவிசேஷத்தைப் பரப்பின ஒரு சகோதரி, சுவிசேஷத்தில் ஆவல் கொண்ட ஒரு ரஷிய ராணுவ அதிகாரியிடம் என்னுடைய விலாசத்தைக் கொடுத்திருந்தார்கள். ஒருநாள் மாலையில் அந்த திடகாத்திரமான ரஷிய அதிகாரி என்னைத் தேடி என் வீட்டிற்கு வந்தார். அவரை வரவேற்று, உங்களுக்கு நான் செய்யவேண்டிய உதவி ஏதேனும் உண்டா என்றுகேட்டேன். தெய்வத்தைப்பற்றிய வெளிச்சத்தைக்காண வந்திருக்கிறேன் என்றார் அவர். வேதாகமத்திலிருந்து சில முக்கியமான பாகங்களை அவருக்கு வாசித்துக் காண்பித்தேன். அவற்றைக் கேட்டதும் அவர் என் கரங்களைப் பற்றிக்கொண்டு, ''ஐயா, நான் உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன். தயவுசெய்து என்னைத் தப்பிதமான வழியில் கொண்டுபோய் விட்டுவிடாதீர்கள். இருட்டில் விடப்பட்டுள்ள மக்களைச் சேர்ந்தவன் நான். ஆதலால் இவைகள் தேவனுடைய நிச்சயமான வசனங்கள்தானா என்று எனக்குச் சொல்லுங்கள்'' என்று என்னிடம் கெஞ்சினார். இவை தேவனுடைய உண்மையான வசனங்களே என்று நான் அவருக்கு உறுதிமொழி அளித்தபின், அநேக மணி நேரம் என் வார்த்தைகளை அவர் கவனமாய்க் கேட்டு, இறுதியில் கிறிஸ்துவைத் தன் இதயத்தில் ஏற்றுக்கொண்ட மகிழ்ச்சியோடு தன் இருப்பிடத்திற்குச் சென்றார்.

ரஷியர்கள் தேவனைப்பற்றிய காரியங்களில் மிதமிஞ்சியவர்களாகவோ அல்லது குறைவானவர்களாகவோ இராமல் தெய்வத்தைப்பற்றிய உண்மையை அவர்கள் எதிர்த்தாலும் சரி, அல்லது அதனை நம்பி கிறிஸ்துவைத் தேடிவந்தாலும் சரி, அதிலே தங்களுடைய முழு ஆத்துமாவையும் செலுத்துகிறவர்களாயிருக்கிறார்கள். ஆகையால்தான் ரஷியாவிலிருக்கும் ஒவ்வொரு விசுவாசியும் ஆத்தும ஆதாயம் செய்கிற மிஷனரியாகத் திகழுகிறான். ஆதலால் பூமியின் மீது ரஷியாவைப் போல ஒரு தேசமாவது சுவிசேஷ ஊழியத்தில் இவ்வளவு மிகுந்த கனிகளைக் கொடுக்கிறதில்லை. அதிக இயற்கையான தேவ பக்தி உள்ளவர்களில் இவ்வுலகில் ரஷியர்களும் ஒருவர். சுவிசேஷத்தை நாம் பாரத்தோடு

அவர்களுக்குச் சொல்லுவோமாஞல், உலகத்தின் போங்கே மாற்றப்படக்கூடும். இவ்விதமாய் ரஷியாவும் அதன் மக்களும் தேவனுடைய வார்த்தைக்காக மிகுந்த கவனத்தோடிருக்கும்போது, ஏனைய நாட்டினர் அவர்களை இதற்காகப் புறக்கணிப்பது மிகுந்த வருத்தத்தைக் கொடுக்கிறதாயிருக்கிறது.

ஒரு சமயம் ரயிலில் எனக்கு முன்ஞல் ஒரு ரஷிய அதிகாரி உட்கார்ந்திருந்தான். அவனிடம் கிறிஸ்துவைப்பற்றி கொஞ்சம் சொன்னேன். உடனே அவன் மார்க்ஸ், ஸ்டாலின், வால்டேர், டார்வின் ஆகியோர் வேதாகமத்துக்கு எதிராகக் கூறியிருக்கும் கருத்துக்களை என்னிடம் சொல்லி, 'தேவன் என்று ஒருவர் கிடையாது' என்று சாதித்தான். என்னைப் பேசுவதற்கு இடந்தராமல், ஒரு மணிநேரம் தன் கொள்கைக்கு என்னை இணங்கவைக்க என்ஞேடு வாதாடிஞன். அவன் பேசி களைத்துப்போனபின் நான் அவனைப் பார்த்து : தேவன் என்று ஒருவர் இல்லையென்ருல், ஏன் துன்பம் வந்தவுடன் மாத்திரம் நீர் ஜெபிக்கிறீர் ? என்று கேட்டேன். இதைக்கேட்டதும் அவன் திருடனைப்போல மிரண்டு: நான் ஜெபிக்கிறேனென்பது உமக்கு எப்படித் தெரியும் என்ருன். நான் அவனைத்தப்பவிடாமல்: முதலாவது என் கேள்விக்கு நீர் பதில் சொல்லும் என்று கேட்டேன். உடனே அவன் தலையை தாழ்த்தி ஒத்துக்கொண்டு: போர்க்களத்தில் நாங்கள் இருந்த ஒரு சமயம் ஜெர்மானியர் எங்களைச் சூழ்ந்துகொண்டார்கள். அப்பொழுது நாங்களெல்லோரும் ஜெபித்தோம். எப்படி ஜெபிப்பதென்று எங்களுக்குத் தெரியாதாகையால், 'தேவனும் அன்னையின் ஆவியுமானவரே' என்று மாத்திரம் கூறி அவரை அழைத்து எங்களைக் காப்பாற்றுமாறு வேண்டிஞேம் என்ருன். மனிதனுடைய இதயத்தை ஊடுருவிப் பார்க்கிற தேவனுக்கு இது ஒரு மிக அருமையான ஜெபமல்லவா ?

நாங்கள் ரஷியர்களிடத்தில் செய்த ஊழியமானது மிகுந்த பலனைக் கொடுத்தது. 'பயோடர்' (ஆங்கிலத்தில்

'பீட்டர்') என்ற இருபது வயதான வாலிபனைப்பற்றிய ஞாபகம் இப்பொழுது எனக்கு வருகின்றது. ரஷியாவிலுள்ள எந்த சிறைச்சாலையில் அவன் மாண்டானென்று யாருக்கும் தெரியாது. வாலிபனாகிய அவன் ரஷிய ராணுவத்தினரோடு ருமேனியாவுக்கு வந்தான். ருமேனிய அந்தரங்க சபையில் நடந்த கூட்டங்கள் ஒன்றில் அவன் இரட்சிக்கப்பட்டு, என்னை அவனுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கேட்டான். ஞானஸ்நானம் பெற்றபின் அவனிடம், ''எந்த வேதவசனம் அவன் கிறிஸ்துவண்டை வர அவனுக்கு அதிகமாக உதவியது'' என்று கேட்டேன்.

எங்களுடைய இரகசிய கூட்டங்களொன்றில் லூக்கா 24-ம் அதிகாரம் வாசிக்கப்பட்டதாக அவன் கூறினான். ''அத்தருணத்தில் தாங்கள் போகிற கிராமத்துக்குச் சமீபமானார்கள். அப்பொழுது அவர் அப்புறம் போகிறவர்போலக் காணப்பட்டார்'' (லூக். 24:28) என்ற வசனம் அதில் வருகிறது அதைப்பற்றி பயோடர் என்னிடம் பேசும்போது, என்னைப் பார்த்து: அந்த சீஷரோடு இயேசு தங்கவேண்டுமென்று விரும்பியும் ஏன் அப்புறம் போகிறவர்போலக் காணப்பட்டார்? இயேசு நாணயமும், மரியாதையும் உள்ளவர் என்றே நான் அர்த்தப்படுத்துகிறேன். அவரை ஏற்றுக்கொள்ள அவர்களுக்கு விருப்பம் இருக்கிறது என்பதை அவர் நன்றாகத் தெரிந்துகொள்ள விரும்பினார். ஆகவே அவர்கள் அவரை வரவேற்றபோது அவர்களோடு தங்கும்படி மகிழ்ச்சியோடு போனார். ஆனால் கம்யூனிஸ்டுகள் அப்படிப்பட்டோர் அல்ல. எங்களுடைய இதயங்களிலும் மனதிலும் பலவந்தமாக அல்லவோ அவர்கள் பிரவேசிக்கப் பார்க்கிறார்கள்? காலையிலிருந்து மாலைவரை அவர்கள் சொல்லுகிறதையே நாங்கள் கேட்கும்படி வற்புறுத்துகிறார்கள். அதுமாத்திரமல்ல, பள்ளிக்கூடங்களின் மூலமாகவும், வானொலி, செய்தித்தாள்கள், விளம்பரங்கள், சினிமாப்படங்கள், நாத்திகக் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்யும் கூட்டங்கள் ஆகியவற்றின் மூலமாகவும் எங்களைப் பலவந்தப்படுத்துகிறார்கள் நீங்கள் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, அவர்களுடைய நாத்திகப் பிரச்சாரத்தைத் தொடர்ச்சியாகக்

கேட்டேயாகவேண்டும். ஆனால், இயேசுவோ நம்முடைய சுயாதீனத்தை மதிக்கிறார். நமது இதயக் கதவண்டை வந்து நின்று மெதுவாகத் தட்டுகிறார். இந்த அவருடைய மெல்லியத் தன்மையின் மூலமாகவே இயேசு என்னை ஆட்கொண்டார் என்றான்.

கம்யூனிசத்துக்கும் கிறிஸ்துவுக்கும் இடையிலுள்ள இந்த பெருத்த வித்தியாசமே அவனை அசைத்தது. இயேசுவின் இந்த அரிய குணத்தால் கவரப்பட்டது பயோடர் மாத்திரமல்ல. இன்னும் அவனைப்போன்ற ரஷியர்கள் அநேகராவர்.

பயோடர் இரட்சிக்கப்பட்டபின், தன்னுடைய சுதந்தரத்தையும், வாழ்க்கையையும் பொருட்படுத்தாமல், ருமேனிய அந்தரங்க சபையின் மூலம் ரஷியாவுக்கு சுவிசேஷப் புத்தகங்களைக் கடத்தும் பணியில் ஈடுபட்டு, இறுதியில் இரகசிய போலீசாரால் பிடிபட்டான். எனக்குத் தெரிந்தவரைக்கும் 1959 வரை அவன் சிறையிலடைக்கப்பட்டிருந்தான். அதன்பின்பு அவன் தன் நித்திய வீட்டிற்குச் சென்றுவிட்டானா அல்லது இப்பூமியில் இன்னும் தன்னுடைய நல்ல போராட்டத்தைப் போராடிக் கொண்டிருக்கிறானா? தேவனே அதை அறிவார். கர்த்தருடைய வருகையில் அவனைக் காண்போம்.

அவனைப்போல் இன்றும் ரஷியாவில் விசுவாசிகள் தங்கள் மனந்திரும்புதலோடு நின்றுவிடாமல், ஒவ்வொருவரும் ஆத்தும ஆதாயம் செய்யக்கூடியவர்களாகவேயிருக்கிறார்கள். அதுபோல கிறிஸ்துவண்டை ஆத்துமாவைக் கொண்டுவருகிற நிலைமையில் நாமும் நின்றுவிடக்கூடாது. அப்படியானால் அது பாதி வேலையேயாகும். கிறிஸ்துவுக்கென்று ஜெயிக்கப்படுகிற ஒவ்வொருவனும் ஆத்தும ஆதாயம் செய்கிறவனாயிருக்கவேண்டும். ரஷியாவின் ஒவ்வொரு விசுவாசியும், ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிறவனாகவே இருப்பான். கிறிஸ்துவுக்காக அவர்கள் தங்கள் ஜீவனையும் ஒரு பொருட்டாக எண்ணாமல், அவருக்காக

எதையும் செய்யக்கூடிய செயல், திறம் படைத்தவர் களாயிருக்கிருர்கள். அப்படியிருந்துங்கூட கடைசியில், தங்களுக்காக மரித்த அவருக்கு தாங்கள் செய்கிறது மிக வும் சொற்பம் என்றே அவர்கள் சொல்லுகிருர்கள்.

**அடிமை நாட்டினருக்கு நாங்கள் செய்த அந்தரங்க ஊழியம் :**

எங்களுடைய அந்தரங்க சபையின் மறுபிரிவு ருமேனி யர்களின் மத்தியிலேயே ஊழியம் செய்து வந்தது. கம்யூ னிஸ்டுகள் தங்கள் தன்மையை அடிக்கடி மாற்றிக் கொண்டே வந்தார்கள். ஆரம்பத்தில் வஞ்சனையால் மதத் தலைவர்களைத் தங்கள் பக்கம் ஆயத்தப்படுத்திய அவர்க ளுடைய போக்கு, பின்னுல் மிகவும் பயங்கரமாக மாறியது. ஆயிரக்கணக்கான ருமேனிய கிறிஸ்தவர்கள் கைது செய்யப் பட்டார்கள். இதனுல் கிறிஸ்துவுக்காக ஆத்தும ஆதாயம் செய்யும் ஊழியம் மிகவும் விலையேறப் பெற்றதாயிருந்தது.

அவ்விதம் ஆதாயப்படுத்தப்பட்ட ஆத்துமாக்களோடு சிறையில் வாசம் பண்ணும்படியான சமயங்களும் எனக்கு நேரிட்டன. கிறிஸ்துவினிமித்தம் தன்னுடைய மனைவியை யும் ஆறு பிள்ளைகளையும்விட்டு பிரிக்கப்பட்டு சிறையி லடைக்கப்பட்ட ஒரு சகோதரனும் நானும் ஒரு சமயம் ஒரே அறையிலிருந்தோம். அவர் என் மூலம் கர்த்தரிடம் வழிநடத்தப் பட்டிருந்தார். அவர் சிறைச்சாலைக்கு வந்து விட்டபடியால் அவருடைய மனைவியும், பிள்ளைகளும் வீட் டில் பசியால் வருந்திக் கொண்டிருந்தார்களென நான் கேள்விப்பட்டேன். மோட்சத்திலன்றி, அவர்களை இனி இந்த உலகத்தில், அவர் பார்க்கமுடியாது என்பதை நன்ருக அறிவார். அவரிடத்தில் ஒரு நாள் ''கிறிஸ்துவண்டை உம்மை நான் கொண்டு வந்ததினுல் உம்முடைய மனைவியும், பிள்ளைகளும் கஷ்டத்திற்குள்ளானுர் களேயென்று என்மீது உமக்குக் கோபமா?'' என்று பயத் தோடே கேட்டேன். ஆனுல் அவர் மகிழ்ச்சி பொங்க என்னை அணைத்து முத்தமிட்டு, ''இந்த அற்புதமான இரட்சகரண்டை என்னை நீங்கள் கொண்டுவந்ததற்கு நான்

எப்படி நன்றி சொல்லுவதென்றே எனக்குத் தோன்ற வில்லை. அதற்கான வார்த்தைகளே எனக்குக் கிடைக்க வில்லை. அப்படியிருக்கும்போது உங்களை எப்படி நான் கோபித்துக் கொள்ளுவேன்?" என்று நன்றி ததும்பும் குரலில் கூறினார்.

அரசியலில் சூழ்நிலை மாறியிருந்ததால் கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதானது எங்களுக்கு அவ்வளவு சுலபமாக இருக்க வில்லை. கம்யூனிஸ்டுகளின் புத்தக வெளியீட்டு தணிக்கை யாளரின் (**Censor**) கடுமையான மேற்பார்வைக்கிடையிலும் நாங்கள் கிறிஸ்துவைப்பற்றிய அநேக புத்தகங்களை வெளியிட்டு வந்தோம். கம்யூனிசத்தின் தந்தையென போற்றப்படும் காரல் மார்க்ஸின் படத்தை முகப்பு அட்டை யில் போட்டு புத்தகங்களை நாங்கள் அச்சிட்டு அவைகளை தணிக்கைக்கு அனுப்பிவைப்போம். அந்தப்புத்தகங்களுக்கு 'மதம்—மக்களைத் தூண்டிவிடும் ஒரு போதை வஸ்து' என்பவைகளைப் போன்ற பெயர்களைக் கொடுப்போம். இதனால் தணிக்கையாளர்கள்' அவற்றை கம்யூனிச கொள்கைகளை விளக்கும் புத்தகங்கள் என்று எண்ணி, அவை வெளியிடப்படு வதற்கான அனுமதியை வழங்கிவிடுவார்கள். அப்புத்தகங் களின் முதல் பத்துப் பக்கங்கள்வரை காரல் மார்க்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோருடைய கம்யூனிச பொன் மொழிகளைக் கூறிவிட்டு, பிறகு கிறிஸ்துவைப்பற்றிய செய் தியை ஆரம்பித்துவிடுவோம்.

கடலில் மிதந்து செல்லும் பனிக்கட்டியின் மேற்புறம் வெளியே தெரிவதுபோல எங்களது அந்தரங்க சபையின் ஒரு பிரிவினர் வெளிப்படையாக வேலை செய்து வந்தனர். அவர்கள் கம்யூனிஸ்டுகள் புரட்சி செய்யும் இடங் களுக்குச் சென்று அந்த புரட்சிக்காரர்களிடம் இந்த புத்த கங்களைக் கொடுப்பார்கள். மேல் அட்டையில் காரல் மார்க் ஸின் படத்தைக் கண்டவுடன் அவர்கள் போட்டி போட்டுக் கொண்டு வெகு ஆவலோடு வாங்குவார்கள். அப்புத்த கங்களை வாங்கினவர்கள் தேவனைப்பற்றியும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றியும் எழுதப்பட்டிருக்கும் பத்தா

வது பக்கத்திற்கு வரும்போது, அப்புத்தகங்களை அவர்களுக்கு விநியோகித்த அந்தரங்க சபையின் விசுவாசிகள், தாங்கள் கண்டுபிடிக்கப்பட்டு விடாதபடி இரகசியமாக அவ்விடத்திலிருந்து மறைந்துபோயிருப்பார்கள்.

இவ்விதமான புதிய சூழ்நிலையின் மத்தியில் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது எங்களுக்கு எளிதாக இல்லை. அங்குள்ள தேசீயவாதிகள் எங்களை மிகவும் துன்புறுத்தினது மாத்திரமல்லாமல், எங்களிடமிருந்த எல்லா பொருட்களையும் அபகரித்துக் கொண்டார்கள். விவசாயிகளிடமிருந்த வயலையும், ஆடுகளையும்; சவரத் தொழிளாளிகள், துணி தைப்போர் முதலியோரிடமிருந்த கடைகளையும் கூட அவர்கள் எடுத்துக்கொண்டார்கள். இவ்விதமாக, பணக்காரர்களை மட்டுமல்லாது, ஏழைகளையுங்கூட அவர்கள் அதிகமாக துன்புறுத்தி வந்தார்கள். கிட்டத்தட்ட ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும், ஒருவர் சிறையிலடைக்கப்பட்டிருந்தார். இதனால் ருமேனியர்களின் வீடுகளில் வறுமை தாண்டவமாடியது.

மக்கள் எல்லோரும், "அன்புள்ள தேவன் ஒருவர் உண்டு என்றால் கொடுமையான ஆட்சியைக் கண்டும் அவர் ஏன் சும்மாயிருக்கிறார்?" என்று அங்கலாய்க்க ஆரம்பித்தார்கள். இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கினவராய் "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று கதறிக்கொண்டிருந்த அந்த நாளில் கிறிஸ்துவைப் பற்றி பிரசங்கிப்பதென்றால், ஆதி அப்போஸ்தலர்களுக்கு இலகுவாக இருந்திருக்காது. ஆனாலும், இவ்விதமாய் பல இக்கட்டான நிலைமையிலும் தேவ ஊழியம் நிறைவேறி வந்தது. இதுவே அது தேவனிடத்திலிருந்துண்டானதென்றும், எங்களாலுண்டானதல்லவென்றும் நிரூபிக்க கூடியதாயிருந்தது.

அது மாத்திரமல்ல, கிறிஸ்தவ விசுவாசத்தில் அப்படிப்பட்ட கேள்விகள் யாவற்றிற்கும் ஒரு பதிலுண்டு. லாசரு பசியால் வாடி, அவனுடைய அழுகிய பருக்கள் நாய்களால் நக்கப்பட்டு இவ்வுலகில் அவன் மரணவேதனையைச் சகித்துக்

கொண்டிருந்தானென்று இரட்சகர் கூறினது மாத்திரமல்ல; இறுதியில் அவன் தேவ தூதர்களால் ஆபிரகாமின் மடிக்கு எடுத்துச் செல்லப்பட்டானென்பதையும் அவர் கூருமல் விட்டுவிடவில்லை.

**அந்தரங்க சபையின் யோவான் ஸ்நானனின் ஊழியம்:—**

அந்தரங்க சபையானது வீடுகளிலும், காடுகளிலும் பூமியின்கீழ் கட்டப்பட்டிருக்கும் இரகசிய அறைகளிலும் கூடி. வெளிப்படையாக எவ்வாறு ஊழியம் செய்யலாம் என்பதைப்பற்றி அடிக்கடி ஆலோசித்து வந்தது. கம்யூனிச அரசாங்கத்தின் கீழ், தெருக்களில் நின்று சுவிசேடத்தைப் பிரசங்கிக்க நாங்கள் விரும்பினோம். ஆனல் காலமும் நேரமும் எங்களுக்கு சரிவர கைகூடிவரவில்லை· இருந்தபோதிலும், மற்ற எந்தவிதமாகவும் சந்திக்க முடியாத ஆத்துமாக்கள் அநேகரை நாங்கள் இந்தப் புதிய முறையின் மூலமாக சந்தித்தோம். சில சமயங்களில் திடீரென்று, ஒரு தெருவின் கோடியில் நின்று பாட்டுக்களைப் பாடுவோம். எங்களுடைய அழகான பாட்டு சத்தத்தைக் கேட்டு மக்கள் கூடிவிடுவார்கள். உடனே அவர்களுக்கு கர்த்தரைப்பற்றி சொல்லுவோம். இரகசிய போலீசார் அங்கு வருவதற்குமுன் அந்த இடத்தைவிட்டு நாங்கள் நழுவி விடுவோம்.

அப்படியொருநாள், மதியத்திற்குப்பின், புகாரெஸ்ட பட்டணத்திலுள்ள, 'மாலக்ஷா' என்ற. பெரிய தொழிற் சாலையின் வாசலில் நின்றுகொண்டு, அதிலிருந்து வேலை முடித்து வெளியே வந்துகொண்டிருந்த தொழிலாளர்களுக்கு தேவனைப் பற்றியும், இரட்சகரைப்பற்றியும் சொல்லிக் கொண்டிருந்தோம். மறுநாளிலே, அரசாங்கத்தின் அநீதியை எதிர்த்துப் போராடிய கிளர்ச்சியில் அந்த தொழிற்சாலையின் ஊழியர்களில் அநேகர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அவர்களில் அநேகர் அன்று சரியான நேரத்தில் சுவிசேடத்தைக் கேட்டிருந்தார்கள்.

நாங்கள் அந்தரங்க சபையாக இயங்கி வந்தபோதிலும், யோவான் ஸ்நானனைப் போல தேசத்தை ஆளுபவர்களின் முன்னிலையிலும், சாதாரண எளிய மக்களிடத்திலும் கிறிஸ்துவைப்பற்றி தைரியமாகப் பிரசங்கித்து வந்தோம். ரஷியர் வருவதற்கு சில ஆண்டுகளுக்கு முன், எங்களுடைய அந்தரங்க சபையைச் சேர்ந்த இரு சகோதரர்கள் 'ஜார்ஜியு தேஜ்' என்ற எங்களுடைய பிரதம மந்திரியைப் பார்க்கச் சென்றார்கள். அவரிடம் சென்ற ஒரு சில நிமிடங்களில், அவர்கள் கிறிஸ்துவைப்பற்றி அவரிடம் சொல்லி பாவத்திலிருந்தும், அவர் மக்களுக்குச் செய்துவந்த கொடுமைகளிலிருந்தும் மனந்திரும்புமாறு அவரை எச்சரித்தார்கள். அவர்களுடைய அசாத்திய துணிச்சலைக் கண்டு, கோபமடைந்த பிரதம மந்திரி அவர்களை சிறையிலடைத்தார். சில ஆண்டுகளுக்குப் பின்பு அவர் நோய்வாய்ப்பட்டு, படுக்கையிலிருந்தபோது, அவருடைய ஆத்துமாவின் தேவையை உணர்ந்தவராய், ஒரு காலத்தில் தன்னிடத்தில் சொல்லப்பட்ட வசனங்களை நினைவுகூர்ந்தார். எந்த சுவிசேடத்திற்காக அந்த சகோதரர்கள் பாடுபட்டார்களோ, அந்த சுவிசேடத்தில் வல்லமை கிரியை செய்தது. அது வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி, ''ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும்'' உள்ள வசனங்கள் அல்லவோ! (எபிரேயர் 4 : 12)

அந்த வசனங்கள் மந்திரியினுடைய கடின இதயத்தைப் பிளந்தன. உடனே அவர் தன் வாழ்க்கையை கிறிஸ்துவிடம் ஒப்படைத்தார். தன் பாவங்களை அறிக்கை செய்து, இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவருடைய வியாதிப் படுக்கையிலிருந்து கொண்டே கர்த்தருக்கு ஊழியம் செய்துவந்தார். சில நாட்களில் அவர் மரித்துப்போனாராயினும், அந்த இரண்டு சகோதரர்கள் தங்களுடைய உயிரையே கிரயமாக செலுத்த முன் வந்ததினால், அவர் மரிப்பதற்குள் இரட்சகரைக் கண்டடைந்தார்.

இன்று கம்யூனிச நாடுகளில் கர்த்தருக்கென்று தைரியமாக சாட்சி பகர்ந்துவரும் கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு அந்த இரு சகோதரர்களும் முன்மாதிரிகளாக இருக்கின்ருர்களன்ரே! இவ்விதமாக எங்களுடைய சபையானது இரகசியமாக இருந்தது மாத்திரமல்ல, தலைவர்கள் முன்னிலையிலும், கம்யூனிசவாதிகள் வாழும் தெருக்களிலும் மிகுந்த தைரியமாகப் பணி புரிந்து வந்தது. அதற்காகச் செலுத்தப் படவேண்டிய கிரயம் ஒன்று இருந்தது. அதை செலுத்துவதற்கு நாங்கள் எப்பொழுதும் ஆயத்தமாகவே இருந்தோம். இன்றும் அதற்காக எங்களுடைய சபை எந்த நேரத்திலும் ஆயத்தமாக இருக்கிறதென்றே கூறுவேன்.

**அந்தரங்க சபையும் இரகசிய போலீசும்:**

தங்களை எதிர்க்கிற பலமான ஒரு சக்தியாக, அந்தரங்க சபையை இரகசிய போலீசார் கண்டதால் அதை அவர்கள் மிகுதியாகத் துன்புறுத்தி வந்தார்கள். இப்படிப்பட்ட ஆவிக்குரிய சக்தி தடை செய்யப்படாமல் விட்டு வைக்கப் படுமானுல் தங்களுடைய நாத்திக வல்லமைக்கு அது நிச்சயமாக உலை வைத்துவிடும் என்பதை அவர்கள் நன்கறிந்தவர்களாயிருந்தார்கள். அதுவே தங்களுக்கு உடனடியாக தலைவேதனைக் கொடுக்கும் ஒரு பிரச்சனை என்பதை அவர்கள் பிசாசைப் போல் உணர்ந்தவர்களாயிருந்தார்கள். ஒருவன் கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பானுனல் அவன் மனமற்ற, எதையும் ஏற்கும் ஒரு குடிமகனுக இருக்கமாட்டான் என்பதை அவர்கள் நன்ருக அறிந்திருந்தார்கள். தங்களால் மனிதனைச் சிறைப்படுத்த முடியுமேயன்றி, அவனுடைய விசுவாசத்தைச் சிறைப்படுத்த முடியாதென்று அவர்களுக்குத் தெரிந்திருந்தது. ஆகவே அவர்கள் தீவிரமாகப் போராடி வந்தார்கள்.

அரசாங்கத்திலும், இரகசிய போலீசார் மத்தியிலும் எங்களுக்கு அனுதாபிகள் இருந்து வந்தார்கள். தேச மக்கள் வெறுத்துத் தள்ளும் போலீஸ் உடையை அணிய வேண்டியிருந்தாலும், சபைக்கு விரோதமாக அரசாங்கம் எடுக்

கும் இரகசிய ஆலோசனையை எங்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு நாங்கள் எங்கள் உடன் விசுவாசிகளை இரகசிய போலீசில் சேரும்படி கூறினோம். அதன்படி எங்களுடைய சகோதரரில் அநேகர் தங்களுடைய விசுவாசத்தை மறைத்து வைத்துக்கொண்டு இரகசியபோலீசில் சேர்ந்தனர்.

இதை வாசிக்கும் அருமை நண்பர்களே, கம்யூனிஸ்டு களின் இரகசிய போலீசில் சேர்ந்து, அவர்கள் தரும் உடையை அணிந்துகொள்ளுவதென்பதும், தாங்கள் அதில் சேர்ந்த காரணத்தைத் தங்களுடைய வீட்டாருக்கும் நண் பர்களுக்கும் கூட தெரிவிக்காமல் மறைத்து வைப்பதினால் அவர்களது வெறுப்புக்கு ஆளாவதென்பதும் ஓர் இலேசான காரியமல்ல ! அந்த சகோதரர்கள் கர்த்தருக்கென்று, அவர் மீது அவர்கள் கொண்டிருந்த அன்பினிமித்தமே அவ்வாறு செய்தார்கள்.

அநேக வருடங்களாக நான் இரகசியமான இடத்தில் வைக்கப்பட்டிருந்ததினால், நான் உயிரோடிருக்கிறேனா அல்லது மரித்துப்போனேனாவென்றே ஒருவருக்கும் தெரியாம லிருந்தது. எங்களில் வைத்தியராக இருந்த சகோதரன் ஒருவர் என்னைப்பற்றிய விபரத்தை எப்படியாவது தெரிந்து கொள்ள வேண்டுமென்று கருதி இரகசிய போலீசில் சேர்ந் தார். இப்போது அவர் போலீஸ் வைத்தியரானபடியால், கைதிகள் வைக்கப்பட்டிருக்கும் எல்லா இடங்களுக்கும் அவர் செல்லமுடியும். அதனால், என்னைக் கண்டுபிடித்துவிடலாம் என்ற நம்பிக்கையோடிருந்தார். ஆனால் எதற்காக சேர்ந் தார் என்று மற்றவர்கள் ஒருவருக்கும் தெரியாது. இதனால் அவருடைய கிறிஸ்தவ நண்பர்கள் யாவரும், அவர் கம்யூ னிசவாதியாக மாறிவிட்டாரென்று அவருடைய போக்கைக் கண்டு அவரை வெறுக்க ஆரம்பித்தனர். அன்றைக்கிருந்த அரசியல் நிலைமையில், சிறைக் கைதியின் உடையைத் தரித்திருக்கிறதைப் பார்க்கிலும், கம்யூனிஸ்டுகள் அணியக் கொடுக்கும் உடையை அணிந்து கொள்ளுவது என்பது கிறிஸ்துவுக்காக செய்யும் ஒரு பெரிய தியாகமாகவேதான் இருந்தது.

இறுதியில், அந்த சகோதரன் பயங்கரமான இருட்டு அறையில் வைக்கப்பட்டிருந்த என்னைக் கண்டுபிடித்து, அவருடைய முயற்சியில் வெற்றியும் கண்டார். உடனே, தான் என்னைக் கண்டதை மற்ற சகோதரர்களிடத்தில் அறிவித்தார். எட்டரை ஆண்டு காலமாக சிறையில் இருந்த என்னை முதன் முதலாக பார்த்தது அந்த சகோதரனே. அவர் மூலமாக, நான் உயிரோடிருக்கும் விபரம் மற்றவர்களுக்கும் தெரிந்தது. பிற்பாடு, 1956-ஆம் ஆண்டு ஐசன் ஹோவர்—குருச்சேவ் ஆகிய இரு உலகத் தலைவர்களும் 'சமரசம்' செய்துகொண்ட மகிழ்ச்சி தினத்தை முன்னிட்டு ருமேனிய சிறைக் கைதிகள் அநேகர் விடுதலை செய்யப்பட்ட போது, அங்கிருந்த கிறிஸ்தவத் தலைவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து என்னுடைய விடுதலைக்காகப் போராடினார்கள். அதன் பயனாக, எனக்கு சிலகாலத்திற்கு மட்டும் விடுதலை கிடைத்தது.

என்னைப் பார்க்கிறதற்காக அன்று அந்த சகோதரன் இரகசிய போலீசில் சேர்ந்திராவிட்டால், அப்புறம் ஒரு காலத்திலும் நான் விடுதலை செய்யப்பட்டிருக்க மாட்டேன். இன்றைய தினத்தில் நான் சிறைச்சாலைக்குள்ளேயே இருந்திருப்பேன் அல்லது கல்லறையில் வைக்கப்பட்டிருப்பேன். இரகசிய போலீசில் சேர்ந்துள்ள அந்தரங்க சபையின் அங்கத்தினர்கள், போலீசில் தங்களுக்குக் கிடைத்துள்ள கண்ணியத்தைப் பயன்படுத்திக் கொண்டு அநேக சந்தர்ப்பங்களில் எங்களை எச்சரித்தார்கள். இப்படியாக அவர்களின் உதவி எங்களுக்கு இன்றியமையாததாயிருந்தது. இன்றைக்கும், அவர்கள் கம்யூனிஸ்டுகளால் ருமேனியாவில் வாழும் கிறிஸ்தவர்களுக்கு வரும் துன்பங்களிலிருந்து அவர்களைப் பாதுகாத்து வருகிறார்கள். சிலர் அவர்களின் மத்தியில் பெரிய பெரிய பதவிகளில் இருந்தாலும், அவர்களுடைய கிறிஸ்தவ விசுவாசத்தை இரகசியமாக வைத்துக்கொண்டு எங்களுக்கு உதவியாக இருந்தார்கள். அவர்கள் ஒரு நாளிலே பரலோகத்தில், இப்போது இரகசியமாக சேவை செய்து வரும் தங்களுடைய இரட்சகரான இயேசு கிறிஸ்துவை பகிரங்கமாக அறிவிப்பார்கள் அன்றோ?

எனினும், அந்தரங்க சபையின் அங்கத்தினர் பலர் கண்டுபிடிக்கப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டார்கள். இவை எல்லாவற்றின மத்தியிலும், இரகசிய போலீசாருக்கு எங்களைக் காட்டிக் கொடுக்கும், 'யூதாஸ்காரியோத்துக்களும்' எங்களிடையே இருந்தார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்களையும், மற்றும் சகோதரர்களையும் காட்டிக் கொடுக்கும்படி, கம்யூனிஸ்டுகள் அந்தரங்க சபையின் அங்கத்தினர்களில் சிலரைக் கண்டுபிடித்து, அவர்களை அடித்து, தெருவில் இழுத்துச் சென்று பயமுறுத்தி, மதுவருந்த வைத்து, அவர்களிடமுள்ள பொருட்களை அபகரித்து, இப்படியாக கொடுமை செய்து வந்தனர்.

## அத்தியாயம் இரண்டு

1948-ம்ஆண்டு பெப்ரவரி 29-ம் தேதிவரைக்கும், நான் வெளிப்படையாகவும், இரகசியமாகவும் ஊழியம் செய்துவந்தேன். அன்று ஒரு கர்த்தருடைய நாள். ஆராதனைக்கூட்டத்திற்குச் சென்று கொண்டிருந்தேன். அப்போது திடீரென்று இரகசிய போலீசார் என்னைக் கைது செய்து அங்கிருந்து அகற்றிக்கொண்டுப்போய்விட்டார்கள். அதன்பின்பு, அநேக வருடங்களாக ஒருவருக்கும் தெரியாதபடி மறைத்து வைக்கப்பட்டிருந்தேன். எட்டு வருடங்கள் வரைக்கும் நான் உயிரோடிருக்கிறேனு இல்லையா என்று யாருக்கும் தெரியாமலிருந்தது. ஒரு சமயம், இரகசிய போலீசார் சிறையிலிருந்து விடுதலையான கைதிகளைப்போல வேஷம் தரித்து என் மனைவியினிடத்தில் சென்று, நான் மரித்துப்போனதாகவும், என்னுடைய சவ அடக்கத்தில் அவர்கள் கலந்து விட்டுவருவதாகவும் சொல்லி, அவளை இதயம் உடைந்தவளாக ஆக்கியிருக்கிருர்கள்.

இப்படியாக, எல்லா கிறிஸ்தவ சபைகளிலிருந்தும், ஆயிரக்கணக்கானபேர் சிறையிலடைக்கப்பட்டிருந்தனர். கம்யூனிசவாதிகள் கிறிஸ்தவப் பாதிரிமார்களை மாத்திரமன்றி, கிறிஸ்துவின் மேல் தங்கள் விசுவாசத்தை அறிக்கைசெய்த மக்கள், சிறு பையன்கள், பெண்பிள்ளைகள் ஆகியோரையுங்கூட கைது செய்தார்கள். இதனுல் ருமேனியாவிலுள்ள சிறைச்சாலைகள் எல்லாம் நிரம்பியிருந்தன. கம்யூனிச ஆதிக்க நாடுகளில், சிறைச்சாலையில் இருப்பது என்றுல், அதற்கு சித்திரவதை அனுபவிப்பது என்றே பொருள். கம்யூனிசவாதிகள் செய்யும் சித்திரவதைகள் ஒவ்வொன்றும் மிகவும் பயங்கரமானவை. நான் அனுபவித்த அந்த சித்திரவதைகளைப் பற்றி அதிகம் பேசவேண்டாம் என்றே கருதுகிறேன். ஏனென்றுல், அவைகளை முழுவதும் சொல்லுவேனுனல், இரவில் எனக்குத் தூக்கம் வராது. அவை அவ்வளவு வேதனை நிறைந்தவை. ''தேவனுடைய அந்தரங்கத்தில்''

(In God's Underground) என்ற புத்தகத்தில், சிறையில் நாங்கள் தேவனோடு கொண்டிருந்த அனுபவங்களைப்பற்றி விரிவாக எழுதியிருக்கிறேன்.

**விவரிக்க இயலாத சித்திரவதைகள் ;**

'பிளாரெஸ்கு' என்ற ஒரு கிறிஸ்தவப் போதகர் பழுக்கக் காய்ச்சிய கூர்மையான கம்பிகளைக் கொண்டும், கத்திகளைக் கொண்டும் சித்திரவதை செய்யப்பட்டார். அதிகமான அடிகளும் அடிக்கப்பட்டார். அதுமாத்திரமல்லாமல், அவர் வைக்கப்பட்டிருந்த அறைக்குள் பட்டினிபோடப்பட்ட எலிகள் ஒரு பெரிய குழாயின் மூலமாக அனுப்பப்பட்டன. அவர் தூங்காமலிருந்து எப்போதும் தன்னை அவைகளுக்குப் பாதுகாக்க வேண்டியதாயிற்று. அவர் சிறிது ஓய்ந்திருந்தால் கூட எலிகள் அவரைத் தாக்கி விடும். அவர் இரவும் பகலுமாக இரண்டுவாரத்திற்கு நிற்கவேண்டுமென்று கட்டளையிடப்பட்டார். தன் உடன் சகோதரரை கம்யூனிச வாதிகளுக்குக் காட்டிக்கொடுக்க அவர் மறுத்ததற்காகவே அவ்வாறு செய்யப்பட்டார்.

கடைசியில், அவர்கள் அவருடைய பதினான்கு வயதுள்ள மகனை அவருடைய கண்முன்னால் கொண்டுவந்து நிறுத்தி அவர் எதைச் சொல்லவேண்டுமென்று அவர்கள் விரும்பினார்களோ, அதை அவர் சொல்லும்வரைக்கும், அந்தப் பையனை சவுக்கால் அடிக்க ஆரம்பித்தார்கள். ஏழை மனிதன் அதைக் கண்டபோது அரைப்பைத்தியம் பிடித்தவரானார். அதைச் சகிக்கிறவரைக்கும் சகித்து, பின் சகிக்கக்கூடாதவராய் தன் மகனைப் பார்த்து, ''அலெக்ஸாண்டர், அவர்கள் கேட்க விரும்புவதை நான் சொல்லிவிடப் போகிறேன். நீ அடிபடுவதைப் பார்த்துக்கொண்டிருக்க என்னால் முடியவில்லையே'' என்று கதறினார். அந்த மகன் அவருக்கு மறுமொழியாக: 'அப்பா! உடன் சகோதரரைக் காட்டிக் கொடுக்கும் தந்தையை உடையதான அநீதியை மாத்திரம் நீங்கள் எனக்குச் செய்யவேண்டாம். தைரியமாக நில்லுங்கள்! அவர்கள் என்னைக் கொன்றால், ''இயேசுவும் என்

சொந்த தேசமும்'' என்று சொல்லிக்கொண்டே மரிப்பேன்' என்றான். இதைக் கேட்டதும் மூர்க்கவெறிக்கொண்ட கம்யூனிஸ்டுகள் சிறுவனின்மீது விழுந்து, அவனை சாகும்படியாக அடித்தார்கள். அவனுடைய இரத்தம் அந்த சிறைசாலையின் சுவர்களின் மீது பீறிட்டது. தேவனைத் துதித்துக் கொண்டே அவன் மரித்தான்.

உட்புறத்தில் கூரான ஆணிகளைக் கொண்ட கைவிலங்குகள் எங்களுடைய கைகளில் மாட்டப்பட்டிருக்கும். கைகளை அசையாமல், அப்படியே வைத்திருந்தால் ஆணிகள் குத்தாது. ஆனால் கடுமையான குளிருள்ள எங்கள் அறைகளில் எங்கள் கைகள் குளிரினால் நடுங்கும்போது ஆணிகள் மணிக்கட்டுகளை குத்திக் கிழித்து விடுவதுண்டு.

விசுவாசிகள் தலைக்கீழாகக் கட்டித் தொங்கவிடப்பட்டு மிகவும் கொடூரமாக அடிக்கப்பட்டார்கள். அந்த அடிகளினால், சரீரங்கள் பயங்கரமாக அங்குமிங்குமாக அசைந்தாடிக் கொண்டிருக்கும்.

விசுவாசிகள், குளிர்சாதனப் பெட்டிகளுக்குள்ளே (**Refrigerator cells**) வைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டார்கள். அப்பெட்டிகளின் உட்புறத்தில் பனித்துளிகள் படர்ந்திருக்கும். நானும்கூட, அவற்றினுள், உடலில் கொஞ்சம் ஆடை அணியப்பட்டு, வைக்கப்பட்டிருக்கிறேன். சிறைசாலையிலுள்ள வைத்தியர்கள் குளிர்ப்பெட்டிகளில் வைக்கப்பட்டிருக்கிற எங்களை பக்கத்து அறைகளில் உட்கார்ந்து கொண்டு சிறு துவாரங்களின் வழியாக பார்த்துக் கொண்டிருப்பார்கள். குளிரால் கைகால்கள் மரத்துப்போய் உயிர்போகும் நிலைக்கு நாங்கள் வருவதைப் பார்த்ததும் உடனே அவர்கள் சிறைக்காவலர்களுக்கு எச்சரிக்கை கொடுப்பார்கள். அவர்கள் ஓடிவந்து எங்களை வெளியே எடுத்து, உஷ்ணப்படுத்துவார்கள். நாங்கள் நன்றாய் அனலுரைத்ததைக் கண்டதும் மறுபடியும் அந்த குளிர்பெட்டிகளினுள் வைப்பார்கள். இப்படியே அது முடிவில்லாமல் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும். இதன் மூலம் ஏற்பட்ட அதிர்ச்சியினால்

இன்று கூட என் வீட்டிலிருக்கும் குளிர்சாதனப் பெட்டியைத் திறப்பது எலருல் எனக்கு நடுக்கம்தான். !

எங்களைக் காட்டிலும், உயரத்திலும் சுற்றளவிலும் சற்றே பெரிதாகச்செய்யப்பட்ட மரப்பெட்டிகளில் நாங்கள் கொண்டுபோய் நிறுத்தப்பட்டோம். அவற்றில் அசைவ தற்கே இடமிராது. அவற்றின் உட்புறத்தில் ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் கூர்மையான ஆணிகள் நீட்டிக்கொண் டிருக்கும். அசையாமல் நேராக நின்றேமானுல், அவை ஒன்றும் செய்யாது. முடிவில்லாதபடி மணிக்கணக்கில் நாங்கள் அவற்றில் நிற்கவேண்டுமே! களைப்பினுல் நாங்கள் மயங்கிவிழும்போது கூராணிகள் உடலினுள் சென்றுவிடும். கொஞ்சம் நகர்ந்து நின்றுலும், களைப்பினுல் உடலைச் சிறிது நெளித்தாலும், அந்தோ! பயங்கரமாக அந்த ஆணிகள் எங்கள் உடலினுள் பாய்ந்துவிடும்!

கிறிஸ்தவர்களைச் சித்திரவதை செய்யும் கம்யூனிஸ்டு களை நான் உற்றுக் கவனித்திருக்கிறேன். எங்களைத் துன் புறுத்தும் அச்சமயங்களில், அவர்களுடைய முகங்கள் மகிழ்ச் சியால் துள்ளிக்குதிக்கும். அப்போது அவர்கள், ''நாங்கள் பிசாசுகள்'' என்று சொல்லிக்கொண்டே சித்திரவதை செய்வார்கள். நாங்கள் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் மாத்திரமல்ல, அதிகாரங்களோடும், துரைத்தனங்களோ டும் போராடவேண்டியிருந்தது. கம்யூனிசமானது, மனிதர் களிடத்திலல்ல, பிசாசினிடமிருந்தே வந்தது என்பதை நாங் கள் அங்குதான் கண்டோம். அவர்களிடம் ஓர் ஆவியின் சக்தி —பிசாசின் சக்தி குடி கொண்டிருந்தது. ஆகவே அதிலும் பெரிய ஆவிக்குரிய வல்லமையான தேவனுடைய ஆவி மாத்திரமே அதனேடு எதிர்க்கக்கூடியதாயிருந்தது.

ஒருசமயம், எங்களை சித்திரவதை செய்துகொண்டிருந்த கம்யூனிஸ்டுகளைப் பார்த்து, ''உங்களுடைய இதயத்தில் இரக்கம் என்பதே கிடையாதா'' என்று கேட்டேன். உடனே அவர்கள், ''முட்டையின் ஓட்டை உடைக்காமல் முட்டைப் பொரியல் செய்யமுடியாது; மரத்துண்டுகள்

சிதருமல், மரத்தை வெட்டமுடியாது'' என்று லெனின் கூறிய வாசகம் ஒன்றைக் கூறினார்கள். அதற்கு நான் : இந்த லெனினின் வாசகம் எனக்கும்கூட தெரியும்; ஆனால் ஒரு வித்தியாசம் மாத்திரம் இருக்கிறது. மரத்தை வெட்டினால் அதற்கு வலி தெரியாது. நீங்களோ உயிருள்ள மனிதனையல்லவோ வதைக்கிறீர்கள். உங்களுடைய ஒவ்வொரு அடியும் எவ்வளவு வேதனையைக் கொடுக்கிறதென்று தெரியுமா? அதனால் அழுகின்ற தாய்மார்கள் எத்தனையோ பேர் என்று பதிலளித்தேன். ஆனாலும், அவை அவர்களுடைய காதுகளில் வீணாகவே விழுந்தன. மனித உயிரின் மதிப்பை அறியாத அவர்கள் மனிதனை மரக்கட்டையைப்போலவும், முட்டையின் ஓட்டைப்போலவும் எண்ணுகிறார்கள். இவ்வித நினைவோடு அவர்கள் கொடுமையின் அடித்தளத்திற்கே சென்றுவிடுகிறார்கள்.

நாத்திகக் கொள்கையின் கொடுமை நம்புவதற்கே இயலாததாக இருக்கிறது. நன்மையின் வெகுமதியிலோ, தீமையின் தண்டனையிலோ ஒருவன் நம்பிக்கை வைக்காமற் போவானானால், மனிதத்தன்மை அவனில் இருப்பதாக எண்ணுவதற்கே ஆதாரமில்லை. அப்படிப்பட்டோனின் உள்ளத்திற்குள்ளிருந்து புறப்படும் துன்மார்க்கத்திற்கு அளவே இருக்காது.

எங்களை சித்திரவதைச் செய்யும் கம்யூனிஸ்டுகள் எங்களைத் துன்புறுத்தும்போது, ''தேவன் இல்லை, வருங்காலம் இல்லை, தீமைக்குத் தண்டனை இல்லை. ஆதலால் நாங்கள் விரும்புவதை நாங்கள் செய்கிறோம்'' என்று கூறக் கேட்டிருக்கிறேன். அவர்களில் ஒருவன் ஒருசமயம் எங்களைப் பார்த்து: என்னுடைய இதயத்திலுள்ளிருக்கும் அத்தனை அசுத்தங்களையும் வெளிப்படுத்தும் இந்நேரம் வரை நான் வாழ்கிறதற்காக நான் நம்பிக்கை வைத்திராத தேவனுக்கு நன்றி சொல்லுகிறேன் என்றான். ஒருவரும் நம்பக்கூடாத அளவு அவன் நடப்பித்த மிருகத்தனமான செய்கைளிலும் கைதிகளுக்கு அவன் செய்த சித்திரவதையிலும் இதை அவன் வெளிப்படுத்தினான்.

முதலே ஒரு மனிதனைத் தின்னுமானால் அதற்காக வருந்துவேன். ஆனால் முதலையை நிந்திக்கமாட்டேன். அதே போல மிருகத்தனமாக எங்களைத் துன்புறுத்தும் அவனும் ஒரு முதலையே. அவன் மனிதனல்ல. ஆதலால் அவனையும் நான் நிந்திக்க மாட்டேன். கம்யூனிசம் அவனிலிருந்த நீதி, நேர்மையையெல்லாம் அழித்துப்போட்டிருந்தது. அந்த கம்யூனிஸ்டுகள் தங்கள் இதயங்களில் இரக்கமில்லாதவர் களென்று பெருமை பாராட்டிக் கொண்டவர்களாய் காணப்பட்டார்கள்.

அவர்களிடத்தில் நான் கற்ற பாடம் ஒன்றுண்டு. அவர் கள் தங்கள் இதயத்தில் கிறிஸ்துவுக்கு கொஞ்சம் கூட இடந்தராமலிருந்ததுபோல, நானும் சாத்தானுக்கு என்னு டைய இதயத்தில் சிறிதுகூட இடந்தரக்கூடாதென்று தீர்மானம் பண்ணிக்கொண்டேன்.

ஒருசமயம் கம்யூனிஸ்டுகள், கிறிஸ்தவர்களை சிறைச் சாலைகளில் நான்கு நாட்களளவும், இரவும் பகலுமாக சிலுவைகளோடு கட்டிவைத்துப்படுத்தின பயங்கரங்களை எழுத என் கை நடுங்குகிறது. அவர்கள் அந்த சரீரங்களை சிலுவையோடே தரையில் படுக்கவைத்து, அவர்களின் முகத்திலும், சரீரத்திலும், மற்ற கைதிகளை மலம் கழிக்கும்படி உத்தரவிட்டார்கள். அதன்பின் சிலுவைகளை திரும்பவும் நேரே நிமிர்த்திவைத்து, ''உங்களுடைய கிறிஸ் துவைப் பார்! அவர் எவ்வளவு அழகாக இருக்கிறார்! பர லோகத்திலிருந்து என்ன ரம்மியமான வாசனையை வீசச் செய்கிறார்'' என்று கூறி கேலி பரிகாசம் செய்தார்கள். அவர்கள் செய்த கொடுமையை தாளமல், பைத்தியம் பிடிக் கும் நிலைமைக்கு வந்த கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர் மலத் தையும் சிறுநீரையும் பிரதிஷ்டை செய்து, அங்குள்ள மற்ற கிறிஸ்தவர்களுக்கு இராபோஜனம் கொடுக்கும்படி பல வந்தப்படுத்தப்பட்டார். பிட்டெஸ்டி என்ற இடத்திலுள்ள ருமேனிய சிறைச்சாலையிலே இச்சம்பவம் நடந்தது. பின்னொருநாள் அந்தப் பாதிரியாரை நான் சந்தித்தபோது,

அவரைப் பார்த்து, ''இப்படிப்பட்ட பரிகாசத்தில் பங்கு பெறுவதற்கு பதில் நீர் உயிரையே விட்டிருக்கலாமே?'' என்றேன். ''நீர் தயவுசெய்து என்னை நியாயம் விசாரியாதிரும். நான் கிறிஸ்துவைக் காட்டிலும் அதிகமாக பாடு அனுபவித்திருக்கிறேன்'' என்று கூறினர். அவருடைய வியாகுலதொனி என்னை அமைதியாக்கிற்று.

பிட்டெஸ்டி சிறையில் அநேக ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் ஒரு சிறு பகுதியே நான் இங்கு கூறியிருப்பது. மற்றவைகளை என்னல் சொல்லுவதற்கு முடியவில்லை. சொல்லுவேனுனல், என்னுடைய இதயமே வெடித்துவிடும் என்று கருதுகிறேன். அவைகள் அவ்வளவு பயங்கரமானவை; எழுதுவதற்கு அத்தனை அசுத்தமானவை. பிரியமுள்ள விசுவாசியே ! . கிறிஸ்துவுக்குள்ளான உன் உடன் சகோதரர்கள் இவைகளைத்தான் இன்றும் அனுபவித்து வருகிறுர்கள் !

எங்களிடத்திலே 'விசுவாசவீரன்; எனப் பெயர் பெற்றவர், மிலான் ஹைமோவிசி என்றெரு பாதிரியார். ருமேனியாவிலுள்ள சிறைச்சாலைகள் கைதிகளால் நிரம்பிவழிந்தன. ஆதலால் சிறைக் காவலர்களுக்கு, தனிப்பட்ட முறையில் எங்களுடைய பெயர்களைத் தெரியாது. சிறையின் விதிகளை மீறியவர்களுக்குத் தண்டனை பிரம்பினுல் 25 அடிகள் ! அவ்வாறு தவறு செய்தவர்கள் தண்டனையைப் பெற்றுக் கொள்ளுவதற்காகச் செல்லும் கணக்கற்ற சமயங்க்ளில், பாதிரியார் மிலான் மற்றவர்களுக்குரிய அடியை வாங்குவதற்கு தான்போய் நிற்பார். இந்த அவருடைய தன்னலமற்ற தியாகத்தினுல் தனக்கும், தான் பிரதிபலித்துக் காட்டின கிறிஸ்துவுக்கும் கைதிகள்மத்தியில் நன்மதிப்பைத் தேடித்தந்தார். கம்யூனிஸ்டுகள் செய்த கொடுமைகளையும், கிறிஸ்தவ விசுவாசிகளது தன்னலமற்ற தியாகங்களையும் கூறிக்கொண்டே போவேனுனல், நான் ஒருபோதும் முடிக்கமாட்டேன். என்னுடைய சிறைச்சாலை அனுபவத்தில், சித்திரவதையென்றுல் என்னவென்பதை

மாத்திரமல்ல, விசுவாசிகளுடைய வீரம் மிகுந்த தியாகங்களையும் நான் அங்குதான் கண்டேன். சிறையினுள்ளிலிருந்து விசுவாசிகள் புரிந்த செயல்கள், சிறைக்கு வெளியேயிருந்த மற்ற விசுவாசிகளை வெகுவாக உற்சாகப் படுத்தின.

எங்களுடைய அந்தரங்க சபையில் இளம் வாலிப சகோதரி ஒருத்தி இருந்தாள். அவள் இரகசியமாக சுவிசேடப் பிரதிகளை விநியோகித்து, சிறு பிள்ளைகளுக்கு கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிக் கொடுத்து வந்தது கம்யூனிச போலீசாருக்கு எப்படியோ தெரிந்து விட்டது. அவளுடைய மனதைப் புண்படுத்தி, அவளைக் கைது செய்வதற்கான நேரத்தை அவர்கள் எதிர்பார்த்திருந்தனர். இதற்காக அவளுடைய மண நாள் வரை பொறுத்திருந்தனர். அது அவளுடைய மண நாள். மணப்பெண்ணுக அழகிய உடைகளை அணிந்திருந்தாள் அவள். மணநாளே ஒரு பெண்ணின் வாழ்க்கையில் அற்புதநாள்! அப்போது திடீரென்று கதவுகள் திறந்தன. இரகசிய போலீசார் வீட்டினுள் நுழைந்தனர். போலீசாரைக் கண்டதும், அவள் ஒன்றும் பேசாமல், விலங்கிடப்படுவதற்கு நீட்டினுள் தனது கரங்களை. அவர்கள் அந்த மென்மையான கரங்களில், தங்களுடைய முரட்டுக்கரங்களால் விலங்கை மாட்டினர்.

வெளியே செல்லுவதற்குமுன், மணமகனை ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு, விலங்குகளை முத்தமிட்டபடி அவள், ''என்னுடைய மணநாளன்று, இந்த ஆபரணத்தை எனக்களித்த எனது பரம மணவாளனுக்கு நன்றிசெலுத்துகிறேன். அவருக்காக இதை நான் சகிக்கப் பாத்திரமுள்ளவளென்று அறிந்து அவரை வாழ்த்துகிறேன்'' என்று கூறினுள். கண்ணீர் சொரிந்து நிற்கும் உறவினர்களையும், தனித்துவிடப்பட்ட மணமகனையும் விட்டு அவள் இழுத்துச் செல்லப்பட்டாள். கிறிஸ்தவ வாலிபப் பெண்கள் கம்யூனிச நாடுகளிலுள்ள சிறைக்காவலர்களால் தங்களுக்கு என்ன நேரிடும் என்பதை அறிந்திருந்தபடியினுல், அவர்கள்

மிகவும் கலங்கி, நடு நடுங்கி, அலறி தவித்தனர். ஐந்து ஆண்டுகளுக்குப்பின், பாழ்படுத்தப்பட்டு, உருக்குலேந்து, இளமை கடந்து, முப்பது வயதைக் கடந்த பெண்ணென காட்சியளிக்க அவள் விடுதலேசெய் யப்பட்டாள். அதுவரையிலும் அவளுடைய மணவாளன் அவளுக்காகக் காத்திருந்தான். அவள் வெளியேவந்தபின், தன்னுடைய இரட்சகரான கிறிஸ்துவுக்காக இவ்வளவு குறைவாகத்தான் தன்னல் செய்ய முடிந்தது என்று கூறினுள். இப்படிப்பட்ட அழகு ததும்பும் அருமையான விசுவாசிகள் அந்தரங்க சபையில் இருக்கிருர்கள்.

**மூளேச்சலவை!**

கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்திலில்லாத நாடுகளில் வசிப் போர் முன்பு நடந்த கொரியாப் போரிலும், இப்பொழுது நடைபெற்று வரும் வியட்நாம் போரிலும் செய்யப்படும் மூளேச் சலவையைப் (Brain Washing) பற்றிக் கேள்விப் பட்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். அந்த மூளேச் சலவையை, ருமேனியச் சிறைசாலேகளில் இருந்த காலங் களில் நானே அனுபவித்திருக்கிறேன். சொல்ல வேண்டு மானுல், சித்திரவதைகளிலேயே அதுதான் மிகவும் பயங்கர மான சித்திரவதை. வருடக் கணக்காக, ஒரு நாளுக்குப் பதினேழு மணிநேரம்,

கம்யூனிசம் நல்லது !
கம்யூனிசம் நல்லது !
கம்யூனிசம் நல்லது !

கிறிஸ்தவம் முட்டாள் தனமானது !
கிறிஸ்தவம் முட்டாள் தனமானது !

அதை விட்டுவிடு !
அதை விட்டுவிடு !
அதை விட்டுவிடு !

என்ற வார்த்தைகளே நாங்கள் கேட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். இப்படியாக நாட் கணக்கில், வாரக்கணக்கில், மாதக்கணக்கில் ஒரு நாளுக்குப் பதினேழு மணி நேரங்கள்

கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். இதுதான் மூளைச் சலவை. அநேக கிறிஸ்தவர்கள் 'மூளைச் சலவையை' எவ்வாறு சமாளிப்பதென்று என்று என்னிடம் கேட்டிருக்கிறார்கள்.

அதைச் சமாளிப்பதற்கு ஒரே ஒரு வழிதானுண்டு, அது 'இதய சலவை' தான் (Heart Washing). உன்னுடைய இதயமானது கிறிஸ்துவினுடைய அன்பினால் சுத்திகரிக்கப் பட்டிருந்து அவரையே அது முழுவதுமாக நேசிக்குமானால், அப்போது எவ்வளவு பெரிய சித்திரவதைகளையும் நீ சமாளிக்கக் கூடியவனாக இருப்பாய். தன் நேச மணவாளனுக்கு, அவனை நேசிக்கும் மணவாட்டி எதையும் செய்யத் தயங்கமாட்டாள் அல்லவா? தான் நேசிக்கிற குழந்தைக்கு, அதன் தாய் எதையாவது செய்யாமலிருப்பாளா? தன்னுடைய கையில் குழந்தையாக இருந்த கிறிஸ்துவை நேசித்திருந்த மரியாளைப்போலவும், தன் மணவாளனை நேசிக்கும் மணவாட்டியைப் போலவும், நீ கிறிஸ்துவை நேசிப்பாயானால், அப்போது நீயும் கிறிஸ்துவுக்காக, அவர் நிமித்தம் வரும் எந்த சித்திரவதைகளையும் சகிக்கத்துணிவாய்.

கிறிஸ்துவுக்காக, நாம் சித்திரவதைகளை எந்த அளவுக்கு சகித்தோம் என்றல்ல, நாம் அவரில் எவ்வளவு அன்புகூர்ந்தோம் என்பதின்படியே தேவன் நம்மை நியாயந்தீர்க்கப் போகிறார். கம்யூனிச நாடுகளிலுள்ள சிறைச்சாலைகளில் சித்திரவதைகளின் மத்தியில் இருந்துவரும் கிறிஸ்தவர்கள், அந்தத் துன்பங்களின் மத்தியிலும் அவர்கள் தேவனை நேசிக்க முடியும் என்பதற்கு சாட்சியாகவே இன்று வாழ்ந்து வருகிறேன். அவர்கள் தேவனை மாத்திரமல்ல, மனிதரையும் நேசிக்க முடியும்.

சிறைக்காவலர்கள் எங்களை எப்பொழுதும், மிருகத்தனமாக சித்திரவதை செய்து கொண்டேயிருப்பார்கள். இதனால் அநேக சமயங்களில் நான் சுயநினைவிழந்து, விழுந்து விடுவதுண்டு. அப்போது அவர்கள் என்னை மறுபடியும் என்னுடைய அறைக்கு எடுத்துச் சென்று அங்கே போட்டு

விடுவார்கள். அந்நிலையில் கவனிப்பாரற்று, உயிர் திரும்பக் கூடவராதபடி, செத்துப்போன நிலைமையில் இருந்திருக்கிறேன். அந்நிலையில் அந்தக் கொடுமைக்காரர்கள் என்னிடத்தில் ஒன்றும் செய்யமுடியாது. எங்களில் அநேகர், இது போன்ற நிலைக்கு வந்தவுடன் மரித்துப் போயிருக்கிறார்கள். ஆனால், அது போன்று அநேக சமயங்களில், என்னுடைய உயிர் எனக்குள் திரும்பவும் வந்திருக்கிறது. அதன் இரகசியத்தை நானறியேன்.

இவ்வாறு நான் இந்த சிறைச்சாலைகளில் இருந்த நாட்களில், அவர்களுடைய சித்திரவதையின் ஒரு பகுதியாக, என்னுடைய முதுகெலும்புகளில் நான்கும், மற்றும் சில எலும்புகளும் உடைக்கப்பட்டுள்ளன. மேலும், பன்னிரண்டு இடங்களில் என் சரீரத்தில் சதை குடைந்தெடுக்கப்பட்டுள்ளது. இன்னும் என் சரீரத்தின் அநேக இடங்களை அவர்கள் தீயினால் சுட்டு, உடம்பில் பதினெட்டு இடங்களில் துளைகள் இட்டுள்ளனர். அதற்கப்புறம் பூரண விடுதலை பெற்றபின் நான் ஆஸ்லோ பட்டணத்திற்குச் சென்றபோது, என்னுடைய உடலில் காணப்பட்ட அத்தனை காயங்களையும் அவற்றால் உண்டான தழும்புகளையும், மேலும் வெகு நீண்ட கடுமையான சிறைவாசத்தின் பலனாக எனக்குக் கிடைத்த க்ஷயரோக வியாதியையும் கண்ட வைத்தியர்கள், நான் இது வரைக்கும் உயிரோடிருக்கிறது ஒரு பெரிய அற்புதம் என்றே சொன்னார்கள். அவர்களுடைய வைத்திய விதியின்படி நான் அநேக ஆண்டுகளுக்கு முன்னமே மரித்திருக்க வேண்டும். நான் இன்றைக்கு உயிரோடிருக்கிறது நிச்சயமாகவே தேவனுடைய ஒரு பெரிய அற்புதமென்றே சொல்லுவேன்.

நம்முடைய தேவன் அற்புதங்களைச் செய்கிற தேவனல்லவா இரும்புத்திரை நாடுகளிலிருக்கும் அந்தரங்க சபைகளின் சார்பாக நான் பேசுகிறதை நீங்கள் கேட்கும்படிக்கு, இது தேவனால் உண்டான அற்புதம் என்றே நான் கூறுவேன்.

**குறுகியகால விடுதலையும் அதைத் தொடர்ந்த காவலும்:—**

எனது எட்டரை ஆண்டுக்கால சிறைவாசம் 1956—வது ஆண்டோடு முடிவடைந்தது. எனது வாழ்க்கையின் நீண்ட காலத்தை சிறையிலேயே கழித்ததால், என்னுடைய எடை குறைந்து காணப்பட்டது. காயங்களினுல் உண்டான அவலட்சணமான தழும்புகள் உடலெங்கும் காணப்பட்டன. சிறைச்சாலையில் மிருகத்தனமாக அடிப்பட்டு ; உதைபட்டு பரியாசம் பண்ணப்பட்டவனுயிருந்தேன். பசியினுல் ஒடுக்கப் பட்டு, பயமுறுத்தப்பட்டுள்ளேன்; சிறைக் காவலர்களால் வெறுத்துத் தள்ளப்பட்டவனுமானேன். அவர்கள் இவ்வாறு என்னைப் பாடுபடுத்தியும், என்னிடம் அவர்கள் எதிர்பார்த்த பலனை அடையவில்லை. இதனுல் அதைரியமடைந்த கம்யூனிச வாதிகள் என்னை விடுதலை செய்து விடுவதென்று தீர்மானித்தனர். அதுமாத்திரமல்லாமல், என்னை சிறையில் வைத்திருந்ததற்காக கிறிஸ்தவர்களிடமிருந்து அநேக எதிர்ப்புகளும் வந்தன.

நான் விடுதலை செய்யப்பட்டு, ஒரு வாரம் மட்டும் வீட்டிலிருந்தேன். அப்போது இரண்டு இடங்களுக்குச் சென்று பிரசங்கித்தேன். இதனுல் கோபங் கொண்ட நாத்திகர்கள், நான் எங்கும் பிரசங்கிக்கக் கூடாதென்றும், எந்த ஊழியத்திலும் பங்கு பெறக்கூடாதென்றும் ஆணையிட்டனர். ஆனுலும் நான் என்னுடைய சபையாரைப் பார்த்து, ''பொறுத்திருங்கள்;பொறுத்திருங்கள்; இன்னும் அதிகமான பொறுமையைக் கையாளுங்கள்'' என்று கூறி அவர்களை சாந்தப்படுத்தினேன். இதைக் கேள்விப்பட்டதும் கம்யூனிச வாதிகள் என்னை அழைத்து, ''அப்படியானுல் அதற்கு பொறுத்திருங்கள், அமெரிக்கர் வந்து உங்களை விடுதலை செய்வார்கள், என்று அர்த்தமா? '' என்று கூறி கர்ஜித்தார்கள். அதற்கு மறுமொழியாக, ''சக்கரம் சுழல்வது போல காலமும் ஒரு நாள் மாறும்'' என்று அமைதியாகக் கூறினேன். பின்னும் அவர்கள், ''கம்யூனிஸ்டுகளான நாங்கள் இனி உங்களை ஆளமாட்டோம் என்றுதானே சொல்லுகிருய். இவையெல்லாம் உன் மக்களை கிளர்ச்சி செய்

வதற்கு ஏவிவிடும் பொய்யான வார்த்தைகள்'' என்றூர்கள்.

அன்று அவர்களோடு செய்த உரையாடலே, எனது வெளிப்படையான ஊழியத்திற்குக் கடைசிக் கட்டமாக இருந்தது. நான் அவர்களை எதிர்த்து நிற்கப் பயப்படுவேன் என்றும், அத்தோடு அந்தரங்க சுவிசேட ஊழியத்தை விட்டு விடுவேனென்றும் அவர்கள் நினைத்திருந்தார்கள். இது அவர்கள் போட்ட தப்புக்கணக்கு.

நானே அன்றிலிருந்து வெளிப்படையாக இராமல், முன்னால் நான் செய்துகொண்டிருந்த இடத்தில் இரகசிய மான முறையில் ஊழியம் செய்யத் தொடங்கினேன். என்னுடைய குடும்பமும் இதற்கு ஒத்துழைத்தது. அரூப மான ஓர் ஆவியைப் போல் இங்கும் அங்கும் சென்று நம் பிக்கைக்குப் பாத்திரமானவர்களுடைய பாதுகாப்பின் கீழ், கிறிஸ்துவுக்குள் உண்மையான விசுவாசிகளை சந்தித்து வந் தேன். நாத்திகக் கொள்கையினால் விளையும் தீமைகளை எடுத்துக் கூறி, பின் வாங்கிப்போன விசுவாசிகளை தேவனி டத்திற்குத் திருப்பி, அவர்களைத் திடப்படுத்த நான் எடுத்த இந்த முயற்சியில் என் சரீரத்தில் நான் பெற்றிருந்த காய வடுக்கள் மிகவும் உதவியாயிருந்தன. இக்காலங்களில்தான் கொடிய நாத்திகக் கொள்கையினால் அகக் கண்கள் குரு டாகிப் போயிருந்த கம்யூனிஸ்டுகளின் மத்தியில் சுவிசேடத் தைப் பரப்பும் பணியில் ஈடுபடும் பொருட்டு இரகசிய சுவி சேடகர் குழு ஒன்றை ஏற்படுத்தி வைத்தேன்.

நான் செய்துவந்த ஊழியத்திலும். என்னுடைய போக்குவரத்திலும் மிகுந்த கவனமாயிருந்த போலீசார், திரும்பவும் என்னைக் கைது செய்து சிறையிலிட்டார்கள். நான் பெற்றிருந்த விளம்பரத்தினாலோ, என்னவோ என்னு டைய குடும்பத்தினரை இப்போது அவர்கள் சிறையில டைக்கவில்லை. எட்டரை ஆண்டு சிறை வாசத்திற்குப்பின், மூன்றூண்டு விடுதலை பெற்றிருந்தேன். இப்போது திரும்பவும் ஐந்தரை ஆண்டு சிறைவாசம் செய்யும்படி கைது செய்யப் பட்டேன். இந்த எனது இரண்டாவது சிறைவாசம் முதலாவதைக் காட்டிலும் மிகவும் மோசமானதாயி

ருந்தது. எனக்கு என்ன நடக்கப்போகிறதென்பதை நான் முன்பே அறிந்திருந்தேன். இப்போது என்னுடைய சரீரம் முன்பிருந்ததைக் காட்டிலும் மிகவும் பெலவீனப்பட்டிருந்தது. எனினும், நானும் மற்ற சகோதரர்களும், அந்தரங்கமாக கம்யூனிச சிறைச்சாலைகளில், அந்தரங்க சபையின் அந்தரங்க ஊழியத்தை செய்து வந்தோம்.

**நாங்கள் பிரசங்கித்தோம், அவர்கள் அடித்தார்கள்—இதுதான் எங்கள் வாடிக்கை:**

மற்ற சிறைக் கைதிகளிடத்தில் நாங்கள் பிரசங்கிக்கக் கூடாதென்று, சிறைக்காவலர்கள் எங்களைக் கடுமையாக எச்சரித்திருந்தார்கள். அதனை மீறுபவர்கள் கடுமையாக அடிக்கப்படுவார்கள் என்றும், அவர்கள் எங்களை பயமுறுத்தியிருந்தனர். ஆனாலும் சுவிசேடம் பிரசங்கிப்பதற்கான கிரயத்தை அவர்களுக்குச் செலுத்துவது என்று எங்களில் அநேகர் தீர்மானித்திருந்தோம். அதன்படி, நாங்கள் பிரசங்கித்தோம். அவர்கள் அடித்தார்கள்—இதுதான் எங்களின் வாடிக்கை. நாங்கள் ஒவ்வொருவரும் வெகு மகிழ்ச்சியாக பிரசங்கித்தோம். அவர்கள் எங்களை வெகு மகிழ்ச்சியாக அடித்தார்கள். இதனுல் இருசாராரும் வெகு மகிழ்ச்சியாக இருந்தோம்.

பின் வரும் நிகழ்ச்சியைப்போல எங்களுக்கு அநேகந் தடவைகள் நடந்திருக்கிறது:— எங்களுடைய அந்தரங்க சபையின் சகோதரரில் ஒருவர் ஒருநாள், ஒரு கைதிக்கு சுவிசேடம் சொல்லிக்கொண்டிருந்தார். அதை சிறைக் காவலர்கள் அவர் அறியாதபடி கண்டுபிடித்து விட்டார்கள். உடனே, 'அவரை அடிக்கும் அறைக்கு' இழுத்துச் சென்று அவரை அங்கு அடித்துவிட்டு அவருடைய உடலிலிருந்து இரத்தம் சொட்டச் சொட்ட திரும்பவும் அவருடைய அறையில் கொண்டுவந்து போட்டுவிட்டுப் போய்விட்டார்கள். அடிகளினுல் சரீரம் சின்னபின்னமாக்கப்பட்டிருந்த அந்த சகோதரன், அந்த வேதனையோடு, தன்னுடைய ஆடையைச்சரிசெய்துகொண்டு, ''சகோதரர்களே!

சற்று முன்னுல் எந்த இடத்தில் நான் நிறுத்தினேன் ..." என்று கூறிக் கொண்டே, அவருடைய பிரசங்கத்தை ஆரம்பித்தார்.

இது போன்ற, பார்ப்பதற்கு அரிய இனிமையானகாட்சி களேயும் நான் அந்த சிறைச்சாலேயில் கண்டேன்! இப்படி பிரசங்கிப்பவர்களில், படிப்பறியாத சாதாரண மக்கள் கூட இருந்தார்கள். பரிசுத்த ஆவியானவரால் ஆட் கொள்ளப்பட்டிருந்த அந்த தேவனுடைய மக்கள் மிக வும் அழகாக பிரசங்கிக்கிறதை அங்கு பார்த்தேன். அவர் களுடைய இதயத்திலிருந்தது எதுவோ, அது அவர்களுடைய வார்த்தையிலே பிரதிபலித்தது. இதை வாசிக்கும் அருமை சகோதரர்களே ! சுதந்திரமாக இருந்துகொண்டு சுவிசேடத் தைப் பிரசங்கிப்பதைப் பார்க்கிலும், துன்பத்தின் மத்தியில் பிரசங்கிப்பது அவ்வளவு சுலபமானதல்ல வென்பதை நீங்கள் அறிவீர்களா ? நாங்கள் பிரசங்கிப்பதை சிறைக்காவலர்கள் பார்த்துவிட்டால், உடனே அங்கு ஓடிவந்து எங்களே இழுத் துச் சென்று குற்றுயிராகும்வரை, மிகுதியாக அடித்து விடுவார்கள். இக்கிரயத்தை எங்கள் இரட்சகரின் மகிமை யான சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காக செலுத்த நாங் கள் எப்போதும் ஆயத்தமாயிருந்தோம்.

ருமேனியாவிலுள்ள 'கெர்லா' என்ற சிறைச்சாலேயில் 'கிரீகு' என்ற சகோதரன் அடித்து கொல்லப்பட வேண்டுமென்று தீர்ப்பு கொடுக்கப்பட்டது. அந்தத் தண்டனேயும் சில வாரங்களாக நிறைவேற்றப்பட்டுவந்தது. அதன்படி தடித்த ரப்பர் கழியால், முழங்காலுக்குக் கீழாக, அவருடைய கால்களில் முதலில் ஓர் அடி கொடுக்கப்படும்; அப்புறம் சில நிமிடங்கள் கழித்து, மறுபடியுமாக அதே இடத்தில் இன்னெரு அடி. இன்னும் சில நிமிடங்கள் கழித்து அந்த இடத்திலேயே இன்னெரு அடி. அவர் உயிர்த்தலத்தில் அடிக்கப்பட்டார். அதன் பின் ஒரு டாக்டர் வந்து ஊசி போட்டார். அவருக்கு சுய நினேவு வந்தபின் அவருடைய பெலனேப் புதுப்பிக்க மிகவும் நல்ல ஆகாரம் கொடுக்கப்பட்டது. பிறகு மறு

படியும் முன்போலவே அடிக்கப்பட்டார். இவ்விதமாய் அவர் கொஞ்ச கொஞ்சமாகக் குற்றுயிரயடைந்து மரண மடையும் வரை இந்தத் தண்டனையை மெதுவாக நிறை வேற்றினார்கள்.

கம்யூனிஸ்டு கட்சியின் மத்திய குழுவினரில் ஒருவரான 'ரெக்' என்பவர் இந்த சித்திரவதையைச் செய்தார். அவர் அப்படி சித்திரவதை செய்துகொண்டிருந்த போது ஒரு நேரத்தில் பொதுவாக, கிறிஸ்தவ விசுவாசி களைப் பார்த்து கம்யூனிஸ்டுகாரர்கள் வழக்கமாகச் சொல்லும் வார்த்தைகளாகிய, ''நான் தேவன் என்று உனக்குத் தெரியுமா? உன்னை உயிரோடு வைக்கவும், உன் உயிரை வாங்கவும் என்னால் முடியும்; அந்த சக்தி என்னி டத்தில் இருக்கிறது. பரலோகத்தில் இருக்கிறவருக்கு உனக்கு ஜீவனைக் கொடுப்பதா இல்லையா என்பதைப் பற்றி முடிவு செய்யமுடியாது. ஆனால் அவையெல்லாம் என்னுடைய கையினுள் அடங்கியிருக்கிறது. நான் விரும் பினால் நீ பிழைக்கலாம்; இல்லையானால் நீ செத்துப்போவாய். ஆகையால் நான் தேவன்'' என்ற வார்த்தைகளைக் கூறி அவரைப் பரியாசம் செய்தான்.

இவ்வாறு அவர் சொன்னதைக் கேட்டதும், சகோ தரன் கிரீகு, தன் பயங்கரமான வேதனையின் மத்தி யிலும், அந்த கம்யூனிஸ்டைப் பார்த்து: ''எவ்வளவு அழகான, ஆழமான ஒரு சத்தியத்தை நீர் சொன்னீர் என்று உமக்குத் தெரியுமா? உண்மையிலேயே நீர் ஒரு தேவன்தான். கூட்டிலிருக்கும் ஒரு புழு இயற்கை யின் விதிப்படி, சரியானமுறையில் வளர்ச்சியடையுமானால் உண்மையிலேயே ஒவ்வொரு கூட்டுப்புழுவும் ஒவ்வொரு வண்ணாத்திப்பூச்சி (**Butterfly**) தான். நீர் மனிதரைக் கொல்லுவதற்காக சிருஷ்டிக்கப்பட்ட ஒரு கொலையாளி யல்ல. தேவனைப்போல இருக்கவே நீர் படைக்கப்பட்டீர். இயேசுவும் இவ்வுலகத்திலிருந்த காலத்தில் ஒரு சமயம் தம்மைச் சூழ நின்ற யூதர்களைப் பார்த்து, 'நீங்கள் தேவர் களாயிருக்கிறீர்கள்' (யோ. 10 : 34) எனக் கூறியிருக்

கிறீரே. தெய்வத்துவதின் ஜீவன் உம்முடைய இதயத்திற்குள் இருக்கிறது. இவ்வாறு எங்களைத் துன்புறுத்துகிற அநேகர், வேதாகமத்திலே சொல்லப்பட்டிருக்கிற பவுலைப் போல தங்களுடைய வாழ்க்கையின் ஒரு நாளிலே, 'மனிதன் மற்றொரு மனிதனைத் துன்புறுத்துவது அயோக்கியமானது என்றும், அது மிகவும் வெட்கப்படக் கூடிய காரியமென்றும் அறிந்து மனிதன் அதைக்காட்டிலும் மேலான காரியங்களைச் செய்யக்கூடும்' என்று கண்டு பிடித்திருக்கிறார்கள் என்று உமக்குத் தெரியுமா? அவ்வாறு உணர்ந்தபின், கடைசியில் அவர்கள் தெய்வத்துவத்துக்குப் பங்காளிகளானார்கள். ஆகையினால் அருமை ரெக் அவர்களே! நான் சொல்லுவதை நீர் நம்பும். நீர் இந்த உலகத்தில் தேவனாகவும், தேவனைப்போலவும் இருக்கவே படைக்கப்பட்டிருக்கிறீரேயொழிய, சித்திரவதை செய்வதற்கு நீர் படைக்கப்பட்டிருக்கவில்லை'' என்று கூறினார்.

ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்படும் காட்சியைக் கண்டும் அதைப் பற்றி சிந்தியாமலிருந்த தர்சுப் பட்டணத்தானாகிய சவுலைப் போல, ரெக் இதைக் கேட்ட போதுங்கூட அதிலே கவனம் செலுத்தாமலிருந்தார். ஆனால், சகோதரன், 'கிரீகு' பேசின அந்த வார்த்தைகள் ரெக்குடைய இதயத்திலே கிரியை செய்தன. பின்னால் இந்த உரையாடலே தன்னை இரட்சிப்புக்குள்ளாக வழி நடத்தின என்று பின்னொருநாள் ரெக் சிறையில் அடைக்கப்பட்டபோது என்னிடம் கூறினார்.

கம்யூனிஸ்டுகள் எங்களை அடித்த அடிகளிலும், குற்றுயிராக்கின செய்கைகளிலும், ''ஆவியே சரீரத்திற்கு அதிகாரியாயிருக்கிறது'' என்ற ஒரு பெரிய பாடத்தை அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டேன். சித்திரவதைக்குள்ளாகும்போது அடிக்கடி வேதனைகளை உணர்ந்தோம்; ஆனால் எங்களோடு தங்கியிருந்த கிறிஸ்துவின் மகிமையிலும், அவருடைய பிரசன்னத்திலும் மூழ்கியிருந்த எங்கள் ஆவிக்கு அது தூரமாகவும், விலக்கப்பட்டதாகவுமே இருந்தது.

சிறையிலே, எங்களுக்கு ஒரு வாரத்திற்கு ஒரு சிறிய ரொட்டித் துண்டும், தினமும் அருவருப்பான சூப்பு கொஞ்சமும் கொடுக்கப்படும். அப்போதுகூட அதில் நாங்கள் கர்த்தருடைய பங்கை கொடுப்பதில் உண்மையுள்ளவர்களாக இருக்கத் தீர்மானித்து, பத்தாவதுவாரம் கொடுக்கப்படும் அந்த சிறிய ரொட்டித் துண்டை எங்களிடம் மிகவும் பெலவீனராக இருக்கும் சகோதரர்களுக்கு கர்த்தருடைய பங்காகக் கொடுத்து மகிழ்ந்தோம்

ஒரு விசுவாசி மரண தண்டனை விதிக்கப்பட்டார். தண்டனை நிறைவேற்றப்படுவதற்குமுன், அவருடைய மனைவியைப் பார்ப்பதற்கு அவர் அனுமதிக்கப்பட்டார். அப்போது அவர் கடைசியாக தன்னுடைய மனைவியைப் பார்த்து: ''எனக்கு மரண தண்டனை விதித்தவர்களை நேசிக்கிறவனாகவே நான் மரிக்கிறேன். அவர்கள் என்ன செய்கிறார்களென்று அவர்களுக்கே தெரியவில்லை. நீயும் கூட அவர்களை நேசிக்கவேண்டும் என்பதே உன்னிடத்தில் நான் விடுக்கும் என் கடைசி வேண்டுகோள். உன்னுடைய அருமையான கணவனை அவர்கள் கொல்லுகிறார்களே என்று அவர்கள்மீது உனக்குக் கொஞ்சமேனும் கசப்பு வேண்டாம். நாம் மோட்சத்தில் ஒருவரை ஒருவர் சந்திப்போம்'' என்று கூறி விடைபெற்றார். இந்த வார்த்தைகளை அருகிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த இரகசிய போலீஸ் அதிகாரி ஒருவருடைய இதயத்தில் அப்படியே பதிந்து விட்டனவென்றும், அவைகளே, தாம் கிறிஸ்துவைக் கண்டடைவதற்கு உதவியாய் இருந்தனவென்றும், பின்னால் அவர் என்னோடு சிறைச்சாலைக்கு வந்தபின்பு கூறினார்.

தீர்கு—ஒக்னு என்ற ஒரு சிறைச்சாலையில், மாச்சிவிசி என்று சொல்லப்பட்ட ஓர் இளம் வாலிப விசுவாசி இருந்தான். அவன் பதினெட்டு வயதாயிருக்கையில், கர்த்தர்பேரில் வைத்த விசுவாசத்திற்காக சிறைச்செய்யப்பட்டிருந்தான். சிறையில் அவன் அடைந்த அகோரமான கொடுமைகளினால், அவன் அதிக பலவீனமடைந்து,

க்ஷயரோக வியாதியினுல் பீடிக்கப்பட்டிருந்தான். அவன் மிகவும் மோசமான நிலேயிலிருக்கிறுன் என்பதைக் கேள்விப் பட்ட அவனது பெற்ருேர் 'ஸ்டிரப்டோமைசின்' என்ற மருந்து கொண்ட நூறு புட்டிகளே அவனிருந்த சிறைச் சாலேக்கு அனுப்பி வைத்தார்கள்.

சிறையிலிருந்த அரசியல் அதிகாரி ஒருவர் அந்த வாலிபனே அழைத்து, மருந்து புட்டிகளேக் கொண்ட பார் சலேக் காண்பித்து, "இதோ பார்! உன்னுடைய உயிரைக் காப்பாற்றக்கூடிய மருந்து இங்கே என்னிடம் இருக்கிறது. உன்னுடைய வீட்டிலிருந்து இந்த விதமான உதவியைப் பெற்றுகொள்ளுவதற்கு உனக்கு அனுமதியில்லே. ஆனுல் தனிப்பட்டமுறையில் உனக்கு உதவி செய்ய விரும்பு கிறேன். நீ சிறைச்சாலேயிலே மரிப்பதை நான் விரும்ப வில்லே. ஆகையால் நான் உனக்கு உதவும் பொருட்டு நீ எனக்கு ஓர் உதவி செய்யவேண்டும். சிறையில், உன்னேப் போன்ற கிறிஸ்தவர்களேப்பற்றிய தகவலே எனக்குக் கொடு; இந்த பார்சலே நான் ஏன் உனக்கு தந்தேன் என்று மேலதி காரிகளிடத்தில் சொல்லுவதற்கு அது எனக்கு உதவியா யிருக்கும்" என்று சொன்ஞர். உடனே அந்த வாலிபன் மிகவும் தைரியமாக, "கண்ணுடியில் என் முகத்தைக் காணும் போது அது தன் சகோதரரைக்காட்டிக் கொடுத்தோனின் முகமாகக் காணப்படுவதைக் கண்டு வெட்கத்தோடு நான் உயிர் வாழ விரும்பவில்லே. எனக்கு அப்படிப்பட்ட நிபந் தனே வேண்டாம். நான் சாக ஆயத்தமாயிருக்கிறேன்" என்ருன்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த அதிகாரி அவனேப் பார்த்து: "வாலிபனே! உன்னுடைய தைரியத்தைப் பாராட்டுகிறேன். வேறே பதிலே உன்னிடமிருந்து நான் எதிர் பார்க்கவில்லே. ஆனுல் உனக்கொரு யோசனே கூற விரும்பு கிறேன். இங்கு இருக்கிற கைதிகளில் சிலர், கிறிஸ்தவர்களாக இருக்கிற மற்ற கைதிகளேப் பற்றிய விபரத்தை எங்களிடம் கூறுகிருர்கள். அவர்கள் இப்பொழுது கம்யூனிஸ்டுகளாக மாறி விட்டதாகக் கூறிக்கொண்டு, உன்னேப்பற்றி

பழித்துக் கூறுகிறார்கள். ஆனால் அவர்களிடத்திலும் எங்களுக்கு நம்பிக்கையில்லை. அவர்கள் இரட்டை வேடம் போடுகிறார்கள் என்றே நம்புகிறோம். ஆகையினால், அவர்கள் எந்த அளவுக்கு உண்மையாயிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறோம். அவர்கள் உன்னை எங்களுக்குக் காட்டிக் கொடுத்தும், நீ பேசும் வார்த்தைகளையும், நீ செய்கிறவைகளையும் எங்களிடத்தில் கூறியும் உனக்குத் துன்பத்தை விளைவிக்கிறார்கள். உன்னுடைய நண்பர்களாயிருக்கிறவர்களை நீ காட்டிக் கொடுக்க விரும்பவில்லையென்று நான் அறிவேன். ஆனால், உன்னை எதிர்த்து நிற்கிறவர்கள் யாரென்று மாத்திரம் என்னிடத்தில் சொல்லுவாயானால், நீ உன்னுடைய உயிரை காப்பாற்றுகிறவனாவாய்'' என்றார்.

ஆனால், அந்த வாலிபனோ, முதலில் எவ்வாறு மறுத்துக் கூறினானோ அப்படியே இப்போதும் திட்டவட்டமாக அந்த அதிகாரியைப் பார்த்து: ''நான் ஒரு கிறிஸ்துவின் சீடன்; கிறிஸ்து எங்களுடைய விரோதிகளையும் கூட நேசிக்கவே கற்பித்திருக்கிறார். எங்களைக் காட்டிக்கொடுக்கிறவர்கள் எங்களுக்குத் துன்பம் விளைவித்தாலும், தீமையைத் தீமையினாலே வெல்ல நான் விரும்பவில்லை. அவர்களுக்கு விரோதமாக எந்த விபரத்தையும் நான் கூறவுமாட்டேன். அவர்களுக்காக இரக்கப்படுகிறேன். அவர்களுக்காக நான் ஜெபிக்கவே விரும்புகிறேன். கம்யூனிஸ்டுகளோடு எனக்கு எந்த விதமான தொடர்பும் வேண்டாம்'' என்று கூறிவிட்டு, நான் இருந்த தன்னுடைய அறைக்கு வந்து, அங்கே மகிழ்ச்சியோடே மரித்தான்.

அவன் மரிக்கும் போது நான் அவனைப் பார்த்துக்கொண்டிருந்தேன். தேவனைத் துதித்துக்கொண்டே அவனுடைய ஆவி அவனைவிட்டுப் பிரிந்தது. கிறிஸ்துவின் பேரிலிருக்கும் மெய்யான அன்பானது, உயிரின்மீது ஒருவனுக்கு இருக்கும் உள்ளான ஆசையையுங்கூட வென்று விட்ட அந்த

மகிமையின் காட்சியை அன்று அந்த சிறைச்சாலையிலே கண்டேன்.

ஏழை மனிதன் ஒருவன் இசைப்பிரியனாக இருப்பானானால், அவனிடத்தில் மீதியாக இருக்கிற கொஞ்ச பணத்தையுங்கூட செவிக்கினிய இன்னிசைக் கச்சேரியைக் கேட்பதற்காகக் கொடுத்து விடுவான். அதைக் கொடுத்த பின் அவனிடத்தில் பணமில்லையானாலுங்கூட அதற்காக அவன் வருந்தமாட்டான்; முகம் சுளித்துக் கொள்ளவுமாட்டான். ஏனென்றால், கேட்பதற்கு அருமையான இசையை அவன் கேட்டு மகிழ்ந்து விட்டான். அதேபோல நானுங்கூட என்னுடைய கடந்தகால வாழ்க்கையின் அநேக வருடங்களை சிறைச்சாலையிலே கழித்ததற்காக வருந்துகிறதில்லை. ஏனென்றால் வாழ்க்கையில் பார்ப்பதற்கு அரிதான, அருமையான காரியங்கள் அநேகத்தை அங்கேதான் நான் பார்த்தேன். பெலவீனமான மக்களோடும், படிப்பறியாத சாதாரண மக்களோடுங்கூட நான் சிறைச்சாலையில் இருந்த அனுபவம் எனக்கு உண்டு. அதே சமயத்தில், அந்தச் சிறைச்சாலையில், கர்த்தருடைய பெரிய பரிசுத்தவான்களோடும், முதல் நூற்றாண்டில் வாழ்ந்த விசுவாசிகளைப்போன்ற விசுவாச வீரர்களோடும் இருக்கக் கூடிய சிலாக்கியத்தையும் நான் பெற்றிருக்கிறேன். அந்த பரிசுத்தவான்கள் தங்களை மீட்ட கர்த்தருக்காக மரிப்பதற்கு எப்போதும் ஆயத்தமுள்ளவர்களாயிருந்தார்கள். அவர்களிடத்தில் காணப்பட்ட ஆவியின் அழகை என்னால் விவரித்துச் சொல்லுவதற்கு முடியவில்லை. நான் இங்கே எதையாகிலும் மிகைப்படுத்திச் சொல்லுகிறேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள். "இதை ஒருவராலும் செய்யமுடியாது" என்று மனிதன் சொல்லுகின்ற அநேக காரியங்களை எங்களுடைய அந்தரங்க சபையின் விசுவாசிகள் வெகு எளிதாகச் செய்யக்கூடியவர்களாயிருந்தார்கள். சிறையிலிருந்த எங்களுடைய அந்தரங்க சபையானது தனது ஆதி அன்புக்கு மறுபடியும் வந்த சபையைபோல, என்னுடைய கண்களுக்கு காட்சியளித்தது.

சிறைக்குச் செல்லுவதற்குமுன் நான் கிறிஸ்துவை அதிகமாகவே நேசித்திருந்தேன். ஆனால் கிறிஸ்துவின் மணவாட்டியை அதன் ஆவிக்குரிய சரீரத்தில் அந்த சிறைச்சாலைகளிலே பார்த்த பிறகு முன்பு நான் கிறிஸ்துவை நேசித்ததுபோலவே, அவருடைய மணவாட்டியாகிய சபையையும் நேசிக்க ஆரம்பித்தேன். அங்கே அவளின் அலங்கரிக்கப்பட்ட அழகையும், அவளுடைய தியாக குணத்தையும் கண்டு, கிறிஸ்துவை இன்னும் அதிகமாகவே நேசிக்க ஆரம்பித்தேன்.

**என்னுடைய மனைவிக்கும், மகனுக்கும் நிகழ்ந்தது என்ன?**

நான் என்னுடைய மனைவியை விட்டுப் பிரிக்கப் பட்டபின்பு, அவளுக்கு என்ன நேர்ந்தது என்று எனக்குத் தெரியாது. என்னை சிறையிலடைத்த பின்பு, அவளுங்கூட சிறையிலடைக்கப்பட்டாள் என்று அநேக வருடங்களுக்குப் பிறகு கேள்விப்பட்டேன். அங்கு சிறையிலடைக்கப்படும் இளம் வாலிபப் பெண்கள், சிறைக்காவலர்களால் கெடுக் கப்பட்டு விடுவார்கள். அவர்கள் பெண்களைப் பரியாசம் செய்த அக்கிரமம் மிகவும் கொடூரமானது. கால்வாய் வெட்டும் வேலையில், பெண்கள் கடினமான வேலைகளைச் செய்யுமாறு கட்டாயப்படுத்தப்பட்டார்கள். அதுமாத்திர மல்லாமல், அவர்களும் ஆண்கள் செய்கின்ற அளவுக்கு வேலைசெய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்தப் பட்டார்கள். கடுமையான குளிர்காலத்திலுங்கூட, அந்த சிறைக்காவலர்கள், பெண் கைதிகளை பூமியைத் தோண்டும் வேலையைச் செய்யும்படி வற்புறுத்தினார்கள். வேசிகளைக் கொண்டு அவர்களை மேற்பார்வையிடும்படி வைத்தனர். அந்த வேசிகள் கர்த்தருக்குள் உண்மையான விசுவாசிகளை அதிகமாகத் துன்புறுத்தினார்கள்.

இவ்விதமான கொடுமைகளின் மத்தியில், என்னுடைய மனைவி, ஆடு மாடுகளைப்போல, புல் பூண்டுகளைத்தின்றிருக் கிறாள். கால்வாய் வெட்டும் பணியில் ஈடுபட்டிருந்தபோது

பசியால் வாடிய பெண் கைதிகள் எலிகளை யும், பாம்புகளையும் தின்ன வேண்டிய பரிதாபத்திலிருந் தார்கள். சிறைக்காவலர்கள் பெண் கைதிகளை, தானுபி என்று சொல்லப்பட்ட குளங்களில் தூக்கி எறிந்து, பின்பு மீன்களைப் பிடிப்பது போல, திரும்பவும் அவர்களைப் பிடித்து கரையேற்றி விளையாடுவது, ஞாயிற்றுக் கிழமை களில் அவர்களுடைய பொழுதுபோக்குகளில் ஒன்றாகும். அப்படி அவர்கள் கரையேறி வரும்போது தண்ணீரில் நனைந்த அவர்களுடைய சரீரங்களைப் பார்த்து சிரித்து, நையாண்டி பண்ணுவார்கள். பிறகு மறுபடியும், அவர்களை அந்தக் குளத்தில் வீசி எறிந்து விளையாடுவார்கள். என் னுடைய மனைவி இவ்விதமாக நையாண்டி பண்ணப் பட்டிருக்கிறாள்.

நானும், என்னுடைய மனைவியும் ஒருவரையொருவர் விட்டுப் பிரிக்கப்பட்டுவிட்டதால், எங்களுடைய மகன் மிகாய் தெருவில் அலைந்து திரியும்படியாக தன்னந்தனியாக விடப்பட்டான். மிகாய் குழந்தைப்பருவத்திலிருந்தே தெய்வபக்தி மிகுந்தவன்; மேலும் விசுவாசம் சம்பந்தப்பட்ட காரியங்களில் மிகவும் உற்சாகம் உள்ளவன். அவனுடைய ஒன்பதாவது வயதிலேயே, பெற்றோரைவிட்டு அவன் பிரிக் கப்பட்டபடியினால், அவனுடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் அநேக சோதனைகளைக் கடந்து செல்லவேண்டியவனாயிருந் தான். அதனால் வாழ்க்கை அவனுக்கு கசப்பாகத் தோன்றி, அவ்வளவு நாட்களாக அவன் நம்பிவந்திருந்த தெய்வ பக்தியை சந்தேகித்து, பலவாறு கேள்விகள் கேட்க ஆரம்பித் தான். அந்த வயதிலே பொதுவாக, சிறு பிள்ளைகளுக்கு நேரக்கூடாத அநேக பிரச்சினைகள் அவனுக்கு நேரிட்டன. இதனால் அவன் தானே சம்பாதிக்க வேண்டிய நிலை ஏற் பட்டது.

கம்யூனிஸ்டு நாடுகளில், கிறிஸ்தவ உயிர்த்தியாகிகளின் குடும்பங்களுக்கு உதவுவது ஒரு பெரிய குற்றமாகக் கருதப் படும். என்னுடைய மகனுக்கு உதவி செய்து வந்த இரண்டு

பெண்கள், அந்த காரணத்திற்காக கைதுசெய்யப்பட்டு, மிகவும் கொடூரமாக அடிக்கப்பட்டார்கள். அதனால், இப்போது பதினைந்து வருடங்களான பிறகுங்கூட அவர்கள் இன்னும், முடமாகவே இருக்கிறார்கள். தன்னுடைய வாழ்க்கையையும் பொருட்படுத்தாமல், மிகாயைத் தன்னுடைய வீட்டிலே வைத்துக் காப்பாற்றிய பெண்ணொருத்தியை, கிறிஸ்தவ கைதியின் குடும்பத்துக்கு உதவி செய்தாள் என்ற குற்றம் சாட்டி, எட்டுவருடம் சிறைத்தண்டனை விதித்தார்கள். கால்களாலே உதைத்து அவளுடைய பற்கள் எல்லாவற்றையும் உடைத்து, சரீரத்திலிருந்த எலும்புகளனைத்தையும் முறித்து விட்டார்கள். இப்போது அவளால் ஒரு வேலையும் செய்யமுடியாது. வாழ்க்கைக்கு அவள் முடமாக்கப்பட்டுவிட்டாள்.

**மிகாய் ! இயேசுவிலே விசுவாசம் வை !**

மிகாய் தன்னுடைய பதினோராவது வயதிலேயே சுயமாக வேலை செய்து பிழைக்க வேண்டியவனானான். அதனால் அவன் அடைந்த துன்பங்கள் கிறிஸ்துவின் மேலிருந்த அவனுடைய விசுவாசத்தைத் தடுமாறச் செய்தன. என்னுடைய மனைவியின் இரண்டாண்டு சிறை வாசத்திற்குப்பின் ஒரு நாள், அவளைப்பார்ப்பதற்கு மிகாய் அனுமதிக்கப்பட்டான். அவள் அடைத்து வைக்கப்பட்டிருந்த சிறைச்சாலைக்கு அவன் சென்றபோது, தன் தாய் இரும்புக்கம்பிகளுக்குப் பின்னால் நிற்பதைக் கண்டான். அவள் அழுக்கடைந்தவளாய், எலும்புந்தோலுமாய் கடுமையான வேலைசெய்து முரடான கரங்களோடு, பெண் கைதிகள் அணிந்துகொள்ளும் அலங்கோலமான ஆடையை அணிந்து பார்க்கப் பரிதாபமான நிலையில் நின்றுகொண்டிருந்தாள். மிகாய், அவளை அடையாளம் கண்டுக் கொள்ள முடியவில்லை.

தன் மகனைப்பார்த்ததும், என் மனைவி, கண்களில் கண்ணீர் நிறைந்து "மிகாய்! இயேசுகிறிஸ்துவிலே நீ உன் விசுவாசத்தை வை!" என்று கூறினாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட, அரக்கர் குணம் படைத்த, இரக்கமில்லாத சிறைக்காவலர்கள் அவளை இழுத்துச் சென்று அவ்விடத்தைவிட்டு அப்புறப்படுத்தினார்கள். தன் தாயை அப்படியொரு மிருகத்தைபோல இழுத்துச் சென்ற காட்சியைக் கண்ட மிகாய் கண்ணீர் விட்டு அழுதான். அன்று அவன் கண்ட காட்சியே, அவனை கர்த்தரிடம் மனந்திரும்புகிறதற்குக் காரணமாக இருந்தது என்று பின்னால் எங்களிடம் கூறினான்.

அப்பேர்ப்பட்ட கொடூரமான நிலைமையிலும், கிறிஸ்து நேசிக்கப்படுவதற்கு உரியவரானால், அவரே மெய்யான இரட்சகராக இருக்கவேண்டுமென்று, அன்று தன்னுடைய இதயத்தில் உறுதிப்படுத்தினான். அதற்குப் பிற்பாடு, அவன் தன் இதயத்தில், ''என்னுடைய தாயார் நம்பிக்கை வைத்திருக்கும் கிறிஸ்தவத்தை (Christianity) நம்புவதற்கு நான் கண்ணால் கண்ட இந்தக் காட்சிக்கு மேலாக வேறொரு ஆதாரம் எனக்கு இல்லையானாலும், இதுவே எனக்குப் போதும்'' என்று உறுதி பூண்டு, தன் தாயை சிறைச்சாலையிலே கண்ட அந்த நாளிலேயே, அவன் கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக முழுவதுமாக நம்பி தன் இதயத்தில் அவரை ஏற்றுக் கொண்டான்.

மிகாயின் பள்ளிப் பருவத்தில், பள்ளிக்கூடத்திலும் அவனுக்கு அநேக போராட்டங்கள் இருந்தன. அவன் மிகவும் நல்ல பையனாக இருந்தபடியினால், அவனை இளைஞர் கம்யூனிஸ்டு இயக்கத்தின் (Young Communist Pioneer) உறுப்பினனாக்கி அதற்கு அடையாளமாக, கழுத்தில் கட்டிக் கொள்ளும் சிவப்புநிற 'டை' (Neck Tie) ஒன்றை அவனுக்குப் பரிசாக அளித்தனர். அதை வாங்க மறுத்தவனாய், மிகாய் அதைக் கொடுத்தவர்களைப் பார்த்து, ''என்னுடைய தாயையும், தந்தையையும் சிறையில் அடைத்து வைத்தவர்கள் தந்த 'டை' யை நான் அணிந்து கொள்ளமாட்டேன்' என்று கூறியபோது அவனை வெளியேற்றிவிட்டார்கள். இதனால் மிகாயுக்கு ஒரு வருட படிப்பு வீணானது.

மறுவருடம், தான் ஒரு கிறிஸ்தவ கைதியினுடைய மகன் என்ற விபரத்தை மறைத்துக் கொண்டு பள்ளியில் சேர்ந்தான். சில நாட்கள் சென்றபின் வேதாகமத்திற்கு விரோதமாக கட்டுரை ஒன்று எழுத வேண்டியதாயிருந்தது. மிகாய் அந்தக் கட்டுரையில் பின்வருமாறு எழுதியிருந்தான். ''வேதாகமத்திற்கு விரோதமான வாதங்கள் எல்லாம் மிகவும் பலவீனமானவை; அதற்கு எதிரான மேற்கோள்கள் எல்லாம் சுத்தப்பொய். பேராசிரியர் உண்மையாகவே வேதாகமத்தைப் படித்திருக்கவில்லை. வேதாகமும், விஞ்ஞானமும் ஒன்றுக்கொன்று ஒத்திருக்கின்றன.''. இவ்வாறு அவன் எழுதினதற்காக மறுபடியும் அவனைப் பள்ளியைவிட்டு வெளியேற்றினர்கள். இவ்வாருக மிகாய் தன்னுடைய பள்ளிக்கூடப் படிப்பில் இரண்டு வருடங்களை இழந்தான்.

கடைசியாக, மிகாய் வேதாகமத்தைக் கற்றுக்கொள்ளுவதற்காக வேதாகம கல்லூரிக்குச் சென்ருன். அங்கு ''மார்க்ஸிஸ்டின் வேதப் போதனை''களே அவனுக்குச் சொல்லித் தரப்பட்டன. ஒவ்வொன்றும், 'கரால்மார்க்ஸின்' கம்யூனிச அடிப்படைக் கொள்கையிலேயே விளக்கிச் சொல்லப்பட்டன. மிகாய், அவ்விதமான விளக்கங்களுக்கெல்லாம் வகுப்பில் பலத்த எதிர்ப்புத் தெரிவித்தான். அப்போது மற்ற மாணவர்களும் அவனோடு சேர்ந்துகொள்ளுவார்கள். அதனுல் வரும் விளைவாக அங்கும் மிகாய் பள்ளியை விட்டு வெளியே துரத்தப்பட்டான். வேத அறிவு பெறுவதற்காகச் சென்று, அதனைப் படிக்காமலேயே பள்ளியை விட்டு வெளியேறினுன்.

மிகாயினுடைய பள்ளிப் பருவத்தில், அவனுடைய வகுப்பில் நடந்த சம்பவம் ஒன்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். பேராசிரியர், வகுப்பில் ஒரு நாள் நாத்திகத்தைப் பற்றி விரிவுரையாற்றிக் கொண்டிருந்தார். அப்போது, திடீரென்று மிகாய் எழுந்து நின்று பேராசிரியர் கூறியதை மறுத்துக் கூறி, அத்தனை இளைஞரையும் கேடான வழிக்கு

நடத்திச் செல்லும் உத்திரவாதம் முழுவதும் அவர்பேரில் தானிருக்கிறது என்று சொன்னன். வகுப்பிலிருந்த அத்தனை மாணவர்களும் அவன் பக்கம் சேர்ந்துகொண்டார்கள். இப்படி எல்லார் முன்னிலேயிலும், முதலாவது எழுந்து பேசுவதற்கு ஒருவனுக்கு நிச்சயமாக தைரியம் வேண்டும். மிகாய் பள்ளியில் படிப்பதற்காக, அவன் கிறிஸ்தவ கைதியான உம்பிராண்டினுடைய மகன் என்ற உண்மையை மறைக்க வேண்டியதாயிருந்தது. ஆனலும், அவன் யாரென்ற விபரம் தெரிய வரும்போது, வழக்கப்படியே அவன் பள்ளி முதல்வருடைய அறைக்கு வரவழைக்கப்பட்டு உடனே பள்ளிக் கூடத்தைவிட்டு வெளியேற்றப்பட்டுவிடுவான்.

மிகாய் அநேக சமயங்களில் பசியினல் வாடியிருந்திருக்கிருன். கம்யூனிஸ்டு நாடுகளில் சிறையிலடைக்கப்பட்ட கிறிஸ்தவர்களின் குடும்பங்கள் பசியின் கொடுமையினல், கிட்டத்தட்ட செத்துப் போகக்கூடிய நிலேயை அடைந்திருக்கின்றன. அந்த குடும்பங்களுக்கு உதவிசெய்வது மிகப் பெரிய குற்றமாகக் கருதப்பட்டது.

எனக்குத் தெரிந்த ஒரு குடும்பத்தினர் அடைந்த துன்பங்களேப்பற்றி இங்கு கூறுகிறேன். எங்களுடைய அந்த ரங்க சபையில் ஊழியம் செய்துவந்ததினிமித்தமாக சகோதரன் ஒருவர் சிறையிலடைக்கப்பட்டிருந்தார். அவருடைய மனேவியும், ஆறு பிள்ளேகளும் தனியே விடப்பட்டார்கள். பதினேழு, பத்தொன்பது வயதான அவருடைய இரண்டு பெண்பிள்ளேகளுக்கு யாதொரு வேலேயும் கிடைக்கவில்லே. கம்யூனிஸ்டு நாடுகளில், அரசாங்கம் ஒன்று மாத்திரமே மக்களுக்கு வேலே தருகிறது. அதுவும் 'குற்றம் சாட்டப்பட்டிருக்கும் கிறிஸ்தவ கைதி'களுடைய பிள்ளேகளுக்கு வேலே கொடுக்கிறதில்லே.

நான் இங்கு கூறுவதை ஒழுக்கநெறியில் வைத்து தீர்ப்பு செய்யாதிருங்கள். சொல்லுகிறதை மாத்திரம் அப்படியே எடுத்துக்கொள்ளுங்கள். கிறிஸ்துவுக்காக தன்னே உயிர்த் தியாகம் செய்த, அவருடைய பிள்ளேகள் இருவரும், தங்களுடைய சிறிய சகோதரர்களேயும், வியாதிப்பட்டிருந்த

தாயையும் காப்பாற்றுவதற்காக விபசாரிகளானுர்கள். அவருடைய பதினுன்கு வயதான சகோதரன் ஒருநாள் அதைப் பார்த்த போது, அவனுக்கு பைத்தியம் பிடித்து விட்டது; அவனைக் கொண்டுபோய் மனநோய் மருத்துவமனையில் சேர்த்தார்கள். சில வருடங்கள் கழித்து, அவர்களுடைய தந்தை சிறையிலிருந்து விடுதலை பெற்று வீட்டிற்கு வந்தார். வீட்டிற்கு வந்த அவருடைய ஒரே ஜெபம் 'தேவனே, திரும்பவும் என்னை சிறைச்சாலைக்கே கொண்டு செல்லும்; என்னுல் இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லையே' என்பதுதான். அவருடைய ஜெபம் கேட்கப்பட்டது. தன்னுடைய பிள்ளைகளுக்குக் கிறிஸ்துவைப்பற்றி சொல்லிக் கொடுத்தார் என்று அவர்மீது குற்றம் சாட்டி, திரும்பவும் அவரை சிறையிலடைத்தார்கள்.

ஆனுல், இப்போது அவருடைய பிள்ளைகள் அந்த தீய தொழிலில் ஈடுபட்டிருக்கவில்லை. இரகசியப்போலீசின் நிபந்தனைக்குட்பட்டபடியால், அவர்களுக்கு வேலை கிடைத்துள்ளது. இரகசியப் போலீசுக்கு விபரங்களைத் தெரிவிக்கும் அறிவிப்பாளர்களாயிருக்கிறுர்கள். அவர்கள் கிறிஸ்தவ உயிர்த்தியாகியின் பிள்ளைகளானபடியால், அவர்கள் செல்லும் வீடுகளில் மிகுந்த மரியாதையோடு வரவேற்கப்படுகின்றனர். அங்கு அவர்கள் கேள்விப்படுகிற யாவற்றையும் அரசாங்கத்துக்கு அறிவிக்கிறுர்கள்.

அவர்கள் செய்வது அருவருப்பானதென்றும், ஒழுக்கக்கேடானதென்றும் வெகு இலேசாகச் சொல்லிவிடாதே! அது முறைகேடானது என்பது உண்மைதான். ஆனுல் சுவிசேடத்துக்கு எந்தவிதமான தடையுமில்லாத நாட்டில் வசிக்கிற நீ கிறிஸ்துவுக்காக துன்பம் சகிக்கிற அப்படிப்பட்ட குடும்பங்களுக்கு உதவி செய்யாதிருக்கிறதினுல் அல்லவோ, அங்கு அந்தவிதமான பயங்கரங்கள் நிகழுகின்றன? என்று உன்னையே கேட்டுப் பார்!

# அத்தியாயம் மூன்று

சிறைச்சாலையிலே நான் பதினுன்கு வருடங்களை கழித்தேன். அந்நாட்களில் ஒரு வேத புத்தகத்தையாவது அல்லது வேறெந்த புத்தகத்தையாவது நான் பார்க்கவில்லை. எப்படி எழுதுவது என்பதைக்கூட மறந்துவிட்டேன். கடும் பசியினுலும், மிகுந்த சோர்வினுலும் பயங்கர சித்திரவதைகளினுலும், பரிசுத்த வேத வசனங்கள் எனக்கு மறந்து போய் விட்டன. எனது சிறைவாசத்தின் பதினுன்காவது வருடம் முடிந்த அன்றைய தினம், ''யாக்கோபு ராகேலுக்காக பதினுன்கு வருடம் வேலை செய்தான்; அவள் பேரில் இருந்த பிரியத்தினுலே அந்த வருடங்கள் அவனுக்குக் கொஞ்ச நாளாகத் தோன்றினது'' என்ற வேத வசனம் என்னுடைய ஞாபகத்திற்கு வந்தது.

அதற்கு பிற்பாடு அமெரிக்க மக்களின் தூண்டுதலின் பேரிலும், பொதுவாக கைதிகளை மன்னித்து விடுதலை செய்யும் அந்நாட்டு வழக்கத்தின்படியும் என்னை விடுதலை செய்தார்கள். சிறையிலிருந்து வெளியே வந்ததும், என்னுடைய மனைவியைப் பார்த்தேன் அவள் எனக்காக அதிக உண்மையோடு பதினுன்கு வருடங்கள் காத்திருந்தாள்.

என்னுடைய விடுதலைக்குப் பின், மிகுந்த வறுமையிலே தான் எங்களுடைய வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டியதாயிற்று. ஏனென்றால், கம்யூனிஸ்டு நாடுகளில் ஒரு மனிதன் கைது செய்யப்பட்டால், அவனிடத்தில் இருக்கும் பொருட்கள் அனைத்தையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளும்.

சிறையிலிருந்து விடுதலை செய்யப்படும் கிறிஸ்தவப் பாதிரிமார், போதகர்கள் ஆகிய ஒவ்வொருவருக்கும், சின்னஞ்சிறிய சபைகள் அவர்களுடைய பொறுப்பில் கொடுக்கப்படும். அதன் பிரகாரமாக, 'ஓர்சோவா' என்னும் பட்டணத்திலுள்ள சபையின் பொறுப்பு எனக்குக் கொடுக்கப்பட்டது. அங்கிருந்த அரசாங்க அதிகாரி சபையை என்னிடம் ஒப்படைக்கையில். அதில் முப்பத்தைந்து அங்கத்

தினர்கள் இருக்கிறார்கள் என்றும், அதனுடைய எண்ணிக்கை ஒருநாளும் முப்பத்தாறு ஆகக் கூடாதென்றும் கடுமையாக எச்சரித்தார். மேலும், நான் அங்கு அரசாங்கத்தின் பிரதிநிதியாக இருந்து, சபையிலுள்ள அங்கத்தினர் ஒவ்வொருவரைப் பற்றியும் இரகசியப் போலீசுக்குத் தகவல் கொடுக்க வேண்டுமென்றும், வாலிபர்களை சபையில் சேர்த்துக் கொள்ளக் கூடாதென்றும் சொன்னார். இவ்விதமாக, கம்யூனிஸ்டு அரசாங்கங்கள் கிறிஸ்தவ சபைகளைத் தங்களது அதிகாரத்துக்குக் கீழ்ப்படுத்தி, அவற்றை கருவிகளாக பயன்படுத்தி வருகின்றன.

நான் விடுதலை செய்யப்பட்டு, வெளிப்படையாக ஊழியம் செய்வது மக்களுக்குத் தெரிந்தால், அநேகர் என்னுடைய பிரசங்கத்தைக் கேட்கிறதற்கு வருவார்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் அதன் மூலமாக ஏதேனும் துன்பம் வரக்கூடாதென்று கருதி, அரசாங்கம் எனக்குக் கொடுத்த சபையில் பிரசங்கத்தை நிகழ்த்தாமல் திரும்பவும் அந்தரங்க சபையின் ஊழியத்தில் ஈடுபட்டு, அதன் மகிழ்ச்சியையும் ஆபத்துக்களையும் பகிர்ந்து வந்தேன். நான் சிறையிலிருந்த காலங்களில், தேவன் அதிசயமான முறையில் கிரியை நடப்பித்து வந்தார். அந்தரங்க சபையானது மறக்கப்பட்டுவிடாமல், அதற்கு வெளிநாடுகளிலுள்ள கிறிஸ்தவர்கள் உதவிகளை அனுப்பியும் ஜெபித்தும் வந்தார்கள்.

ஒரு நாள் மாலை, ருமேனியா தலைநகரப்பட்டணத்திலுள்ள ஒரு சகோதரனுடைய வீட்டில் படுத்து ஓய்வெடுத்துக்கொண்டிருந்தேன். அப்போது அந்த சகோதரன் வந்து என்னை எழுப்பி, ''வெளிநாட்டிலிருந்து சகோதரர்கள் வந்திருக்கிறார்கள்'' என்றார். மேற்கத்திய தேசங்களில், எங்களை மறந்து போகாமலும், கைவிடாமலுமிருந்த கர்த்தருடையபிள்ளைகள் இருந்தார்கள். உயர்ந்த நிலையிலுள்ள கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ இரத்த சாட்சிகளின் குடும்பத்தினருக்கு நிவாரணமளிப்பதிலும், கிறிஸ்தவ இலக்கியங்களையும், உதவியையும் கடத்துவதிலும் இரகசிய திட்டத்தைத் தயாரித்து நிறைவேற்றி வந்தார்கள். இந்த வேலையைச் செய்யும்படி

யாக வந்த ஆறு சகோதரர்களையே அடுத்த அறையில் கண்டேன்.

அந்த சகோதரர்கள் என்னோடு அநேக காரியங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு, நீண்ட நேரங் கழித்து, பதினான்கு வருடங்கள் சிறைச்சாலையிலிருந்த ஒருவரைத் தாங்கள் பார்க்க விரும்புவதாக என்னிடம் கூறினார்கள். அதற்கு, அவர்கள் பார்க்க வந்திருக்கும் மனிதன் நான்தான் என்று கூறினேன். அந்த சகோதரர்கள், ''சோகமான நிலையிலிருக்கும் ஒருவரைத்தான் நாங்கள் எதிர்பார்த்தோம். நீங்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு இருக்கிறீர்களே; ஆதலால் நாங்கள் பார்க்க வந்திருப்பவர் நீங்களாக இருக்க முடியாது'' என்று கூறினார்கள். அதற்கு நான் தான் சிறையிலடைக்கப்பட்டிருந்தவனென்று உறுதியளித்து என்னுடைய மகிழ்ச்சியானது அவர்கள் என்னைப் பார்க்க வந்திருக்கிறதையும், அந்தரங்க சபையானது மறக்கப்படவில்லை யென்பதையும் அறிந்ததினால் உண்டானது என்று கூறி மகிழ்ந்தேன்.

அந்தரங்க சபைக்கு கொஞ்சங் கொஞ்சமாகத் தொடர்ச்சியான உதவி வர ஆரம்பித்தது. வேதாகமங்களையும், கிறிஸ்தவ புத்தகங்களையும், மற்றும் கிறிஸ்தவ உயிர்த் தியாகிகளின் குடும்பங்களுக்கு வேண்டிய உதவிகளையும், இரகசியமான முறையில் பெற்று வந்தோம். அவ்விதமான உதவி எங்களுக்குக் கிடைத்ததினால், அந்தரங்க சபை நன்றாக வேலை செய்தது. வெளியேயிருந்த சகோதரர்கள் தேவனுடைய வசனத்தைக் கொடுத்தது மாத்திரமில்லாமல், எங்களை நேசித்தும், எங்களிடத்திற்கு ஆறுதலான வார்த்தைகளைக் கொண்டும் வந்தார்கள்.

எங்களுடைய சிறைவாசத்தின்போது நடந்த மூளைச் சலவையில் :—

''உன்னை ஒருவரும் இனி நேசிக்கமாட்டார்கள்''
''உன்னை ஒருவரும் இனி நேசிக்கமாட்டார்கள்''
''உன்னை ஒருவரும் இனி நேசிக்கமாட்டார்கள்''

என்ற வார்த்தைகளையே கேட்டிருக்கிறோம். ஆனால் இப்போது, வெளிநாட்டிலுள்ள கிறிஸ்தவர்கள் தங்களுடைய வாழ்க்கையையும் பாராமல், தங்களுடைய அன்பை எங்களுக்குக் காண்பித்ததை நாங்கள் கண்கூடாகக் கண்டோம்.

எங்களிடத்திலிருந்து ஆலோசனைகளைப் பெற்று, அவர்களும் தங்களுடைய இரகசிய வேலை முறைகளில் முன்னேறினார்கள். இரகசியப் போலீசாரால் சூழப்பட்டிருக்கும் வீடுகளுக்குள் இரகசியமாக நுழைந்தார்கள். போலீசாருக்கு அவர்கள் நுழைந்த காரியம் தெரியாது. வேதாகமத்தின் ஆழம் அறியாத ஒரு விசுவாசி இவ்விதமாக இரகசியமான முறையில் கடத்தப்படும் வேதாகமங்களின் மதிப்பை அறிந்து கொள்ளமாட்டான்.

வெளிநாடுகளில் எங்களுக்காக ஜெபித்து வந்த விசுவாசிகள் எங்களுக்கு அனுப்பி வந்த பொருளுதவியினாலன்றி, நானும் என் குடும்பமும் உயிர் பிழைத்திருக்க முடியாது. அதேபோல கம்யூனிஸ்டு நாடுகளிலுள்ள மற்ற அந்தரங்க ஊழியர்களுக்கும் இரத்த சாட்சிகளுக்கும் அப்படிப்பட்ட உதவிகள் கிடைத்தன. ''பிரித்தானியாவிலுள்ள ஐரோப்பிய கிறிஸ்தவ ஊழிய ஸ்தாபனம்'' (European Christian Mission of Great Britain) என்ற ஸ்தாபனத்தார் கொடுத்த பண உதவியையும், இன்னும் அதற்கு மேலாக அளித்து வந்த, ஆவிக்குரிய உதவிகளையும் பற்றி நான் என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து சொல்லமுடியும். அந்த சகோதரர்கள் எங்களுக்கு, தேவனால் அனுப்பப்பட்ட தேவ தூதர்களைப்போல காணப்பட்டார்கள்.

அந்தரங்க சபையின் புதுப்பிக்கப்பட்ட ஊழியத்தினால், இன்னும் ஒருமுறை நான் கைது செய்யப்படக் கூடிய ஆபத்து ஒன்று வந்தது. ஆனால் இந்த நேரத்தில், 'யூதர்களுக்கான நார்வேஜியனின் ஊழிய ஸ்தாபனம்' (Norwegian Mission to the Jews). 'எபிரெய கிறிஸ்தவ தோழமைக் கழகம்' (Hebrew Christian Alliance) ஆகிய இரண்டு ஸ்தாபனங்களும் என்னை விடுதலை செய்யும் கிரய

மான 2,500 பவுன்களை என்னை மீட்கும் கிரயமாகக் கொடுத்தார்கள். அதனால் நான் ருமேனியாவை விட்டு வெளியேற முடிந்தது.

**நான் ஏன் கம்யூனிஸ்டு ருமேனியாவை விட்டு வெளியேறினேன் ?**

ஆபத்துக்கள் அதிகமாக இருந்த போதிலும், ருமேனியாவை விட்டு நான் வெளியேறி இருக்கமாட்டேன். ஆனால், அந்தரங்க சபையின் தலைவர்கள் என்னிடம் வந்து, கிடைத்திருக்கும் இந்தத் தருணத்தைப் பயன் படுத்திக் கொண்டு அதன் மூலமாக சுவிசேடத்துக்குத் தடையில்லாத உலகத்தில் போய், அந்தரங்க சபையின் 'குரலாக' நான் அங்கேயிருக்கும்படி சொல்லி என்னை அனுப்பி வைத்தார்கள். அந்தரங்க சபையின் தலைவர்கள் தாங்கள் கமியூனிஸ்டுகாரர்களால் அடைந்துவரும் இன்னல்களையும், தங்கள் தேவைகளையும் குறித்து உங்களிடம் கூறுமாறு என்னை விடுத்தார்கள்.

நான் அவர்களை விட்டுவந்த போதிலும், என்னுடைய இதயம் இன்னும் அவர்களோடுதான் இருக்கிறது. அந்தரங்க சபையினுடைய பாடுகளையும், அதன் வீரம் செறிந்த செயல்களையும் குறித்து நீங்கள் யாவரும் அறிய வேண்டுமென்ற அவசியத்தை நான் உணர்ந்ததினாலேயே நான் ருமேனியாவை விட்டு வெளியே வந்தேன். இதுதான் என்னுடைய ஊழியம்

ருமேனியாவை விட்டு நான் வருவதற்கு முன் இரகசியப் போலீசார் என்னை இருமுறை அழைத்தார்கள். என்னை விடுதலை செய்வதற்கான கிரயத்தைத் தாங்கள் வாங்கிக் கொண்டதை என்னிடம் கூறினார்கள். கம்யூனிசம் ருமேனியாவிற்கு வந்ததினால் ஏற்பட்ட பொருளாதாரப் பற்றுக் குறைவின் காரணமாக அந்த நாடு தன் சொந்த மக்களைப் பணத்திற்காக விற்று வருகிறது.

மேலும் அவர்கள் என்னைப் பார்த்து, ''மேற்கு தேசத்திற்குப் போகிறாய். கிறிஸ்துவைப்பற்றி எவ்வளவு வேண்டு

மானுலும் பிரசங்கம் செய். ஆனல் எங்களுக்கு விரோதமாக ஒன்றும் சொல்லக்கூடாது. அப்படி நீ சொல்லுவாயானல், உனக்கு என்ன செய்வோம் என்பதை இப்பொழுதே உன்னிடம் கூறுகிறேம். முதலாவது 500 பவுன்கள் செலவு செய்து ஒரு கொள்ளைக் கூட்டத்தை உருவாக்கி உன்னை ஒழித்துக்கட்டி விடுவோம். அல்லது உன்னை நாங்கள் நாடு கடத்தி விடுவோம்'' என்ருர்கள்.

பாரம்பரிய மார்க்க கிறிஸ்தவப் பாதிரியாரான ஒருவரை ஆஸ்திரியா நாட்டில் நாடு கடத்தி ருமேனியாவுக்குக் கொண்டு வந்தார்கள். அவரும் நானும் சிறைச்சாலையில் ஒரே அறையில் இருந்திருக்கிறேம். அவருடைய கைகளிலும், கால்களிலுமுள்ள விரல் நகங்களைப் பிடுங்கி விட்டார்கள். பெர்லினிலிருந்து நாடு கடத்தப்பட்டவர்களோடும் நான் இருந்திருக்கிறேன். சமீபத்தில், ருமேனிய மக்கள் இத்தாலிக்கும், பாரீசுக்கும் நாடு கடத்தப்பட்டுள்ளார்கள்.

மேலும் தொடர்ந்து அவர்கள் என்னிடம், ''ஒரு பெண்ணேடு நீ தொடர்பு கொண்டிருப்பதாகவோ, அல்லது நீ ஒரு பெரிய திருடன் என்றே இப்படி உன்னுடைய வாலிபத்தைப் பாதிக்கக்கூடிய ஒரு கதையைக் கட்டிவிட்டு உன் பெயரை நாங்கள் கெடுத்து விடுவோம். மேற்கத்திய மக்கள், அதிலும் அமெரிக்கர்கள், இலேசிலே ஏமாந்து விடுவார்கள்'' என்று சொல்லி என்னைப் பயமுறுத்தினர்கள். இவ்வாறு என்னைப் பயமுறுத்திய பின்னரே அவர்கள் என்னை வெளியே போக அனுமதித்தனர்.

அவர்கள் எங்களுக்கு அளித்த மூளைச்சலவையில் மிகுதியான நம்பிக்கை வைத்திருந்தார்கள். மேற்கு நாடுகளில், என்னைப்போல மூளைச்சலவை செய்யப்பட்டவர்கள் அநேகர் இருக்கிருர்கள். அவர்களில் சிலர், கம்யூனிஸ்டுகாரர்கள் செய்த சித்திரவதைகளுக்குப் பின்னல், கம்யூனிசத்தைப் புகழ ஆரம்பித்திருக்கிருர்கள். ஆகையினல், அந்த சிலரைப் போல நானும் கிறிஸ்துவைக் குறித்து அறிவியாமல் அமைதியாக இருந்து விடுவேன் என்று அவர்கள் நினைத்தார்கள்.

இப்படியாக 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் நானும் என்னுடைய குடும்பமும் ருமேனியாவை விட்டு வெளியேறினோம். ருமேனியாவை விட்டு வெளியேறுவதற்கு முன், கடைசியாக முதன் முதலில் என்னைக் கைது செய்து, சித்திரவதை செய்யும்படிக்கு ஆணைபிறப்பித்த இராணுவ அதிகாரியின் கல்லறைக்குச் சென்று அதன் மீது அழகிய மலர் ஒன்றை வைத்தேன். மலரை நான் வைத்த பொழுது, நான் பெற்றிருக்கிற கிறிஸ்துவின் மகிழ்ச்சியை, ஆவிக்குரிய நிலைமையில் ஒன்றுமில்லாமல் வெறுமையாய் இருக்கிற கம்யூனிஸ்டுகளின் இதயத்திற்குள்ளும் கொண்டு வரும் பணிக்கு என்னை முற்றிலுமாக அர்ப்பணித்தேன்.

கம்யூனிச கொள்கைகளை நான் வெறுக்கிறேன். ஆனால் அந்த மனிதரை நான் நேசிக்கிறேன் பாவத்தை நான் வெறுக்கிறேன். ஆனால் பாவிகளை நான் நேசிக்கிறேன். அவ்விதமாகவே கம்யூனிஸ்டுகளை நான் என் முழு இதயத்தோடு நேசிக்கிறேன். கம்யூனிஸ்டுகள் கிறிஸ்துவை நேசிக்கிறவர்களைக் கொல்ல முடியும். ஆனால் தங்களைக் கொன்ற கம்யூனிஸ்டுகளின் மீது கிறிஸ்துவை நேசிக்கிறவர்களுக்கு இருக்கும் அன்பை அவர்களால் ஒரு போதும் கொல்ல முடியாது. கம்யூனிஸ்டுகளின் மீதாவது, என்னைச் சித்திரவதை செய்தவர்களின் மீதாவது எனக்குக் கொஞ்சமேனும் கசப்போ, வெறுப்போ கிடையாது.

## அத்தியாயம் நான்கு

யூதருக்கு ஒரு கட்டுக்கதையுண்டு. அவர்களுடைய முற்பிதாக்கள் எகிப்திலிருந்து மீட்கப்பட்டு, எகிப்தியர் செங்கடலில் அமிழ்ந்து போனபோது இஸ்ரவேலர் வெற்றியின் பாட்டை பாடினார்களே அதில் தேவ தூதர்களும் கலந்து கொண்டார்களாம், அதைக் கண்ட தேவன் தம் தூதரைப் பார்த்து, ''யூதர்கள் மனிதர்களாயிருப்பதால் தங்கள் விடுதலையை குறித்து மகிழ்ச்சியாக கொண்டாடலாம் ஆனால் உங்களிடமிருந்து பெரிய காரியத்தை எதிர்பார்த்திருந்தேனே.. எகிப்தியரும் என் சிருஷ்டிகளல்லவா? நான் அவர்களையும் நேசிக்கிறதில்லையா? அவர்களுக்கு நேரிட்ட துக்ககரமான பயங்கர முடிவைப் பற்றிய என்னுடைய துக்கத்தை உங்களால் ஏன் உணரக் கூடாமற்போயிற்று?'' என்று கேட்டாராம்.

யோசுவா எரிகோவின் சமீபத்திலிருந்த போது அவன் தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து தனக்கு எதிராக தன் கையில் உருவின பட்டயத்தை வைத்துக் கொண்டு நின்ற ஒருவரைக் கண்டான். உடனே அவரிடம் போய் அவரைப் பார்த்து, ''நீர் எங்களைச் சேர்ந்தவரோ, எங்கள் சத்துருக்களைச்சேர்ந்தவரோ?'' என்று கேட்டான் (யோசுவா 5:13). யோசுவாவை சந்தித்தவர் ஒரு மனிதனாக இருந்திருப்பாரென்றால், அவருடைய பதில் ''நான் உங்களைச் சேர்ந்தவன், அல்லது உங்கள் சத்துருக்களைச் சேர்ந்தவன் அல்லது நான் உங்கள் இருவருக்கும் நடுவிலுள்ளவன்'' என்றுதான் இருந்திருக்கும். ஆனால் யோவா சந்தித்தவரோ மனிதனுக்கு அப்பாற்பட்ட இன்னொரு நிலைமையில் உள்ளவராக இருந்ததால், ''நீர் இஸ்ரவேலரைச் சேர்ந்தவரா, அல்லது அவர்களுக்கு எதிரானவ்ரா?'' என்ற கேள்வி அவரிடம் கேட்கப்பட்டபொழுது, அவர் கொடுத்த உத்திரவு என்ன? ''இல்லை'' என்பதே. அந்த ''இல்லை'' என்றால் அர்த்தம் என்ன? ஒருவர் பக்கம் ஒருவரும், ஒருவருக்கு விரோதமாக ஒருவரும் இல்லாததும், எல்லோரும் எல்லாவற்றையும் புரிந்து கொள்ளக்கூடியதும், எல்லாவற்றையும் பரிதாபத்

தோடும், மனதுருகதலோடும் கண்டு அனல் போன்ற நேசத்தைக் காண்பிக்கக் கூடியதுமான ஓர் இடத்தில் இருந்து அவர் வந்தவராயிருந்தார்.

மனுஷீகத்துக்கு ஒரு குறிப்பிட்ட வரம்புண்டு. இந்த வரம்புக்குட்பட்டவர்களாய் கம்யூனிசத்துக்கு விரோதமாக நாம் போராட வேண்டியிருக்கிறது. இந்த நிலைமையில் பயங்கர கொடூரமான கொள்கைகளை உடைய இந்த கம்யூனிசத்தை ஆதரிக்கிற கம்யூனிஸ்டுகளுக்கு விரோத மாகவும் நாம் போராட வேண்டியிருக்கிறது.

ஆனல் விசுவாசிகள் சாதாரண மனிதரைக் காட்டிலும் மேலானவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய பிள்ளைகளும், தெய்வ சுபாவத்துக்கு பங்குள்ளவர்களுமான வர்கள்.

ஆகவே கம்யூனிச சிறைச்சாலைகளில் நான் அனுபவித்த சித்திரவதைகள் என்னை கம்யூனிஸ்டுகளை வெறுக்கும்படி செய்யவில்லை. அவர்களும் தேவனுடைய சிருஷ்டிகளாயி ருப்பதால், நான் எப்படி அவர்களை வெறுக்க முடியும்? நான் அவர்களுடைய சிநேகிதனாகவும் இருக்க முடியாது, சிநேதத்துவம் என்றால் இணைக்கப்பட்ட ஓர் ஆத்துமா என்று தான் அர்த்தம். நான் கம்யூனிஸ்டுகளுடன் ஒரே ஆத்துமா வாக இல்லை. அவர்கள் தேவனை வெறுக்கிறார்கள். நான் தேவனில் அன்பு கூருகிறேன். என்னைப் பார்த்து யாராவது, ''நீர் கம்யூனிஸ்டுகளை சேர்ந்தவரா, அல்லது அவர்களுக்கு எதிரானவரா?'' என்று கேட்டால், என் பதில் பொதுவானதாகத்தான் இருக்கும்.

கம்யூனிசமானது மனித வர்க்கத்திற்கும் மாபெரும் கேடாயிருக்கிறது. நான் அதை முழுவதுமாக எதிர்க்கிறேன். அது மடங்கடிக்கப்படும் வரைக்கும் நான் என் போராட்டத்தை நிறுத்தப்போவதில்லை. ஆனல் ஆவிக்குரிய பிரகாரமாக நான் இயேசுவோடு கூட உன்னதங்களில் உட்கார்ந்திருக்கிறேன். கம்யூனிஸ்டுகளின் குற்றங்கள் எவ்வளவு கடுமையானவைகளாக இருந்தபோதிலும் அவர்கள் புரிந்து

கொள்ளப்பட்டு அன்பு கூரப்படுகிற இடமும், மனித வாழ்க்கையின் குறிக்கோளாகிய கிறிஸ்துவை போலாகக் கூடிய நிலைமைக்கு வர ஒவ்வொருவருக்கும் உதவுகிற தேவதூதர்கள் தாபரிக்கிற இடமாகிய அந்த 'இல்லை' என்று சொல்லப்படும் இடத்தில் நான் உட்கார்ந்திருக்கிறவனாயிருக்கிறேன். ஆகவே என்னுடைய குறிக்கோள் கம்யூனிஸ்டுகளுக்கு சுவிசேடத்தைப் பரப்புவதும், நித்திய ஜீவனைப் பற்றிய நல்ல செய்தியை அவர்களுக்கு அளிப்பதுமேயாகும்.

என்னுடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கம்யூனிஸ்டுகளில் அன்பு கூருகிறவராயிருக்கிறார். ஒவ்வொரு மனிதனையும்நேசிக்கிறவராகவும், நீதியுள்ள தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் விட்டுவிட்டு காணமற்போய் அலைந்து திரிகிற ஓர் ஆட்டைத் தேடிப் போனவராகவும், தம்மை பற்றி அவர் கூறியிருக்கிறார். அவருடைய அப்போஸ்தலரும், கிறிஸ்தவ விசுவாசத்தின் மாபெரும் போதகர்களும் அவருடைய நாமத்திலுள்ள இந்த சர்வலோக அன்பை கற்றுக் கொடுத்திருக்கிறார்கள்.

மெக்காரி என்ற ஒரு தேவனுடைய ஊழியன், "ஒரு மனிதன், தான் எல்லா மனிதர்களிலும் ஊக்கமான அன்புடையவனாக இருப்பதாகவும், ஆனால் ஒரு மனிதனில் மாத்திரம் தன்னால் அன்பு கூர முடியவில்லை என்றும் கூறுவானானால் அவன் ஒரு விசுவாசியாக இருக்கமுடியாது. ஏனெனில், அவனுடைய அன்பு எல்லோரையும் அணைத்துக் கொள்ளும் அன்பாக இல்லை" என்று குறிப்பிட்டுள்ளார். "மனித வர்க்கத்தில் எல்லோரும் பாவமற்றவர்களாயிருந்து ஒரே ஒரு மனிதன் மாத்திரம் பாவியாக இருப்பானென்றாலும் அந்த ஒரு மனிதனுக்காக அதே சிலுவையை சகிக்க கிறிஸ்து வந்திருப்பார். ஏனெனில், அவர் ஒவ்வொரு தனிப்பட்ட நபரிலும் அன்பு கூருகிறவராக இருக்கிறார்" என்று அகஸ்டின் போதிக்கிறார்.

கிறிஸ்தவ போதனை மிகவும் தெளிவாயுள்ளது. கம்யூனிஸ்டுகள் மனிதர்களே, கிறிஸ்து அவர்களையும் நேசிக்கிறார். கிறிஸ்துவின் சிந்தையுள்ளவன் எவனும் அவ்வித

மாகவே அன்பு கூருகிறவனுயிருப்பான். நாம் பாவத்தை வெறுத்தாலும், பாவியை நேசிக்கிறவர்களாயிருக்கிறோம். நாம் கம்யூனிஸ்டுகளுக்கு காட்டும் அன்பினுலே கிறிஸ்து அவர்கள் மேல் எவ்வளவு அன்புள்ளவராயிருக்கிறார் என்று அறிகிறோம்.

50 பவுண்டு நிறையுள்ள சங்கிலிகள் தங்கள் கால்களில் இணைக்கப்பட்டவர்களாய், பழுக்கக் காய்ச்சப்பட்ட இரும்புக் கம்பிகளால் சித்திரவதை செய்யப்பட்டு; தொண்டை நிரம்ப உப்பு திணிக்கப்பட்டவர்களாய், தண்ணீர் கொடுக்கப்படாமல், பட்டினி போடப்பட்டு; சவுக்கால் அடிக்கப்பட்டு குளிரால் நடுங்கிக் கொண்டிருக்கும் கிறிஸ்தவர்கள், கம்யூனிஸ்டுகளுக்காக ஊக்கமாக ஜெபிக்கிறதை கம்யூனிச சிறைச்சாலைகளில் நான் கண்டிருக்கிறேன். இது மனிதனுக்கு விளங்காத தொன்றாகும். இச்சந்தர்ப்பங்களில் எங்களிருதயங்களில் பலமாய் கிரியை செய்யும் சக்தி ஒன்றுண்டு. அது எங்கள் இதயங்களில் ஊற்றப்பட்டிருக்கும் கிறிஸ்துவின் அன்பே.

எங்களை சித்திரவதை செய்த அதே கம்யூனிஸ்டுகளும் கூட சிறைத்தண்டனை பெற்று சிறைச்சாலைக்கு வருவதுண்டு. கம்யூனிச ஆதிக்கத்தில் கம்யூனிஸ்டுகளும், கம்யூனிஸ்டு தலைவர்களும்கூட தங்கள் எதிரிகளைப் போலவே அடிக்கடி சிறையில் அடைக்கப்படுகிற சந்தர்ப்பங்களும் உண்டு. இப்படியாக சித்திரவதை செய்யப்பட்டவனும், சித்திரவதை செய்தவனும் ஒரே இருட்டறையில் அடைக்கப்படும் சந்தர்ப்பங்களிலும், விசுவாசிகள் அல்லாதோர் தங்களை முந்திக் கொடுமைப் படுத்தின அவனை வெறுத்து உதைக்கும் போது, விசுவாசிகள் அவனுக்குப்பாதுகாப்புத்தந்து, அவனுக்காக உதைப்பட மாத்திரமல்ல, அவனிமித்தம் எந்த குற்றச்சாட்டுக்கும் உள்ளாவதற்கும், தங்கள் உயிரையும் பாராமல் துணிந்து நின்றார்கள். தங்களை சித்திரவதை செய்தவனும், இப்பொழுது தங்களோடே சிறைச்சாலையில் அடிக்கப்பட்டு வியாதியாயிருந்தவனுமான ஒரு கம்யூனிஸ்டுக்காக தங்களுடைய கடைசி துண்டு ரொட்டியையும் கொடுத்த விசு

வாசிகளை நான் சிறையில் கண்டிருக்கிறேன். (எங்களுக்கு அந்நாட்களில்ஒருவனுக்கு வாரத்துக்கு ஒரு துண்டு ரொட்டித்தான் கொடுத்தார்கள்.)

''கம்யூனிஸ்டுகள் நம்முடைய நாட்டிலே தோற்கடிக்கப்படுவார்களானால், தெருக்களிலே போய் தன்னுடைய உயிரையும் பாராமல் தன்னை இதுவரை கொடுமையில் ஆண்டு வந்த கம்யூனிஸ்டுகளின் மேல் நீதி செலுத்த வீரிட்டெழும் மக்களிடமிருந்து கம்யூனிஸ்டுகளுக்கு பாது காப்பு அளிப்பது ஒவ்வொரு கிறிஸ்தவனின் பரிசுத்தமான கடமையாகும்'' என்பதே சிறைச்சாலையிலே மரித்த ருமேனியாவின் முன்னாள் பிரதம மந்திரியாகிய இயுலியு மனிய்யு என்ற விசுவாசியின் கடைசி வார்த்தைகளாகும்.

நான் மனந்திரும்பின புதிதில் இனி வாழ முடியாதென்று உணர்ந்தேன். தெருவில் நடந்து கொண்டிருக்கும் போது நான் பார்க்கும் ஒவ்வொரு ஆணுக்காகவும், பெண்ணுக்காகவும் நான் சரீரத்தில் உணர்ந்த வேதனை அதிகம். அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்களா? இல்லையா என்ற கேள்வி என் இதயத்தில் கத்தியைப் போல பாய்ந்தது. சபையிலுள்ள யாராவது ஒருவர் பாவத்தில் விழுந்தாரென்று கேள்விப்பட்டால் மணிக்கணக்கில் நான் அழுததுண்டு. ஆத்தும இரட்சிப்பை பற்றிய தாகம் என் இதயத்தில் ஆழமாகத் தங்கியிருந்தது. கம்யூனிஸ்டுகள் அதற்கு விலக்கானவர்களல்லவே !

தனிமையாய் சிறையிலடைக்கப்பட்டிருக்கும் போது முன் போல ஜெபிக்க முடியாது. எங்களுடைய பசியையும் விவரிக்க இயலாது. எலும்புக் கூட்டைப் போல, அவ்வளவு பெலவீனமாக இருந்தோம். கர்த்தர் தம் சீடருக்கு சொல்லிக் கொடுத்திருந்த ஜெபம் கூட எங்களுக்கு நீண்டதாகத் தோன்றியது. அதை முழுவதுமாக உணர்ந்து சொல்லக் கூடிய திராணி கூட எங்களுக்கு இல்லாமற் போயிற்று. அந்நிலையில் நான் அடிக்கடி கர்த்தரை நோக்கி ஏறெடுத்த ஜெபம் ''இயேசுவே நான் உம்மை நேசிக்கிறேன்'' என்பதே.

அப்படியிருக்கும் போது ஒரு மகிமையான நாளிலே என் நேச இயேசுவிடமிருந்து நான் பதிலைப் பெற்றேன். "நீ என்னை நேசிக்கிறாயா? நான் உன்னை நேசிக்கிறேன் என்று இப்பொழுது உனக்குக் காண்பிப்பேன்" என்று அவர் கூறினார். உடனே தானே எனக்குள்ளே ஒரு பெரிய தீபத்தின் ஒளி கொழுந்து விட்டு எரிவது போன்ற உணர்ச்சி உண்டானது. எம்மாவூருக்குப் போன சீடர்கள் தங்கள் இதயம் கொழுந்து விட்டு எரிந்ததை உணர்ந்தார்கள். அவ்வித அனுபவத்தை நானும் பெற்றேன். எல்லாருக்காகவும் சிலுவையில் தம்முடைய ஜீவனைக் கொடுத்தவருடைய அன்பை அறிந்தேன். கம்யூனிஸ்டுகளுடைய பாவங்கள் எவ்வளவு கடுமையானவைகளாக இருந்தாலும், அந்த அன்பு அவர்களை விலக்கி வைக்காது.

கம்யூனிஸ்டுகள் பயங்கரங்களை நடப்பித்தவர்களாகவும், நடப்பிக்கிறவர்களாகவும் இருந்தாலும், "திரளான தண்ணீர்கள் தேசத்தை அவிக்கமாட்டாது. வெள்ளங்களும் அதைத் தணிக்க மாட்டாது; நேசம் மரணத்தை போல் வலிது; நேச வைராக்கியம் பாதாளத்தைப் போல் கொடியதாயிருக்கிறது." பாதாளமானது ஏழை, பணக்காரன், பரிசுத்தவான், குற்றவாளி, வாலிபர், விருதாப்பியர் என்று பாராமல் எந்த இனமானாலும், மக்களானாலும், தேசமானாலும் எல்லாரையும் சேர்த்துக் கொள்கிறது போல, அன்பு எல்லாரையும் அணைத்துக் கொள்கிறது. மாம்சத்தில் வெளிப்பட்ட அன்பாகிய கிறிஸ்து, கம்யூனிஸ்டுகளையும் மேற்கொள்ளும் வரை ஓய்ந்து போகமாட்டார்.

ஒரு தேவ ஊழியன் என்னுடைய இருட்டறைக்குள் தூக்கி எறியப்பட்டார். அவருக்கு பாதி செவிடு. அவருடைய முகத்திலிருந்தும், சரீரத்திலிருந்தும் இரத்தம் பீரிட்டு வந்தது. அவர் பயரங்கமாக அடிக்கப்பட்டிருந்தார். நாங்கள் அவரைக் கழுவினோம். சில சிறைக் கைதிகள் கம்யூனிஸ்டுகளை சபித்தார்கள். ஆனால், அவரோ தன்னுடைய சரீர வேதனையினால் முனங்கிக் கொண்டே, "தயவு செய்து அவர்களை சபிக்காதேயுங்கள். அமைதியாயிருங்கள், அவர்

களுக்காக நான் ஜெபிக்கிறேன்'' என்று அன்பு ததும்பக் கூறினர்.

**சிறையில் நாங்கள் எவ்விதம் மகிழ்ச்சியாமாக இருக்க முடியும்?**

நான் என்னுடைய 14 வருட சிறைவாசத்தைப் பின்னேக்கிப் பார்க்கும் போது, அது மிகவும் மகிழ்ச்சியான காலமாகவே காணப்படுகிறது. மற்ற சிறைக்கைதிகளும், சிறைச் சேவகரும் கூட எவ்விதமாக விசுவாசிகள் மிகவும் பயங்கரமான சந்தர்ப்பங்களிலும் மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது என்று அடிக்கடி அதிசயித்ததுண்டு. நாங்கள் பாட்டுப் பாடினதற்காக அடிக்கப்பட்டாலும், எங்களைப் பாடுவதிலிருந்து ஒருவரும் தடைசெய்ய முடியாமலிருந்தது. இனிமையாய் பாடும் குயில், தன்னுடைய அழகியபாட்டு முடிந்தவுடன் தான் கொல்லப்படப் போகிறதை அறிந்தாலும் கூட, அது பாடத்தான் செய்யும். சிறையிலே விசுவாசிகள் மகிழ்ச்சியினல் குதித்தாடினர்கள். அவ்வளவு பயங்கர சந்தர்ப்பங்களிலும் அவர்களால் மகிழ்ச்சியாயிருக்க முடிந்தது.

நான் சிறையிலிருந்த போது அடிக்கடி இயேசு தம்முடைய சீஷருக்கு சொன்ன, ''நீங்கள் காண்கிறவைகளைக் காணும் கண்கள் பாக்கியமுள்ளவைகள்'' என்ற வார்த்தைகளை தியானித்ததுண்டு. பலஸ்தீன தேசம் முழுவதும் சுற்றித்திரிந்து பயங்கரமான காரியங்களை கண்டவர்களாகவே அவருடைய சீடர்கள் திரும்பி வந்தார்கள். பலஸ்தீன ஓர் ஒடுக்கப்பட்ட தேசம். கொடுமையுள்ளோரின் கையில் பயங்கர வேதனைகளை அனுபவித்து வந்த மக்கள் அங்கிருந்தார்கள். வியாதி, கொள்ளை நோய், பசி, துக்கம் முதலியவைகளையும் சீடர்கள் சந்தித்தனர். தங்கள் பெற்றோரும், மனைவிகளும் கதறி அழ சிறைச்சாலைக்கு இழுத்துக் கொண்டு போகப்படும் தேசாபிமானிகளின் வீடுகளிலும் சீடர்கள் பிரவேசித்ததுண்டு. இப்படியாக இந்த உலகம் மகிழ்ச்சி மனதோடு பார்க்கத்தகுந்த இடமாயில்லை.

ஆனாலும் கூட இயேசு, "நீங்கள் காண்கிறவைகளைக் காணும் கண்கள் பாக்கியமுள்ளவைகள்" என்றார். ஏனெனில் அவர்கள் பாடுகளை மாத்திரம் காணவில்லை. எல்லோருடைய இரட்சகரையும், கடைசி நன்மையை சுதந்தரித்தவரையும், மனித வர்க்கம் அடையும் அந்த இலக்கையும் அவர்கள் பார்த்திருந்தார்கள். அருவருப்பான புழுக்களாகிய இலைகளில் செல்லும் பச்சை புழுக்கள் தாங்கள் இந்த நிர்ப்பந்தமான நிலைக்குப்பின் அழகான பலவர்ண வண்ணாத்திப்பூச்சிகளாக, பூக்களுக்குப் பூ பறந்து செல்லும் திறம் படைத்தவைகளாக மாறப் போகிறோம் என்பதை முதல் தடவையாக புரிந்து கொண்டால் அவைகள் எந்த அளவு மகிழ்ச்சியுடையவைகளாயிருந்திருக்குமோ, அந்த அளவு மகிழ்ச்சி எங்களுடையதாயிருந்தது.

என்னைச் சூழ யோபுகள் இருந்தார்கள். அவர்கள் யோபுவை விட அதிகமாக உபத்திரவப் படுத்தப்பட்டிருந்தார்கள். ஆனால், நான் யோபுவின் சரித்திரத்தை அறிந்திருக்கிறேன். அவன் தன் உபத்திரவத்தின் முடிவில் எவ்விதமாக இரட்டத்தனையாய் பெற்றுக் கொண்டான் என்றும் அறிந்திருந்தேன். ஏழை லாசருவை போல பசியுள்ளவர்களாய், யாரும் அக்கரைக்காட்டாமல் விடப்பட்ட பருக்கள் நிறைந்தவர்களாய் அநேக மனிதர்கள் என்னைச் சூழ்ந்திருந்தார்கள். ஆனால் தேவ தூதர்கள் அவர்களை ஆபிரகாமின் மடியில் கொண்டு போய் விடுவார்களென நான் அறிந்திருந்தேன். அவர்களுடைய வருங்காலங்களில் அவர்கள் எவ்விதம் இருப்பார்களோ அவ்விதமாய் அவர்களைப்பார்த்தேன். என் பக்கத்தில் அசுத்தமாக கந்தை கோலத்தில் பசிதாகத்தினால் வருந்தி பெலவீனனாய் நின்றுக் கொண்டிருந்த இரத்த சாட்சியை, நாளைய தினத்தின் மகிமையான கிரீடம சூட்டிய பரிசுத்தவானாகக் கண்டேன்.

இவ்விதமாக நான் மனிதரை அவர்கள் எப்படி இருக்கிறார்களென்றல்ல, எப்படி இருக்கப் போகிறார்களென்று எண்ணிப்பார்த்த போது தர்சு பட்டணத்து சவுலை போல் உபத்திரவப்படுத்துகிறவர்களிலும், வருங்கால பவுல்களைக்

காண முடிந்தது. சிலர் அவ்விதமாகவே மாறியிருக்கிறார்கள். நாங்கள் யாருக்கு முன் நின்று சாட்சி கொடுத்தோமோ, அந்த இரகசிய போலீஸ் அதிகாரிகள் பின்னுல் அவர்களாக விசுவாசிகளாகி தாங்கள் கிறிஸ்துவைக் கண்டதினிமித்தம் பாடனுபவிப்பதில் மகிழ்ச்சியாயிருந்தார்கள். எங்களை சவுக்கால் அடிக்கும் சிறைச்சாலை காவலர்களில், பவுலை முதலாவது வாரிஞல் அடித்து, பிறகு மனந்திரும்பின பிலிப்பு பட்டணத்து சிறைச்சாலைக்காரனுக மாறக்கூடிய நிலைமையைக் கண்டோம். அவன் எங்களைப் பார்த்து "இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்" என்று கேட்கமாட்டாஞ என்று ஆவலோடிருந்தோம். கிறிஸ்தவர்கள் மலத்தால் சரீரம் முழுவதும் பூசப்பட்டு சிலுவைகளில் கடடப்படுவதைப் பார்த்து பரியாசம் பண்ணின மக்களில், தாங்கள் செய்த பாவத்தினிமித்தம் தங்கள் மார்புகளில் அடித்துக்கொண்ட கொல்கதா மக்கள்திரளைக் கண்டோம்.

கம்யூனிஸ்டுகளும் இரட்சிக்கப்பட முடியும் என்ற அவர்களைப்பற்றிய நம்பிக்கையை சிறைச் சாலையில் தான் நாங்கள் பெற்றேம். அங்கேதான் அவர்களைப் பற்றிய ஓர் உத்தரவாதத்தின் உணர்ச்சி எங்களுக்கு பெருகினது. அங்கே அவர்களால் சித்திரவதை அனுபவிக்கும் போதே நாங்கள் அவர்களை நேசிக்கக் கற்றுக் கொண்டோம். என்னுடைய குடும்பத்தின் அதிகமான பகுதியினர் கொலை செய்யப்பட்டுள்ளனர். என்னுடைய வீட்டிலேயே அவர்களுடைய கொலைகாரன் மனந்திரும்பினுன். அதுவே அவன் மனந்திரும்ப மிகவும் ஏற்ற இடமுமாகும். ஆகவே கம்யூனிச சிறைச்சாலையில்தான் கம்யூனிஸ்டுகளுக்கான கிறிஸ்தவ ஊழியம் பிறப்பிக்கப்பட்டது!

ஓர் எறும்பின் நோக்கத்துக்கும் நம்முடைய நோக்கத்துக்கும் பெரிய வித்தியாசம் இருப்பது போல, தேவனுடைய நோக்கத்துக்கும் நம்முடைய நோக்கத்துக்கும் மாபெரும் வித்தியாசம் உண்டு. மனிதனுடைய பார்வையில், சிலுவைகளில் கட்டப்பட்டு மலம் பூசப்பட்டு வேதனை

படுத்தப்படுவது மிகவும் கொடூரமாகத் தென்படலாம். ஆனால் இரத்த சாட்சிகளின் பாடுகளை வேதாகமமானது "இலேசான உபத்திரவம்" என்றுகூறுகிறது. 14 வருடங்களை சிறையில் கழிப்பது நமக்கு நீண்ட காலமாக தோன்றுகிறது. வேதாகமம் அதை "அதி சீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம்" என்று கூறுகிறது. இவைகளை நாம் கூர்ந்து நோக்கும்போது கம்யூனிஸ்டுகளின் செய்கைகள் நமக்கு கடுமையானவைகளாகவும், மன்னிக்கப்பட கூடாதவைகளாகவும் தென்பட்டாலும், தேவனுடைய பார்வையில் அவைகள் அற்பமாகவே தோன்றுகிறது என்று கிரகிக்க வேண்டியிருக்கிறது. இப்பொழுது 50 ஆண்டுகளுக்கு மேலாக அவர்கள் நடத்தி வரும் கொடுங்கோன்மை, 1,000 வருடம் ஒரு நாள் போல் தோன்றும் தேவனுடைய பார்வையில், ஒரு தினத்தின் தவறுதலாகவே காணப்படலாம. அவர்கள் இரட்சிக்கப்பட இன்னும் அவகாசம் இருக்கிறது. பரலோக எருசலேம் தாயானவளாக இருக்கிறது மாத்திரமல்ல, தாயைப் போல நேசிக்கிறவளாகவும் இருக்கிறாள்.

பரலோகத்தின் கதவுகள் கம்யூனிஸ்டுகளுக்கு பூட்டப்பட்டிருக்கவில்லை. விளக்கும் அவர்களுககாக அணைக்கப்படவில்லை. மற்றவர்களைப் போல அவர்களும் மனந்திரும்பக்கூடும். நாம் அவர்களை மனந்திரும்புதலுக்கு அழைக்க வேண்டும். அன்பு மாத்திரமே கம்யூனிஸ்டுகளை மாற்ற முடியும். அன்பென்று; சொல்லும் போது சில பெயர் கிறிஸ்தவர்கள் சொல்வது போல கம்யூனிச கொள்கைக்கு ஆதரவு அளிப்பது என்று அர்த்தமல்ல. விரோதமானது மனிதரைக் குருடாக்குகிறது. ஹிட்லர் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராளிதான். ஆனால் அவன் பகைமையை வைத்திருந்தான். ஆகவே அவன் அவர்களை மேற்கொள்வதற்குப் பதில் இவ்வுலகில் மூன்றில் ஒரு பங்கை அவர்கள் ஆக்கிரமிப்பதற்கு அவர்களுக்கு அனுசாரியாகிப் போனான்.

கம்யூனிஸ்டுகள் நடுவில் மிஷனெரி ஊழியத்தை நடத்த சிறைச் சாலையிலே அன்போடு கூட ஒரு திட்டத்தை தயாரித்தோம். அப்பொழுது எங்களுக்கு முதலாவது கம்யூனிச ஆட்சியாளர்களைப் பற்றிய சிந்தை வந்தது.

பழைய கால சபையின் சரித்திரத்தைப் பார்க்கும் போது சில சத்தியங்கள் வெளிப்படுகின்றன. நார்வே எவ் விதம் கிறிஸ்துவுக்காக கொள்ளப்பட்டது? ஓலிப் இரா ஜாவை இரட்சிப்புக்குள் கொண்டுவந்தது தான். ரஷ்யா வின் இராஜாவாயிருந்த வாலடிமிர் கர்த்தருக்காக ஆதாயப் படுத்தப் பட்டபோது, ரஷியாவில் சுவிசேடம் பிரசங்கிக்கப் பட்டது. ஹங்கேரியின் இராஜா ஸ்டீபன் கர்த்தரை ஏற்றுக் கொண்டதாலேயே, அவனுல் ஹங்கேரி கர்த்தருக்கென்று ஆதாயப்படுத்தப்பட்டது. போலந்து நாடும் அப்படித் தான். ஆப்பிரிக்காவில் ஒரு கோத்திரத்தின் தலைவன் ஆதாயப்படுத்தபடுவானென்ருல், அந்தக் கோத்திரம் முழுவ தும் அவனைப் பின்பற்றும். சாதாரண மனிதர்கள் இரட்சிக் கப்பட்டால் நேர்த்தியான விசுவாசிகளாகலாம். ஆனுல் அவர்களுக்கு அதிகமான செல்வாக்கு இல்லாததால் அவர் களால் பெரிய மாற்றங்களைச் செய்ய இயலாது.

நாம் தேசத்தை ஆளுபவர்களை ஆதாயப்படுத்த முயற் சிக்க வேண்டும். தேசிய, பொருளாதார, விஞ்ஞான, கலை களில் தேர்ச்சி பெற்றோரை ஆதாயப்படுத்த வேண்டும். அவர்கள்தான் ஆத்துமாக்களின் பொறியாளர்கள். அவர் கள் மனித ஆத்துமாக்களை உருவாக்குகிறவர்கள். அவர்கள் ஆதாயப்படுத்தப்படுவார்களென்ருல், அவர்களுடைய செல்வாக்குகளால் எல்லா மனிதரையும் நீ ஆதாயப்படுத் திக் கொள்ளலாம்.

மிஷனெரி ஊழியத்தின்படி பார்த்தால், மற்ற சமுதாய முறைகள் நடுவில் காணப்படாத ஓர் அனுகூலம் கம்யூனி சத்துவத்தில் உண்டு. அது ஒரே ஆளுகையில் இயங்கி வருகிறது.

அமெரிக்க ஜனதிபதி அந்நிய தெய்வத்தினிடம் திரும் பினுல், அதனுல் அமெரிக்கா முழுவதும் அவரை பின்பற்றும் என்று சொல்ல முடியாது. ஆனுல் மாசேதுங் போன்ற தலை வர்கள் கிறிஸ்தவர்களாக மாறினுல் அவர்களுடைய தேசம் முழுவதும் சந்திக்கப்பட முடியும். கம்யூனிஸ்டு தலைவர்களின் செல்வாக்கு, நாட்டில் மிகவும் அதிகம்.

ஆனால் கம்யூனிஸ்டு தலைவன் மனந்திரும்பக் கூடுமா? நிச்சயம் கூடும். ஏனெனில் அவன் தன் எதிராளியைப் போல மகிழ்ச்சியற்றவனாகவும், பாதுகாப்பற்றவனாகவுமே காணப் படுகிறான். சொல்லப் போனால் ரஷ்யாவின் எல்லா கம்யூனிச தலைவர்களுடைய வாழ்க்கையும்சிறையிலே முடிந்ததாகவோ, அல்லது அவர்களுடைய சொந்த தோழர்களால் சுட்டுக் கொல்லப்பட்டதாகவோ தான் காணப்படுகிறது. சீனா விலும் இதே நிலைமைதான். இகோடா, இஜோவ், பெரியா போன்ற அதிகாரம் பெற்ற மந்திரிகளும் கூட தேசத் துரோ கிகளைப் போல குண்டடிக்கு இரையாகியே மரித்திருக்கி றார்கள். சமீபத்தில் சோவியத் யூனியன் மந்திரி செப்லின், யூகாஸ்லேவியாவின் மந்திரி ரான்கோவிக் முதலானோர்கள் கந்தைகளைப் போல வெளியே எறியப்பட்டிருக்கிறார்கள்.

**ஆவிக்குரிய பிரகாரமாக நாம் எப்படி கம்யூனிசத்தை தாக்க முடியும்?**

கம்யூனிச ஆளுகையானது ஒருவரையாவது மகிழ்ச்சி உண்டாக்குவதில்லை. அதனால் அனுகூலமடைகிறவர்கள் தங் களுடைய கட்சி மாறும் போது, எந்த நடுநிசியிலும் இர கசிய போலீசார் வந்து தங்களை கடத்திக் கொண்டு போய் விடுவார்கள் என்ற எண்ணத்தால் மகிழ்ச்சியற்றவர்களாக காணப்படுகிறார்கள்.

அநேக கம்யூனிச தலைவர்களை நான் நன்கறிவேன். அவர்கள் மிகவும் பாரப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். கர்த்தர் ஒருவரே அவர்களுக்கு இளைப்பாறுதல் தரமுடியும்.

கம்யூனிச தலைவர்களை கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத் துவது என்றால் உலக முழுவதையும் அணுகுண்டின் அழிவி லிருந்தும், மனித வர்க்கத்தை பட்டினியிலிருந்தும் மீட்ப தென்றே அர்த்தம். ஏனெனில், அவர்களுடைய நாட்டின் பணமெல்லாம் போராயுதங்களுக்காக அதிகமான அள வில் செலவழிக்கப்படுகிறது. கம்யூனிச தலைவர்கள் ஆதாயப் படுத்தப்படுவார்கள் என்றால், அகில உலக சிக்கல்கள் பெருத்த அளவில் தீர்ந்து போகுமென்றே அர்த்தம். கம் யூனிச தலைவர்கள் ஆதாயப்படுத்தப்படுவார்களென்றால்

கிறிஸ்துவையும், தேவ தூதர்களையும் மகிழ்ச்சியினுலும் ஆனந்தத்தினுலும் நிரப்புவதென்றே அர்த்தம். அது சபையின் வெற்றியைக் குறிக்கிறது. புதுகினியா, அல்லது மடகாஸ்கர் போன்ற மிஷனெரி ஊழியத்திற்கு, மிகவும் கடினமான பகுதிகளிலுள்ள கம்யூனிச தலைவர்கள் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தப்படுவார்களானுல், அப்பகுதிகளில் உள்ள மக்கள் எளிதாக அவர்களைப் பின்பற்றி விசுவாசத்துக்கு திரும்பி விடுவார்கள்.

மனந்திரும்பின கம்யூனிஸ்டுகளை நான் தனிப்பட்ட முறையில் நன்கறிவேன். நானே என் வாலிபப் பிராயத்தில் பயங்கர நாத்திகனுக இருந்திருக்கிறேன்! மனந்திரும்பின நாத்திகர்களும், கம்யூனிஸ்டுகளும், தாங்கள் அதிகமாக பாவம் செய்திருப்பதால் கிறிஸ்துவை அதிகமாக நேசிக்கிருர்கள்.

மிஷனெரி வேலையில் நிதானிக்கக்கூடிய சிந்தனை அவசியம். இரட்சிப்பின்படி நாம் பார்த்தால் எல்லா ஆத்துமாக்களும் ஒன்றுதான். ஆனுல் ஆழ்ந்து நோக்குங்கால் எல்லாம் சமமாகாது. காட்டிலுள்ள ஒரு மனிதனுக்கு சுவிசேடத்தை அறிவித்து அவனுக்கு மாத்திரம் இரட்சிப்பை நிச்சயப்படுத்துவதைக் காட்டிலும், பின்னுல் அநேக ஆயிரக்கணக்கானவர்கள் ஆதாயப்படுத்தப்படத்தக்கதாக ஒரு செல்வாக்குள்ள மனிதனை முதலில் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்துவது முக்கியமாகும். ஆகவே இயேசுவும் சில சிறிய கிராமங்களில் தம் ஊழியத்தை முடித்துவிடாதபடி, இவ்வுலகத்தின் ஆவிக்குரிய தலைமை இடமாகிய எருசலேமில் அதை முடித்தார். இக்காரணத்தை முன்னிட்டே பவுல் ரோமாபுரிக்குப் போக பாடுபட்டான்.

வேதாகமம், ஸ்திரீயின் வித்தானவர் சர்ப்பத்தின் தலையை நசுக்குவார் என்று கூறுகிறது. நாம் சர்ப்பத்தின் வயிற்றில் குத்துகிறோம். அவன் நகைக்கிருன். சர்ப்பத்தின் தலையானது மாஸ்கோவிற்கும் பிக்கீங்கிற்கும் நடுவில் எங்கோ இருக்கிறதேயொழிய அது துனிஸ்லேயும், மடகாஸ்கரிலேயும் இல்லை. கம்யூனிச உலகமே இன்றைய சபையின்

கவனத்தையும், கர்த்தருடைய மக்களின் கவனத்தையும் முக்கியமாக கவரக்கூடியதாக இருக்கவேண்டும்.

நாம் கடமைக்காக செய்து வருகிற காரியங்களை உதரித் தள்ளுவோமாக. "கர்த்தருடைய வேலையை அசதியாகச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்" என்று வேதாகமம் கூறுகிறது. சபையாக கம்யூனிசத்துக்கு விரோதமாக வீரிட்டெழும்பிப்போராடும் ஓர் ஆவிக்குரிய போராட்டம் மிகவும் அவசியம். யுத்தத்தில் எப்பொழுதும் நம்மை பாதுகாத்துக் கொண்டே நின்று கொண்டிருந்தால், அதை ஒரு போதும் ஜெயிக்க முடியாது. விரோதியை நோக்கி முன்னேறிப் போனாலேயேஜெயம் கிடைக்கும். கம்யூனிசத்தை பொறுத்த மட்டில் சபையானது இதுவரை தன்னைப் பாதுகாத்துக் கொண்டே வந்து, அதற்கு எதிராக முன்னேறி போரிடாமலிருந்ததால் ஒவ்வொரு தேசமாக கம்யூனிஸ்டுகளின் வசத்தில் விட்டுக்கொடுத்துக் கொண்டே வந்திருக்கிறது.

இந்த நிலைமை உடனடியாகமாற வேண்டியது அவசியம். சங்கீதத்தில், "கர்த்தர் இரும்புத் தாழ்ப்பாள்களை உடைக்கிறார்" என்று வாசிக்கிறோம். இரும்புத்திரை கர்த்தருக்கு அற்பக் காரியமாகும்.

ஆதி சபையானது இரகசியமாகவும், தைரியமாகவும் கிரியை நடப்பித்து வெற்றி சிறந்தது. நாமும் கூட அவ்விதமாகவே கிரியை நடப்பிக்க அழைக்கப்படுகிறோம். கம்யூனிஸ்டுகளின் காலம் வரை, ஏன் புதிய ஏற்பாட்டில் அநேகர் மறு பெயர் வைத்து அழைக்கப்பட்டார்கள் என அறியாதிருந்தேன். வேதாகமத்தில் சிமியோன் நகார் என்றும், யோவான் மாற்கு என்றும் அழைக்கப்பட்டிருப்பது போல் அநேகா மறு பெயர்களால் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். கம்யூனிச தேசங்களில் நடைபெறும் எங்கள் ஊழியத்தில் நாங்களும் இரகசிய பெயர்களையே உபயோகிக்கிறோம்.

கர்த்தராகிய இயேசுவும் பஸ்காவை ஆயத்தப்படுத்தும்படி தம்முடைய சீடரை அனுப்பும்போது அந்த மனிதனுடைய விலாசத்தைக் கொடாமல், "நீங்கள் நகரத்தில் பிரவேசிக்கும் போது தண்ணீர் குடம் சுமந்து வருகிற ஒரு

மனிதன் உங்களுக்கு எதிர்ப்படுவான்'' என்று ஏன் கூறினுரென்று முன்னுல் நான் அறிந்து கொள்ளவில்லை. இப்பொழுது அந்தரங்க சபையின் ஊழியத்தில் இப்படி பல அடையாளங்களை நாங்களும் கொடுத்துவருகிறோம்.

இவ்விதமாக ஆதி விசுவாசிகளின் முறைமையில் நாம் ஊழியம் செய்வோமானுல் கிறிஸ்துவுக்காக கம்யூனிஸ்டு நாடுகளில் மேன்மையான முறையில் ஊழியம் செய்ய முடியும்.

அந்தரங்க சபையின் கிறிஸ்தவர்கள் தங்களுடைய விசுவாசத்துக்காக மரிக்கவும் ஆயத்தமாயிருக்கிறுர்கள் என்று நிரூபித்துக் காண்பித்திருக்கிறுர்கள். கம்யூனிச தேசத்தில் மறுபடியும் சிறையிலடைக்கப்படுதலும், புதிய சித்திரவதைகளும், மரணமும் எதிர் நோக்கி உள்ள, ஓர் ஊழியத்தையே நான் செய்து வருகிறேன். எல்லாவித அபாயங்களையும் எதிர் நோக்கினவனுகவே நான் இரும்புத்திரைக்குப் பின் ஓர் இரகசிய ஊழிய ஸ்தாபனத்தைத் தலைமை தாங்கி வருகிறேன். நான் எழுதுகிற காரியங்கள் என்னவென்பதை நான் நம்பியே எழுதுகிறேன்.

மனிதனுடைய பழக்கவழக்கங்களில் உள்ள காரியங்களை விளக்கும் வார்த்தைகளைப் புரிந்துகொள்வது அவ்வளவு துன்பமான காரியமல்ல. ஆனுல் தேவனுடைய இரகசியங்களையும், ஆவிக்குரிய வாழ்க்கையின் உயரங்களையும் போதுமான அளவு விவரிக்க வார்த்தைகள் கிடையாது. அவ்விதமாக பிசாசின் கொடுமைகளின் ஆழங்களை விவரிக்கவும் மனுஷீக வார்த்தைகள் கிடையாது.

நாஜிகளால் களவாய்களுக்குள் வீசி எறியப்பட்டவனின் நினைவுகளையும் அல்லது தன்னுடைய குழந்தை அதே களவாய்க்குள் தூக்கி வீசப்படுவதைப் பார்க்கிறவனின் நினைவுகளையும் விவரிக்க வார்த்தைகளுண்டோ? அவ்விதமாகவே கம்யூனிஸ்டுகளின் கீழ் கிறிஸ்தவர்கள் படும் பாடுகளையும், பட்டபாடுகளையும் விவரிக்க இயலாது.

ருமேனியாவில் கம்யூனிச ஆளுகையைக் கொண்டுவந்த லுக்ரேடியூ பெட்ராஸ்கானு என்னும் மனிதனுடன் சிறையில் இருந்தேன். அவனுடைய தோழர் அவனுக்கு அளித்த வெகுமதி சிறைவாசம் தான். அவன் நல்ல புத்தி சுவாதீனமுள்ளவனுக இருந்தாலும் அவனை பைத்தியம் பிடித்தவர்களுடன் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் வைத்து பைத்தியக்காரனுகும்படி செய்து விட்டார்கள். அவர்களுடைய முன்னுள் உள்நாட்டுக் காரியதரிசியாகிய அன்னு பாக்கருக்கும் அப்படியே செய்தார்கள். கிறிஸ்தவர்களும் அடிக்கடி இவ்விதமாக நடத்தப்படுகிறுர்கள். மின்சார அதிர்ச்சி அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. நேரான குறுகிய பெட்டிகளில் வைக்கப்படுகிறுர்கள்.

சீனுவின் தெருக்களில் நடப்பவைகள் உலகத்தை பயங்கரத்துக்குள்ளாக்குகின்றன. பொதுவாகவே மக்களுக்கு செஞ்சேனை எவ்வளவு பயங்கரமானது என்று தெரியும். அப்படியிருக்கும் போது ஒருவரும் பார்க்கக் கூடாதபடி சீனுவிலுள்ள சிறைகளிலிருக்கும் கிறிஸ்தவர்களுடைய பங்கு என்னவாயிருக்குமென்று யாவரும் எளிதில் புரிந்து கொள்ளலாம். கடைசியாக வந்த செய்தி ஒன்று தங்கள் விசுவாசத்தை மறுதலிக்க மறுத்த கிறிஸ்தவர்களும், ஒரு பிரபல சுவிசேஷ எழுத்தாளரும், தங்கள் இரு காதுகளும், கால்களும், நாக்கும் வெட்டப்பட்டவர்களானுர்களென கூறுகிறது.

ஆனுல் மனிதனின் சரீரங்களை சித்திரவதைக்குள்ளாக்கி அவர்களைக் கொன்று போடுதலே கம்யூனிசவாதிகள் செய்யும் மோசமான காரியமென்று கூற முடியாது. வாலிபர்கள், சிறுவர்கள் இவர்களின் மனதைக் கெடுத்து விஷப்படுத்துகிறதே, இவர்களின் மிக மோசமான செயலாயிருக்கிறது. தங்கள் அபிமான மக்களை சபைக் கட்டடங்களில் உயர்த்தி, வாலிபர்கள் தேவனிலும் கிறிஸ்துவிலும் விசுவாசியாமலிருக்கும்படி போதிக்கிறது மாத்திரமல்ல, தேவன், கிறிஸ்து என்கிற பெயர்களையே அவர்கள் வெறுக்கும்படி செய்து விடுகிறுர்கள். கிறிஸ்து

வுக்காக சிறைவாசம் அனுபவித்து, சில வருடங்களுக்கு பின்னுல் வீடு திரும்பும் கிறிஸ்துவின் இரத்த சாட்சிகள் தாங்கள் சிறையிலிருந்த காலத்தில் வீடுகளின் நாத்திகர் களால் போதிக்கப்பட்டு, நாத்திகர்களாக மாறிப்போன தங்கள் பிள்ளைகளின் பகடிக்கு உள்ளாகும் பயங்கரத்தை நாம் என்னவென்று சொல்லுவது?

இப்புத்தகமானது அதிகமாக மையினுல் எழுதப் படவில்லை. இரத்தம் கசியும் இதயங்களிலிருந்து சொட் டும் இரத்தத்தினுல் எழுதப்படுகிறது.

தானியேலின் நாட்களில் அக்கினிச் சூளையில் போடப் பட்ட மூன்று வாலிபரின் மேலும் எவ்வித அக்கினியின் வாசனையும் வீசாமலிருந்தது போல், கம்யூனிச சிறைச்சாலை களில் போடப்படும் கிறிஸ்தவர்களிலும் கம்யூனிச வாதி களுக்கு விரோதமான எந்த கசப்பும் வீசுவதில்லை. ஒரு மலரை நீ காலால் மிதித்து நசுக்கிப் போடும் போது, அது தன்னுடைய அழகிய வாசனையால் உன்னை மகிழ்ச்சி யாக்கும். அவ்விதமாகவே கம்யூனிஸ்டுகளால் சித்திரவதை செய்யப்படும் கிறிஸ்தவர்கள் தங்களை சித்திரவதை செய் கிறவர்களுக்கு, சித்திரவதைக்கு பதிலாக அன்பையே அளிக்கிறவர்களாயிருக்கிருர்கள். எங்களுடைய அநேக சிறைச்சாலைக் காவலர்களை நாங்கள் கிறிஸ்துவண்டை கொண்டு வந்திருக்கிருேம். எங்களை பயங்கர பாடுகளுக்குட் படுத்தும் கம்யூனிஸ்டுகளுக்கு நாங்கள் பெற்ற மேன்மை யான ஈவாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடமிருந்து வரும் இரட்சிப்பை அளிக்க வேண்டும் என்பதே எங்களு டைய முழு வாஞ்சை.

**சரித்திரம் கற்றுத்தரும் பாடங்கள் புறக்கணிக்கப்படுகின்றன**

முதல் நூற்ருண்டுகளில் வட ஆப்பிரிக்காவில் கிறிஸ் தவ விசுவாசம் செழித்தோங்கியது. அங்கிருந்து வந்தவர் களே அகஸ்டின், சைப்ரியன், அதனேசியஸ், டெர்டூலி யன் போன்ற பக்தர்கள். ஆனுல் வட ஆப்பிரிக்காவிலுள்ள கிறிஸ்தவர்கள் முகம்மதியரை கிறிஸ்துவுக்காக ஆதாயப்

படுத்தும் அந்த ஒரு கடமையைச் செய்ய தவறிப் போனார் கள். அதன் பலாபலனாக முகம்மதிய மார்க்கம் வட ஆப் பிரிக்காவை ஆட் கொண்டு அங்கிருந்த கிறிஸ்தவ விசு வாசத்தை நூறாண்டு காலத்தில் அடியோடு அகற்றிப் போட்டது. வட ஆப்பிரிக்கா இன்னும் முகம்மதியர் கையில் தானிக்கிறது.

சீர்திருத்த காலத்தில் விரஸ், லூத்தர், கால்வின் போன்றோர், பொது மக்களின் ஆதரவிலேயே அப் பொழுது தேசியப் பிரகாரமாக ஆதிக்கம் செய்து வந்த போப்பின் நுகத்திலிருந்து விடுதலை பெற போராடினார் கள். அவ்விதமாக இன்றும் விடுதலையை அனுபவித்து வரும், விடுதலையாயுள்ள மக்களின் ஆதரவிலேயே அந்தரங்க சபையானது கம்யூனிஸ்டுகளுக்கும், அவர்களுடைய கையில் அகப்பட்டவர்களுக்கும் சுவிசேடத்தை அறிவித்து வருகிறது.

கம்யூனிசத்தை கவிழ்த்துப் போடக் கூடிய வல்லமை உலக பிரகாரமான எந்த தேசிய சக்திக்கும் கிடையாது. கம்யூனிஸ்டுகளிடம் அணுசக்தியுண்டு. ஆதலால் அவர்கள் உலக முழுவதிலுமுள்ள கோடிக்கணக்கான உயிர் களைக் கொல்லும் உலக யுத்தத்தையே ஆரம்பிக்கமுடியும். அது மாத்திரமல்ல, வெளி நாடுகளிலுள்ள அநேகர் கம்யூனிச ஆட்சியாளரைக் கவிழ்க்க விரும்புகிறதில்லை. இதை அவர் களே அடிக்கடி கூறி வருகிறார்கள். புற்றுநோய், காசநோய் இப்படிப்பட்ட பயங்கர நோய்களிருந்து குணமாக மனிதர் பல பிரயாசங்களை எடுக்கிறார்கள். ஆனால் இக் கொடிய வியாதிகளை விட அதிகமானோரைத் தாக்கியுள்ள கம்யூனிச வியாதிகளைப் பற்றி இவ்வுலகில் அநேகர் சற் றேனும் கவலைப்படுகிறதில்லை.

சோவியத் எழுத்தாளரான இல்யா எஷ்ரன்பர்க் ஸ்டாலினைப்பற்றி கூறும்போது, ஸ்டாலின் தன் வாழ்க் கையில் வேறொன்றும் செய்யாமல், தான் கொன்றுள்ள குற்றமற்ற உயிர்களை மாத்திரம் ஒரு புத்தகத்தில் வரிசை யாக எழுத ஆரம்பிப்பானேயானால் அவன் தன்னுடைய வாழ்நாளில் அவ்வேலையை முடிக்க இயலாது என்று குறிப்பிடு

கிறார். கம்யூனிச கட்சியின் இருபதாவது காங்கிரசில் ''ஸ்டாலின் ஆயிரக்கணக்கான நேர்மையுள்ள, குற்றமற்ற கம்யூனிஸ்டுகளை தீர்த்துக் கட்டியுள்ளார். 17-வது காங்கிரசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 139 மத்தியகுழுவின் அங்கத்தினரில் 98 பேர், அதாவது 100க்கு 70 பேர் பின்னால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்'' என்று குருஷேவ் கூறியிருக்கிறார்.

அப்படியானால் கிறிஸ்தவர்களுக்கு அவன் என்ன செய்திருப்பான் என்று நினைத்துப் பாருங்கள்.

சீனாவில் ஸ்டாலின் சகாப்தத்தைவிட மோசமான காட்டுமிராண்டித்தனம் கையாளப்பட்டுள்ளது. அங்கு வெளியரங்கமான சபையின் வாழ்க்கை பூரணமாக ஒழிக்கப்பட்டுள்ளது. ரஷ்யாவிலும், ருமேனியாவிலும் புதிய கைதுகள் செய்யப்பட்டுள்ளன. சமீபத்தில் அதிக அளவில் கிறிஸ்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ள செய்தி ஒன்று ரஷியாவிலிருந்து வெளிவந்திருக்கிறது.

நூறு கோடி மக்கட்தொகையுள்ள இத்தேசங்களில் வாலிப சமுதாயமெல்லாம், பயங்கரத்தோடும் வஞ்சகத்தோடும் கிறிஸ்தவ விசுவாசத்தை பகைக்கக்கூடிய மனப்பான்மையில் வளர்க்கப்பட்டு வருகின்றன.

ரஷ்யாவில் உள்ளூர் அதிகாரிகள் சபைக்கட்டிடங்களுக்கு முன்னால் நின்று அங்கு செல்லும் பிள்ளைகளின் போக்குவரத்தை கவனித்துக் கொண்டிருப்பது சர்வ சாதாரண காட்சியாகும். சபைக்கட்டிடத்துக்குப் போகிறவர்களாக காணப்படும் பிள்ளைகள், அடிக்கப்பட்டு வெளியே தூக்கி எறியப்படுகிறார்கள். வருங்கால கிறிஸ்தவ விசுவாசத்தை அழிப்பவர்கள் கவனமாகவும் சிரமமாகவும் பாதுகாக்கப்பட்டுவருகிறார்கள்.

ஒரே ஒரு வல்லமைதான் கம்யூனிசத்தை கவிழ்க்க முடியும். அதுவே யுகாயுகங்களாக பலவிதமான ஏகாதிபத்தியங்களைக் கவர்ந்த சுவிசேடத்தின் வல்லமை. எல்லா கம்யூனிச நாடுகளிலும் இயங்கிவரும் அந்தரங்க சபை அதைத்தான் உபயோகித்து வருகிறது. இந்த சபையைத் தாங்கி இதற்கு

உதவியளிப்பதென்ருல் உபத்திரவப்படும் சகோதரர்களுடன் காட்டும் ஐக்கியம் என்பது மாத்திரமல்ல, அது உங்களுடைய தேசத்துக்கும் உங்களுடைய சபைக்கும் ஜீவனு? மரணமா? என்ற கேள்வியை எழுப்பிவிடக் கூடியதாகவும் இருக்கலாம். ஆகவே விடுதலையுள்ள கிறிஸ்தவர்கள் மாத்திரமல்ல, விடுதலையை அனுபவிக்கும் அரசாங்கங்களும் இந்த சபையை ஆதரிக்கிறவர்களாயிருத்தல் அவசியம்.

அந்தரங்க சபையானது ஏற்கனவே கம்யூனிச அதிகாரிகளை கிறிஸ்துவுக்காக வென்றிருக்கிறது. ஜார்ஜியுடெஜ் என்ற ருமேனியாவின் பிரதம மந்திரி தன்னுடைய பாவமுள்ள வாழ்க்கை மாறி, பாவத்தை அறிக்கை செய்து மனந்திரும்பின மனிதனுக மரித்தார். கம்யூனிச தேசங்களிலுள்ள அரசாங்கத்தின் கம்யூனிச அங்கத்தினர்களில் மறைவான விசுவாசிகளும் இருக்கிருர்கள். இந்த நிலைமை இன்னும் பரவக்கூடும். ஆகவே சில கம்யூனிச அரசாங்கங்களில் டிட்டோவின் புரட்சி போன்ற இரத்தம் சிந்தும் புரட்சியைத் தொடர்ந்து வரும் கொடுங்கோன்மைக்கு ஏதுவான மாற்றம் ஏற்படாமல் கிறிஸ்தவ விசுவாசத்திற்கும், சுயாதீனத்திற்கும் ஏதுவான மாற்றம் ஏற்படுவதை நாம் எதிர்பார்க்க முடியும். இதற்கு சாதகமாகவுள்ள தருணங்கள் இப்பொழுதுஉள்ளன.

தங்களுடைய நம்பிக்கையில் மிகவும் உண்மையுள்ளவர்களாக காணப்படும் கம்யூனிஸ்டுகள் அநேக சமயங்களில் பயங்கர குழப்பங்களைக் கடந்து செல்லவேண்டியவர்களாக இருக்கிருர்கள். அவர்களெல்லாம் ஒரு காலத்தில் சகோதரத்துவத்தை கம்யூனிசமானது மக்கள் மத்தியில் உண்டுபண்ணும் என்று நம்பியிருந்தாகள். ஆனல் அதற்கு பதில் இப்பொழுது நாய்களைப் போல அவர்கள் ஒருவரோடொருவர் சண்டை போடுவதை பார்க்கிருர்கள். அவர்கள் கட்டுக் கதையெனகூறும் பரலோகத்திலுள்ள பரதீசைப்போல, ஓர் உலகப் பரதீசை கம்யூனிசமானது உண்டுபண்ணும் என அவர்கள் உண்மையாகவே நம்பியிருந்தார்கள். ஆனல் இப்பொழுதோ அவர்களுடைய மக்கள் பசியுள்ளவர்களாயிருக்கிருர்கள். கோதுமையானது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டியிருக்கிறது.

கம்யூனிஸ்டுகள் தங்கள் தலைவர்களில் நம்பிக்கை வைத்தவர்களாயிருந்தார்கள். இப்பொழுதோ அவர்கள் தங்கள் சொந்த பத்திரிகைகளிலேயே ஸ்டாலின் ஒரு கடுங்கொலைக்காரன் என்றும், குருஷேவ் ஒரு முட்டாள் என்றும் வாசித்திருக்கிறார்கள். அவர்களுடைய தேசத் தொண்டர்களான ராகோசி, கெரோ, அன்னபாக்கர், ரன்கோவிஸ் முதலானோரும் அப்படியே காணப்பட்டார்கள். கம்யூனிஸ்டுகள் தங்கள் தலைவர்களின் மாறாத்தன்மையில் இப்பொழுது நம்பிக்கை வைக்கிறதேயில்லை.

கம்யூனிஸ்டுகளின் இதயங்களிலே ஒரு வெறுமை இருக்கிறது. அதை கிறிஸ்து ஒருவரே நிரப்ப வல்லவர். மனித இதயமானது இயற்கையாகவே தேவனை தேடுகிறதாயிருக்கிறது. ஒவ்வொரு மனிதரிலும் ஆவிக்குரிய வெறுமை ஒன்று உண்டு. கிறிஸ்துவால் அது நிரப்பப்படும் வரை அது வெறுமையாகவே இருக்கும். சுவிசேடத்தில் அவர்களையும் கவர்ச்சிக்கக்கூடிய ஓர் அன்பின் வல்லமை அடங்கியிருக்கிறது. அதை நடைமுறையில் நான் கண்டிருக்கிறேன்.

கம்யூனிஸ்டுகளால் பரிகசிக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்படும் கிறிஸ்தவர்கள், தங்களுக்கும் தங்கள் குடும்பங்களுக்கும் செய்யப்பட்டவைகளை எல்லாம் மன்னித்திருக்கிறார்கள். கம்யூனிஸ்டுகளின் துன்பங்களில் அவர்களுக்கு உதவி செய்து அவர்களை கிறிஸ்துவினிடம் வழி நடத்துகிறவர்களாயுமிருக்கிறார்கள். இந்த வேலை செய்ய அவர்களுக்கு நம்முடைய உதவி தேவை.

அது மாத்திரமல்ல, கிறிஸ்தவ அன்பானது, சர்வலோக அன்பாயிருக்கிறது. கிறிஸ்தவர்களுக்கு எந்தவித பாரபட்சமும் இருக்கமுடியாது. தேவனுடைய சூரியனானது நல்லோர் மேலும், தீயோர் மேலும், உதிக்கிறது என்று இயேசு சொன்னார். கிறிஸ்தவ அன்பைக் குறித்தும் இது முற்றிலும் உண்மை.

கம்யூனிச நாடுகளில் அநேக பசியுள்ளவர்கள் உண்டு. ஆனால் அவர்கள் யாவரும் கிறிஸ்தவ இரத்த சாட்சிகளைவிட பசியின் கொடுமையை அனுபவித்தவர்களாயிருக்க மாட்

டார்கள். நான் கிறிஸ்தவ ஸ்தாபனங்களால் மீட்கப்பட்டுள்ளதே, கிறிஸ்தவர்கள் மீட்கப்பட முடியுமென்ற கார்ரியத்தை நிரூபிக்கிறதாயிருக்கிறது.

ஆதி கிறிஸ்தவர்கள் புதிய சபையானது யூதர்களுக்கு மாத்திரந்தான அல்லது புற தேசத்தாருக்கும் உரியதா என்று தங்களுக்குள்ளே கேட்டுக் கொண்டார்கள். அந்தக் கேள்வி சரியான பதிலை பெற்றுக் கொண்டது. இப்பொழுது இந்த 20-வது நூற்றாண்டில் அதே கேள்வி இன்னொரு தோற்றத்தில் மறுபடியும் எழும்பியிருக்கிறது. கிறிஸ்தவமானது மேல் நாடுகளுக்கு மாத்திரமுரியதல்ல. கிறிஸ்து அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் சாம்ராஜ்ய நாடுகளுக்கு மாத்திரம் உரியவரல்ல. அவர் சிலுவையில் அறையப்பட்டபோது, அவருடைய கரங்ளில் ஒன்று மேற்கு புறமாகவும், ஒன்று கிழக்குப்புறமாகவும் நீட்டப்பட்டிருந்தது. அவர் யூதர்களுக்கு மாத்திரமல்ல, புறதேசத்தாருக்குங்கூட இராஜாவாகஇருக்க விரும்புகிறார். மேற்கத்திய உலகத்துக்கு மாத்திரமல்ல, கம்யூனிஸ்டுகளுக்கும் இராஜாவாக இருக்க விரும்புகிறார். "நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்றே அவர் கூறினார். எல்லாருக்காகவும் அவர் தம் இரத்தத்தைக் கொடுத்தார். எல்லாரும் சுவிசேடத்தைக் கேட்டு அதை விசுவாசிப்பது அவசியம்.

கம்யூனிச தேசங்களில் இரட்சிக்கப்பட்டவர்களிடம் நாங்கள் காணும் நிறைவான அன்பு, வைராக்கியம் இவைகளே எங்களை அத்தேசங்களில் சுவிசேடம் பிரசங்கிக்க உற்சாகப் படுத்தப்படுகின்றன. நான் ஒரு வெதுவெதுப்பான ரஷ்ய கிறிஸ்தவனை சந்தித்ததேயில்லை. முன்னால் இளம் கம்யூனிஸ்டுகளாக இருந்தவர்கள், கிறிஸ்துவின் மேன்மையான சீடர்களாக மாறக்கூடும்.

கிறிஸ்து எல்லா பாவிகளையும் நேசித்து அவர்களை பாவத்திலிருந்து விடுதலையாக்க விரும்புவதுபோல, அவர்கள் கம்யூனிஸ்டுகளை நேசித்து கம்யூனிசத்திலிருந்து அவர்களை விடுவிக்க விரும்புகிறார்கள்.

**நான் விடுதலையாக்கப்பட்டபோது கண்டதென்ன?**

சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டபோது, நான் மறுபடியும் என் மனைவியோடு தங்கியிருந்தேன். அவள் என்னைப் பார்த்து, ''வருங்கால ஒழுங்குகள் என்ன?'' என்று கேட்டாள். நான் மறுமொழியாக, ''ஆவிக்குரிய வாழ்க்கையையே எனக்கு முன்பாக நான் வைத்திருக்கிற குறிக்கோளாகும்'' என்றேன். தனக்கும் அதே சிந்தை இருந்ததாக அவள் என்னிடம் கூறினாள்.

என்னுடைய வாலிபப் பிராயத்தில் நான் மிகுந்த சுறுசுறுப்புள்ளவனாக இருந்திருக்கிறேன். ஆனால் சிறைச்சாலையும் மற்றும் அநேக வருட தனிமையான இருட்டறை வாசமும் என்னை தியானம் பண்ணுகிறவனாகவும், சிந்தனையாளனாகவும் ஆக்கிற்று. என் இதயத்தின் எல்லா புயலும் அமர்ந்து போயிருந்தது. கம்யூனிசத்தை நான் பொருட்படுத்தவில்லை; அதை கவனிக்கக்கூட இல்லை. என் பரலோக மணவாளனின் அணைப்பில் நான் மகிழ்ந்து கொண்டிருந்தேன். இந்நிலையில் எங்களை சித்திரவதை செய்தவர்களுக்காக நான் ஜெபிக்கவும், அவர்களை என் முழு இதயத்தோடு நேசிக்கவுமே முடிந்தது.

என்னை விடுதலை செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. ஆனால் அப்படியே விடுதலையாக்கப்பட்டாலும் நான் என்ன செய்யப் போகிறேனென்ற எண்ணம் எனக்குள் அடிக்கடி வந்து மறைந்தது. என் பரலோக மணவாளனோடு எங்கேயாவது ஒரு வனாந்திர பிரதேசத்தில் அமைதியாய் தங்கி அவரோடு ஓர் இனிமையான வாழ்க்கை நடத்தவே என் உள்ளம் பொங்கிக்கொண்டிருக்கிறது. தேவன் ''சத்தியம்''; வேதாகமமானது ''சத்தியத்தைப் பற்றிய சத்தியம்'' வேத சாஸ்திரமோ ''சத்தியத்தைப்பற்றிய சத்தியத்தைப் பற்றிய சத்தியம்.'' மூல ஆதாரமென்பது ''சத்தியத்தைப் பற்றிய சத்தியத்தைப் பற்றிய சத்தியத்தைப் பற்றிய சத்தியம்.'' கிறிஸ்தவர்களென அழைக்கப்படுகிற அநேகர் இப்படிப்பட்ட அநேக சத்தியங்களை அறிந்தவர்களாயிருக்கிறார்களேயன்றி, ''சத்தியத்தை'' உடையவர்களாக இல்லை.

பசியுள்ளவர்களாய், பயங்கரமாய் அடிக்கப்பட்டு மயக்கத்துக்குள்ளான நிலைமையில் நாங்கள் வேத சாஸ்திரத்தையும் வேதாகமத்தையும் மறந்து போயிருந்தோம். சத்தியத்தைப் பற்றிய சத்தியங்களை மறந்தவர்களாயிருந்த நாங்கள் ''சத்தியத்தில்'' அதாவது சத்தியமாகிய கிறிஸ்துவில் வாழ்கிறவர்களாயிருந்தோம்.

''நீங்கள் நினையாத வேளையில் மனுஷ குமாரன் வருவார்'' என்று வேதாகமத்தில் எழுதப் பட்டிருக்கிறது. நாங்கள் அதிகமாக ஒன்றையும் நினைக்காமல் இருந்தோம். எங்களுடைய சித்திரவதைகளின் இருண்ட நேரங்களில் தேவ குமாரன் எங்களிடம் வந்து அந்த சிறைச்சாலைச் சுவர்களை வைரம் போல மிளிரும்படி செய்து சிறைச்சாலையின் இருட்டறைகளை பிரகாசத்தினால் நிரப்பினார். எங்கேயோ தாழ்வான ஓர் இடத்தில் எங்கள் சரீரங்கள் சித்திரவதைகளை அனுபவித்துக் கொண்டிருந்தன. எங்கள் ஆவியோ கர்த்தரிடத்தில் களிகூர்ந்துக் கொண்டிருந்தது. இராஜாக்களின் மாளிகைகள் எங்களுக்கு வாக்களிக்கப்பட்டால் கூட இந்த எங்கள் மகிழ்ச்சியை நாங்கள் விட்டுத்தர மாட்டோம்.

நான் எந்த யுத்தத்திலும், அது நீதியான யுத்தமாயிருந்தாலும் கூட, அதில் கலந்துகொள்ள விரும்பவில்லை. கிறிஸ்துவுக்காக ஜீவனுள்ள ஆலயங்களைக்கட்டவே விரும்புகிறேன். அமைதியாக கழிக்கவேண்டுமென எண்ணிய வருடங்களை முன் வைத்தே நான் சிறைச் சாலையை விட்டேன்.

ஆனால் எனக்கு முன் அருவருப்புகளைக் கண்டேன். தங்களை காப்பாற்றிக் கொள்ளத்தக்கதாக வேறு வழியின்றி கிறிஸ்துவை மறுதலித்து, உடன் சகோதரரை காட்டிக் கொடுத்து வாழும் போதகர்களையும், மதத்தலைவர்களையும் கண்டேன். கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சிகளாய் விளங்கினவர்களின் பிள்ளைகள் தொடர்ந்து கற்க முடியாதென்று பயமுறுத்தப்பட்டு தங்களை அன்போடு உபசரித்த குடும்பங்களைப்பற்றிய தகவல்களை அறிக்கைசெய்யும்படி வற்புறுத்தப் பட்டார்கள். அரசாங்கத்தினரால் அங்கீகரிக்கப்பட்ட எல்லா சபைக் கட்டிடங்களிலும் கம்யூனிச கட்சியினரால்

நியமிக்கப்பட்ட தலைவர்களைக் கண்டேன். பரிசுத்த ஸ்தலத்தில் காணப்பட்ட அருவருப்பைப்பற்றி கிறிஸ்து கூறின காரியங்கள் அப்பொழுது என் நினைவுக்கு வந்தன.

நல்ல, கெட்ட போதகர்களும், பிரசங்கிகளும் எப்போதும் இருந்து வருவதுண்டு. ஆனால் சபையின் சரித்திரத்திலேயே முதல் தடவையாக மதங்களை அடியோடு கவிழ்த்துப் போடும் நோக்கம் கொண்டுள்ள நாத்திகக்கட்சி சபையின் முன் நின்று நடத்திக்கொடுத்ததை நான் கண்டேன். அது அதை எதற்காக நடத்துகிறது? நிச்சயமாக அதை அடியோடு கவிழ்ப்பதற்காகத்தான் என்று நான் சொல்லத் தேவை இல்லை.

சிறுவர்களும், வாலிபர்களும், நாத்திகம் என்ற கடும் விஷமேற்றப்பட்டவர்களாக வளர்ந்து வந்தார்கள். அதை அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட எந்த சபைகளும் எதிர்க்க முடியாமலிருந்தன. புச்சாரஸ்டில் எந்த வாலிபர்களின் கூட்டத்தையாவது, சிறுவர்களுக்கான ஞாயிறு பள்ளிகளையாவது நீங்கள் பார்க்க முடியாது. கிறிஸ்தவர்களின் பிள்ளைகள் பகைமையின் பள்ளியிலேயே வளர்க்கப்பட்டு வருகிறார்கள்.

இவைகளை எல்லாம் நான் கண்டபோது கம்யூனிஸ்டுகள் எங்களை சித்திரவதை செய்தபோது நான் கம்யூனிச கொள்கைகளை பகைக்காதபடி இருந்தும்கூட இப்பொழுது அதை பகைக்கும்படியான ஒரு நிலைமைக்கு வந்தேன். அது எனக்கு செய்தவைகளுக்காக நான் அதை பகைக்கவில்லை. ஆனால் அது தேவனுடைய மகிமைக்கும், கிறிஸ்துவின் நாமத்திற்கும், தன்னுடைய ஆளுகைக்குள் அடங்கியுள்ள லட்சக்கணக்கான ஆத்துமாக்களுக்கும் செய்கிற தவறுதலுக்காகவே அதை பகைக்கிறேன்.

தேசத்தின் எல்லா பாகங்களிலிருந்தும் குடியானவர்கள் என்னிடம் வந்து எவ்விதமாக பொதுவுடமை அமுல் நடத்தப்படுகிறது என்று கேட்டார்கள். அவர்கள் எல்லோரும் இப்பொழுது பொதுவுடமையாக்கப்பட்டு முன்னால்

தங்களுக்குச் சொந்தமாயிருந்த வயல்களிலும், திராட்சத் தோட்டங்களிலும் வேலை செய்தாலும் அவர்கள் பசியுள்ள அடிமைகளாகவே இருந்தார்கள். அவர்களுக்கு அப்பமில்லை. அவர்கள் பிள்ளைகளுக்கு பாலுமில்லை, பழமுமில்லை. கானான் தேசத்துக்கொத்த இயற்கைவளம் பொருந்திய இந்நாட்டின் நிலைமை இதுவே.

கம்யூனிச ஆட்சியானது தங்களைத் திருடர்களும், பொய் யர்களுமாக ஆக்கிவிட்டது என்று சகோதரர்கள் என்னிடம் அறிக்கை செய்தார்கள். பசிக்கொடுமையினிமித்தம் முன்பு தங்களுடையதாயிருந்ததும், இப்பொழுது பொது வுடைமையாயுள்ளதுமான வயலிலிருந்து திருட வேண்டியிருந் தது. தங்கள் திருட்டை மறைக்க பொய்யும் பேச நேரிட் டது. தொழிற்சாலைகளில் நிலவும் பயங்கரங்களைப் பற்றி யும் தொழிலாளர்கள் என்னிடம் கூறினர். மிகுந்த கட்டுப் பாட்டுக்குள் அவர்கள் அடங்கியிருக்கிறதாகவும், தொழிலா ளர்களுக்கு வேலை நிறுத்தம் செய்ய எவ்வித உரிமையும் கிடையாது என்றும் கூறக் கேட்டேன்.

நல்ல ஞானம் படைத்தவர்கள் கூட தங்கள் உள்ளான உணர்ச்சியை அடக்கிக் கொண்டு அதற்கு விரோதமாக தேவன் இல்லை என்று கூறக்கூடிய நிலைமை இருந்தது. உலகத்தில் மூன்றில் ஒரு பங்கு மக்களின் முழு வாழ்க்கையும் சிந்தையும் அழிக்கப்பட்டு தவறுதலுக்குட்பட்டதாக காணப்பட்டது. கிறிஸ்தவர்களாகிய வாலிபர்களை நேசித்த பெண்கள் கம்யூனிச வாலிப இயக்கத்தினரிடம் கொண்டு வரப்பட்டு கடுமையாக கண்டிக்கப்பட்டனர். எல்லாம் தப்பறையாகவும், அவலட்சணமாகவும் காணப்பட்டன.

அதன்பின் அந்தரங்க சபையின் வீரர்களான என் முன்னாள் சிநேகிதர்களைக் கண்டேன். அவர்களில் சிலர் கைது செய்யப்படாதவர்களாகவே நாட்களைக் கடத்தி வந்தவர்களாயிருந்தார்கள். சிலர் சிறைச்சாலையிலிருந்து விடுதலை அடைந்து மறுபடியும் தங்கள் போராட்டத்தை ஆரம்பித்தவர்களாயிருந்தார்கள். அவர்கள் நடத்தின இர கசிய கூட்டங்களில் பங்கு கொண்டேன். அக்கூட்டங்களில்

கைகளால் எழுதப்பட்ட பாட்டு புத்தகங்களிலுள்ள பாட்டு களேயே நாங்கள் பாடினோம்.

கிறிஸ்தவர்கள் எவைகளை எல்லாம் செய்யவேண்டுமோ, அவைகளையெல்லாம் நான் செய்ய உறுதிக் கொண்டேன். கிறிஸ்து, அப்போஸ்தலனுகிய பவுல் முதலியோரின் முன் மாதிரிகளையும் மற்றும் பல பரிசுத்தவான்களின் முன் மாதிரி களையும் பின்பற்றி ஓய்வின் ஆசையை விட்டுவிட்டு போராட்டத்தை மேற்கொள்ள உறுதிக் கொண்டேன். அது எப்படிப்பட்ட போராட்டமாக இருக்குமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

சிறைச்சாலைகளிலுள்ள கிறிஸ்தவர்கள் தங்கள் விரோதி களுக்காக ஜெபித்து, அவர்கள் முன் ஓர் அழகான சாட்சியை வைத்தவர்களாக இருக்கிறுர்கள். அந்த கம்யூனிஸ்டுகள் இரட்சிக்கப்பட வேண்டுமென்பதே எங்கள் இருதயத்தின் வாஞ்சையாயிருந்ததால், அவர்கள் இரட்சிக்கப்பட்டதைப் பார்த்தபோது அதிகமாக மகிழ்ச்சியடைந்தோம்.

ஆனுல் அவர்களின் கேடான கம்யூனிச முறைகளை நான் வெறுக்காமலிருக்க முடியாது. அதைத் தோற்கடிக்க அந்தரங்க சபையை பெலப்படுத்த வேண்டும் என்பதே என் முழு வாஞ்சையாயிருந்தது. அந்தச் சபையின் வல்லமை ஒன்றே சுவிசேடத்தின் வல்லமையை முழு பெலத்தோடு எதிர்க்கும் சக்தியை மேற்கொள்ள முடியுமென நான் அறிவேன்.

ருமேனியாவைப் பற்றி மாத்திரம் நான் எண்ணுமல் கம்யூனிச நாடுகள் எல்லாவற்றையும் மனதில் வைத்துக் கொண்டே இந்தக் கிரியையை நடப்பித்தேன்.

சுயாதீனமுள்ள நாடுகளில் வசிக்கும் கிறிஸ்தவர்கள் கம்யூனிச நாடுகளில் உள்ள விசுவாசிகளின் வாழ்க்கையைப் பற்றி சிந்தையற்றவர்களாக காணப்படுவதை என்னுல் சகிக்க முடியவில்லை. அந்தரங்க சபையினர் சமயம் கிடைத் தால் அந்நாட்டை விட்டு வெளியேறி வெளியிலுள்ளவர் களுக்கு, இரும்புத்திரைக்குப்பின்னுல் கிறிஸ்தவர்களுக்கு நடப்பிக்கப்படும் காரியங்களை தெரிவிக்க விரும்பினர்.

நான் கம்யூனிஸ்டுகளை நேசித்தாலும், கம்யூனிச கொள்கைகளை ஒருவன் புறக்கணிக்காமல் அவன் சுவிசேடத்தை பிரசங்கிப்பது சரியல்ல வென்றே எண்ணுகிறேன்.

சிலர் என்னைப் பார்த்து, ''சுத்த சுவிசேடத்தை பிரசங்கி'' என்று கூறுகிறார்கள். கம்யூனிச இரகசிய போலீசார் கூட என்னிடம், கம்யூனிசத்தைப் பற்றிக் கூறாமல் கிறிஸ்துவை மாத்திரம் பிரசங்கிக்கச் சொன்னது எனக்கு ஞாபகம் வருகிறது. 'சுத்த சுவிசேடத்தை அறிவியுங்கள்' என்று கூறினவர்கள், எந்த ஆவியினால் தூண்டப்பட்டார்களோ, அந்த ஆவியை கம்யூனிச இரகசிய போலீசாரையும் தூண்டியது என்று நினைக்க வேண்டுமா ?

'' சுத்த சுவிசேடம் '' என்றால் எனக்கு என்னவென்றே தெரியவில்லை. யோவான் ஸ்நானகனுடைய பிரசங்கம் சுத்தமாக இருந்ததா? ''மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்ஜியம் சமீபமாக இருக்கிறது'' என்று மாத்திரம் அவன் கூறவில்லை. ''ஏரோதுவே நீர் பொல்லாதவர்'' என்றும் அவன் கூறினான். அவன் வேத போதனையை மாத்திரம் போதிப்பவனாக இருந்திருப்பானென்றால் அவன் சிறைச்சேதம் பண்ணப்பட்டிருக்க நேரிட்டிருக்காது. நம் கர்த்தரும் எல்லாராலும் விரும்பப்படும் மலைப் பிரசங்கத்தை மாத்திரம் பிரசங்கியாமல், ''பரிசேயரே, மாயக்காரராகிய சதுசேயரே, விரியன் பாம்புக்குட்டிகளே உங்களுக்கு ஐயோ'' என்றார். இந்த ''சுத்தமற்ற'' பிரசங்கத்தினிமித்தமே அவர் சிலுவையில் அறையப்பட்டார். அவருடைய மலைப் பிரசங்கத்தைப் பற்றி அவர்கள் கவலைப்பட்டிருக்க மாட்டார்கள்.

பாவமானது அதன் பெயரால் அழைக்கப்பட வேண்டியது அவசியம். கம்யூனிசமானது இன்றைய நாட்களின் மிக அபாயகரமான பாவமாயிருக்கிறது. அதை அவமதிக்காத எந்த சுவிசேடமும் சுத்தமான சுவிசேடமாகாது, அந்தரங்க சபையானது தன்னுடைய சுயாதீனத்தையும் வாழ்க்கையையும் பொருட்படுத்தாமல் அதை அவமதித்து வருகிறது. மற்ற நாடுகளில் நாங்கள் அதை அடக்கிவைக்க முடியுமா ?

கம்யூனிச எதிர்ப்பாளர்கள் செய்வதை போல நான் கம்யூனிசத்தை எதிர்க்க நினைக்கவில்லை. ஹிட்லர் கம்யூனிச எதிர்பாளனுகவும், அதே சமயத்தில் அவன் ஒரு கொடுங்கோன்மை உள்ளவனுகவும் இருந்தான். நாங்களோ பாவத்தை பகைத்து பாவிகளை நேசிக்கிருேம்.

**வெளியில் ஏன் நான் பாடுபடுகிறேன் ?**

நான் கம்யூனிச நாடுகள் அனுபவிக்கும் பாடுகளை விட அதிகமாக வெளியில் பாடனுபவிக்கிறேன். ''நிர்வாண கிறிஸ்துவைப் பின்பற்றும் நிர்வாணி'' என்ற லத்தீனிலுள்ள ஒரு பழங்கால பழமொழியை நிறைவேற்றும் சபையாகிய அந்தரங்க சபையின் சொல்லி முடியாத அழகுகளை நினைத்து ஏங்கும் என் ஏக்கம் என்னை அதிகமாக வதைக்கிறது.

கம்யூனிச முகாமில் மனித குமாரனுக்கும் அவரை சார்ந்தவர்களுக்கும் தலை சாய்க்க இடமில்லை. அங்குள்ள கிறிஸ்தவர்கள் தங்களுக்கென்று வீடுகளை கட்டிக் கொள்ளு கிறதில்லை. ஏனெனில் அவர்கள் முதன் முறையாகக் கைது செய்யப்படும் போதே அவர்கள் சொத்துக்களெல்லாம் பறி முதல் செய்யப்பட்டு விடும். நீ ஒரு புதிய வீடு கட்டி யிருப்பாயென்ருல், அந்த வீட்டை கம்யூனிஸ்டுகள் ஆக்கிர மிக்க விரும்புவார்களாயின், அதினிமித்தம் கூட உன்னை அவர்கள் கைது செய்ய தயங்கமாட்டார்கள். கம்யூனிச நாடுகளில் நீ கிறிஸ்துவைப் பின் செல்ல விரும்புவாயானுல் நீ உன் தகப்பனுரை அடக்கம் பண்ணவும், உன் குடும்பத் தினரிடம் கூறிவிட்டு வரவும் தேவையில்லை. உன் தாயார், சகோதரன், சகோதரி யார்? இந்த காரியத்தில் நீ இயேசு வைப் போலவே காணப்படுகிருய். தேவனுடைய சித்தத் தின்படி செய்கிறவனே உனக்கு தாயும் சகோதரனுமாயிருப் பார்கள். சரீர பிரகாரமான சம்பந்தத்தைக் கொண்டே மணவாளன் தன் மணவாட்டியையும், பிள்ளைகள் தங்கள் பெற்ருேரையும், மனைவிகள் தங்கள் கணவரையும் நிராகரிப் பது அங்கு சர்வ சாதாரணமாக நேரிடும் சம்பவங்களாகி விடுவதால், ஆவிக்குரிய அந்நியோந்நிய ஐக்கியமே விசுவாசி கள் மத்தியில் நிலைத்து நிற்கிறதாய்க் காணப்படுகிறது.

அந்தரங்க சபையானது ஏழ்மையானதும், பாடுகளை அனுபவிக்கிறதுமான சபையாக இருந்தாலும், அதில் வெது வெதுப்பான அங்கத்தினர்களே கிடையாது.

அந்தரங்க சபையில் நடைபெறும் ஆராதனையானது பத்தொன்பது நூற்றுண்டுகளுக்கு முன் ஆதிகால சபையில் நடைபெற்றதை போலவே இருக்கும். பிரசங்கம் செய்பவருக்கு எவ்வித வேத சாஸ்திரமும் தெரியாது. பேதுருவுக்கு தெரியாமல் இருந்த பேச்சு சாதுரியமும் அவருக்கு தெரியாது. பெந்தேகொஸ்தே நாளில் பேதுரு நிகழ்த்திய பிரசங்கத்துக்கு வேத சாஸ்திர நிபுணர்கள் மட்டமான மதிப்பெண்களையே அளித்திருப்பார்கள். கம்யூனிச நாடுகளில் வேதாகமங்கள் கிடைப்பதற்கு அரியவைகளாயிருப்பதால், அங்கு வேத வாக்கியங்களை எவரும் சரிவர அறிந்திருக்க மாட்டார்கள். அது மாத்திரமல்ல, அவ்விதமாய் பிரசங்கிக்கிறவரும் வேதாகமம் இல்லாமல் அநேக வருடம் சிறையிலடைக்கப் பட்டிருந்தவராகத்தான் காணப்படுவார்.

அவர்கள் தங்கள் சொந்த வாழ்க்கையில் பிதாவின் சகல ஏதுக்களையும் பரிபூரணமாக அனுபவித்திராதவர்களாயிருப்பினும், அவர் மேலுள்ள தங்கள் விசுவாசத்தை அவர்கள் வெளிப்படுத்தும் போது அது நம்மை திகைக்க வைக்கிறதாயிருக்கிறது. சிறைச்சாலையில் இந்த சர்வ வல்லமையுள்ள பிதாவினிடத்தில் தங்சள் தினசரி அப்பத்துக்காக அவர்கள் ஜெபிக்கிறார்கள். ஆனால் அப்பத்துக்கு பதிலாக சொல்ல முடியாத அசுத்தங்களோடு கூடிய முட்டைக் கோசையே பெறுகிறார்கள். ஆனாலும் கூட தேவனை தங்களுடைய அன்பான பிதாவென்று அவர்கள் பூரணமாய் நம்ப தயங்குகிறதில்லை. 'அவர் என்னைக் கொன்று போட்டாலும் நான் அவரில் நம்பிக்கையாயிருப்பேன்' என்று கூறின யோபைப் போலவே அவர்கள் காணப்படுகிறார்கள்.

சிலுவையில் நிர்பந்தமாகக் கைவிடப்பட்டும் கூட ''பிதாவே'' என்று தேவனை அழைத்த இயேசுவை போலவே அவர்களும் இருக்கிறார்கள். அந்தரங்க சபையின் ஆவிக்குரிய

அழகைக் கண்ட எவனும், வெளிநாட்டு சபைகளில் காணப் படும் ஒன்றுமில்லா நிலைமையில் ஒரு போதும் திருப்தியடைய மாட்டான்.

கிறிஸ்தவ நாடுகளென தங்களை அழைத்துக் கொள்ளும் நாடுகளின் சன்மார்க்கம் சீரழிந்து போயிருக்கிறதைக் காணும் போது கம்யூனிச சிறைச்சாலைகளில் அனுபவித்த வேதனைகளைவிட அதிக வேதனையை அனுபவிக்கிறேன். மக்களை கிறிஸ்துவண்டை கவர்ச்சிப்பதற்கு பதில் பலவித மான மார்க்க பேதங்களையும், தர்க்கங்களையும் உபயோக மற்ற மாநாடுகளையுமே நான் மேல் நாடுகளில் காண முடிந்தது.

ஒரு சமயத்தில் விருந்து ஒன்று நடந்தது. அப்பொழுது ஒருவர் அங்குள்ளவர்களைப் பார்த்து, 'நீங்கள் ஒரு கப்பலில் பிரயாணம் பண்ணும் போது அது மூழ்கி விட்டதால் ஒரு சிறிய தன்னந்தனியான தீவில் நீங்கள் போய் தங்க வேண்டி யிருக்கிறதென்று வைத்துக் கொள்ளுவோம். அப்பொழுது கப்பலின் நூல் நிலையத்திலிருந்து ஒரு புத்தகத்தை மாத்திரம் எடுத்துச் செல்ல உங்களுக்கு வசதி இருக்குமானல் நீங்கள் எந்த புத்தகத்தைத் தெரிந்து கொள்வீர்கள்' என்று கேட் டார். ஒருவர் ''வேதாகமம்'' என்ருர். இன்னெருவர் ''ஷேக்ஸ்பியர்'' என்ருர். ஆனல் ஓர் எழுத்தாளர் சரியாக பதில் சொன்னர். ''ஒரு படகை எப்படி செய்வதென்றும் அந்தத் தனித் தீவிலிருந்து எப்படி வெளிவருவதென்றும், போதிக்கக்கூடிய புத்தகம் இருக்குமானல் அதை மாத்திரம் எடுத்துக் கொள்ளுவேன். நான் அங்கிருந்து வெளியே வந்து விட்டேனென்ருல் நான் விரும்பிய புத்தகங்களை பிறகு படித் துக் கொள்ளலாமே'' என்ருர் அவர்.

ஒரு குறிப்பிட்ட போதனையை மாத்திரம் மிகைப்படுத் திக்கொண்டு போவதைவிட கம்யூனிச போதனைகள் ஆரம்ப மாவதற்கு முன் எல்லோருக்கும் மிக அத்தியாவசியமான விடு தலையின் மார்க்கமாகிய சுவிசேடத்தைத் துரிதமாகப் பிரசங் கிப்பது மகா அவசியம்.

''சத்தியம் உங்களை விடுதலையாக்கும்'' என்று இயேசு சொன்னார். ஆனால் அதே விடுதலையே சத்தியத்தைக் கொடுக்க முடியும். அத்தியாவசியமற்ற காரியங்களில் நம் நேரங்களை வீணாக்குவதை விட்டு விட்டு கம்யூனிசத்தின் கொடுங்கோன்மைக்காக எதிர்த்து கிறிஸ்துவுக்கான விடுதலைக்காக போராடுவோமாக. இரும்புத்திரைக்குப் பின்னாலுள்ள சபைக்கு அதிகரித்து வரும் பாடுகளைப் பகிர்ந்து கொண்டு நானும் வேதனையை அனுபவிக்கிறவனாயிருக்கிறேன். இந்த பாடுகளெல்லாவற்றையும் நான் கடந்து வந்திருப்பதால் அவைகளை நான் இப்போது பின்னோக்கிப் பார்க்க முடிகிறது.

1959-ம் ஆண்டு ருமேனியாவிலுள்ள கலஜ் சிறைச்சாலையில் லாசரோவி என்ற கைதியோடு இருந்தேன். அவர் ஒரு சிறு பெண்ணை கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு இருந்தார். அவருக்கு வயது முப்பதுதானிருக்கும். ஆனால் ஒரே இரவுக்குள்ளாக அவர் அனுபவித்த சித்திரவதைகளினால் அவருடைய மயிர் வெண்மையாய் போய் வயது முதிர்ந்தவரைப் போலக் காணப்பட்டார். அவருடைய கைவிரல்களில் நகங்கள் இல்லை. அவர் செய்யாத குற்றத்தை ஒப்புக் கொள்ள வைக்க அந்த நகங்கள் அகற்றப்பட்டு இருந்தன. ஒரு வருடகால சித்திரவதைகளுக்குப் பின் அவருடைய குற்றமற்ற நிலைமை வெளிப்பட்டது. அதன் பின் விடுதலை செய்யப்பட்டாலும், அதில் அவர் அடைந்த மேன்மை ஒன்றுமில்லை. ஒரு நொறுங்குண்ட மனிதனாகவே அவர் தன் எஞ்சிய காலத்தை கழிக்க நேரிட்டது.

ரஷ்ய செய்தித்தாள்கள் அங்குள்ள விசுவாசிகளுக்கு விரோதமாக வெளியிடும் குற்றச்சாட்டுகளைப்பார்த்து மற்றவர்கள் நகைக்கலாம. ஆனால் அந்தக் குற்றச்சாட்டுகளினால் என்ன விபரீதங்கள் நேரிடும் என்று எனக்குத் தெரியும்.

கம்யூனிச முகாமகளில் துன்புறுத்தப்பட்டவர்களின் வேதனைகளை நினைத்து நான் நடுங்குகிறேன். அவர்களை சித்திரவதை செய்கிறவர்களின் நித்திய ஆக்கினையைக்குறித்தும நான் நடுங்குகிறேன். உபத்திரவப்படும் தங்கள்

உடன் சகோதரர்களுக்காக அழுது புலம்பாத வெளிநாட்டி லுள்ள கிறிஸ்தவர்களுக்காகவும் நான் நடுங்குகிறேன். என் னுடைய இதயத்தின் ஆழத்திலே என் சொந்த திராட் சைத் தோட்டத்தின் அழகைப் பாதுகாத்துக் கொண்டு பெரிய போராட்டங்களில் ஈடுபடாமலிருக்க நான் விரும்புவ துண்டு. எங்கேயாவது அமைதியாக இளைப்பாற எனக்கு அதிக ஆசைதான். ஆனால் அது கூடாத காரியம்.

கம்யூனிசமானது சுறுசுறுப்பாய் வேலை செய்கிறது. கம்யூனிஸ்டுகள் திபெத்தை ஆக்கிரமித்தபோது ஆவிக் குரிய காரியங்களில் அக்கரையுள்ளவர்களை மாத்திரமே தீர்த்துக் கட்டினார்கள். எங்கள் தேசத்தில், அங்குள்ள உண்மைக்குத் தங்களை விலக்கின எல்லோருக்கும் அவர்கள் முடிவு கட்டினார்கள். வெளி நாட்டினரை ஏமாற்றுவதற் காக ஒரு சில சபைக் கட்டிடங்களை மாத்திரம் விட்டுவிட்டு மற்ற எல்லாவற்றையும் மாற்றிப்போட்டார்கள். இந்நிலை யில் நான் அமைதியையும் இளைப்பாறுதலையும் தேடுவேனா னால், அது என் ஆத்துமாவுக்கு அபாயத்தையே தேடிக் கொடுக்கும். என் சரீரத்துக்கு அபாயத்தை விளைவிக்கக் கூடியதாயிருந்தாலும், நான் இந்த போராட்டத்தை போரா டியே தீரவேண்டும்.

மேல் நாடுகளுக்கு நான் வந்ததிலிருந்து பல வேத சாஸ் திர கலாசாலைகளைச் சுற்றிப் பார்த்திருக்கிறேன். ஒன்றுக்கும் உதவாத காரியங்களை குறித்த தர்க்கங்களையும், உபதேசங் களையுமே நான் அங்கு கேட்டேன்.

வேதாகமத்திலுள்ள சிருஷ்டிப்பின் சரித்திரமும், ஆதாம், ஜலப்பிரளயம், மோசேயின் அற்புதங்கள் இவைகள் யாவும் பொய் என்றும், தீர்க்கதரிசனங்கள் யாவும் காரியங்கள் நிகழ்ந்தபின் எழுதப்பட்டவைகள் என்றும், உயிர்த்தெழுத லும் இயேசுவின் கன்னிப்பிறப்பும் கட்டுக்கதை என்றும், அவ்ருடைய எலும்புகள் எங்கேயோ ஓர் இடத்தில் கல் லறையில் வைக்கப்பட்டிருந்தன என்றும், நிருபங்கள் போலி யானவை யென்றும், வெளிப்படுத்தின விசேஷம் ஒரு பயித்தி யக்காரனின் புத்தகமாயிருக்கிறதென்றும், ஆனால் மற்ற

படி வேத புத்தகம் ஒரு பரிசுத்த புத்தகம்தான் என்றும் வேத சாஸ்திரத்தின் மாணுக்கர் கற்றதைக் கண்டேன். ஒரு கம்யூனிச செய்தித்தாளிலிருப்பதை விட அதிக பொய்கள் ஒரு பரிசுத்த புத்தகத்தில் இருப்பதாக அவர்கள் எண்ணம் போலும்! இதுதான் வேத சாஸ்திர கல்லூரிகளில் பயின்ற காலத்தில் தற்கால சபையின் தலைவர்கள் கற்றுக் கொண்ட பாடம்: இந்த மனப்பான்மையோடுதான் அவர்கள் இப்போதும் வாழ்கிருர்கள். இவர்களிடமிருந்து நாம் என்ன மேன்மையை எதிர்பார்க்க முடியும்?

ஆனுல் கம்யூனிசத்தைப்பற்றி தப்பான அபிப்பிராய முள்ள சபையின் தலைவர்கள் மற்ற அநேக காரியங்களில் சரியாகவும், தனிப்பட்ட முறையில் உண்மையுள்ளவர்களாக வும் இருக்கலாம். அவர்கள் எதில் தவறுதலுள்ளவர்களாக இருக்கிருர்களோ, அதிலிருந்து அவர்கள் மாறவும் கூடும்.

ஒரு சமயத்தில் நான் ருமேனியாவில் ஒரு புராதன சபையின் அத்தியட்சரை சந்தித்தேன். அவர் தன்னுடைய ஆடுகளை புறக்கணித்து விட்டு கம்யூனிஸ்டுகளின் ஆளாக மாறினவர். நான் என் இரு கரங்களால், அவருடைய கரத்தைப் பற்றிக்கொண்டு கெட்ட குமாரனின் உவமையை அவருக்கு சொன்னேன். அவருடைய தோட்டத்தில் நாங்கள் செலவழித்த மாலைப்பொழுது அது. நான் அவரைப்பார்த்து, ''ஒரு பாவி திரும்பும்போது எத்தனை அன்போடு தேவன் அவனை ஏற்றுக்கொள்கிருர் பாரும்! ஓர் அத்தியட்சர் மனந்திரும்பினுலும் கூட அவர் அவரை மகிழ்ச்சியாய் ஏற்றுக் கொள்ளுகிருர்'' என்று கூறினேன். அவரோடு சில கிறிஸ்தவப் பாட்டுகளைப் பாடினேன். அந்த மனிதன் அன்று மனந்திரும்பினுர்.

இன்னொரு சமயம், ஒரு புராதன சபை பாதிரியார் இருந்த அதே இருட்டறை சிறையிலே நானும் இருந்தேன். விடுதலை பெறும் நோக்கத்தோடு அவர் ஒரு சில நாத்திக விரிவுரைகளை எழுதினுர். நான் அவரோடு பேசினேன். அதன் பின் அச்சிறையிலிருந்து விடுதலை செய்யப்படா விட்டாலும்

பரவாயில்லை என்று, தான் எழுதின விரிவுரைகளைக் கிழித் தெறிந்து விட்டார்.

கிறிஸ்தவ விசுவாசமானது கம்யூனிசத்துக்கு விரோத மாக மாத்திரமல்ல, பாவத்தின் எல்லா கிரியைகளுக்கும் விரோதமாக போராட வேண்டியிருக்கிறது. கம்யூனிச மாகிய இந்த ஒரே பிரச்சனை மாத்திரம் விசுவாசிகளாகிய நம் முன் இல்லை. ஆனால் தற்காலத்தில் கம்யூனிசமானது கிறிஸ்தவ விசுவாசத்திற்கு எதிராகக் காணப்படும் பயங்கர விரோதியாகவும், மாபெரும் அபாயமாகவும் இருக்கிறது. அதற்கு விரோதமாக போராடுவதில் விசுவாசிகளாகிய நாம் தோளோடு தோள் சேர்த்து ஒன்றுபடுவது மிகவும் அவசியம்.

மறுபடியும் நான் கூறுகிறேன்! கிறிஸ்துவைப் போலா வதே மனிதனின் இலக்கு. இதைத் தடை செய்வதே கம்யூ னிஸ்டுகளின் முக்கியக் குறிக்கோள். அவர்கள் எப்பொழுதும் தெய்வீகக் காரியங்களுக்கு எதிரொளிகளாகவே விளங்கு கிறார்கள். மரணத்துக்குப் பின் மனிதன் உப்பாகவும், தாது பொருட்களாகவும் மாறிவிடுகிறான் என்று நம்புகிறார்கள். முழு வாழ்க்கையும் ஏதோ ஒரு பொருளைப்போல இந்த உலகத்தில் காணப்பட்டு முடிந்து போகவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.

நாம் தனிப்பட்ட சுயாதீனமுள்ளவர்களாய் வாசம் பண்ணுவதையே இயேசு விரும்புகிறார். ஆகவே நமக்கும் கம்யூனிசத்துக்கும் எவ்வித சமரசமும் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. கம்யூனிஸ்டுகளும் அதை அறிவார்கள். ''நவுக்கா இரிலிஜியா'' (விஞ்ஞானமும் மதமும்) என்ற பத் திரிகையில் ''மார்க்க விசுவாசமானது கம்யூனிசத்தோடு ஒத்துப் போகாது. அதற்கு அது எப்பொழுதும் எதிராகவே இயங்கும். கம்யூனிஸ்டு கட்சியின் முக்கிய சாராம்சம், விசு வாசத்துக்கு, சாவுக்கேதுவான அடி கொடுக்கப்பட வேண்டும் என்பதே. மக்கள் என்றென்றும் விசுவாச மார்க்கத்தின் கோட்பாடுகளிலிருந்து விடுதலை அனுபவிக்கத் தக்கதாக ஒரு நாத்திக சமுதாயத்தை படைப்பதே அதன் குறிக்கோள்'' என்று எழுதப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவ விசுவாசம் இப்படிப்பட்ட கம்யூனிசத்தோடு இயங்க முடியும்?

# அத்தியாயம் ஐந்து

மறுபடியுமாக இப்பொழுது நான் அந்தரங்க சபையை பற்றிப் பேசுகிறேன். அது மிகவும் கடினமான நிலைமைகளில் கிரியை செய்து வருகிறது. கம்யூனிச தேசங்களிலெல்லாம் நாத்திகமானது தேசிய மதமாக விளங்குகிறது. வயதான வர்கள் நம்புகிறதை அவர்கள் அவ்வளவாய் பொருட்படுத்து கிறதில்லை. ஆனால் பிள்ளைகளையும், வாலிபர்களையும் அவர்கள் விசுவாசிக்க விடுகிறதில்லை. இந்தத் தேசங்களிலுள்ள வானொலி, டெலிவிஷன், படக்காட்சி, நாடகசாலை, பத்திரி கைகள் புத்தக வெளியீட்டு நிலையங்கள் யாவும் தேவன் மேல் வைக்கும் விசுவாசத்தைத் தகர்த்தெரியும் நோக்கத்தோடு இயங்கி வருகின்றன.

அந்தரங்க சபைக்கு நாட்டின் மொத்த மக்கட்தொகை யின் மாபெரும் சக்தியை எதிர்க்கக்கூடிய ஏதுக்கள் அவ்வள வாக இல்லை. ரஷ்யாவின் அந்தரங்க சபையின் ஊழியர் களுக்கு வேத சாஸ்திர பயிற்சி எதுவும் கிடையாது. முழு வேதாகமத்தை படித்தறியாத ஊழியர்களும் அங்குண்டு. ஆனாலும் அவர்களைப் போல உண்மையுள்ள ஊழியரை நான் வேறெங்கும் கண்டதில்லை.

முதல் நூற்றாண்டுகளின் சபையைப் போலவே அந்த ரங்க சபை இருக்கிறது. உலகத்தை கிறிஸ்துவுக்காக தலை கீழாக மாற்றினவர்களுக்கு, எந்த வேத சாஸ்திர கல்லூரி இருந்தது? அவர்கள் எல்லோரும் வாசிக்க அறிந்திருந்தார் களா? வேதாகமங்களை அவர்கள் எங்கிருந்து பெற்றார்கள்? தேவன் அவர்களோடு பேசினார்.

அந்தரங்க சபையினராகிய எங்களுக்கு அத்தியட்சால யங்கள் கிடையாது. ஆனால் நாங்கள் இரகசியமாக காடுகளில் கூடினபோது உயரக் காட்சி அளித்த பரலோகத்தின் வானத் தை விட எந்த அத்தியட்சாலயமும் அழகாயிருக்குமோ? தங் கள் அழகிய குரல்களால் இனிமையாக பாடும் பறவைகள் வாத்தியக் கருவியின் இடத்தை எடுத்துக் கொண்டன. பூக் களிலிருந்து கமழும் நறுமணம் தேவனுக்கு நாங்கள் ஏறெடுக்

கும் தூபமாக காணப்பட்டது. சமீப காலத்தில் சிறைச்சாலையிலிருந்து தப்பின ஓர் இரத்த சாட்சியின் அசுத்தமான உடை பாதிரியாரின் அங்கிகளை விட அதிக கவர்ச்சியுள்ளதாக இருந்தது. சந்திரனும், நட்சத்திரங்களும் மெழுகு வர்த்திகளாக இருந்தன. தேவ தூதர்கள் அவைகளைக் கொழுத்தின பணிவிடைக்காரராயிருந்தனர்.

இந்தச் சபையின் அழகை என்னால் விவரிக்க இயலாது.

அடிக்கடி கம்யூனிச நாடுகளில் இரகசிய ஆராதனைக்குப் பின் கிறிஸ்தவர்கள் பிடிக்கப்பட்டு சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். தன் மணவாளனிடமிருந்து பெற்றுக் கொண்ட ஒரு விலையேறப்பெற்ற ஆபரணத்தை ஒரு பெண் எத்தனை மகிழ்ச்சியோடு அணிந்து கொள்வாளோ, அத்தனை மகிழ்ச்சியோடு அங்கு கிறிஸ்தவர்கள் விலங்குகளைத் தரித்துக் கொள்கிறார்கள்.

சிறைச்சாலையின் தண்ணீர்கள் அமர்ந்திருக்கின்றன. தேவனுடைய சித்தத்தையும், அவருடைய அழைப்புகளையும் நீ அங்கு பெற்றுக் கொள்வதால், அந்த இடத்தை விட்டு அரச மாளிகைக்குக் கூட போக நீ விரும்பமாட்டாய்.

உண்மையான மன மகிழ்ச்சியுள்ளவர்களாய்க் களி கூரும் கிறிஸ்தவர்களை, வேதாகமத்திலும், அந்தரங்க சபையிலும், சிறைச்சாலையிலும்தான் நான் பார்த்திருக்கிறேன். அந்தரங்க சபையானது அதிகமாக நெருக்கப்பட்டாலும், இரகசிய போலீஸ் இலாக்காக்களிலும், அரசாங்க அதிகாரிகளின் மத்தியிலும் கூட அதற்கு அநேக நண்பர்கள் இருக்கின்றனர். சில சமயங்களில் இந்த இரகசிய விசுவாசிகள் அந்தரங்க சபையை பாதுகாக்கிறார்கள்.

சமீபத்தில் ரஷ்ய பத்திரிக்கைகள், ''வெளியரங்க அவிசுவாசிகள்'' எண்ணிக்கையில் பெருகி வருகிறார்கள் என்று பிராது பண்ணியிருந்தன. இந்த மனிதர் கம்யூனிச அதிகாரத்திலுள்ள அரசாங்க அலுவலகங்களிலும், விளம்பர துறைகளிலும், மற்றும் எல்லா இடங்களிலும் வேலை செய்யும் கணக்கற்ற ஆண்களும் பெண்களுமாவர்.

இவர்கள் வெளியரங்கமாக கம்யூனிஸ்டுகளாக இருந்து உட்பிரகாரமாக இரகசிய விசுவாசிகளாகவும், அந்தரங்க சபையின் அங்கத்தினர்களாகவும் இருக்கிறார்களென ரஷ்ய பத்திரிகைகள் விளக்கம் கூறியிருந்தன. கம்யூனிச விளம்பர இலாக்காவில் பணிபுரிந்த ஓர் இளம் பெண்ணைப் பற்றிய செய்தி ஒன்றை, கம்யூனிச செய்தி ஸ்தாபனம் வெளியிட்டிருந்தது.

அவள் தன் வேலையை முடித்துவிட்டு தன் வீட்டுக்கு திரும்பி வந்து, வேலையிலிருந்து வந்த தன் கணவனை சந்திப்பாளென்றும், சாப்பாடு முடிந்த பிறகு அவர்கள் இருவரும் தங்கள் கட்டிடத்தின் மற்ற வீடுகளிலுள்ள வாலிபப் பிள்ளைகளைக் கூட்டி இரகசிய வேதபாட வகுப்புகளையும், ஜெபக் கூட்டங்களையும் நடத்துவார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டிருந்தார்கள். கம்யூனிச உலக முழுவதிலும் இந்த காரியம்தான் நடந்து வருகிறது. ஒவ்வொரு கம்யூனிச தேசத்திலும் இப்படிப்பட்ட ஆயிரமாயிரம், ''வெளியரங்க அவிசுவாசிகள்'' இருந்து வருகின்றனர்.

இவர்கள் மற்றவர்கள் தங்களை கவனிக்கும்படி பார்வைக்குத் தெரியும் சபைக்கட்டிடங்களுக்கு போய் அங்கு நீர் சுரந்த சுவிசேடத்தை மாத்திரம் கேட்பது அவ்வளவு ஞானமுள்ள செய்கையல்ல என்று எண்ணி, அதற்கு பதில் அரசாங்கத்தின் உத்தரவாதமான அதிகாரமுள்ள தங்கள் ஸ்தானங்களில் தரித்திருந்து கொண்டு, அங்கிருந்து அமைதியான முறையிலும் வல்லமையான முறையிலும் கிறிஸ்துவுக்காக சாட்சி பகர்ந்து வருகிறார்கள். அந்தரங்க உண்மையுள்ள சபையானது, ஆயிரக்கணக்கான அங்கத்தினர்களை அப்படிப்பட்ட இடங்களில் உடையதாக இருக்கிறது. அவர்கள் உள்ளறைகளிலும், கிடங்குகளிலும், வீடுகளிலும், விடுதிகளிலும் இரகசிய கூட்டங்கள் நடத்தி வருகிறார்கள்.

ரஷ்யாவில், குழந்தைகள் ஞானஸ்நானம் சரியா, அல்லது பெரியவர்கள் ஞானஸ்நானம் சரியா என்பதை பற்றிய சர்ச்சையையும், போப்பின் அதிகாரத்தைப் பற்றிய சர்ச்சையையும் ஒருபோதும் ஒருவரும் கேட்டிருக்கமாட்

டார்கள். அவர்களால் தீர்க்கதரிசனங்களுக்கு சரியான விளக்கம் தரவும் முடியாது. ஆனாலும் அநேக சமயங்களில் அவர்கள் நாத்திகர்களுக்கு தேவன் இருக்கிறார் என்ற சத்தியத்தை மிகவும் அழகாக நிரூபித்து காண்பிக்கிறதை நான் கண்டிருக்கிறேன்.

அவர்கள் நாத்திகர்களுக்கு கொடுக்கும் பதில் மிகவும் இலகுவானது. ''நீ அநேகவிதமான நல்ல பதார்த்தங்களால் நிரம்பியுள்ள விருந்துக்கு அழைக்கப்பட்டிருக்கும் போது, அதை ஒருவரும் சமைத்திருக்கவில்லை என்று யாராவது கூறினால் உன்னால் அதை நம்ப முடியுமா? இயற்கையானது நமக்கு ஒரு பெரிய விருந்தை ஆயத்தப்படுத்தி இருக்கிறது. தக்காளி, ஆப்பிள், பால், தேன் எல்லாவற்றையும் அது நமக்கு அளிக்கிறது. மனித வர்க்கத்திற்கு இவைகளையெல்லாம் யார் உண்டாக்கினது? இயற்கைக்கு கண் கிடையாது. தேவன் இல்லை என்று நீ நம்பினால் இவ்வளவு அதிகமான அளவில் நம் தேவைக்கேற்ற பலதரப்பட்ட காரியங்களை உண்டு பண்ணுவதில் கண் இல்லாத இயற்கை எப்படி சித்தி பெற்றது?'' என்று அவர்கள் கம்யூனிஸ்டுகளையே கேள்வி கேட்டு திகைக்க வைத்து விடுவார்கள்.

நித்திய ஜீவன் உண்டு என்பதையும். அவர்கள் நிரூபிக்கக் கூடும். ஒரு சமயத்தில் ஒரு நாத்திகனிடத்தில் ஒரு விசுவாசி கீழ்கண்டவைகளைக் கூறி அவனிடம் மன்றாடினதை நான் கேட்டிருக்கிறேன். ''தாயின் கர்ப்பத்தில் இருக்கும் வித்து பேசக் கூடியதாயிருக்கிறது என்று வைத்துக் கொள்ளுவோம். அதைப் பார்த்து இந்த கர்ப்பகாலம் மிகவும் குறுகியது, அதற்குப் பின் தான் உண்மையான நீண்ட வாழ்க்கை ஆரம்பமாகிறது என்று நீ கூறினால், அது என்ன பதில் கொடுக்கும்? நாத்திகர்களாகிய உங்களிடத்தில் நாங்கள் நரகத்தைப் பற்றியும், பரதீசைப் பற்றியும் பேசும்போது நீங்கள் என்ன பதில் கொடுக்கிறீர்களோ அதைத்தான் அதுவும் கொடுக்கும். தாயின் கர்ப்பத்திலிருக்கிற வாழ்க்கையைத் தவிர வேறே வாழ்க்கை கிடையாது. மற்றதெல்லாம் மதசம்பந்தப்பட்ட மதிகேடு என்று தான் அது கூறும்.

ஆனுல் அந்த வித்து நன்ருக யோசிக்குமானுல் தனக்குள்ளே அது என்ன சொல்லிக் கொள்ளும்? 'இங்கே எனக்கு கைகள் முளேக்கின்றன. அவைகள் இப்போது எனக்கு தேவையில்லே. அவைகளே நீட்ட கூட என்ஞல் முடிகிறதில்லே. பின்னே ஏன் அவைகள் வளருகின்றன ? ஒருவேளே வரப்போகிற காலத்தில் நான் அவைகளினுல் வேலே செய்வதற்கேதுவாக அவைகள் முளேக்கலாம். கால்களும் வளருகின்றன. ஆனுல் இப்பொழுது அவைகளே நான் என் மார்போடு சேர்த்துதான் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஏன் அவைகள் வளருகின்றன? ஒருவேளே ஒரு பெரிய உலகத்தின் வாழ்க்கை பின்னுல் வரலாம், அப்போது நான் நடக்க வேண்டியிருக்கும். சுற்றிலும் இருட்டாக இருந்தாலும், இப்போது எனக்கு தேவைப்படாவிட்டாலும், எனக்கு கண்கள் வளருகின்றன. எனக்கு ஏன் கண்கள் இருக்கின்றன? ஒருவேளே வெளிச்சமும், நிறமுமுள்ள உலகம் பின்னுல் வரலாம்' என்று தனக்குள் சொல்லிக்கொள்ளும்.

இவ்விதமாக அந்தக் கர்ப்பவித்து தன்னுடைய சொந்த முன்னேற்றத்தையும், வளர்ச்சியையும்பற்றி சற்று யோசிக்குமாஞல், தாயின் கர்ப்பத்துக்கு வெளியேயுள்ள காரியங்களேப் பார்த்திராமலேயே அதைப்பற்றிய அறிவுள்ளதாக இருக்கும். அப்படியே நாமும் இருக்கிருேம். நாம் வாலிபர்களாக இருக்கும்போது நமக்கு நல்ல வலிமை உண்டு. ஆனுல் அதை சரியான முறையில் உபயோகிக்க நமக்கு மனதில்லே. நாம் அறிவிலும், ஞானத்திலும், வளர்ந்து வயோதிபர்களாகும் போது சாவு நம்மைத் தட்டிச் சென்று விடுகிறது. இனிமேல் அவைகளே உபயோகிக்கக் கூடாமல் போகும்படியான நிலேமையில் நாம் ஞானத்திலும் அறிவிலும் வளர்ந்து என்ன பயன்? ஒரு கர்ப்பவித்துக்கு ஏன் கைகளும், கால்களும், கண்களும் வளருகின்றன? பின் தொடரக் கூடிய ஒன்றுக்காகவே அவைகள் இப்பொழுது வளருகின்றன. நம்மை பொருத்த மட்டிலும் அவ்விதமாகவே காணப்படுகிறது. இங்கே நாம் வரப்போகிற ஒரு வாழ்க்கைக்காக அனுபவத்திலும், அறிவிலும், ஞானத்திலும் வளருகிருேம். மர

ணத்திற்குப் பின்னல் மேலான நிலைமையில் உழைக்கும்படி நாம் ஆயத்தப்படுகிறோம்.

இயேசு ஒருபோதும் இருந்ததில்லை என்பதே கம்யூனிச அதிகாரத்துவ போதனையாகும். இதற்கு அந்தரங்க சபை ஊழியர்கள் கீழ்க்கண்ட இலகுவான பதிலை அளித்து விடுவார்கள். "உன்னுடைய சட்டைப்பையில் என்ன செய்தித்தாள் வைத்திருக்கிறாய்? அது இன்றைய 'பிராவிதா'வா? அல்லது நேற்றைய 'பிராவிதா'வா அதை நான் பார்க்கட்டும். ஆ! ஜனவரி 14-ம்தேதி 1964. 1964 எதிலிருந்து கணக்கிடப் படுகிறது? இல்லாதவரென எண்ணப்படும் ஒருவரிலிருந்தா? அவர் ஒருபோதும் இருந்ததில்லை என்று நீ கூறுகிறாய். ஆனால் நீ அவருடைய பிறப்பிலிருந்தே வருடங்களை கணக்கிடுகிறாய். காலமானது அவருக்கு முன்னலேயே இருக்கிறது. ஆனல் அவர் வந்தபோது அதற்கு முன்னுள்ளவைகளெல்லாம் பிரயோஜனமற்றவை என்றும், உண்மையான காலம் அப்பொழுதே ஆரம்பித்தது என்றும் மனித வர்க்கத்துக்குத் தென்பட்டது. உங்களுடைய கம்யூனிச செய்தித்தாளே கிறிஸ்துவின் சரித்திரம் ஒரு கட்டுக்கதையல்ல என்பதற்கு ஒரு நிரூபணமாயிருக்கிறது" என்பதே.

வெளிநாடுகளிலுள்ள பாதிரிமார் தங்கள் சபையிலுள்ளவர்கள் எல்லாரும் கிறிஸ்தவ விசுவாசத்தின் முக்கிய சத்தியங்களை ஆமோதிக்கிறவர்களாயிருக்கிறார்களென்று எண்ணிக் கொண்டிருந்தாலும் அப்படி இருப்பதில்லை. தற்காலத்தில் நம்முடைய விசுவாசத்தின் சத்தியத்தை நிரூபிக்கிற பிரசங்கங்களைக் கேட்பது மிகவும் அபூர்வமாயிருக்கிறது.

ஆனல் இரும்புத் திரைக்குப் பின்னல் அதைக் கற்றுக் கொண்டிராத மனிதர் தங்களால் ஆதாயப்படுத்தப்பட்டவர்களுக்கு ஒரு செம்மையான அஸ்திபாரத்தை அளிக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.

வெளியரங்கமான சபைகளிலுள்ள போதகர்கள்அநேகர் கம்யூனிஸ்டுகளால் தங்களுக்கு அளிக்கப்பட்ட வரம்புக்கு மிகவும் அதிகமாக இரகசிய ஊழியங்களை செய்து வருகிறார்கள்.

கம்யூனிஸ்டுகளோடு ஒத்து இயங்கும் சபையாகிய அங்கீகாரம் பெற்ற சபையைப் பற்றிய நீண்டதொரு சரித்திரம் உண்டு. ரஷ்ய சோஷலிச இயக்கத்துக்குப் பின்னுலேயே அது செர்கியுஸ் என்ற பாதிரியின் தலைமையில் ''வாழ்கிற சபை''யோடு ஆரம்பித்தது. இந்த ''வாழ்கிறசபை'' அந்த சமயத்தில் வெளியரங்கமாக மாஸ்கோவில் கீழ்கண்டவாறு பிரகடனம் செய்தது. ''சபையை மறுபடியும் கட்டுவது எங்கள் நோக்கமல்ல. ஆனால் அவை இடித்துப் போட்டு எல்லா மார்க்கத்தையும் விசுவாசத்தையும் வேரோடு அழிப்பதே எங்கள் நோக்கம்.'' ஒரு சபைக்குள் என்ன அழகான காலத்திட்டம்! இப்படிப்பட்ட செர்கியுஸ்கள் எல்லா தேசங்களிலும் உண்டு.

ஹங்கேரியில் பலோக் என்ற கத்தோலிக்க பாதிரி இப்படிப்பட்டவராக இருந்தார். இவரும் மற்றும் சில புராட்டஸ்டண்டு பாதிரிகளும், அந்த நாடு முழுவதும் கம்யூனிஸ்டுகளின் பூரண ஆளுகைக்குள் கொண்டுவரப்பட உதவி செய்தார்கள் ருமேனியாவில் பாரம்பரிய சபையின் பாதிரியாகிய புர்டுசியா என்பவரின் உதவியாலேயே கம்யூனிஸ்டுகள் அதிகாரத்துக்கு வந்தார்கள். புதிய கம்யூனிச அரசாங்கம் ஸ்தாபிக்கப்படும் நேரத்தில் விஷின்ஸ்கி என்ற சோவியத் இராஜ்ஜிய காரியதரிசி மக்களைப்பார்த்து, ''இந்தஅரசாங்கம் ஓர் உலகப் பரதீசை உண்டுப் பண்ணப் போவதால் உங்களுக்கு இனி பரலோக பரதீசு அவசியப்படாது'' என்று கூறின போது, இந்தப் பாதிரியார் அவர் அருகில் நின்று கொண்டு அவர் பேசினதை ரசித்துப் புன்முறுவல் செய்தார்.

ரஷ்யாவிலுள்ள ஆர்ச் பிஷப் நிக்கோடிம், அரசாங்கத்துக்கு ரகசிய தகவல்களைத் தெரிவிப்பவராக இருக்கிறுரென்று தகவல் கிடைத்திருக்கிறது. ரஷ்ய இரகசியப் போலீசை சேர்ந்த மேஜர் டெரியாபின் என்பவர், ''இந்த நிக்கோடிம் தங்களுடைய கையாள்'' என்று கூறியுள்ளார்.

கிறிஸ்தவர்களின் எல்லா பிரிவினரின் மத்தியிலும் காணபடும் நிலைமை இதுவே. ருமேனிய பாப்திஸ்துகளின் தற்போதைய தலைமைத்துவம் மிகுந்த பலாத்காரத்தோடு

கொண்டு வரப்பட்டுள்ளது. உண்மையான கிறிஸ்தவர்களை அது புறக்கணிக்கிறது. ரஷ்யாவிலும் பாப்திஸ்துகளின் தலைமைத்துவம் நடப்பிக்கும் காரியம் இதுவே. ருமேனியா விலுள்ள ஏழாம் நாள், ஒய்வுநாள்காரரின் தலைவராகிய டாசிசி தாமே என்னைப் பார்த்து கம்யூனிஸ்டுகள் அதிகாரத் துக்கு வந்த முதல் நாளிலிருந்து தாம் கம்யூனிச இரகசிய போலீசுக்கு தகவல் கொடுப்பவராக இருந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்.

அநேக ஆயிரக்கணக்கான சபைக் கட்டிடங்களை கம்யூ னிஸ்டுகள் மூடிவிட்டாலும், எல்லாவற்றையும் மூடிப் போ டாமல் கிறிஸ்தவர்களையும், கிறிஸ்தவ விசுவாசத்தையும் முற்றிலும் அழித்துப் போடும் நோக்கத்தோடு கிறிஸ்தவர் களின் நடவடிக்கைகளை உளவுப் பார்க்கவும், அவர்களைத் தங்கள் வசப்படுத்தவும் உதவக்கூடிய ஜன்னல்களாயிருக்கத் தக்கதாக சில சபைக் கட்டிடங்களை அரசாங்க அங்கீகாரம் கொடுத்து திறந்து வைத்திருக்கிறார்கள். சபை கூடும் இடத்தை அழிக்காமல் விட்டுவிட்டு கிறிஸ்தவர்களை வசப் படுத்தவும், சுற்றுலாவுக்கு வரும் ஏனைய நாட்டினரை ஏமாற்றவும், கம்யூனிஸ்டுக்களின் கருவிகளாக அவைகளை உபயோகத்தில் வைத்திருப்பது சிறந்தது என்பது அவர்கள் எண்ணம்.

சபையின் அங்கத்தினரைப்பற்றி இரகசிய போலீசாரி டம் தகவல் தெரிவிக்க நான் சம்மதித்தால், அப்படிப்பட்ட ஒரு சபையின் பொறுப்பை என்னிடம் ஒப்புவிப்பதாக என் னிடமே வந்து அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் அந்த ரங்க சபையானது, அர்த்தமுள்ள வல்லமை பெற்ற சுவி சேடத்தை எல்லா சிருஷ்டிக்கும் அறிவிக்கும் ஜீவனுள்ள சபைக்குப் பதிலாக மனிதரால் ஆளுகை செய்யப்படும் பெயரளவிலுள்ள சபைகளை ஒருபோதும் அங்கீகரிக்காது.

அங்கீகரிக்கப்பட்ட சபைகளிலும், அநேக பயங்கரமான தலைவர்கள் இருந்தும்கூட, உண்மையான ஆவிக்குரிய வாழ்க் கையை நான் காண முடிகிறது. பாரம்பரிய சபையில் நிகழ்த்தப்படும் பிரசங்கங்கள் கம்யூனிஸ்டுகளை முகஸ்துதி செய்வதாக இருந்தாலும், அதன் உபயோகத்திலுள்ள கிறிஸ்

துவின் பாடுகளைப் பற்றிய பாடல்கள் அந்தச் சபையின் அங் கத்தினர்களின் இதயத்தை போஷிக்கக்கூடியதாயுள்ளது. லுத்தரன் சபையாரும், பிரிஸ்பிட்டீரியன் சபையாரும், மற் றும் பிராட்டஸ்டண்டுகளும் பழைய கீதங்களையே பாடு கிருர்கள்.

உளவாளிகளின் பிரசங்கங்களிலும் வேத வாக்கியங்கள் சம்பந்தப்பட்ட ஏதாவது ஒன்று கலந்தே இருக்க வேண்டி யிருக்கிறது. விசுவாச துரோகிகளென அறியப்பட்டவர் களும், மற்றவர்களின் மனந்திரும்புதலை இரகசிய போலீசாரி டம் அறிவிப்பவர்களுமான அப்படிப்பட்டோரின் தீட்டான பிரசங்கங்களினுல் கூட மக்கள் இரட்சிக்கப்படுகிருர்கள். இவர்கள் தங்கள் விசுவாசத்தை எந்த மனிதனுடைய பிரசங்கத்தின் மூலம் பெற்ருர்களோ அவனிடத்திலிருந்தே அதை மறைக்க வேண்டியிருக்கிறது. இது தேவனுலுண் டான அதிசயமேயாகும். லேவியராகமம் 11-ம அதிகாரத் தில் கூறப்பட்டுள்ள ''மேற் சொல்லியவைகளின் உடலில் யாதொன்று, (அதாவது மோசேயின் பிரமாணத்தின்படி தீட்டாக எண்ணப்பட்ட பிராணிகளின் உடல்கள்) விதைத் தானியத்தின் மேல் விழுந்தால் அது தீட்டுப்படாது'' என்ற வச்னத்தை இது எவ்வளவாய் ஒத்திருக்கிறது !

எல்லா அங்கீகரிக்கப்பட்ட சபையின் தலைவர்களும், எல்லா அரசாங்க தலைமை அதிகாரிகளும் கம்யூனிஸ்டுகளின் ஆட்கள் என்று நாம் கூறிவிட முடியாது. அந்தரங்க சபை யிலுள்ள அங்கத்தினர் சிலர் தங்களை மறைத்துக் கொண்டி ருக்க நேரிட்டாலும், அவர்களில் பலர் அங்கீகாரம் பெற்ற சபைகளில் பெயர் பெற்றவர்களாயிருக்கிருர்கள்.

கிறிஸ்தவ விசுவாசமானது மெத்தையில் படுத்திருக்கும் வாழ்க்கையல்ல வென்றும், அது ஒரு போராடும் விசுவாச மென்றும் அவர்கள் நிரூபித்து வருகிருர்கள். இரகசிய போலீ சார் ருமேனியாவிலுள்ள விளாடிமிரேஷ்டி என்ற இடத்தி லுள்ள சாமியார் மடத்தை மூட வந்த போதும், அதைப் போன்று ரஷ்யாவில் மற்றும் பல இடங்களில் அவர்கள் செய்ய முற்பட்ட போதும், அவர்கள் எளிதாக அவைகளை நிறை

வேற்ற முடியவில்லை. கிறிஸ்தவ ஸ்தாபனங்களை அழிக்க எடுக்கப்பட்ட இந்த முயற்சியில் சில கம்யூனிஸ்டுகள் தங்கள் உயிரையும் இழக்க நேரிட்டது.

ஆனாலும் அங்கீகாரம் பெற்ற சபைகளின் எண்ணிக்கை நாளடைவில் குறைந்துகொண்டே போகிறது. சோவியத் குடியரசு முழுவதும் இன்னும் ஐந்து அல்லது ஆறாயிரம் சபைக் கட்டிடங்கள் இருக்குமென்பது சந்தேகந்தான். அமெரிக்காவில் இதே மக்கட்தொகைக்கு மூன்று லட்சம் சபைக் கட்டிடங்கள் இருக்கின்றன. அதுவுமின்றி இந்தச் சபைக் கட்டிடங்கள் கூட அநேக இடங்களில் மிகவும் சிறிய அறைகளாகவே காட்சியளிக்கின்றன.

அந்நிய நாட்டினர் மாஸ்கோவுக்கு செல்லும்போது அங்குள்ள ஒரே ஒரு கூட்டமான புராட்டஸ்டண்டு சபைக் கட்டடத்தைக் கண்டு ரஷ்யாவிலுள்ள கிறிஸ்தவர்கள் அதிக சுயாதீனமுள்ளவர்களாயிருக்கிறார்களென்று எளிதாக பிரகடனம் செய்து விடுகிறார்கள். "சபைக் கட்டடங்கள் கூட நிரம்பி வழிகின்றன" என்று அவர்கள் மகிழ்ச்சியோடு கூறுகின்றனர். 70 லட்சம் ஆத்துமாக்களுக்கு ஒரே ஒரு புராட்டஸ்டண்டு சபைக் கட்டடம் இருப்பதின் பயங்கரத்தை அவர்கள் காண்கிறதில்லை. சிறிய அறைகளாக காட்சி அளிக்கும் சபைக் கட்டடங்கள் கூட, சோவியத் குடியரசிலுள்ள மக்களில் 100-க்கு 80 பேருக்கு பிரயாணம் பண்ணி போகக்கூடாத அளவு தூரத்திலேயே அமைந்திருக்கின்றன.

இந்தத் திரளான கூட்டத்தார் ஒன்று மறக்கப்பட்டு விடவேண்டும். அல்லது அந்தரங்கமான சுவிசேட பிரபல்ய முறையினால் சந்திக்கப்பட வேண்டும். இந்த இரண்டைத் தவிர வேறு எதையும் நாம் தெரிந்து கொள்வதற்கில்லை.

ஒரு தேசத்தில் கம்யூனிசமானது எவ்வளவு அதிகமாக முன்னேறுகிறதோ, அவ்வளவாக சபையானது அந்தரங்கத்தில் காணப்பட வேண்டியிருக்கிறது. மூடப்பட்ட அங்கீ

காரம் பெற்ற சபைகளின் இடங்களை நாத்திக சங்கக் கூட்டங்கள் எடுத்துக் கொள்ளுகின்றன.

**அந்தரங்க சபையும் நாத்திக இலக்கியங்களும்**

அந்தரங்க சபையானது நாத்திக பிரசுரங்களையும் உபயோகிக்க அறிந்ததாயிருக்கிறது. எலியா எப்படி காகத்தினுல் போஷிக்கப்பட்டானே, அவ்விதமாக அது முதலாவது நாத்திக பிரசுரங்களால் போஷிக்கப்படுகிறது. நாத்திகர்கள், வேதாகம வசனங்களை கேலி செய்து குறை கூறுவதில் தங்கள் முழுத் திறமையையும், வைராக்கியத்தையும் உபயோகிக்கிருர்கள்.

''நகைப்புக்குரிய வேதாகமம்'' (The Comical Bible) ''விசுவாசிகளுக்கும், அவிசுவாசிகளுக்குமுள்ள வேதாகமம்'' (The Bible for Believers and Unbelievers) என்ற புத்தகங்களை அவர்கள் பிரசுரித்தார்கள். வேத வாக்கியங்கள் எவ்வளவு முட்டாள்தனமானது என்று காட்டப்பிரயாசப்பட்டு அநேக வேத வாக்கியங்களை அவர்கள் அவைகளில் கையாண்டிருந்தார்கள். நாங்கள் அதில் எவ்வளவு களிகூர்ந்தோம் தெரியுமா? அவர்களுடைய தர்க்கமானது அவ்வளவு மதிகேடாயிருந்ததால் அதை ஒருவரும் பொருட்படுத்தவில்லை. ஆனுல் அவர்கள் அந்த புத்தகத்தையோ, அநேக லட்சக் கணக்கான பிரதிகள் அச்சிட்டிருந்தார்கள். அவைகள் முழுவதும் வேத வாக்கியங்களால் நிறைந்திருந்தன. அந்த வேதவாக்கியங்கள் கம்யூனிஸ்டுகளின் பரிகாசத்துக்கு உள்ளாகியிருந்தாலும், அவைகள் அப்புத்தகத்தில் பார்ப்பதற்கு சொல்ல முடியாத அழகுள்ளவைகளாக மின்னிக் கொண்டிருந்தன. ஆகவே பிசாசு வேத வாக்கியங்களைக் கூறினுலும், அப்போதும் அவைகள் சத்தியமுள்ளவைகளாகவே நிலைத்திருக்கின்றன.

வேத வாக்கியங்களை பரிகாசத்துக்காக எழுதி வெளியிட்டிருந்த நாத்திக புத்தகங்களை மறுபடியும் அச்சிட்டு விநியோகிக்கும்படி விண்ணப்பித்து கம்யூனிச பிரசுராலயத்துக்கு ஆயிரக்கணக்கான கடிதங்கள் வந்தவண்ணமிருந்தன. இதில் அந்த பிரசுராலயத்துக்கு மிகுந்த

மகிழ்ச்சி! இந்தக் கடிதங்களானது வேத வாக்கியங்களை வேறு வழியில் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பமில்லாமலிருந்த அந்தரங்க சபையினிடமிருந்து வந்ததென்று அவர்களுக்கு எப்படித் தெரியும்?

நாத்திகக் கூட்டங்களை எவ்வாறு உபயோகப்படுத்திக் கொள்வதென்றும் நாங்கள் அறிந்திருந்தோம். கம்யூனிசத்தின் தலைமை பேராசிரியன் ஒருவன், இயேசு ஒரு மந்திரவாதியே தவிர வேறு யாருமில்லை என்று ஒரு கூட்டத்தில் விளக்கிக் கொண்டிருந்தான். அவன் தனக்கு முன் ஒரு ஜாடியில் தண்ணீர் வைத்திருந்தான். அதில் அவன் ஒரு தூளைப் போட்டான். அது சிவப்பு நிறமாயிற்று. உடனே அவன் மக்களைப் பார்த்து, ''இதுதான் முழு அற்புதத்தின் இரகசியம். இயேசு இதைப் போல ஒரு தூளை தன் சட்டையில் மறைத்து வைத்திருந்து, அதை உபயோகித்து தண்ணீரை திராட்சரசமாக மாற்றினதாக பாசாங்கு செய்தார். ஆனால் இயேசுவுக்கு மிஞ்சி என்னால் செய்ய முடியும். நான் திராட்சரசத்தை மறுபடியும் தண்ணீராக மாற்றுவேன்'' என்று கூறி இன்னொரு தூளை அந்த சிவப்பு நீரில் போட்டான். அது வெள்ளையாக மாறியது. இன்னொரு தூளைப் போட்டான். அது மறுபடியும் சிவப்பாகியது.

ஒரு கிறிஸ்தவன் எழுந்து நின்று அவரைப் பார்த்து, ''தலைமை பேராசிரியராகிய தோழரே! நீர் செய்யக் கூடியதை செய்து எங்களை அதிசயத்தினால் ஆழ்த்தி விட்டீர். இன்னும் ஒரு காரியத்தை மட்டும் வேண்டுகிறேன். உம்முடைய திராட்ச ரசத்தில் கொஞ்சம் எடுத்துக் குடித்துப் பாரும்' என்றான். பேராசிரியன் அவனை நோக்கி, ''அதை நான் செய்ய முடியாது. அந்தத் தூள் நஞ்சுள்ளது'' என்றான். அந்தக் கிறிஸ்தவன் மறு மொழியாக ''உமக்கும் இயேசுவுக்குமுள்ள முழு வித்தியாசம் இதுதான். அவர் தம்முடைய திராட்சரசத்தினால் இரண்டாயிரம் வருடங்களாக எங்களுக்கு மகிழ்ச்சியை அளித்து வருகிறார். நீரோ உம்முடைய திராட்ச ரசத்தினால் எங்களுக்கு நஞ்சூட்டுகிறீர்'' என்றான்.

அந்தக் கிறிஸ்தவன் உடனே கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டான். ஆனாலும் இந்த சம்பவத்தைப் பற்றிய செய்தியானது அதிக தூரமாய் பரவி விசுவாசத்தை பெலப்படுத்தினது.

நாங்கள் பெலவீனமுள்ள சிறிய தாவீதுதான். ஆனால் நாத்திகத்தின் கோலியாத்தை விட பெலனுள்ளவர்கள். ஏனெனில் தேவன் எங்கள் பக்கமிருக்கிறார். சத்தியம் எங்களுக்கு சொந்தமாயிருக்கிறது.

ஒரு சமயத்தில் ஒரு கம்யூனிச விரிவுரையாளன் கம்யூனிசத்தைப் பற்றிய உரை ஒன்று நிகழ்த்திக் கொண்டிருந்தான். அந்தத் தொழிற்சாலையிலுள்ள அத்தனை தொழிலாளிகளும் இந்தக் கூட்டத்திற்கு வரும்படி கட்டளை பெற்றிருந்தனர். அவர்களில் அநேகக் கிறிஸ்தவர்களும் இருந்தார்கள். கிறிஸ்துவை விசுவாசிப்பது ம்திகேடு என்றும், மற்றும் அவன் தேவனுக்கு விரோதமாகக் கூறிய எல்லா வாக்குவாதங்களையும் அவர்கள் அமைதியாக உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆவிக்குரிய உலகமும், தேவனும், கிறிஸ்துவும், வருங்காலமும் இல்லையென்றும், மனிதனானவன் ஆத்துமா அற்ற ஒரு பொருள் என்றும் அவன் பேசிக்கொண்டு போனான். பொருளே இப்பொழுது இருக்கிறது என்று மறுபடியும், மறுபடியும் கூறிக் கொண்டிருந்தான்.

ஒரு விசுவாசி எழுந்து நின்று தான் ஏதாவது பேசலாமா என்று கேட்டான். அனுமதி அளிக்கப்பட்டது. அந்த விசுவாசி தன்னுடைய மடக்கு நாற்காலியை எடுத்து கீழே எறிந்தான். கொஞ்ச நேர அமைதிக்குப்பின் அதை உற்று நோக்கினான். அதன் பின் அவன் நேராக முன்னால் போய் கம்யூனிச விரிவுரையாளனை முகத்தில் அறைந்தான். அவனுக்குக் கோபம் பீறிட்டுக் கொண்டு வந்தது. மரியாதைக் குறைவு ஏற்பட்டதினிமித்தம் அவனுடைய முகம் சிவந்து போயிற்று. அவன் உடனே அருகிலுள்ள தம்முடைய உடன் கம்யூனிசவாதிகளைக் கூப்பிட்டு அவனைக் கைது செய்யும்படி கூறினான். அந்த விசுவாசியைப் பார்த்து, ''என்னைக் கன்னத்

திலறைய உனக்கு எவ்வளவு துணிச்சல்! அதன் காரண மென்ன?'' என்று கர்ச்சித்தான்.

உடனே அந்த விசுவாசி அவனுக்கு மறுமொழியாக, ''நீர் உம்மை ஒரு பொய்யனென்று காண்பித்து விட்டீர். எல்லாம் பொருட்கள் தான் என்றும், வேறொன்றும் இல்லை என்றும் நீர் கூறினீர். நான் நாற்காலியைத் தூக்கி எறிந்தேன். அது மெய்யான பொருளே ஆகும். அந்த நாற்காலிக்குக் கோபம் வரவில்லை. அது பொருள்தான். நான் உம்மைக் கன்னத்தில் அறைந்தபோது, நீர் அந்த நாற்காலியைப் போல் நடந்து கொள்ளவில்லை. நீர் வித்தியாசமாக செயலாற்றினீர். பொருளெனப்பட்டது உணர்ச்சி வசப்பட்டு கோபப்படுகிறதில்லை. ஆனால் நீரோ அப்படி நடந்து கொண்டீர். ஆகவே விரிவுரையாளராகிய தோழரே! நீர் தவறு செய்கிறீர். மனிதன் பொருளைக் காட்டிலும், மேம்பட்டவன். நாம் ஆவிக்குரிய சிருஷ்டிகள்'' என்றான்.

இவ்விதமாக கணக்கற்ற வழிகளில் அந்தரங்க சபையின் விசுவாசிகள், விரிவாகக்கூறப்படும் நாத்திக வாக்குவாதங்களை பொய்யென நிரூபித்துக் காட்டுபவர்களாக இருக்கிறார்கள்.

சிறைச்சாலையில் தேசிய அதிகாரி ஒருவன் என்னைப் பார்த்து கடுமையாக, ''எவ்வளவு காலத்துக்கு நீ உன் முட்டாள்தனமான மார்க்கத்தைத் தொடர்ந்து பற்றிக் கொண்டிருக்கப் போகிறாய்?'' என்று கேட்டான். ''தாங்கள் தேவனற்றவர்களாய் வாழ்ந்திருந்ததற்காக தங்கள் மரணப் படுக்கையில் வருந்தி கிறிஸ்துவை நோக்கிக் கூப்பிட்ட கணக்கற்ற நாத்திகர்களை நான் கண்டிருக்கிறேன். ஆனால் மரணம் சமீபிக்கும்போது ஒரு கிறிஸ்தவ விசுவாசி, தான் இந்நாள் வரை கிறிஸ்தவனாயிருந்ததற்காக வருத்தப்பட்டு தன்னுடைய விசுவாசத்திலிருந்து தன்னைக் காக்கும்படி மார்க்ஸையோ, லெனினையோ வேண்டிக் கொள்வானென்று நீர் நினைக்கிறீரோ?'' என்று அவனைப் பார்த்துக் கேட்டேன். ''ரொம்ப சாதுரியமுள்ள பதில்'' என்று கூறி அவன் சிரித்தான்.

நான் தொடர்ந்து அவனைப்பார்த்து, ''ஓர் எஞ்சினியர் ஒரு பாலத்தைக் கட்டின பின் அதன் மேல் ஒரு பூனையை நடக்கவிட்டு, அதன் உறுதியை மதிப்பிடமாட்டான். அதனுடைய பெலத்தை நிரூபிக்க ஒரு புகைவண்டி அதன் மேல் கடந்து போக வேண்டும். எல்லாம் சரியாக இருக்கும் போது நீர் ஒரு நாத்திகனாக இருப்பதினால் நாத்திகத்தின் உண்மையை நீர் நிரூபித்து விட்டீரெனக் கூறிவிட முடியாது. பெரிய குழப்பத்தில் ஒரு போதும் நாத்திகமானது தேர்வு பெறாது'' என்றேன். அது மாத்திரமல்ல, லெனின் கூட தான் சோவியத் குடியரசின் பிரதம மந்திரியாக வந்தபின் காரியங்கள் தாறுமாறாய் போன சமயங்களிலெல்லாம், ஜெபம் செய்த சந்தர்ப்பங்களை லெனினுடைய புத்தகத்திலிருந்து அவனுககு நிரூபித்துக் காண்பித்தேன்.

நாங்கள் அமைதியாக இருக்கிறோம். சம்பவங்களின் பெருக்கத்தையும், நாங்கள் அமைதியுள்ளவர்களாய் எதிர்நோக்கியிருக்கக் கூடும். ஆனால் கம்யூனிஸ்டுகளோ அமைதியற்றவர்களாய் புதிய புதிய நாத்திக இயக்கங்களைத் துவக்கி வருகிறார்கள். ''இதயமானது அவரில் இளைப்பாறும் வரைக்கும் அதற்கு அமைதியில்லை'' என்று அகஸ்டின் என்ற தேவனுடைய மனிதன் கூறியதை அவர்கள் இதன் மூலம் நிரூபிக்கிறார்கள்.

**கம்யூனிஸ்டுகளையும் ஆதாயபபடுத்த முடியும்**

அந்தரங்க சபையானது உங்கள் உதவி செய்யப்படுமானல், அதால் கிறிஸ்தவர்களை விடுதலையாக்கி கம்யூனிஸ்டுகளின் இதயங்களைக் கவர்ந்து இவ்வுலகத்தின் நிலைமையை மாற்றிப் போட முடியும். கம்யூனிஸ்டாக ஒருவன் இருப்பது இயற்கைக்கு மாறான ஒரு காரியமாக இருப்பதால் அந்தரங்க சபையானது அவனை நிச்சயமாய் ஆதாயப்படுத்த முடியும்.

ஒரு நாய் கூட தனக்கென்று ஒரு வீடு இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகின்றது. கம்யூனிஸ்டுகளின் இதயமானது தாங்கள் செயல்படுத்த வேண்டிய காரியங்களுக்கும், தாங்கள் நம்ப வேண்டிய மதியீனத்துக்கும் விரோதமாக எதிர்த்தே நிற்கின்றது.

எல்லாம் பொருள்தான் என்றும், நாம் எல்லோரும் ஏதோ ஒரு வகையிலே ஒன்று சேர்ந்த இரசாயனப் பொருட்கள்தான் என்றும், மரணத்திற்குப் பிறகு நாம் மறுபடியும் உப்பாகவும், ரசாயனப் பொருட்களாகவும் மாறிவிடுவோம் என்றும், யாராவது தனிப்பட்ட கம்யூனிஸ்டுகள் கூறும் போது, அவர்களை பார்த்து, "தங்களுடைய இலட்சியத்துக்காக அநேக நாடுகளில் கம்யூனிஸ்டுகள் ஏன் தங்கள் உயிரைக் கொடுத்திருக்கிறார்கள்? ஒரு கைப்பிடி அளவான இரசாயனப் பொருட்களுக்கு இலட்சியம் என்று ஒன்றுண்டோ? இரசாயனப் பொருட்கள் மற்றவர்களின் நன்மைக்காக தங்களை தியாகம் செய்ய முடியுமா?" என்று கேட்டால் போதும், அவர்கள் அடங்கி விடுவார்கள்.

அடுத்தது, அவர்களிடம் காணப்படும் மிருகத் தன்மையாகும். மனிதர் மிருகத் தன்மையுள்ளவர்களாக படைக்கப் படவில்லை. அதிகக் காலம் மிருகத் தன்மையுள்ளவர்களாக இருப்பதையும் அவர்கள் சகிக்க மாட்டார்கள். நாஜி அதிகாரிகளின் வீழ்ச்சியின் போது இதை நாங்கள் கண்டிருக்கிறோம். அவர்களில் சிலர் மனந்திரும்பி தங்கள் குற்றங்களை அறிக்கை செய்தார்கள். சிலர் தற்கொலை செய்துக் கொண்டார்கள்.

கம்யூனிச நாடுகளில் குடிப்பழக்கம் அதிகமாக இருப்பதிலிருந்து ஓர் உண்மை புலனாகிறது. கம்யூனிசம் கொடுக்கக்கூடாத ஒரு விரிவான வாழ்க்கைக்கான வாஞ்சை அதில் காணப்படுகிறது. சாதாரண ரஷ்யன் ஓர் ஆழமான பரந்த மனப்பான்மையுள்ள இரக்க சிந்தையுள்ளவனாகவே இருக்கிறான். கம்யூனிசமானது ஆழமற்றதும், இயற்கைக்கு அப்பாற்பட்டதுமாயிருக்கிறது. ஆனால் அவன் ஆழமான வாழ்க்கையில் நாட்டங்கொண்டு வேறெங்கும் அதைக்காணக் கூடாமலிருப்பதால் மதுவில் அதைத் தேடுகிறான். ஒரு நொடிப் பொழுதுக்கு மதுபானம் அவனுக்கு விடுதலை அளிக்கிறது. சத்தியத்தை அவன் கண்டுபிடிப்பானென்றால், அது அவனுக்கு நித்தியத்துக்கும் விடுதலையளிக்கிறதாயிருக்கிறது.

புக்காரெஸ்டில் ரஷ்ய ஆக்கிரமிப்பு நடந்த போது ஒரு சமயம் ஒரு சிற்றுண்டி சாலைக்குள் போக வேண்டுமென்று என் மனதில் அதிகமாக தூண்டப்பட்டேன். என் மனைவியை என்னோடு வரும்படி அழைத்தேன். நான் உள்ளே நுழைந்த போது ஒரு ரஷ்ய தளகர்த்தன் தன் கையில் துப்பாக்கியை வைத்து எல்லோரையும் பயமுறுத்திக்கொண்டு, குடிப்பதற்கு இன்னும் அதிகமாக கேட்டுக் கொண்டிருந்தான். அவன் ஏற்கனவே அதிகமாகக்குடித்திருந்ததால், அவனுக்கு இன்னும் மது கொடுக்க மறுக்கப்பட்டது. மக்களெல்லாரும் கலவரப்பட்டிருந்தார்கள். எனக்கு அந்தச் சிற்றுண்டி சாலையின் சொந்தக்காரனை தெரியுமாதலால், நான் அவனிடம் போய், அந்தத் தளகர்த்தனுக்கு மது கொடுக்கும்படிக் கூறி நான் அவன் பக்கத்தில் உட்கார்ந்து அவனை அமைதிப்படுத்துகிறேனென்று வாக்குறுதி கொடுத்தேன்.

ஒன்றுக்குப் பின் ஒன்றாக ஒயின் புட்டிகள் எங்களுக்குக் கொடுக்கப்பட்டன. மேஜையின் மேல் மூன்று கண்ணாடிக் கோப்பைகள் இருந்தன. அந்தத் தளகர்த்தன் மிகவும் அமைதியாக அந்த மூன்று கோப்பையையும் நிரப்பி மூன்றையும் குடித்தான். நானும் என் மனைவியும் குடிக்கவில்லை. அவன் அதிகமாய் குடித்திருந்தாலும், அவன் மனது வேலை செய்தது. அவன் மது குடித்துப் பழக்கப்பட்டிருந்தான். நான் அவனுக்குக் கிறிஸ்துவைப் பற்றிக்கூறினேன். அவன் நான் எதிர் பார்த்திராத கவனத்தோடு அதைக் கேட்டான்.

முடிவில் அவன் என்னைப் பார்த்து, ''நீர் யார் என்று உம்மைப்பற்றி எனக்கு சொன்னீர். இப்பொழுது நான் யார் என்று சொல்லுகிறேன். ஸ்டாலின் காலத்தில் ஏற்பட்ட பயங்கர உபத்திரவத்தின் நாட்களில் விசுவாசத்தை மறுதலித்தவர்களில் முதல்வனாக இருந்த ஒரு பாரம்பரிய சபையின் பாதிரி நான். கிராமம் கிராமமாகச் சென்று தேவன் இல்லை என்றும், நான் ஒரு பாதிரியாராக இருந்து ஏமாறுகிறவனாக விளங்கினேனென்றும் விரிவுரை நிகழ்த்தி வந்தேன். நான் ஓர் எத்தன். அது போல மற்ற பாதிரிமார்களும் எத்தர்களே என்று கூறினேன். என்னுடைய

வைராக்கியத்துக்காக நான் அதிகமாக பாராட்டப்பெற்றேன். ஆகவே நான் இரகசிய போலீசில் ஓர் அதிகாரியானேன். கிறிஸ்தவர்களை சித்திரவதை செய்து அதன்பின் அவர்களை இந்தக் கைகளினுலேயே கொல்லுவதே தேவனிடத்திலிருந்து நான் பெற்ற தண்டனையாயிருந்தது. இப்பொழுது நான் குடிக்கிறேன். நான் செய்திருக்கிறவைகளை மறக்கும்படி குடிக்கிறேன். ஆனுல் இந்த மது வேலை செய்கிறதில்லை'' என்ருன்.

அநேக கம்யூனிஸ்டுகள் தற்கொலை செய்து கொள்ளுகிருர்கள். அவர்களுடைய மாபெரும் கவிஞர்களாகிய எஸனின், மெய்யகவுஸ்கி என்பவர்களும் அப்படியே தற்கொலை செய்து கொண்டவர்கள்தான். அவர்களுடைய சிறந்த எழுத்தாளனுகிய 'படீவ்' என்பவனும் அப்படியே செய்தவன்தான். அவன் அப்பொழுதுதான் ''மகிழ்ச்சி'' என்ற ஒரு பெருங்கதையை எழுதி முடித்திருந்தான். கம்யூனிசத்திற்காக இளைப்பாறுதலின்றி வேலை செய்வதிலேயே மகிழ்ச்சி அடங்கியிருக்கிறதென்று, அதில் அவன் விளக்கியிருந்தான். அவ்வளவு பெரிய பொய்யை அவனுடைய ஆத்துமாவால் சகிக்க முடியவில்லை.

பெரிய கம்யூனிச தலைவர்களும், ரஷ்ய சக்ரவர்த்தியின் காலங்களில் கம்யூனிசத்துக்காக போராடினவர்களுமான ஜோபி, டாம்கின் முதலியோரும் கம்யூனிசமானது உண்மையில் எப்படி காட்சி அளிக்கிறது என்பதைப் பார்த்து சகிக்கக் கூடாதவர்களானுர்கள். அவர்களுடைய வாழ்க்கைகளும் தற்கொலையிலேயே முடிந்தன. கம்யூனிஸ்டுகள் மகிழ்ச்சியற்றவர்களாயிருக்கிருர்கள்.

அவர்களுடைய பெரும் சர்வாதிகாரிகளும் கூட அப்படியே இருக்கிருர்கள். ஸ்டாலின் எவ்வளவு மகிழ்ச்சியற்றவனுக இருந்தான் தெரியுமா? தன்னுடைய பழைய நண்பர்கள் யாவரையும் அவன் கொன்ற பிற்பாடு, தன்னை யாராவது நஞ்சு கொடுத்தாவது அல்லது வேறு முறையிலேயாவது கொன்று விடுவார்களோ என்ற பயம் அவனுக்கு எப்போதும் இருந்தது. அவனுக்கு எட்டு படுக்கை அறைகள்

இருந்தன. அவைகள் யாவும் வங்கியிலுள்ள பணம் வைக்கப் பட்டிருக்கும் பாதுகாப்பு அறைகள் போல பத்திரமாக பூட்டப்பட்டிருக்கும். இரவில் இவைகளில் எந்த அறையில் அவன் படுக்கிருனென்று ஒருவருக்கும் தெரியாது. அவனுக்கு முன்பாக அவனுடைய சமையல்காரன் அவனுடைய ஆகாரத்தை ருசிப் பார்க்காமல் அவன் ஒருபோதும் சாப்பிட்டதே கிடையாது.

கம்யூனிசமானது யாரையும், அதனுடைய சர்வாதிகாரிகளேயும் கூட மகிழ்ச்சிப்படுத்துகிறதில்லே. அவர்களுக்கு கிறிஸ்து தேவை. கம்யூனிசத்தை நாம் கவிழ்ப்போமாளுல் கம்யூனிசத்துக்குள் அகப்பட்டவர்களே மாத்திரம் நாம் விடுதலே செய்கிறவர்களாயிராமல், கம்யூனிஸ்டுகளேத் தாமே விடுதலே செய்கிறவர்களாயிருப்போம். அடிமைத் தனத்தில் வாடும் மக்களின் ஆழமான தேவைகளே அந்தரங்க சபையானது உங்கள் முன் கொண்டு வருகிறது. அதற்கு உதவுங்கள்.

அந்தரங்க சபையானது தன் விசுவாசத்தில் காட்டும் உண்மையே, அதன் முக்கிய குணுதிசயமாகும். "ஜார்ஜ்" என்ற புனேப் பெயரில் தன்னே அறிமுகப்படுத்தி, ஒரு பாதிரியார் எழுதிய புத்தகத்தில், தேவனுடைய அந்தரங்க சபையைப் பற்றி பின் கண்ட சம்பவத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

"ஒரு ரஷ்ய ராணுவ தளகர்த்தன் ஹங்கேரியிலுள்ள ஒரு பாதிரியாரிடத்தில் வந்து அவரைத் தனியே சந்திக்க வேண்டுமெனக் கோரிஞன். அந்த அதிகாரி வாலிபனும், தன்னுடைய நிலேமையை நன்கு உணர்ந்தவனுமாயிருந்தான். அவன் ஒரு சிறிய உரையாடும் அறைக்கு அழைத்துச் செல்லப் பட்டு கதவு பூட்டப்பட்ட போது, அங்கு சுவற்றில் தொங்கிக் கொண்டிருந்த சிலுவையைப் பார்த்து தன் தலேயை அசைத்து இது ஒரு பொய்யான காரியமில்லேயா? பணக்காரர்கள் ஏழைகளே எளிதாக அறிவீனத்தில் வைத்திருக்கத் தக்கதாக, பாதிரிகளாகிய நீங்கள் அவர்களே வஞ்சிக்கும்படி கையாளும் தந்திரங்களில் இது ஒன்றல்லவா? இப்பொழுது நாம் தனியாயிருக்கிரேம். இயேசு கிறிஸ்து தேவனுடைய

குமாரனென்று நீர் நம்பவில்லை என்பதை என்னிடம் ஒத்துக் கொள்ளும்'' என்று பாதிரியார் பக்கம் திரும்பி கூறினான்.

பாதிரியார் சிரித்துக் கொண்டே அமைதியாக அவனைப் பார்த்து, ''அருமையான வாலிபனே, நிச்சயமாக அதை நான் நம்புகிறேன். அது உண்மை'' என்றார். ''இந்தவிதமான தந்திரங்களை நீர் என்னோடு கையாள நான் விடமாட்டேன். இது மிகவும் முக்கியமான காரியம். என்னைப் பார்த்து நகைக்காதேயும்'' என்று அந்தத் தளகர்த்தன் கத்தினான். பிறகு தன்னுடைய கைத் துப்பாக்கியை வெளியிலெடுத்து பாதிரியாரின் சரீரத்தை ஒட்டிப் பிடித்துக் கொண்டு, ''இது பொய் என்று நீர் என்னிடம் ஒத்துக் கொள்ளாவிடில் நான் சுட்டு விடுவேன்'' என்று கூறினான். பாதிரியார் அவனைப் பார்த்து அமைதியாக, ''நீ கூறுவது உண்மையற்றதாக இருப்பதால் நான் அதை ஒத்துக் கொள்ள முடியாது. எங்களுடைய கர்த்தர் உண்மையாகவே தேவனுடைய குமாரன் தான்'' என்றார்.

அந்தத் தளகர்த்தன் தன் கைத்துப்பாக்கியை தரையில் தூக்கி எறிந்துவிட்டு, தேவனுடைய மனிதனை தழுவிக் கொண்டான். அவனுடைய கண்களிலிருந்து கண்ணீர் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. ''அது உண்மை! அது உண்மை!! நானும் அவ்விதமே அதை நம்புகிறேன். ஆனால் மனிதர் இந்த நம்பிக்கைக்காக மரிக்கவும் ஆயத்தமாயிருக்கிறார்களென நானாக சோதித்தறியும் வரை என்னால் அதை நம்பமுடியவில்லை. ஐயா! உமக்கு நன்றி கூறுகிறேன். நீர் என்னுடைய விசுவாசத்தை பெலப்படுத்தினீர். இப்பொழுது நானும் கூட கிறிஸ்துவுக்காக மரிக்க முடியும். அது எப்படி என்று எனக்கு நீர் காட்டி விட்டீர்'' என்று கண்களில் நீர் வழிய கூறினான்.

இப்படிப்பட்ட மற்ற சம்பவங்களையும் நான் அறிந்திருக்கிறேன். ரஷ்யர்கள் ருமேனியாவைக் கைப்பற்றி குடியேறிய போது தங்கள் கைகளில் துப்பாக்கிகளை வைத்துக் கொண்டு இரண்டு ரஷ்ய போர் வீரர்கள் ஒரு சபைக் கட்டிடத்துக்குள் நுழைந்து உள்ளே இருந்தவர்களைப்

பார்த்து, ''நாங்கள் உங்கள் விசுவாசத்தில் நம்பிக்கை யுள்ளவர்களல்ல. உடனடியாக உங்களில் அதை கைவிட்டு விடாதவர்கள் சுட்டுக் கொல்லப்படுவீர்கள். தங்கள் விசுவாசத்தைக் கைவிடுகிறவர்கள் வலது பக்கம் போய் நில்லுங்கள்'' என்று கூறினார்கள். சிலர் மெதுவாக வலது பக்கம் நகன்றார்கள். அவர்கள் அந்த இடத்தை விட்டு வெளியேறி தங்கள் வீடுகளுக்குச் செல்லும்படி உத்தரவிடப்பட்டார்கள். அவர்கள் தங்கள் உயிர் தப்ப ஓடி மறைந்து போனார்கள். அந்த ரஷ்யர்கள் மீதியாய் அங்கு நின்ற கிறிஸ்தவர்களோடு தனித்திருந்த போது அவர்களெல்லாரையும் தழுவிக் கொண்டு அவர்களைப்பார்த்து, ''நாங்களும் கூட விசுவாசிகள்தான். ஆனால் சத்தியத்துக்காக மரிக்கவும் ஆயத்தமாயுள்ள விசுவாசிகளோடேயே நாங்கள் ஐக்கியப்பட விரும்பினோம்'' என்றார்கள்.

எங்கள் நாடுகளில் இப்படிப் பட்டோர் சுவிசேடத்துக்காக போராடுகிறார்கள். அவர்கள் சுவிசேடத்துக்கு மாத்திரமல்ல விடுதலைக்காகவும் போராடுகிறார்கள்.

அநேக வெளிநாடுகளிலுள்ள கிறிஸ்தவ வீடுகளில் உலகப் பிரகாரமான சங்கீதத்தை ரசிக்க சில மணி நேரம் செலவழிக்கப்படுகிறது. எங்களுடைய வீடுகளிலும் சத்தமான சங்கீதம் கேட்கப்படும். ஆனால் சுவிசேடத்தைப் பற்றியும் அந்தரங்க ஊழியத்தைப் பற்றியும் பேசப்படும் பேச்சை அயலகத்தார் ஒற்றுக் கேட்டு, அதை இரகசிய போலீசாருக்கு அறிவித்து விடாமலிருக்கும்படிக்கே, அந்தப் பெரிய சத்தத்தில் ரேடியோவை திருப்பி வைக்கிறோம்.

இந்த வரிகளை எழுதுகிறவனாகிய நான் ஒரு பொருட்டாக எண்ணப்படக் கூடாத மனிதனாகவே இருக்கிறேன். ஆனால் வெளி நாடுகளில் இது வரை பிரதிநிதித்துவம் இல்லாத சத்த மற்றவர்களின் சத்தமாகவே நான் விளங்குகிறேன். விசுவாசத்தின் காரியங்களிலும் கிறிஸ்தவ பிரச்சனைகளைக் கையாளும் காரியங்களிலும் நீங்கள் மிகுந்த சிரத்தையைக் காட்ட வேண்டுமென்று அவர்களுடைய சார்பில் கேட்கிறேன். கம்யூனிச நாடுகளில் வல்லமையுள்ளதாய்

பாடுகளை அனுபவிக்கும் அந்தரங்க சபைக்கு வேண்டிய உங்கள் ஜெபத்தையும், தடைமுறையான உதவியையும் அவர்கள் சார்பில் கேட்கிறேன்.

நாங்கள் கம்யூனிஸ்டுகளை மேற் கொள்ளுவோம். ஏனெனில் முதலாவது தேவன் எங்கள் பக்கத்திலிருக்கிறார். இரண்டாவதாக எங்கள் செய்தியானது இதயங்களின் ஆழத்திலுள்ள தேவைகளுக்குத் தக்கதாக இருக்கிறது. நாஜி காலத்தில் சிறைவாசம் அனுபவித்திருந்த கம்யூனிஸ்டுகள் தங்களுடைய துன்பமான நேரங்களில் ஜெபித்ததாக என்னிடம் அறிக்கை செய்திருக்கிறார்கள். கம்யூனிச அதிகாரிகள் தங்கள் நாவினால் ''இயேசுவே, இயேசுவே'' என்ற கூப்பிட்டவர்களாய் மரித்ததை கூட நான் கண்டிருக்கிறேன்.

நாங்கள் ஜெயிப்போம். ஏனெனில் மக்களின் கல்வி சம்பந்தப்பட்ட சகல எழுத்துக்களும் எங்கள் பக்கமே இருக்கின்றன. தற்கால கிறிஸ்தவர்களின் எழுத்துக்களை ரஷ்யர்கள் அவமதிக்கக் கூடும். ஆனால் டால்ஸ்டாய், டாஸ்டாய் விஸ்ஸி முதலியோரின் புத்தகங்கள் இருக்கின்றனவே! அவைகளில் மக்கள் கிறிஸ்துவின் வெளிச்சத்தைக் காண்கிறார்கள். சடோவினு என்பவர் ருமேனியாவின் மாபெரும் எழுத்தாளராக இருந்தார். கம்யூனிஸ்டுகள் அவருடைய புத்தகமாகிய, ''பரிசுத்தவான்களின் வாழ்க்கைகள்'' என்ற புத்தகத்தை ''பரிசுத்தவான்களின் கதைகள்'' என்ற தலைப்பில் பிரசுரித்திருக்கின்றார்கள். ஆனால் இந்தப் பிழையிலும், பரிசுத்தவான்களின் வாழ்க்கைகளின் முன் மாதிரி எழுப்புதலளிக்கக் கூடியதாயிருக்கிறது.

ரவ்வேல், மைக்கேல் ஏஞ்சலோ, லீயோனார்டோ-டாவின்ஸி போன்ற பிரபல சித்திரக்காரர்களின் ஓவியங்களை அவர்கள் தங்கள் கலைகளின் சரித்திரத்திலிருந்து அகற்ற முடியாது. இந்தச் சித்திரங்கள் யாவும் கிறிஸ்துவைப்பற்றிப் பேசுகின்றன.

ஒரு கம்யூனிஸ்டிடம் நான் கிறிஸ்துவைப்பற்றி பேசும் போது அவனுடைய இதயத்தின் ஆழமான ஆவிக்குரிய

தேவைகள் எனக்கு உதவுகிறவைகளாக இருக்கும். என்னுடைய தர்க்கங்களுக்கு பதிலளிப்பது அவனுக்கு மாபெரும் துன்பமாக இருக்காது. ஆனுல் என் பக்கத்திலுள்ள அவனுடைய சொந்த மனசாட்சியின் சத்தத்தை அடக்குவதே அவனுடைய மிகக் கடினமான வேலேயாயிருக்கும்.

நாத்திக விரிவுரையை நிகழ்த்துவதற்கு முன் தேவன் தாமே தனக்கு உதவி செய்ய வேண்டுமென்று ஜெபித்திருக்கும் மார்கஸியத்தின் விரிவுரையாளர்களே நான் தனிப்பட்ட முறையில் அறிந்திருக்கிறேன். தூர இடத்தில் நடத்தப்படும் விசுவாசிகளின் இரகசியக் கூட்டத்திற்குப் போகும் கம்யூனிஸ்டுகளே நான் அறிவேன். அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டதால் தாங்கள் ஓர் அந்தரங்க கூட்டத்திற்கும் போகவில்லே என்று பொய் பேசி விடுவார்கள். அதன் பின்பு அந்தக் கூட்டத்துக்குப் போக தங்களே பலவந்தப்படுத்தின விசுவாசத்துக்காக தங்களால் தைரியமாக நிற்க முடியாமற் போயிற்றென்று துக்கப்பட்டு அழுதிருக்கிருர்கள். அவர்களும் மனிதர்கள் தானே!

ஒருவன் விசுவாசத்தினிடம் வரும்போது அது ஒரு சிறிய விசுவாசமாயிருந்தாலும் கூட அந்த விசுவாசம் அபிவிருத்தி அடைந்து வளருகிறதாயிருக்கிறது. அது நிச்சயமாக வெற்றி பெறுமென்று உறுதியோடிருக்கிரேம. ஏனெனில், அந்தரங்க சபையிலுள்ளவர்களாகிய நாங்கள் அது மறுபடியும் மறுபடியும் வெற்றி பெறுகிறதைக் கண்டிருக்கிரேம்.

கம்யூனிஸ்டுகள் கிறிஸ்துவினுல் அன்பு கூரப்படுகிறவர்களாயிருக்கிருர்கள். அவர்கள் கிறிஸ்துவுக்காக ஜெயிக்கப்பட முடியும். ஜெயிக்கப்பட வேண்டும். அந்தரங்க சபையானது இரும்புத் திரைககுப் பின்னுல் ஏற்கனவே உள்ளதால், அதனுல் கம்யூனிஸ்டுகளே எளிதாக ஜெயிக்க முடியும். எல்லா மனிதரின் ஆத்ம இரட்சிப்பைக் குறித்து கிறிஸ்துவின் இதய வாஞ்சையை திருப்திப்படுத்த விரும்புகிறவர்கள் யாவரும் அந்தரங்க சபையை அதன் ஊழியத்தில் தாங்குகிறவர்களாயிருத்தல் அவசியம்.

எல்லா ஜாதிகளுக்கும் உபதேசம் பண்ணும்படி இயேசு கூறினார். இரும்புத்திரையோடு நிறுத்திக் கொள்ளுங்கள் என்று அவர் கூறவில்லை. இரும்புத்திரைக்குப் பின்னால் ஜீவனோடிருக்கிறவர்களில் மூன்றுக்கு ஓர் ஆள் கம்யூனிசத்துக்கு அடிமையாக இருக்கிறார்கள். தேவனுக்கும் அவர் நமக்குக் கொடுத்த பெரிய வேலைக்கும் நாம் உண்மையுள்ளவர்களாயிருப்போமானால், அந்த இரும்புத் திரையைத்தாண்டி அவர்களிடம் நாம் போக அது நம்மை நெருக்கி ஏவாமற் போகாது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஏற்கனவே அங்குள்ள அந்தரங்க சபையோடு ஊழியம் செய்து அவர்களை நாம் எளிதில் சந்திக்க முடியும்.

**அந்தரங்க சபையிலுள்ள மூன்று பகுதியினர் : முதலாவது—கம்யூனிஸ்டுகளால் அகற்றப்பட்ட மேய்ப்பரும் போதகரும்:**

கம்யூனிச நாடுகளிலுள்ள அந்தரங்க சபையானது மூன்று பிரிவினர்கள் அடங்கியதாயிருக்கிறது. சுவிசேடத்தை கலப்பில்லாமல் துப்புரவாக பிரசங்கித்ததால் தங்கள் சபைகளிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களும், தங்கள் மந்தைகளிடமிருந்து அகற்றப்பட்டவர்களுமான ஆயிரமாயிரம் மேய்ப்பரும் போதகருமானவர்கள் முதல் பிரிவைச் சேர்ந்தவர்களாயிருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட முந்தைய மேய்ப்பரும், போதகருமான அநேகர் பல வருடங்களாக சிறையில் அடைக்கப்பட்டவர்களும், தங்களுடைய விசுவாசத்துக்காக சித்திரவதை அனுபவித்தவர்களுமாயிருக்கிறார்கள். அவர்கள் விடுதலையாக்கப்பட்டவுடன் அந்தரங்க சபையில் இரகசியமாகவும், வல்லமையாகவும் போதிக்கிற தங்கள் ஊழியத்தை எவ்வித தாமதமுமின்றி ஆரம்பித்து விடுவார்கள்.

கம்யூனிஸ்டுகள் அவர்களுடைய சபைக் கட்டிடங்களை மூடிவிட்டு தங்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான போதகர்களை அவர்களுக்குப் பதில் நியமித்துக் கொண்டாலும், இந்த உண்மையுள்ள தேவ ஊழியர்கள் இரகசியமாக பண்டகசாலைகளிலும், பரண்களிலும், கீழ் அறைகளிலும், இரவில் வயல்களில் நடைபெறும் அந்தரங்க கூட்டங்களிலும்

போதிப்பதினுல் முன்னேவிட அதிக வல்லமையான ஊழியம் செய்கிறவர்களாக விளங்குகிருர்கள். இவர்களே ''ஜீவிக்கிற இரத்த சாட்சிகள்'' என்று அழைக்கப்படுகிருர்கள். இவர்கள் தங்கள் ஊழியத்தை ஓய்வின்றி செய்து அதிகமான சித்திரவதைக்கும், மறுமுறை கைது செய்யப்படுவதற்கும் உள்ளாகிற அபாயத்தில் எப்போதும் தங்களே நிறுத்துகிறவர்களாயிருக்கிருர்கள்.

**இரண்டாவது --சபையார் :**

தங்களேக் கர்த்தருக்குத் தத்தம் செய்துள்ள எண்ணிறந்த விசுவாசிகள் அந்தரங்க சபையின் இரண்டாவது பகுதியினராயிருக்கிருர்கள்.

ரஷ்யாவிலாவது அல்லது சீனுவிலாவது பெயரளவிலுள்ளவர்களும், அரை மனதுள்ளவர்களும், வெது வெதுப்பான நிலேயிலுள்ளவர்களுமான கிறிஸ்தவர்கள் கிடையாது என்பதை நாம் மறந்து போகக் கூடாது. அங்கெல்லாம கிறிஸ்தவர்கள் கொடுக்கும் விலே மிகவும் அதிகம்.

உபத்திரவமானது எப்போதும் ஒரு மேன்மையான கிறிஸ்தவனே, ஒரு சாட்சியுள்ள கிறிஸ்தவனே, ஓர் ஆத்தும ஆதாயம் செய்யும் கிறிஸ்தவனே உண்டு பண்ணுகிறது என்ற உண்மையை நாம் அடுத்தப்படியாக மனதில் கொள்ள வேண்டும். கம்யூனிச உபத்திரவமானது தீமையைக் கொண்டு வராமல் மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களும், தங்களே அர்ப்பணம் செய்தவர்களுமான கிறிஸ்தவர்களேயே உண்டுப் பண்ணிக் கொடுத்திருக்கிறது. அப்படிப்பட்ட கிறிஸ்தவர்களே நாம் வெளி நாடுகளில் காணுவது அபூர்வம்.

தான் சந்திக்கிற ஒவ்வொரு ஆத்துமாவையும் ஆதாயப்படுத்த விரும்பாமல் எப்படி ஒரு கிறிஸ்தவனுல் இருக்க முடிகிறதென்று இந்த கம்யூனிச தேச கிறிஸ்தவர்களுக்கு விளங்காது.

ரஷ்ய ராணுவ செய்தித் தாளான, ''சிவப்பு நட்சத்திரம்'' (Red Star) ரஷ்ய விசுவாசிகளேப் பற்றி ''கிறிஸ்துவை ஆராதிக்கிறவர்கள், எல்லோரையும் தங்களுடைய பேராசையின்

பிடியில் அகப்படுத்த விரும்புகிறார்கள்'' என்று குற்றம் சாட்டியுள்ளது. ஆனால், அவர்களுடைய பிரகாசமான கிறிஸ்தவ வாழ்க்கையானது, அவர்களுடைய உடன் கிராமத்தாரிடத்திலும், அயலகத்தாரிடமும் அன்பையும் நன்மதிப்பையும் தேடித் தருகிறதாயிருக்கிறது.

எந்தக் கிராமத்திலும் சரி, எந்தப் பட்டணத்திலும் சரி, விசுவாசிகள்தான் மிகவும் விரும்பப்படத்தக்கவர்களும் அன்பு கூரப்படுகிறவர்களுமாக இருக்கிறார்கள். ஒரு தாய் தன் பிள்ளைகளைக் கவனிக்கக் கூடாதபடி வியாதிப்படுவாளாயின், விசுவாசியான ஒரு தாயே அங்கு வந்து அப்பிள்ளைகளை கவனிக்கிறவளாயிருப்பாள். ஒரு மனிதன் அடுப்பெரிக்க மரம் வெட்டக் கூடாதபடி வியாதிப்பட்டிருப்பானென்றால், விசுவாசியான ஒரு சகோதரனே அவனுக்காக அதை செய்கிறவனாயிருப்பான். அவர்கள் தங்களிலிருக்கும் கிறிஸ்தவ விசுவாசத்தை வாழ்ந்து காட்டுகிறவர்களாயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் அவர்கள் கிறிஸ்துவுக்காக சாட்சி கொடுக்கும்போது, மக்கள் அவர்களுக்கு செவி சாய்த்து விசுவாசம் வைக்கிறார்கள். ஏனெனில் கிறிஸ்துவை அவர்களுடைய வாழ்க்கையில் அந்த மக்களால் காண முடிகிறது.

சபைக் கட்டடத்துக்குள் அங்கீகாரம் பெற்ற பாதிரிகளைத் தவிர வேறு ஒருவருக்கும் பேசுவதற்கு அனுமதி கிடையாததால், கணக்கிலடங்காத வாஞ்சையுள்ள தத்தம் செய்த கிறிஸ்தவர்கள் கம்யூனிச உலகத்தின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் ஆத்ம ஆதாயம் செய்து சந்தை இடங்களிலும், கிராமத்தில் தண்ணீர் எடுக்கும் இடங்களிலும், வேறு எங்கெங்கு போனாலும் அங்கெல்லாம் கிறிஸ்துவுக்காக சாட்சி கொடுத்து உபதேசம் செய்து வருகிறார்கள். கறிக்கடை வைத்து நடத்தும் கிறிஸ்தவர்கள், அவர்கள் விற்கும் கறியை சுற்றிக் கொடுக்கும் காகிதத்தோடு கூட சுவிசேட துண்டுப் பிரதியையும் சேர்த்து கொடுக்கிறார்களென்று கம்யூனிச செய்தித் தாள்கள் ஒத்துக் கொண்டிருக்கின்றன. கம்யூனிச அச்சகங்களில் உயரிய பதவியிலுள்ள கிறிஸ்தவர்கள்

இரவில், அந்த அச்சகங்களுக்குப் போய் இயந்திரங்களை முடுக்கிவிட்டு சில ஆயிரம் கிறிஸ்தவ பிரசுரங்களை அச்சடித்துக் கொண்டு சூரியோதயத்துக்கு முன் அவைகளை பூட்டிவிட்டு வந்துவிடுகிறார்களென கம்யூனிச செய்திப் பிரிவு ஒத்துக் கொண்டிருக்கின்றது.

மாஸ்கோவிலுள்ள கிறிஸ்தவப் பிள்ளைகள் எப்படியோ ஒரு வழியில் சுவிசேடங்களை பெற்றிருப்பதாகவும், அவைகளை கையினால் எழுதி கைப்பிரதிகள் எடுப்பதாகவும் கம்யூனிச செய்திப் பிரிவு ஒத்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பிள்ளைகள் அவைகளைத் தங்கள் பள்ளிக்கூட அறைகளில் தொங்கும் தங்கள் ஆசிரியர்களின் மேல் சட்டைப் பைகளில் திணித்து வைத்து விடுகிறார்கள். இவ்விதமாக சபையிலுள்ள சாதாரண சகோதரரும், சகோதரிகளும் கம்யூனிச நாட்டில் ஏற்கனவே உள்ள மிகவும் வல்லமையுள்ள பலனளிக்கிற ஆத்தும ஆதாயம் செய்யும் சுவிசேட பிரபல்ய சக்தியாக விளங்குகிறார்கள்.

கம்யூனிச க்யூபாவில் எல்லா உண்மையுள்ள போதகர்களும் சிறையிலடைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கி கம்யூனிச போதகர்களால் ஆள் மாற்றப்பட்டதால், ஓர் இரகசிய சாதாரண விசுவாசிகளடங்கிய சபை துளிர்த்து வருகிறதென்று முன்னாள் மிஷனரிகள் கூறியிருக்கின்றனர்.

எந்த உபத்திரவத்தின் அக்கினியானது விசுவாசத்தை அழித்துவிடும் என்று கம்யூனிஸ்டுகள் நம்பினார்களோ, அதே உபத்திரவத்தின் அக்கினியினாலே லட்சக்கணக்கான தத்தம் செய்த உண்மையான வாஞ்சையுள்ள விசுவாசிகள் சுத்திகரிக்கப்பட்டு வருகிறார்கள்.

**மூன்றாவது — அமைதியாக்கப்பட முடியாத அங்கீகாரம் பெற்ற போதகர்களும், ஊழியர்களும் :**

அந்தரங்க சபையின் மூன்றாவது பகுதியினர் கடிவாளம் போடப்பட்டு அமைதலாக்கப்படமுடியாத அங்கீகாரம் பெற்ற சபைகளிலுள்ள உண்மையுள்ள போதகர்களாவர்.

அந்தரங்க சபையானது அங்கீகாரம் பெற்ற சபையிலிருந்து, ஏதோ முற்றிலும் பிரிக்கப்பட்ட ஒரு சபையல்ல. யூகோஸ்லேவியா, போலந்து, ஹங்கேரி முதலிய அநேக கம்யூனிச நாடுகளில் அங்கீகாரம் பெற்ற சபைகளின் போதகர்கள் அந்தரங்க சபையில் இரகசியமாக ஊழியம் செய்து வருகிறார்கள். சில தேசங்களில் இந்த இரண்டும் ஒன்றோடொன்று இணைந்து நிற்கும் நிலைமை காணப்படுகிறது.

இந்தப் போதகர்கள் தங்களுடைய மிகவும் சிறிய அறை கொண்ட ஒரு சபை கட்டிடத்துக்கு வெளியே கிறிஸ்துவைப் பற்றி பேச அனுமதிக்கப்படுகிறதில்லை. சிறு பிள்ளைகளின் கூட்டங்கள் நடத்தவும், வாலிபப் பிள்ளைகளுக்குக் கூட்டங்கள் நடத்தவும் அவர்களுக்கு அனுமதி கிடையாது. வியாதிப்பட்ட தங்கள் சபையின் அங்கத்தினர்களுக்காக அவர்களுடைய வீடுகளுக்குச் சென்று ஜெபிக்கவும், இந்த போதகர்களுக்கு அனுமதி கிடையாது. கம்யூனிச சட்டத் திட்டங்கள் இவர்களை நாற்புறங்களிலும் வேலியடைத்து நெருக்கி, இவர்களுடைய ''சபைகளை'' அர்த்தமற்றவைகளாக ஆக்கியிருக்கின்றனர். ஆகவே விசுவாசத்தில் விடுதலையைப் பகடி பண்ணும் கம்யூனிச ஆளுகையை இந்தப் போதகர்கள் அநேக சமயங்களில் பொருட்படுத்தாமல், துணிந்து அளவுக்கு அப்பாற்பட்டுள்ள இரகசிய ஊழியத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

சிறுவர் நடுவிலும், வாலிபர் நடுவிலும் இந்த போதகர்கள் இரகசிய ஊழியம் செய்து வருகிறார்கள். கிறிஸ்தவ வீடுகளிலும், கீழறைகளிலும் இவர்கள் இரகசிய சுவிசேட பிரபல்ய முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். இரகசியமாக கிறிஸ்தவ இலக்கியங்களைப் பெற்று பசியுள்ள ஆத்துமாக்களுக்கு அவைகளை விநியோகித்து வருகிறார்கள். தங்களுடைய அங்கீகரிக்கப்பட்ட வரம்பை அவர்கள் மதிக்காமல் தங்களை சூழ உள்ள பசியுள்ள ஆத்துமாக்களுக்கு இரகசியமாக ஊழியம் செய்து வருவதால் தங்கள் விடுதலையை அவர்கள் எப்பொழுதும் பணயம் வைத்தவர்களாகவே காணப்படுகிறார்கள். கம்யூனிஸ்டுகளின் பார்வைக்கு சரி

யானவர்களும், பார்வைக்குக் கீழ்ப்படிதலுள்ளவர்களாகவும் காணப்பட்டு இரகசியமாக தேவனுடைய வார்த்தையைப் பரப்புவதற்காக தங்கள் வாழ்க்கையையும் இவர்கள் பொருட்படுத்துகிறதில்லை.

இப்படிப்பட்ட அநேகர் சமீபத்தில் ரஷ்யாவில் கண்டு பிடிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு அநேக வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்கள். இவர்களே அந்தரங்க சபையின் முக்கிய மூன்றும் பகுதியினர்.

கம்யூனிஸ்டுகளால் தள்ளப்பட்டு உபத்திரவப்படுத்தப் பட்ட முன்னுள் போதகர்கள், சாதாரண விசுவாசிகள், தங்களுக்குக் கொடுக்கப்பட்ட அனுமதிக்கு மேல் அதிக விரிவானதும் பெரிதுமான இரகசிய ஊழியத்தைச் செய்கிற அங்கீகாரம் பெற்ற போதகர்கள், ஆகிய மூன்று வகுப்பினர் களும் அந்தரங்க சபையில் ஊழியம் செய்து வருகின்றூர்கள்.

கம்யூனிசமானது தோற்கடிக்கப்படும் வரை அந்தரங்க சபையானது நிலைநிற்கும். சில நாடுகளில் ஒரு பகுதியானது இன்னொன்றைக் காட்டிலும் அதிக சுறுசுறுப்பாக இயங்கு கிறது. ஆனுல் இந்த மூன்று பகுதியும் அங்குண்டு. எல்லாரும் கிறிஸ்துவுக்காக பெரிய அபாயங்களை எதிர்நோக்கியே வேலை செய்து வருகின்றனர்.

## அத்தியாயம் ஆறு

**அந்தரங்க சபையிலிருந்து உங்களுக்கு வரும் என் செய்தி :**

நான் ''அந்தரங்க சபையின் ஒரு சத்தம்'' என்று அழைக்கப்பட்டுள்ளேன். கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள அவ்வளவு கனம் பொருந்திய ஓர் அவயவத்தின் சத்தம் என்று அழைக்கப்பட நான் தகுதியுள்ளவனென்று எண்ணவில்லை. ஆனாலும் கம்யூனிச நாடுகளில் அந்தரங்க சபையின் ஒரு பகுதியை அநேக வருடங்களாக நடத்திச் செல்லக் கூடிய சிலாக்கியம் பெற்றவனாக நான் இருக்கிறேன்.

இரண்டு வருடங்கள் சாவு அறையில் அடைக்கப்பட்டிருந்த அனுபவத்தையும் சேர்த்து 14 வருட சித்திரவதைகளையும், சிறைத் தண்டனையையும் சகித்து அதிசயமாக உயிர் பிழைத்து வருகிறேன். இதைவிட அதிசயமான அற்புதத்தின் வாயிலாக தேவன் என் சிறைச்சாலைக்கு வந்து, என்னை அதிலிருந்து வெளியே கொண்டு வந்து, விடுதலையாயுள்ள சபைக்கு பேசும்படி, மேற்கத்திய நாடுகளுக்கு ஒப்புக் கொடுத்துள்ளார். கணக்கற்ற பெயரில்லாத கல்லறைகளில் கிடத்தப்பட்டிருக்கும் என் சகோதரர்கள் சார்பில் நான் பேசுகிறேன். இப்பொழுது இரகசியமாக காடுகளிலும், அடித்தளங்களிலும், இருட்டறைகளிலும் மற்றும் இப்படிப்பட்ட இடங்களில் கூடும் என் சகோதரர்கள் சார்பில் நான் பேசுகிறேன்.

நான் என்னுடைய தேசத்தை விட்டு வெளியேறி இவ்வுலகத்திலுள்ள விடுதலையை அனுபவிக்கும் கிறிஸ்தவர்களுக்கு ஒரு செய்தியைக் கொண்டுவர பிரயாசப்பட வேண்டுமென்று ருமேனியாவிலுள்ள அந்தரங்க சபையால் தீர்மானிக்கப்பட்டது. அதிசயமாக நான் இப்பொழுது வெளியே வந்து கம்யூனிச நாடுகளில் உழைத்து, அபாயத்தை எதிர்நோக்கி பாடுகளை அனுபவித்து மரித்துக் கொண்டிருக்கிறவர்களால் எனக்கு ஒப்புவிக்கப்பட்ட ஊழியத்தை நிறைவேற்றுகிறேன். அந்தரங்க சபையிலிருந்து நான் வெளியே கொண்டுவரும் செய்தி இதுதான்.

''எங்களைக் கைவிடாதேயுங்கள்''

''எங்களை மறந்து விடாதீர்கள்''

''எங்களை உங்கள் கணக்கிலிருந்து எடுத்துப் போடாதீர்கள்''

''எங்களுக்கு தேவையான கருவிகளைத் தாருங்கள். அவைகளை உபயோகப் படுத்துவதற்கு தேவைப்படும் கிரயத்தை நாங்கள் கொடுப்போம.''

இந்தச் செய்தியையே உங்களிடம் தெரிவிக்க நான் ஏவப்பட்டிருக்கிறேன். பேசுவதற்கு சத்தமற்ற அமைதலாக்கப்பட்ட அந்தரங்க ''ஊமையான'' சபையின் சார்பிலேயே நான் பேசுகிறேன். கம்யூனிச நாடுகளிலுள்ள உங்கள் சகோதர சகோதரிகளின் கதறுதலைக் கேளுங்கள். அவர்கள் அங்கிருந்து தப்பிக் கொள்ளவோ, பத்திரமும் சொகுசுமான வாழ்க்கைக்காகவோ கேட்கவில்லை. அடுத்த சந்ததியாகிய வாலிப சந்ததியை நஞ்சுப்படுத்தும் நாத்திகத்துக்கு எதிராய் கிரியை நடப்பிக்க தேவையான கருவிகளுக்காகவே கேட்கிறார்கள். தேவ வசன பால்யத்தில் உபயோகிக்கத் தேவையான வேதாகமங்களுக்காக கேட்கிறார்கள். அது அவர்களுக்கு இல்லாமலிருந்தால் அவர்கள் எப்படித் தேவனுடைய வசனத்தை பிரபல்யப்படுத்த முடியும்?

புகை வண்டியில் பிரயாணம் பண்ணும் ஒரு வைத்தியனைப் போல அந்தரங்க சபை இருக்கிறது. அந்தப் புகை வண்டி மற்றொரு புகை வண்டியுடன் மோதியதால், நூற்றுக் கணக்கான மனிதர் காயப்பட்டு குற்றுயிராய் உயிர்ப் போகும் நிலைமையில் தரையில் கிடக்கிறார்கள். அந்த வைத்தியன் மரணத்தருவாயில் கதறிக் கொண்டிருக்கும் அந்த மக்கள் நடுவில் நடந்து கொண்டு, ''எனக்குத் தேவையான கருவிகள் மாத்திரம் இருக்குமானால்! எனக்குத் தேவையான கருவிகள் மாத்திரம் இருக்குமானால்!'' என்று கதறுகிறான். அந்த வைத்தியக் கருவிகளினால் அவன் அநேக உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும். அவனுக்கு விருப்ப

மிருந்தது. ஆனால் அவனுடைய கருவிகள் அவனிடமில்லை. இந்த நிலைமையிலேயே அந்தரங்க சபை காணப்படுகிறது.

தனக்குள்ளதெல்லாவற்றையும் கொடுத்து விடத்தக்க தாக அது அவ்வளவு விருப்பமுடையதாயிருக்கிறது. தன்னு டைய இரத்த சாட்சிகளைக் கொடுக்கத் தக்கதாக அவ்வளவு விருப்பமுள்ளதாயிருக்கிறது. கம்யூனிச சிறைச்சாலைகளில் வருடக்கணக்கில் சிறையிலடைக்கப்படத்தக்கதாக, அத்தனை விருப்பமுள்ளதாயிருக்கிறது. ஆனாலும், அதற்குத் தேவை யான கருவிகள் இல்லாமற்போனால், அதனுடைய எல்லா விருப்பத்திலும் எவ்வித பலனுமில்லை. ''எங்களுடைய கருவி களாகிய சுவிசேடங்கள், வேதாகமங்கள், இலக்கியங்கள், உதவிகள் முதலியவைகளைக் கொடுங்கள். நாங்கள் மற்றவை களைப் பார்த்துக் கொள்கிறோம்'' என்பதே, உண்மையுள்ள மிகுந்த தைரியமுள்ள அந்தரங்க சபையிடமிருந்து, விடுதலையை அனுபவிக்கிற உங்களுக்கு வருகிற வேண்டு கோளாயிருக்கிறது.

**விடுதலையாயுள்ள கிறிஸ்தவர்கள் உதவுவதெப்படி?**

விடுதலையாயுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனும் பின் வரும் வழிகளில் உடனே உதவ முடியும்:

வாழ்க்கையில் காணக்கூடாத ஆதாரங்களை அங்கிகரியாத வர்களே நாத்திகராவர். அண்ட சராசரங்களிலும் ஜீவனி லும் இரகசியமாக மறைக்கப்பட்டவைகளை உணரக் கூடிய உணர்ச்சி அவர்களுக்குக் கிடையாது. ஆகவே பார்வை யினால் அல்ல, விசுவாசத்தில் நடந்து காணப்படாத தேவ னோடு ஐக்கியமுள்ள வாழ்க்கையை நடத்துவதன் மூலம் கிறிஸ்தவர்கள் அவர்களுக்கு மேன்மையாக உதவ முடியும்.

தியாகமுள்ள தொடர்ச்சியான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்ந்து காண்பித்து, நீங்கள் எங்களுக்கு அதிகமாக உதவி செய்யலாம். கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படும் போதெல் லாம் வெளியரங்கமாக எதிர்ப்புகள் தெரிவிப்பதின் மூலமும் உதவி செய்யலாம்.

வெளிநாட்டுக் கிறிஸ்தவர்கள், கம்யூனிஸ்டுகள் இரட்சிக்கப்படும்படி அவர்களுக்காக ஜெபிப்பதின் மூலம் எங்களுக்கு உதவலாம். அப்படிப்பட்ட ஜெபமானது அர்த்தமற்றதாகக் காணப்படக் கூடும். நாங்கள் கம்யூனிஸ்டுகளுக்காக ஜெபித்தோம்; அவர்களோ, அடுத்த நாள் எங்கள் ஜெபத்துக்கு முன்பு செய்ததைவிட அதிக மோசமான அளவில் எங்களை சித்திரவதை செய்தார்கள்.

எருசலேமில் கர்த்தர் செய்த ஜெபமும் அர்த்தமற்றதாகவே காணப்பட்டது. இந்த ஜெபத்திற்குப் பின் அவர்கள் அவரை சிலுவையில் அறைந்தார்கள். ஆனால் ஒரு சில நாட்களுக்குள்ளாக, அவர்கள் தங்கள் மார்பில் அடித்துக் கொண்டார்கள். ஒரே நாளில் ஐயாயிரம் பேர் மனந் திரும்பினார்கள். மற்றவர்களுக்குக் கூட அந்த ஜெபம் பலனற்றுப் போகவில்லை.

எந்த ஜெபமானாலும் சரி, அது யாருக்காக ஏறெடுக்கப்படுகிறதோ, அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளாமற்போனால், அது உன்னிடம் அதிகமான ஆசீர்வாதங்களோடு திரும்பி, உன்னுடைய ஜெபத்தின் பொருளாகிய அவர்களுக்கு அது சாபமாக மாறி விடுகிறது. கிறிஸ்தவனுடைய வார்த்தையை நிறைவேற்றும்படியாக நானும் மற்ற அநேக கிறிஸ்தவர்களும் ஹிட்லருக்காகவும், அவனுடைய மனிதருக்காகவும் எப்போதும் ஜெபித்ததுண்டு. அவனுடைய விரோதிகளின் குண்டுகளைவிட, எங்களுடைய ஜெபங்களே அவனுடைய வீழ்ச்சிக்கு அதிகமாக உதவியதென்று நான் நிச்சயமாய் அறிவேன்.

நம்முடைய அயலானையும், நாம் நம்மைப் போலவே நேசிக்க வேண்டும். கம்யூனிஸ்டுகளும், மற்றவர்களைப் போலவே நம்முடைய அயலகத்தார்தான். ''நான் ஜீவனைக் கொடுக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்'' என்று நம் அருமை இரட்சகர் சொன்ன வார்த்தைகள் நிறைவேற்றப் படாமலிருப்பதின் பலாபலனே கம்யூனிஸ்டுகள். விசுவாசிகள் இன்னும் எல்லோரும் அந்தப் பரிபூரண ஜீவனை வெளிப்படுத்தவில்லை. அவர்கள் தங்கள் ஜீவனில் விலையேறப்

பெற்றவைகளுக்கு புறம்பே சிலரை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். இவர்களே கலகம் செய்து கம்யூனிஸ்டு கட்சியாக ஒன்றுபட்டிருக்கிறார்கள். சமுதாய அநீதிக்கும் இவர்கள் அடிக்கடி இலக்காகிறார்கள். இப்பொழுது இவர்கள் கசப்புள்ளவர்களும், கொடூரமுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். இவர்களுக்கு விரோதமாக நாம் போராடியே தீர வேண்டும். ஆனால் விசுவாசிகள் ஓர் எதிரிக்கு விரோதமாக போரிட்டாலும் அவனைப் புரிந்துகொண்டு, அவனில் அன்பு கூருகிறவர்களாயிருக்கிறார்கள்.

சிலர் கம்யூனிஸ்டுகளாயிருப்பதற்கு நாம் குற்றமற்றவர்கள் என கூறிவிட முடியாது. நம்முடைய கடமையைப் புறக்கணித்த குற்றமாவது நம்மேலுண்டு. இதற்கு பிரயாச்சித்தமாக நாம் அவர்களில் அன்புகூர்ந்து, அவர்களுக்காக ஜெபிக்கிறவர்களாயிருக்க வேண்டும்.

**வேதாகமங்களும் சுவிசேடங்களும் அவசரமாகத் தேவைப்படுகின்றன:**

இரண்டாவதாக, விடுதலையாயுள்ள கிறிஸ்தவர்கள், வேதாகமங்களையும், வேதாகமப்பகுதிகளையும் அனுப்புவதின் மூலம் உதவி செய்யலாம். கம்யூனிச நாடுகளுக்குள் இவைகளைப்பத்திரமாய் அனுப்பப்போதுமான ஏதுக்கள் இருக்கின்றன. நான் வெளியே வந்ததிலிருந்து அநேகவேதாகமங்களை அனுப்பிஇருக்கிறேன். அவைகளெல்லாம் பத்திரமாய் போய் சேர்ந்திருக்கின்றன. அந்தரங்க சபையிலுள்ள உங்கள் சகோதர சகோதரிகளுக்காக, விடுதலையாயுள்ள விசுவாசிகள் அவைகளைக் கொடுக்க விரும்பினால், அவைகளை அவர்களிடம் சேர்க்க நிச்சயமான வழிகள் இருக்கின்றன.

ருமேனியாவில் இருந்தபோது சில ஏதுக்களின் மூலமாக வெளியேயிருந்து வந்த அநேக வேதாகமங்களை நானே பெற்றிருக்கிறேன். அவைகளை எந்த வழியில் அனுப்புவதென்பது கேள்வியல்ல. அவைகள் கொடுக்கப்படுமானால், அனுப்ப போதுமான ஏதுக்கள் உண்டு. அவைகளுக்கு அதிகமான தேவைகளிருக்கிறது. ரஷ்யாவிலும் இன்னும் சில

நாடுகளிலும், இருபதிலிருந்துஐம்பது வருடங்களாக வேதாகமங்களையாவது, சுவிசேடங்களையாவது கண்டிராத ஆயிரக் கணக்கான கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள்.

ஒரு நாள் அதிக அசுத்தமாகக் காணப்பட்ட இரு கிராமத்தினர் என் வீட்டுக்கு வந்தார்கள். பனிக்காலம் முழுவதும் பனிக்கட்டிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டு, அதில் சம்பாதிக்கும் பணத்தினால் ஒரு பழைய கிழிந்த வேதாகமத்தையாவது வாங்கி தங்கள் கிராமத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்ற ஒரே வேலையினிமித்தம் அவர்கள் வந்தவர்களாயிருந்தார்கள். எனக்கு அமெரிக்காவிலிருந்து வேதாகமங்கள் வந்திருந்ததால் பழைய கிழிந்துபோன வேதாகமத்தையல்ல, புதியதொரு வேதாகமத்தை அவர்களுடைய கரங்களில் கொடுக்கக்கூடியவனானேன்.

அவர்களால் தங்கள் கண்களை நம்ப முடியவில்லை. அவர்கள் தங்களிடமிருந்த பணத்தை என்னிடம் கொடுக்க முற்பட்டார்கள். நான் அதை மறுத்துவிட்டேன். அந்த வேதாகமத்தை அவர்கள் எடுத்துக்கொண்டு தங்கள் கிராமத்துக்கு விரைந்தோடினார்கள். சில நாட்களுக்குப்பின், அந்த வேத வாக்கியங்களுக்காக மகிழ்ச்சி பொங்க எழுதப்பட்ட ஒரு நன்றியறிதலின் கடிதம் கிடைக்கப்பெற்றேன்.அதில் முப்பது கிராமத்தினர் கையெழுத்திட்டிருந்தனர். அவர்கள் அந்த வேதாகமத்தை மிகவும் கவனமாக முப்பது பகுதிகளாகப் பிரித்து எடுத்து அவைகளை ஒருவருக்கொருவர் மாற்றிக் கொண்டிருந்தார்கள்.

வேதாகமத்தின் ஒரே ஒரு பக்கத்துக்காக ஒரு ரஷ்யன் மன்றாடியதைக் கேட்க பரிதாபமாக இருக்கிறது. தன் ஆத்துமாவை அவன் அதாலேயே போஷிக்க முடியும். ஒரு வேதாகமத்துக்காக ஒரு பசுவையாவது, ஆட்டையாவது அவர்கள் கொடுப்பதில் மகிழ்ச்சியுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

ஒரு மனிதனை எனக்குத்தெரியும். அவன் ஒரு கிழிந்த பழைய ஏற்பாட்டை வாங்குவதற்காக தன் கல்யாண மோதிரத்தை விலை பேசினான்.

எங்களுடைய பிள்ளைகள் கிறிஸ்துமஸ் கார்டுகளை பார்த்திருக்கமாட்டார்கள். அவர்களுக்கு ஒரு கார்டு இருந்தால், அந்தக்கிராமத்திலுள்ள அத்தனை பிள்ளைகளும் அந்தக் கார்டை சுற்றி உட்கார்ந்துக்கொள்வார்கள். யாராவது ஒரு வயதான மனிதன் அவர்களுக்கு இயேசுவாகிய குழந்தையைப் பற்றியும், கன்னி மரியாளைப்பற்றியும் பேச ஆரம்பித்து கிறிஸ்துவின் சரித்திரத்தைக் கூறி இரட்சிப்பின் செய்தியை விவரிப்பான். இதெல்லாம் ஒரு கிறிஸ்மஸ் கார்டிலிருந்து வருகிற காரியங்கள் ஆகும்.

நாம் வேதாகமங்களையும், சுவிசேடங்களையும், இலக்கியங்களையும் அனுப்பக்கூடும். ஏதாவது ஒன்று செய்ய உனக்கு விருப்பமிருக்குமானுல் இது உனக்குள்ள ஒரு வழியாகும்.

மூன்ருவதாக, பாலர் வகுப்பிலிருந்து கல்லூரி வரை வாலிபர்களுக்குப் புகட்டப்படும் நாத்திக நஞ்சுக்கு எதிர் மாருக கிரியை செய்யும் தனிப்பட்ட நூல்களை அச்சடித்து அனுப்பி வைக்கலாம்.

''நாத்திகத்தின் வழிகாட்டிப் புத்தகம்'' (The Athiests Guide Book) என்றதொரு புத்தகத்தை கம்யூனிஸ்டுகள் தயாரித்திருக்கிருர்கள். அதுவே நாத்திகர்களின் வேதாகமம். இந்தத் தீய ''வேதாகமமானது ஒரு குழந்தை பெரிதாக வளர்ந்து முன்னேறும்போது அதைப் பின் தொடர்ந்து சென்று வழி நெடுகிலும் நாத்திகத்தால் அதை விஷப்படுத்துகிறதாயிருக்கிறது.

கிறிஸ்தவ உலகமானது இதுவரையில் இந்த நாத்திகர்களின் வழிகாட்டிப் புத்தகத்துக்கு ஒரு பதிலை அச்சிட்டதில்லை. நாம் நிச்சயமாக இப்படிப்பட்ட நஞ்சுள்ள நாத்திக போதனைகளுக்கு ஏற்ற கிறிஸ்தவ பதிலை அச்சிட்டு அனுப்ப வேண்டும். அதை அனுப்பவும் நம்மால் முடியும். இந்தப் புத்தகத்தால் விஷமேற்றப்பட்ட வாலிபருக்கு விநியோகிக்கத்தக்க எந்த நூல்களும் அந்தரங்க சபைக்கு இல்லாததால் நாம் உடனடியாக இதைச் செய்ய வேண்டும். கம்யூனிச நாடுகளில் வழங்கப்படும் வித்தியாசமான மொழிகளில் இந்த

நூல்கள் இல்லாதிருக்கும் வரைக்கும், அந்தரங்கசபையானது தன் கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு அமைதியாயிருக்க வேண்டியது தான்.

நஞ்சேற்றப்பட்ட நம்முடைய வாலிபருக்கு ஒரு பதில். தேவனுடைய பதில், கிறிஸ்தவ பதில், நம்முடைய பதில் தேவை. ஆகவே இந்த "நாத்திகரின் வழிகாட்டிப் புத்தகத்துக்கு" பதிலளிக்கக் கூடிய வாலிபர்களுக்கு ஏற்ற இலக்கிய நூல்களையும், சிறுவர்களின் வேதாகமங்களையும் பிரசுரித்து கொடுப்பதின் மூலம், இதற்கு நீர் உதவி செய்ய முடியும்.

நாம் செய்யக்கூடிய நான்காவது காரியமென்னவென்றால், அந்தரங்க சபையின் அங்கத்தினர்களோடு கைகோர்த்து நின்று அவர்கள் சுவிசேடங்களை ஏந்தி நீண்ட பிரயாணங்கள் செய்து ஒவ்வொரு நபரையும் சந்தித்து ஊழியம் செய்வதற்குத் தேவையான பண உதவியைக் கொடுப்பதாகும்.

இதே நேரத்தில் அவர்களில் அநேகர் பிரயாண செலவுக்கும், பஸ் கட்டணத்துக்கும், ரெயில் கட்டணத்துக்கும், பிரயாணத்தின்போது தேவைப்படும் ஆகாரத்துக்கும் போதுமான பணமில்லாமலிருப்பதால், தங்கள் வீடுகளில் அடைப்பட்டுக்கிடக்கிறார்கள். ஆகவே 20 அல்லது 30 மைல் தொலைவிலுள்ள ஊர்களிலிருந்து இரகசியக் கூட்டங்கள் நடத்த அழைப்பு வந்தாலும், அங்குப் போகக்கூடாத நிலையில் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மாதந்தோறும் நாம் கொஞ்சம் பண உதவி செய்வோமானால், தேவனுடைய வசனத்தை தூரமான பட்டணங்களுக்கும், கிராமங்களுக்கும் அவர்கள் கொண்டுச் செல்ல தக்கதாக அவர்களை கட்டவிழ்த்து விடக்கூடியவர்களாக இருப்போம்.

தங்களுடைய விசுவாசத்துக்காக சிறையிலடைக்கப் பட்டிருந்த முன்னாள் போதகர்கள் அக்கினிப் பறக்கும் சுவிசேட செய்தி உடையவர்களாயிருக்கிறார்கள். ஆனால் அந்தச் செய்தியை பட்டணங்களுக்கும், கிராமங்களுக்கும் கொண்டுச் செல்லக்கூடிய ஏதுக்களின்றி தவிக்கிறார்கள். கொஞ்ச பண

உதவி அவர்களுக்கேற்ற ஏதுக்களை கொடுக்க முடியும். சாதாரண விசுவாசிகளுக்கும், உதவிகள் அளிக்கப்பட வேண்டியது அவசியம். அவர்கள் கிறிஸ்தவர்களாக இருப்பதால் தங்களுடைய சாப்பாட்டுக்கு மாத்திரமே சம்பாதிக்கக் கூடியவர்களாயிருக்கிறார்கள். கிராமங்களுக்கும், பட்டணங்களுக்கும் சுவிசேடத்தை கொண்டுச் செல்வதற்கேதுவான வசதி அவர்களுக்கு இல்லை. இப்படிப்பட்டோருக்கு அளிக்கப்படும் சொற்ப உதவி அவர்களை ஓரளவில் உபயோகப்படுத்த முடியும்.

இரகசியமாக கர்த்தருடைய ஊழியத்தில் ஈடுபட்டு வரும் அங்கீகாரம் பெற்ற சபைகளிலுள்ள போதகர்களும், இப்படிப்பட்ட ஊழியத்துக்கு தேவையான நிதியை வைத்திருப்பது அவசியமாயிருக்கிறது. கம்யூனிச அரசாங்கத்தாரால் அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் வருமானம் மிகவும் சொற்பம். கம்யூனிச சட்டதிட்டங்களைப் புறக்கணித்து, தங்களுடைய விடுதலையை அபாயத்தில் நிறுத்திப் பிள்ளைகளுக்கும், வாலிபருக்கும், பெரியவர்களுக்கும், இரகசியக் கூட்டங்களில் சுவிசேடத்தை பிரசங்கிக்க இவர்களுக்கிருக்கும் விருப்பம் மாத்திரம் போதாது இவர்களுடைய கனியுள்ள இரகசிய ஊழியத்தை நிறைவேற்றக் கூடிய ஏதுக்களை இவர்களுக்களித்தல் அவசியம்.

சுவிசேடத்தை வல்லமையாகப் பரப்புவதற்கு ஏதுவாக அந்தரங்க சபையின் அப்படிப்பட்ட அங்கத்தினருக்கு மாதந்தோறும் கொஞ்சம் பண உதவி அளிக்கப்படுமானால் அது மிகுந்த பலனைக் கொண்டு வரும். அந்தரங்க சபைக்கு நீர் உதவத்தக்கதாக இது உமக்கு முன்னால் வைக்கப்படும் இன்னொரு வழியாகும்.

அடுத்தாற்போல், கம்யூனிச நாடுகளுக்குள் வானொலி மூலம் சுவிசேடத்தை ஒலிப் பரப்ப வேண்டும். விடுதலையாயுள்ள உலகத்தின் வானொலி நிலையங்களைப் பயன்படுத்தி ஜீவ அப்பத்துக்காக மிகவும் கவனத்தோடு இருக்கும் அந்தரங்க சபையை நாம் ஆவிக்குரிய ஆகாரத்தினால் போஷிக்க முடியும். ஏனெனில், கம்யூனிச அரசாங்கங்களே தங்களு

டைய சொந்த மக்களாகிய கோடிக்கணக்கான ரஷ்யர் களுக்கும், மற்றும் அடிமையாய் வாழும் மக்களுக்கும் தங்களுடைய பிரச்சாரங்களை ஒலி பரப்புவதற்காக அவர் களுக்கு எளிதில் கிடைக்கக் கூடிய சிற்றலை வானொலியை உபயோகிக்கிறார்கள். கம்யூனிச நாடுகளுக்குள் ஒலிப்பரப்பக் கூடிய வாசல் இப்பொழுது திறந்திருக்கிறது. இந்த வேலை யானது விரிவு படுத்தப்பட வேண்டும். இந்த ஒலிப்பரப்பு கள் அந்தரங்க சபைக்கு ஆவிக்குரிய ஆகாரத்தை கொடுக்கக் கூடியதாயிருக்க வேண்டும். இது கம்யூனிச தேசங்களி லுள்ள அந்தரங்க சபைக்கு நீர் உதவக் கூடிய இன்னொரு வழியாகும்.

**கிறிஸ்தவ இரத்த சாட்சிகளின் குடும்பங்களின் பயங்கரம் :**

கிறிஸ்தவ இரத்த சாட்சிகளின் குடும்பங்களுக்கு நிச்சயமாக நாம் உதவி அனுப்பியாக வேண்டும். லட்சக் கணக்கான குடும்பங்கள் சொல்லொணா துயரங்களையும், பயங்கரங்களையும் அனுபவித்து வருகிறார்கள். அந்தரங்க சபையின் ஓர் அங்கத்தினன் கைது செய்யப்படுவானே யாயின், அவனுடைய குடும்பத்தினர் ஒரு பயங்கர சூழ் நிலையை சந்தித்தே ஆக வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு உதவுவது தேச சட்டத்தின்படி பெரிய அநியாயமாகக் கருதப்படுகிறது.

இது பின்னால் விடப்பட்ட மனைவி, பிள்ளைகளுடைய உபத்திரவங்களை அதிகப்படுத்தத்தக்கதாக கம்யூனிஸ்டு களால் திட்டம் போட்டு செய்யப்பட்ட ஒரு காரியமாகும். ஒரு கிறிஸ்தவன் சிறைச்சாலைக்கு மரணத்தையும், சித்திர வதைகளையும் அனுபவிக்க செல்லுவானானால் பாடுகள் அப் பொழுதுதான் ஆரம்பிக்கிறது. அதிலிருந்து அவன் குடும்ப மும், முடிவில்லாத பாடுகளை அனுபவிக்க வேண்டியதுதான்.

நான் உள்ளதைச் சொல்ல வேண்டுமானால் வெளி உலகின் உயர்ந்த நிலைமையிலுள்ள கிறிஸ்தவர்கள், எனக்கும் என் குடும்பத்துக்கும் உதவி அனுப்பாமல் இருந்திருப்பார்க ளென்றால் நாங்கள் உயிர் தப்பிப் பிழைத்திருக்க முடியாது.

ரஷ்யாவிலும், அதனோடு சம்பந்தப்பட்ட தேசங்களிலும் கிறிஸ்தவர்களை கூட்டம் கூட்டமாக கைது செய்து அவர்களை பயங்கரத்துக்குள்ளாவதாக சமீபத்தில் செய்தி கிடைத்திருக்கிறது. எல்லா காலங்களிலும் இரத்தச் சாட்சிகளின் எண்ணிக்கை அதிகமாகவே இருக்கிறது. அவர்கள் தங்கள் கல்லறைகளில் கிடத்தப்பட்டு, தங்கள் பலனைப் பெற்றுக் கொள்ளப் போனாலும், அவர்களுடைய குடும்பங்கள் திடுக்கிடும்பயங்கர நிலைமைகளிலே வாழ்க்கையை நடத்துகின்றனர், அவர்களுக்கு நம்மால் உதவமுடியும். உதவவேண்டும்.

பட்டினியால் வாடும் மற்ற வெளி உலக நாடுகளிலுள்ள மக்களுக்கும் நாம் உதவுவது அவசியம்தான். ஆனால் கிறிஸ்துவுக்காக மரித்தவர்களின் குடும்பங்களை விட, தங்கள் விசுவாசத்துக்காக கம்யூனிச சிறைச்சாலைகளில் சித்திரவதை அனுபவிப்பவர்களைவிட, யார் அதிகமாக கிறிஸதவர்களின் உதவிக்குப் பாத்திரராயிருக்கிறார்கள் ?

நான் விடுதலைப் பெற்று வந்ததிலிருந்து ஐரோப்பிய கிறிஸ்தவ ஊழிய ஸ்தாபனமானது கிறிஸ்தவ இரத்தசாட்சிகளின் குடும்பங்களுக்கு ஏற்கனவே அதிகமான உதவி அனுப்பியுள்ளது. இதுவரைக்கும் செய்யப்பட்ட காரியங்களை உங்களுடைய உதவியைக் கொண்டு நாங்கள் செய்யக்கூடிய காரியங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கப்படும்போது அது கொஞ்சமாகவே இருக்கிறது.

உயிர் தப்பிப்பிழைத்த அந்தரங்க சபையின் அங்கத்தினனாகிய நான் ஒரு செய்தியையும், ஒரு வேண்டுகோளையும், நான் பின்னால் விட்டுவந்த சகோதரரின் ஒரு மன்றாட்டையும் உங்கள் முன் வைத்திருக்கிறேன். இந்த செய்தியை உங்களுக்கு நான் அளிக்கும்படிக்கே அவர்கள் என்னை அனுப்பி இருக்கிறார்கள். அதை அறிவிக்கத்தக்கதாக அதிசயமான முறையில் உயிர் பிழைத்திருக்கிறேன்.

கம்யூனிச உலகத்துக்கு கிறிஸ்துவை கொண்டு வருவதின அவசியத்தை நான் உங்களோடு பகர்ந்திருக்கிறேன். கிறிஸ்தவ இரத்த சாட்சிகளின் குடும்பங்களுக்கு உதவி

செய்கிறதின் அவசியத்தையும் உங்களுக்கு கூறியிருக்கிறேன். சுவிசேடத்தைப் பரப்புவதற்கான அதன் ஊழியத்தில் அந்தரங்க சபைக்கு நீங்கள் எப்படி நடைமுறையில் உதவ முடியுமென்றும் உங்களிடம் கூறியுள்ளேன்.

என்னுடைய உள்ளங்காலில் அடிப்பட்டபோது என் நாக்கு கதறியது. ஏன் என் நாக்கு கதறியது? அது அடிக்கப் படவில்லையே! நாக்கும் காலும் ஒரே சரீரத்தின் அவயங் களாய் இருப்பதாலேயே அது கதறியது. வெளி உலகத்தி லுள்ள விசுவாசிகளாகிய நீங்களும் இப்பொழுது கம்யூனிச சிறைச்சாலைகளில் அடிக்கப்படுகிறதும், கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சிகளைக் கொடுக்கிறதுமான கிறிஸ்துவின் சரீரத் தின் ஒரு பகுதியாகவே இருக்கிறீர்கள். எங்களுடைய வேத னையை உங்களால் உணர முடிகிறதா? ஆதிகால சபை யானது தன்னுடைய பூரண அழகோடும், தியாகத்தோடும், தத்தம் செய்தலோடும் கம்யூனிச நாடுகளில் உயிர் பெற்று வந்திருக்கிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கெத்சமெனே தோட்டத்தில் ஜெபத்தில் வேதனைப்பட்டுக்கொண்டிருந்த போது, சரித்திரத்தின் மாபெரும் நிகழ்ச்சி நடந்த அந்த இடத்திலிருந்து, பேதுருவும், யாக்கோபும், யோவானும் காணப்பட்ட தூரம் ஒரு கல்லெறி தூரம்தான். ஆனால் அவர்களோ மிகுந்த நித்திரை மயக்கத்தில் இருந்தார்கள்.

இரத்த சாட்சியான சபையின் நிவாரண வேலைக்காக விசுவாசியாகிய நீர் காட்டும் உம்முடைய அக்கறையும் அதற் காக நீர் கொடுக்கும் உம் உதவியும் எவ்வளவென்பதை யோசித்துப்பாரும்! இரும்புத்திரைக்கு அப்பாலுள்ள உம் சகோதரர்களுக்கும், உம் சகோதரிகளுக்கும் என்ன உதவி கள் அனுப்பப்படுகிறதென்று உம் சபை மூப்பர்களைக் கேளும்? இரும்புத்திரையின் சுவர்களுக்குப் பின்னால் ஆதிகால சபையின் வீரத்துக்கும் தைரியத்துக்கும் ஒப்புக்கொடுத் தலுக்கும் சமமாக எண்ணப்படும் சபையின் கிரியைகள் தைரியத்தோடும், தியாகத்தோடும், இரத்த சாட்சிகளோ

டும் நிறை வேற்றப்படுகின்றன. வெளி உலக சபையோ தூக்கமயக்கத்திலிருக்கிறது.

அங்குள்ள நம் சகோதரர் தனியாக எவ்வித உதவியுமில்லாமலிருந்து, ஆதிகால சபையின் வீரத்துக்கும், தைரியத்துக்கும், தத்தம் செய்தலுக்கும் சமமாக எண்ணப்படக் கூடிய இருபதாம் நூற்ருண்டின் மாபெரும் ஒரு துணிச்சலுள்ள போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிருர்கள். தங்கள் இரட்சகர் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் தூங்கி வழிந்த பேதுருவையும், யாக்கோபையும், யோவானையும் போல, வெளி உலக சபை அவர்களின் போராட்டத்தையும், வேதனையையும் உணரால் தூங்கிக் கொண்டிருக்கிறது. கிறிஸ்துவுக்குள்ளான உம்முடைய சகோதரர்களாகிய அந்தரங்க சபையானது சுவிசேடத்தின் காரணமாக பாடுகளை அனுபவித்து போராடிக் கொண்டிருக்கும் போது நீரும் தூங்குவீரோ?

எங்களுடைய செய்தியை கேளுங்கள். ''எங்களையும் நினைவு கூருங்கள், எங்களுக்கு உதவி செய்யுங்கள், எங்களை கைவிட்டு விடாதிருங்கள்.'' நாத்திகக் கம்யூனிசத்தின் அடிமைத்தனத்தில் பாடுகள் அனுபவிக்கும் உங்கள் அருமை சகோதர, சகோதரிகளிடமிருந்து உண்மையுள்ள இரத்த சாட்சியாய் விளங்கும் கம்யூனிச நாடுகளின் அந்தரங்க சபையிடமிருந்து இந்த செய்தி இப்பொழுது உங்களுக்கு வருகிறது. இதற்கு நீங்கள் அளிக்கும் பதில் என்ன?

(முற்றும்)